மன்னன் லியர்

(தமிழ் மொழிபெயர்ப்பு)

ஆங்கில மகாகவி ஷேக்ஸ்பியர் இயற்றியது

ஆசிரியர்

("வள்ளல் அல்லது பாரி", "கிருஷ்ணகுமாரி" இயற்றிய)

A. ஸ்ரீநிவாஸய்யங்கார்

அட்வகேட், பரமக்குடி

 1959 [Price Rs. 1-8-0

மன்னன் லியர்

(தமிழ் மொழிபெயர்ப்பு)

ஆங்கில மகாகவி ஷேக்ஸ்பியர் இயற்றியது

2317

ஆசிரியர்

("வள்ளல் அல்லது பாரி", "கிருஷ்ணகுமாரி" இயற்றிய)

A. ஸ்ரீநிவாஸய்யங்கார்

அட்வகேட், பரமக்குடி

 1959 [Price Rs. 1-8-0

PRINTER
REV. FR. K. A. LOURDES
SUPERINTENDENT
ST. JOSEPH'S INDUSTRIAL SCHOOL PRESS, TIRUCHIRAPPALLI-1—1959

மன்னன் லியர்

முகவுரை

"மன்னன் லியர்" என்ற ஆங்கில நாடகத்தின் தமிழாக்கம் பல்வேறு காரணங்களுக்காக வரவேற்கத்தக்கது. ஷேக்ஸ்பியர் மஹாகவி இயற்றியது அந்நாடகம். ஏறக்குறைய 300 வருஷங்கள் சென்றுவிட்டபோதிலும் இன்றும் எங்கும் போற்றப்படுகிறது. உலக காவியங்களில் ஒன்று, அமரத்வம் வாய்ந்தது.

தமிழரிடையே—ஏன், இன்றைய பாரதத்திலேயே, ஆங்கில மொழியின் வருங்காலம் என்னவென்பது பெரும் பிரச்னைகளில் ஒன்று. இதைப்பற்றிக் கல்வியைப் பொருத்தமட்டில் பார்த்தாலும் அதனுடைய முக்யத்வத்தை உணர்ந்தவர்களிடம்கூடப் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. ஆங்கிலப் பள்ளியிலும் கல்லூரியிலும் போதனமொழியாகவோ, பரீக்ஷா மொழியாகவோ இருக்கக்கூடாது; ஆனால் கட்டாயப் பாடங்களில் ஒன்றாக அவசியமாக இருக்கவேண்டுமென்பது ஒரு கக்ஷி. அவசரப்படவேண்டாம், பாரதத்தின் மொழிகள் தகுந்த வளம்பெறும்வரை ஆங்கிலமே நீடிக்கட்டும் என்பது ஒரு கக்ஷி. கல்லூரிகளிலாவது இன்றுபோல் என்றுமே ஆங்கிலத்தின் ஸ்தானம் இருக்கட்டுமென்பது வேறொரு கக்ஷி. கல்லூரியிலும் விஞ்ஞானப் பாடங்களுக்குமாத்திரம் ஆங்கிலம் உபயோகப்படட்டும் மற்றப் பாடங்களெல்லாம் ராஜ்ய மொழியில் நடக்கட்டுமென்பது இன்று ராஜ்ய அரசாங்கத்தின் கருத்து. இதை அமுலாக்கச் சகல ஏற்பாடுகளும் நடந்துவருகின்றன. இந்த நிலையில் சிரஞ்சீவி இலக்கியங்களைத் தமிழில் அளிப்பது, தக்க சமயத்தில் சஞ்சீவி கொடுத்துதவிய சிரஞ்சீவியின் செய்கையை ஒக்கும்.

இத்தமிழாக்கம், மொழிக்குமட்டுமல்ல, தமிழிலக்கியத்திற்கும் தமிழருக்குமே அருஞ்சேவையாகும். மொழிவளர்ச்சிக்குப் பலவழிகளிருக்கலாம். மொழியிலுள்ள பழமையைப் போற்றிவருவது அவற்றுளொன்றாகலாம். மற்றைய மொழிகளில் எழுதின மேதைகளின் பேச்சை, பாட்டை, கர்ஜனையை, கதறலை, உருக்கத்தை, ஊக்கத்தை, நகைப்பை. நயத்தை, ஆனந்தத்தை, தீர்க்கதரிசனத்தை அனுபவித்து அதைத் தமிழில் தந்து உதவுவது மிகச் சிறந்த வழிகளில் ஒன்றாகும். ஆங்கிலத்தின் பாணியும் அதிமேதையான ஷேக்ஸ்பியரின் பாணியும் தமிழிற்குப் புது மெருகுதருமென்பதில் ஐயமில்லை. சம்ஸ்கிருதத்தை முன்னாள் அணியாக ஏற்ற நம் தாய்க்கு ஆங்கிலமும் ஒரு ஆபரணமாகும் காலம் வந்துவிட்டது. தமிழின் எழில் ஓங்கும் காலம் இது.

தமிழிலக்கியத்திலே குறை ஒன்றுண்டானால் அது நாடகத்துறையில் முறைபோகிய உத்தமர் சிலரே என்பது. ஆங்கிலத்திலும் இவ்வாறுதான் இருந்தது. சுமார் 400 வருடங்களுக்கு முன் அதுபொழுது லத்தீன் பாஷையிலிருந்து பற்பல இலக்கியங்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டன. அது காரணமாக உளம் செழித்து, அறிவு விரிந்து பெரியதொரு மறுமலர்ச்சி ஏற்பட்டது. அன்றுதோன்றிப் புகழெய்தியவர்தான் ஷேக்ஸ்பியர். அன்று மலர்ந்த பூக்களிலே ஒன்றுதான் "லியர்" என்னும் வாடாமலர். இன்று இதுபோன்ற மொழிபெயர்ப்புகளால் தமிழில் என்னென்ன மலர்கள் பூக்கவிருக்கின்றனவோ?

இன்று தமிழர் மறந்துவிட்டால்போல் தோன்றுகிற ஒரு பண்பு யாதெனில் ஜாதி, மத, நிற, மொழி விருப்பு வெறுப்பில்லாமல், நீரையும் தூரத்தையும் பொருட்படுத்தாமல், தமிழகத்திலிருந்து விரிந்து போந்து பல்வேறு நாடுகளில் பல்வேறு மக்களோடு பேதமின்றிப் பழகி நன்முறையில் தொடர்புகொண்டு ஒழுகிய ஒரு உத்தமப் பண்பு. பொருளாதார அடிப்படையில் பார்த்தாலும் எவ்வளவு பரந்த நோக்குடன் வாழ்ந்தார்கள். இன்றோ அதே பொருளாதாரத்தின் பெயரால் எவ்வளவு மாறான போக்கு! இது ஒரு மயக்கந்தான். இந்த மருள் ஒழிய மருந்து ஒன்றுண்டானால் அது மனிதப் பண்பின் அடிப்படை உண்மையான மனிதர் ஓர் குலம் என்று உணரும் உணர்வே. அமர இலக்கியங்கள் மனித உள்ளத்தின் பிரதிபிம்பங்களாகையால், பிறநாட்டு, பிறமொழி அமர இலக்கியங்களைப் படிப்பது இந்த உண்மையை எய்த ஒரு சுலபமான வழி.

இந்த நோக்குடன் 'லியர்' நாடகத்தைப் பார்க்கலாம். அதன் முக்கிய பாத்திரமான லியர் நம்மைக் கவர்ந்துவிடுகிறான். அழகாலல்ல; அவன் ஓர் இளைஞன்கூடவல்ல, 80 வயது சென்ற ஓர் தொண்டு கிழவன். காதலாலா? அவன் காதலித்த காலம்கூட அவனுக்கே மறந்திருக்கும். மதியாலுமல்ல, மதியற்றோர் செய்கையால் பரிதவித்தவன் அவன். பின்? ஒரு தகப்பன் என்ற வகையில், நன்றியில்லாத மக்களைப்பெற்று, மக்களின் கொடுமையால் மனம் நொந்து நொந்து, இருக்கையலைந்து, மனமுடைந்து செத்த தகப்பன் என்ற முறையில் இலக்கியத்தில் உலகத் தந்தைகளின் பிரதிநிதி. பெற்ற மனம் கலங்கும்போதெல்லாம், ஒவ்வொரு தாயும் தந்தையும் லியர் ஆகிவிடுகின்றனர். இது இந்நாடகத்தின் அமரத்வத்தின் ரகசியங்களில் ஒன்று. மற்றென்று, வாழ்க்கையில் குற்றம் செய்யாதிருக்கையில், ஏன் நன்மையே செய்துகொண்டிருக்கையில், கஷ்டமும் சாவும் நேரும்பொழுதும், குற்றம் சிறிதே செய்து அதனால் அளவுக்கு மீறிய துன்பம் எய்தும்பொழுதும் இவ்வுலகத்தின் போக்கை நினைத்தேங்காதவர் யார்? "லியர்" இந்த இருதயக் குமுறலைப் பிரதிபலிக்கிறது.

மற்றுமொரு முக்கிய காரணத்தையும் இங்கே குறிப்பிட்டுவிடலாம். அதுதான் ஷேக்ஸ்பியரின் கவிதை. கவிதையை விளக்கச் சிலரே தகுதி

யுள்ளவர். அதையனுபவிக்க நாம் எல்லோருமே தகுதியுள்ளவர்கள். லியரின் பேச்சுக்களைப் படிக்கும்பொழுது நாம் படிப்போரென்பதை மறந்து நாமே லியராக மாறிவிடுகிறோம். இது கவியின் சாதனை.

'லியர்' நாடகத்தில் நாம் காண்பது ஷேக்ஸ்பியரின் கவிதா சக்தியின் சிகரம். இதை ஆங்கில மொழியிலேதான் நுகரமுடியும் என்று சொன்னால் அது தமிழாக்கத்திற்குக் குறை கூறுவதாக ஆகாது. ஒரு பாஷையிலே பிறந்த கவிதையை பிற பாஷையிலே மொழிபெயர்ப்புச் செய்யலாம். ஆனால் அது வெற்றிகரமாக இருக்காது என்ற உண்மை ஒவ்வொரு மொழி பெயர்ப்பிலும் காணக்கிடக்கிறது. ஒரு ஆங்கிலக் கவி கிரேக்க கவிதையை மொழி பெயர்த்தபோதுகூட அவன் இந்த உண்மைக்கு விலக்காகிவிடவில்லை. இப்படி இருக்க ஒரு வசன கர்த்தா கவிதையை வசனமாக மொழிபெயர்த்தல் எந்த அளவுக்கு மூலநூலின் கவிதைச் சிறப்பைக் காட்டுமென்பதை எளிதில் ஊகிக்கலாம்.

ஆகவே 'லியரின்', ஷேக்ஸ்பியரின், கவிமாண்பு எந்த மொழி பெயர்ப்பிலும் தோன்றாது. ஆனால் அவருடைய மேதா விலாசத்தின் மற்ற அம்சங்களை அறிந்து கொள்ள மொழி பெயர்ப்பில் தடையேதுமில்லை. ஹோமரின் கிரேக்க கவிதையை 'ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தலைப்பற்றிப் பேசும் பொழுது கவியும், கவிதைப்பேராசிரியரும், விமர்சகரும், பிரசங்கியுமான மேத்யு ஆர்னல்ட் ஒரு கருத்துக்கொடுத்திருக்கிறார். அதாவது "பொதுவாகக் கூறுமிடத்து மொழி பெயர்ப்பு மூல நூலின் ஜீவனை, ஜீவகளையைப் பிடித்துக் காட்டிவிடவேண்டும்; இது செய்தால் போதும்; இதுதான் செய்ய முடியும்." இம் மொழி பெயர்ப்பு அதில் வெற்றிகண்டிருக்கிறது.

கடைசியாக நாடகமென்ற முறையில் "லியரை" ப்பற்றி ஒரு குறிப்பு அவசியமாகிறது. இந் நாடகம் ஷேக்ஸ்பியர் நாளில் நடிக்கப்பட்டு ரசிக்கப் பட்டபோதிலும் பின்னாளில் மேடைக்குப் பொருத்தமில்லாததாகக் கருதப் பட்டது. காரணம் நாடகத்தின் மேன்மையை விளக்குகிறதேயன்றி அதைச் சிறுமைப்படுத்தவில்லை. புயல் வீசும் மூன்று காக்ஷிகள் இந் நாடகத்தின் இதயம் போலமைந்திருக்கின்றன. இவற்றில் லியர் அரசன் நாயகனாகவிருக்கிறான். புறப்புயலுடன் பொருதுவதோடல்லாமல் அகத்தில் ஒரு மனப்புயலுடனும் போரிடுகிறான். இந்தக் கட்டம் நடிப்புக்கெட்டாத ஒரு அதிசயம் என்பது ஓர் காரணம். மற்றொன்று, இந் நாடகம் சித்தரிக்கும் துன்பம் சகிக்கவொண்ணாதது. நாடகம் பார்ப்போர் இந்தப் பெரிய துக்கத்தைத் தாங்கமாட்டார்கள், பார்க்கவும் விரும்பார்கள் என்பது. உதாரணமாக அந்தக் கடைசிக்காக்ஷி—லியர் தன் இறந்த மகளின் சவத்தைக் கையிலேந்தி, தடுமாறித் தடுமாறி, அவளிறந்து போகவில்லை, இன்னும் உயிரோடிருக்கிறாள் என்று சங்கல்பம் செய்துகொண்டு, "அவள் உதடுகள் அசைகின்றன என்னுடன் மெதுவாக, மிருதுவாகப் பேசுகிறாள்" என்று சித்தாந்தப் படுத்திக்கொண்டு, அந்தக் கற்பனை மகிழ்ச்சியில் தன் கிழ இருதயம்

உடைய, மாண்டுபோகும் காக்ஷி—உல்லாசம் தேடிப்போகும் நண்பர்கள் விரும்பார் என்ற காரணம். இதுவும் நூலின் மேன்மையேதானே! நடிகத் திலகங்களுக்கெல்லாம் ஒரு இலக்ஷிய அறைகூவல்போலமைந்திருக்கிறது இந் நாடகம்.

இப் பெருமையெல்லாம்வாய்ந்த நூலை நல்ல முறையில் மொழி பெயர்த்த ஆசிரியருக்கு நம் நன்றி உரியது.

(Sd.) வ. சு. தண்டபாணி
கல்லூரி முதல்வர்
துரைசிங்கராஜா ஞாபகக் கல்லூரி
சிவகங்கை

சிவகங்கை,
27—10—'59.

மன்னன் லியர்

முன்னுரை

மகாகவி ஷேக்ஸ்பியரின் மிகச்சிறந்த சோக நாடகங்களில் ஒன்றாக இந்நாடகம் கருதப்படுகிறது. "ஒதெல்லோ" எழுதப்பட்ட மறு வருஷத்தில் இது எழுதப்பட்டதாகக் கூறப்படுகிறது.

"தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்" என்பது ஓர் முதுமொழி. "*Every action has its reaction*" என்பது தத்வ சாஸ்திர ரீதியாகவும், விஞ்ஞான ரீதியாகவும் உபயோகிக்கப் படும் ஆங்கிலப் பழிமொழி. நாம் நாடோரும் செய்யும் நல்லவும் தீயவு மான செய்கைகளின் காரணமாக நாம் மறுமையிலோ, மறுபிறப்பிலோ இன்ப துன்பங்களை அநுபவிப்பதுடன் இவ்வுலகிலும் அவைகளின் பலனை அடைகிறோம். புண்ணிய பாபச் செயல்களுடைய பலன்கள்மட்டுமல்ல, ஒருவனுடைய மூடச் செயல்களின் பலனையும் அனுபவித்தேயாகவேண்டும். மூடச் செயல்களின் பலன் அப்பொழுதைக்கப்பொழுதே கிடைக்கும். பொது வாக ஒரு சாதாரண மனிதனின் முட்டாள்தனமான செய்கைகள் அவனையும் அவனை அடுத்த சிலரையும் பாதிக்கலாம். பதவியிலிருப்பவர்களின் புத்தி யில்லாத செய்கை மிகவும் விபரீதமான விளைவுகளைத் தரும். தன்னுடைய செய்கைகளால் ஏற்படும் பலனை அனுபவிக்கும்பொழுது அவன் தன் மடமையை உணருவானாயின் அவனுக்கு விவேகம் உதிக்கும். அவன் தன்னை யும் பிறரையும் அறிந்துகொள்ளக்கூடும். சிலர் விஷயத்தில் இது சொப்பன வைராக்யமாயிருக்கும்.

இந்நாடகத்தில் லியர், க்ளஸ்டர், எட்கார் மூவரும் தமது முட்டாள் தனமான செய்கைகளால் பலவிதத் துன்பங்களை அனுபவிக்கின்றனர். தனது ஆஸ்தியை தன்னிஷ்டப்படி விநியோகிப்பதற்கு உரிமையுள்ள வயதான வர்களை மிகவும் பரிவுடன் பேணுவதுபோல் பல நாட்கள் நடித்து, ஆசை காட்டி ஏமாற்றி, அவர்களுடைய பொருளைப் பெற்றவுடன் ஆஸ்தியைப் பெற்றவர்கள் கொடுத்தவனைக் கைவிடவும், பொருளை இழந்தவன் பரிதவிப் பதையும் நாம் தினந்தோறும் காண்கிறோம். இதனாலேயே ஹிந்துக்களுடைய நீதி சாஸ்திரங்களில் சொத்துக்களைப் பொதுக் குடும்பச் சொத்துக்களாகவும் அவைகளை யாரும் தன்னிஷ்டப்படி விநியோகிக்காமலுமிருக்கவேண்டிய தடைகள் ஏற்படுத்தியுமிருந்தார்கள். சாதாரணமாக தன் மக்களில் அதிக மாகப் பணிவுடன் நடக்கும் அல்லது நடிக்கும் மக்களிடம் தாய் தந்தை யருக்கு அதிகம் பற்று ஏற்படும். மற்றையோரை வெறுப்பதுமுண்டு. லியர் தன் மூத்த பெண்களின் குணத்தை அறியாததுமன்றித் தன் கடைசி மகள்

தன்னிடம் அதிகம் பற்றுடையவனென்றும் நற்குண நற்செய்கைகளுடையவ னென்றும் நன்குணர்ந்திருந்தான். அவனையே எல்லோரையும்விட அதிகமாக நேசித்தான். அப்படியிருக்கத் தன் அன்பின் திறத்தைப்பற்றிக் கார்டிலியா, லியர் விரும்பியவாறு வீண் வார்த்தைகளால் மிகைப்படுத்திக் கூறவிரும்பாதது காரணமாக அரைக்கணத்தில் அன்பெல்லாம்மாறி அவளை முற்றிலும் வெறுத்துத் தள்ளுவதென்பது நம்பத்தகாததும் இயற்கைக்கு முற்றிலும் விரோதமானதுமான சம்பவம். அது எப்படியாயினும் மிகவும் முட்டாள் தனமான செய்கை. மேலும் பதவியை இழந்தபின் பதவியிலிருப்பதுபோல் அதிகாரம் செலுத்தவேண்டுமென நினைப்பது அறிவாளிகளின் செயலல்ல. லியர் தன்னை உணர்ந்துகொள்ளவில்லை. ரீகனாலும் கைவிடப்பட்டவுடன் கோபத்துடன் புயலில் செல்வது அறிவின்மை.

ளௌஸ்டர் அதேபோல் தன் மகன் எட்காரை மிகவும் நேசித்தான். எட்கார் எல்லாவிதத்திலும் சாலச்சிறந்தவன். முதல்நாளிரவு வெகுநேரம் அவனுடன் அளவளாவிப் பேசிக்கொண்டிருந்தான். அவனுடன் கூடவே வசித்து வந்தான். இந்நிலையில் மறுநாள் எட்மண்டால் வெகு எளிதாக ஏமாற்றப்படுகிறன். எட்மண்ட் கூறுவதை சற்றும் ஆக்ஷேபனையில்லாமல் நம்பி எட்காரை மரணதண்டனைக்குள்ளாக்குகிறன். எட்காரைக் கூப்பிட்டு ஒரு வார்த்தைகூடக் கேட்கவில்லை. இதுவும் மிகவும் அசம்பாவிதமாகவும் அறிவீனமாகவுமிருக்கிறது. எட்காருடைய போக்கும் நம்பத்தகாததாகவும் அறிவீனமாகவும் படுகிறது. எவ்வளவுதான் வெள்ளையுள்ளத்தவனுகவும் பிறரைச் சந்தேகிக்ககூடாதவனுனுலும் தன்பேரில் உயிரினும் மேலாக அன்பு கொண்ட தந்தை முதல்நாளிரவில் அன்புடன் பேசிக்கொண்டிருந்த தந்தை, மறுநாள் சொல்லொணுத கோபங்கொண்டார் என்பதை இன்னதென்று காரணம்கூட அறிந்துகொள்ள முயலவில்லை. என்றும், தந்தையைக் கண்டு தான் யாதொரு தவறும் செய்யவில்லை என்று கூறவில்லை என்றும் நினைக்க, அதைவிட மடமை வேறு இல்லை எனலாம். அவனுடைய செய்கையால் எட்மண்டின் ஆட்டம் வெகு சுலபமாகி ளௌஸ்டருக்குக் கண்ணை இழக்க நேர்டுகிறது. பின்னர் டோவரிலாவது எட்கார் தன் தந்தைக்குமட்டும் தன்னை வெளியிட்டிருந்தால் ளௌஸ்டர் மனம் உடைந்து மாண்டிரார் என நம்ப இடமிருக்கிறது. காட்டுக் குடிசையில் ளௌஸ்டர், டாம், லியர், கென்ட் முதலானேர் சந்திக்கும்பொழுது ளௌஸ்டர், எட்கார் தன்னைக் கொல்ல விரும்பியதாகக் கூறும்பொழுது கேட்டுக்கொண்டிருந்த எட்கார் எவ்வாறு அதை ஆக்ஷேபிக்கவில்லை என்று தெரியவில்லை.

கானரில், ரீகன், எட்மண்ட் மூவரும் தங்களுடைய தீச் செயல்களின் காரணமாகக் கடைசியில் உயிரிழக்கின்றனர். கார்ன்வாலின் முடிவையும் அவ்வாறே கூறலாம்.

ஆனல் கார்டிலியா ஏன் மிகவும் பரிதாபகரமாக மரணத்தை அடைய வேண்டும்? ஓர் வீடு தீப்பற்றி எரிகிறது. அதில் சில பெண்களும் குழந்தை களும் அகப்பட்டுக்கொண்டார்கள். அவர்கள் வீட்டின் மாடியில் ஏறிக்

கொள்கிறார்கள். எங்கும் புகையும் நெருப்பும் சூழுகிறது. அவர்களைக் காப்பாற்றவேண்டுமானால் நெருப்பிற்குள் புகுந்துதான் வெளியேறவேண்டும். ஆண்மைமிக்க ஒருவன் அம்முயற்சியிலீடுபடுகிறான். ஆனால் ஒரு சிலரைக் காப்பாற்றியதும் நெருப்பினால் ஏற்பட்ட காயங்களுக்கு பலியாகிறான். இதில் அம்மனிதன் செய்யப்புகுந்தது மிகவும் உன்னதமான நோக்கத்துடன் கூடியது. ஆனால் அவன் தன் சக்திக்கு மேற்பட்டு எரி நெருப்பில் புகுந்ததால் மரணமடைந்தான். அது மூடத்தனம். அதனால் உயிரிழந்தான். அல்லது கடவுளின் நியதிக்கு மாறாக மற்றவர்களைக் காக்க நினைத்தான் எனக் கொள்ளலாம். இவை இரண்டுமில்லாவிடில் அவனுடைய தியாகச் செயல் என்றும் அதற்காகப் புகழுடம்பு பெற்றான் என்றும் கூறுகிறோம். கார்டிலியா தக்க படையுதவியில்லாமலும் ப்ரஞ்சு மன்னர் திரும்பிய பின்னரும் உள் நாட்டில் போதிய பிரசாரம் செய்யாமலும் தான்மட்டும் படை எடுத்து வந்தாள். அதனால் தோல்வியுற்றாள். மேலும் கார்டிலியா இறக்காவிட்டால் கதையின் போக்கு ஸ்வாரஸ்யமாக முடியாது. சோக நாடகமானதால் லியர் இறக்கவேண்டும். லியரை எட்மன்டின் ஆணையின்படி முதலில் கொன்றதாகவும் கார்டிலியா முதலானோர் விரைந்துவந்தும் பயன்படவில்லையென்றும் முடிக்கலாம். அது மிகவும் சாதாரணமான முடிவு. ஆனால் லியர், கார்டிலியாவைக் கரங்களில் எடுத்துக்கொண்டு "அலறுங்கள், ஓலமிடுங்கள்" என்று தொடங்குமிடம்தொட்டு முடிவுவரையுள்ள சோகரஸத்தின் சிகரத்தை நாம் இழப்போம். பரிதாபமான அந்தக் கிழவன் தன் அன்புள்ள மகளுடன் ஆனந்தமாகக் காலம் கழிக்கலாமென்ற ஆசை எல்லாம் உடைந்துபோய் "நீ ஒருக்காலும் வரப்போவதில்லை, ஒருக்காலுமில்லை, ஒருக்காலுமில்லை, ஒருக்காலுமில்லை" என்று அரற்றுவதில் காணும் நாடகரசம் போய்விடும். தன்னை வெறுத்துத் தள்ளிய தந்தையைக் காப்பாற்றும் பெரும்பணியில் தன் ஆருயிரையும் தியாகம் செய்தாள் என்ற பெருமையும் போய்விடும்.

லியர்: இயற்கையிலேயே ஆழ்ந்து சிந்திக்கும் தன்மையில்லாதவன். முரட்டு சுபாவமும், பிடிவாதமும், கோபமும் உடையவன். நல்ல நாளையிலேயே தன் போக்கையனுசரிப்பதைத்தவிரச் சிந்தனைசெய்து கார்யங்களைச் செய்வதில்லை. வயதாக வயதாக முதுமையினால் வரும் மனக்கசப்பும், சிணுக்கமும், குற்றம் கண்டுபிடிக்கும் சுபாவமும் அதிகரித்தது. இத்தகைய ஓர் யதேச்சாதிகாரியான அரசனை யாவரும் இச்சகம் பாடி முகஸ்துதி செய்து வந்ததால் உண்மை நிலையை அறிய சந்தர்ப்பம் வாய்க்கவேயில்லை. தன்னைப் பற்றிச் சிந்திக்கச் சந்தர்ப்பம் ஏற்படவில்லை. கென்ட் போன்ற ஒன்றிரண்டு பேர்கள் தைர்யமாகக் கண்டிக்கிறார்கள். ஆயினும் அதிகாரத்திலேயே பொழுதுபோக்கியதால் தன் செய்கையின் பயனைப்பற்றிச் சிறிதும் நினைக்கவில்லை. கார்டிலியாவைச் சபித்துத் தன் மகள் அல்லவென்று விரட்டியதைப் பற்றியும், உண்மை ஊழியன் கென்டை நாடுகடத்தியதைப்பற்றியும் சற்றும் பின்னிரக்கம்கொள்ளவில்லை.

அவ்வாறாயின் லியர் கொடுங்கோல் மன்னனா? நாடகத்தின் கதை இந்தக் கேள்விக்குரிய பதிலைப் பொறுத்து நிற்கிறது. ஆனால் நாடகத்தி

விருந்து நமக்கு யாதொரு பதிலும் கிடைக்கவில்லை. தான் என்ற அகங்காரம் தலையெடுத்தாடுகிற ஒரு மனிதனைத் தற்புகழ்ச்சி மேலும் கெடுத்ததாக லியர் கூறுவதிலிருந்து யூகிக்கலாம். தான் ஆட்சி புரிந்த காலத்தில் எளியவர்களின் கஷ்ட நஷ்டங்களை உணரவில்லையென்றும் சிந்திக்கவேயில்லை என்றும் கூறுவதிலிருந்து கொடுங்கோலரசனா என்று எண்ணலாம். அப்படியானால் கென்ட், கிளஸ்டர், எட்கார், விதூஷகன் முதலானவர்களும் மற்றும் கனவான்களும் லியரை நேசித்திருக்கமாட்டார்கள். கார்டிலியாகூட ஏனோதானோ என்றே இருந்திருக்கவேண்டும். எட்மண்ட், லியர் உயிருடன் வெளியில் உலாவினால் பொதுஜனங்கள் அவர்பால் உள்ள அன்பால் கலகம் செய்வார்கள் என்கிறான். ஆனால் கிளஸ்டரின் கோட்டைக்கு வந்த அரசனை அப்பிராந்தியத்திலுள்ளார் ஏற்று உபசரிக்காமல் லியர் புயலில் அகப்பட்டு அத்துன்பத்தால் மதியிழக்கும்படி நேர்ந்ததேன். லியர் முற்றிலும் பதவியை இழக்கவில்லை. அதிக நாட்களுமாகவில்லை. கார்ன்வாலின் கோபத்திற்காக குடிகள் பயப்படுவார்கள் என்பதற்கில்லை. நாடகத்தின் முக்கியமான கட்டமான 3-வது அங்கத்தின் சம்பவங்கள் ஜனங்கள் ஆதரவு இல்லாததாலும் அதனால் கிளஸ்டர் போன்றவர்கள் கார்ன்வாலுக்குப் பயந்ததாலும் நடந்தனவென்று நினைக்கலாம். இவை ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கின்றன.

லியர் மிகவும் தீவிரமான கோபதாபங்கள் உடையவன். ஆனால் மாறுபடும் சுபாவமுடையவன் தன் பெண்களை மிகவும் நேசிக்கிறான். தன் பரிவாரங்களிடமும் அன்பு பாராட்டுகிறான். ஆயினும் யாராயிருந்தாலும் சரி தன் அதிகாரத்திற்குக் குறுக்கிடுவதை விரும்பவில்லை. தன்னிஷ்டத்திற்கும் கவுரவத்திற்கும், மாறாக நடப்பவர்களையும் உடனே வெறுக்கத் தொடங்குகிறான். தான் எவ்வளவு அன்பு செலுத்துகிறானோ அதைவிடத் தன்னிடம் அன்பு செலுத்தவேண்டியதுடன் அவர்கள் அவ்வாறே நடிக்கவேண்டும், என்றும் எதிர்பார்க்கிறான். தான் அன்பு செலுத்தியவர்கள் தன்னிடம் அதேபோல் நேசிக்கவில்லையென்று கருதினாலும்போதும் லியர் அடைந்த கோபமும் ஏமாற்றமும் எழுதமுடியாது. இயற்கைக்கு மாறாக, எதிர்பாராத விதமாக, சற்றும் சிந்திக்கவுமில்லாமல் தான் அதிகமாக நேசித்த மகளைச் சபித்து விரட்டிவிட்ட ஒரு மனிதன் தன் மற்ற இரண்டு பெண்களும் தான் நினைத்ததுபோல் இல்லாமல் தன்னை நேசிக்கவில்லை என்றும், தன்னை ஏமாற்றியதாகவும் அதனால் அவர்கள் இயற்கைக்கு மாறாக இருக்கிறார்கள் என்றும், கோபங் கொள்வது எவ்வளவு ஆச்சரியம். ஆனால் வயதான லியர் தன் பெண்களின் அன்பையும் ஆதரவையும் பெரிதும் விழைகிறான். அன்பிற்காகவே ஏங்குகிறார். அதில் ஏமாற்றமடைந்தவுடன் லியரின் கோபத்திற்கு எல்லையில்லை. அக்கோபத்தால் மதி மயக்கம் ஏற்படுகிறது. முன்னால் கூறியபடி தன் பொருளைப் பிறரை நம்பிக் கொடுத்துவிட்டு அவர்களால் அனாதரவு செய்யப்பட்டவுடன் துயரம் தாளாது தவரும் மனிதர்களை நாம் சாதாரணமாகக் காண்கிறோம்.

முகஸ்துதியால் மூடப்பட்ட கண்களையுடைய லியர் தன்னை அண்டியிருப்பவர்களின் குணங்களை அறிந்துகொள்ளவில்லை. அதனால் கானரில்

கைவிட்டதுபோல் ரீகனும் நடந்துகொள்ளமாட்டாள் என்று நினைக்கிறார். ரீகனிடம் தன் கௌரவத்திற்கு ஈனமில்லாமல் தன்னை அன்புடன் ஆதரிக்குமாறு வேண்டுவது பரிதாபகரமாயிருக்கிறது. ரீகனும் கானரிலும் மறுக்கவே லியர் அடையும் ஏமாற்றம் சொல்லுந்தரமன்று. செய்நன்றி கொன்ற பாம்பின் விஷப்பல் ஆழமாகக் கடித்து விஷம் தலைக்கேறுகிறது. மிகவும் ஆசையுடன் ஒன்றை எதிர் பார்ப்பவர்கள் அதில் ஏமாற்றமடைந்தால் இருதயம் நின்று இறப்பார்கள், அல்லது பித்துப்பிடித்து அலைவார்கள்.

லியர் கோபத்துடன் வெளியேறுகிறான். அவனுடைய உள்ளத்தில் எழுந்த புயல் மிகவும் கோரமானது. பெண்களுக்களித்த அரசைத் திருப்பிப் பெற நினைக்கிறான். ஆனால் ஏனோ, அதை விடுத்து ஊம்பெரும் பூதங்களை ஆணையிடத் தொடங்குகிறான். லியருடைய கற்பனா சக்தியும் மனோ வேகமும் வேலை செய்யத் தொடங்குகின்றன. உலகத்திலுள்ள ஆஷாடபூதிகளையும் துன்மார்க்கர்களையும தண்டிக்குமாறு தெய்வங்களையும் பூதங்களையும் வேண்டுகிறான். தன்னைப்பற்றிய வரையில் "நானோ பிறர் பாபச் செயல்களுக்கு இலக்கானவனே தவிர யாதொரு பாபமும் அறியேன்" என்கிறான். இன்னும் அகங்காரம் ஒழியவில்லை. வெகு காலம்வரை தன் பெண்களின் நன்றிகெட்ட நடத்தை அவன் மனத்தைவிட்டு அகலவில்லை வேறு எண்ணங்களும் வெளிப்புறத் துன்பங்களும் மனத்தில் இடம்பெறவில்லை. அப்பால் உறங்கவேண்டுமென்ற எண்ணம் தோன்ற மண்டியிட்டுப் பணிகிறான். அப்பொழுது முதன் முதலாகப் பிறர்படும் துன்பங்கள் அவன் மனக்கண்ணுக்குப் புலனாகின்றன. தான் ஏழைகளின் துன்பங்களை உணராதிருந்ததைப் பற்றிப் பச்சாதாபப்படுகிறான். இதிலிருந்து லியரின் மனப்பான்மையில் மாறுதலேற்படுகிறது. ஒருபுறம் அவனுடைய பயித்தியம் மேலும் மேலும் வளர்கிறது. அத்துடன் புதிதாக வளரும் நல்லறிவும் போட்டியிடுகிறது. பயித்தியம் பிடிக்குமுன் எந்த எண்ணங்கள் கடைசியாக இருந்தனவோ அவை பயித்தியத்தின்பொழுதும் முன்னிற்கும். தான் கார்டீலியாவிற்கும், கென்டிற்குமிழைத்த தவறுகளை உணருகிறான். அது மனதை அறுக்கிறது. நாட்டைப் பகிர்ந்துகொடுத்தது அறிவின்மை என்பதை உணர்கிறான். ஆனால் அதைச் சரிப்படுத்த முயலவில்லை. ஓர் சக்தியற்றவன்போல் தெய்வங்களை அழைத்துச் சாபமிடுகிறான். நம் நாட்டில் ஒரு விவசாயி ஓர் ஏர் மாடுகள் வைத்து விவசாயம் செய்தவன், கடன்பட்டு உடுத்த உடையுடன் வீட்டைவிட்டு ஓடி ஓர் ஜைனக் கோவிலை அடைகிறான். அங்கு நிர்வாணமாயிருக்கும் ஜைன விக்ரகத்தைக் கண்டு "நீ எவ்வளவு ஏர் வைத்து விவசாயம் செய்ததால் நிர்வாணமாயிருக்கிறாய்" என்று கேட்டதாக ஓர் கதை உண்டு. அதேபோல் லியர், எட்காரைப் பார்த்து "நீ எல்லாவற்றையும் பெண்களுக்கே கொடுத்துவிட்டு இக்கதியானாயா" என்று கேட்கிறான். அவனுடைய துன்பம் அதிகரிக்க அதிகரிக்க அவன் மனிதனுடைய சிறுமையையும் சக்தியின்மையையும் உணர்கிறான். ஆனால் ஊடே ஊடே அரசனாயிருந்தபொழுது நடத்திய அமல்களும் புக்கு ஹாஸ்யமான பகுதிகளாக மாறுகின்றன. ஒருவன் பிறருடைய துன்பங்களை உணர்ந்து சரியானபடி நடக்க

வேண்டுமாயின் தானே துன்பம் அனுபவிக்கவேண்டும் என்ற உண்மையை உணர்கிறான்.

ஷேக்ஸ்பியர் பயித்தியம் பிடித்துத் துன்பத்திலாழ்ந்து தவிக்கும் லியர் மூலம் உலகத்தில் நாகரீகமானவர்களெனக் கருதப்படுபவர்களையும், அதிகாரத்திலிருந்து அக்கிரமம் செய்பவர்களையும், வேஷதாரிகளையும் மற்றும் துன்மார்க்கர்களையும் பற்றி மிகவும் அழகாகச் சவுக்கடி கொடுக்கிறார். கொஞ்சம் சரியான நிலையிலிருக்கும்பொழுது லியர் கிளஸ்டருடன் டோவருக்கருகே பேசும் பொழுது லியர் முற்றிலும் மாறுதலடைந்த மனிதனைக் காண்கிறோம். "கண்ணில்லாமை உலகத்தை அறியத் தடங்கலாயிராது. காதால் உலகத்தை நன்றாக அறிந்து கொள்" என்கிறான். கிளஸ்டருக்குப் பொறுமையுடனிருக்கும்படி புகன்று பல அழகான தத்வ உபதேசம் செய்கிறான்.

இழந்த மதியையும் மதியையும்வென்ற முகமுடைய தன் அருமைப் புதல்வியையும் ஒருங்கே பெற்றபின் லியர் அடையும் ஆனந்தம் எல்லையற்றது. அவனுக்கு ராஜ்யம் போய்விட்டதே என்ற கவலையில்லை. சிறைவாசம் யாதொரு பயமும் கொடுக்கவில்லை. தானும் அருமை மகளும் அநேககாலம் பிரியாமலும் பிரிக்கமுடியாமலும் வாழப்போவதாகக் கனவு காண்கிறான். "நீ என்னை ஆசிர்வதிக்கக்கோரும்பொழுது நான் உன்னை மன்னிப்புக்கேட்பேன். அவ்வாறே நாம் பாடிக்கொண்டும் கதைகள் சொல்லிக்கொண்டும் உலகத்தின் அயோக்யர்களைப்பற்றிச் சிந்திக்காமல் காலத்தைக் கடத்துவோம்" என்கிறான்.

அதிலும் அந்த எளிய கிழட்டு ஆத்மா ஏமாற்றமடைகிறது. அருமைப் புதல்வியின் ஆவி அவனைத் தன் கரத்திலேந்தியவண்ணம் பிரிந்து இந் நிலவுலகைவிட்டுச் செல்வதைக் காண்கிறான். லியரின் மகத்தான துன்பமும் துயரமும் மிகவும் அழகாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. ஆடம்பரமில்லாமல், சில வார்த்தைகளால் தன் துயரத்தை வெளியிட்டு விட்டு அந்தப் பரிதாபகரமான முதியோன் தன் மகளைப் பின்பற்றுகிறான். அவர்களுடைய சாவில் அவர்கள் பிரிக்கப்படவில்லை.

கிளஸ்டர்: லியரைப்போல் வயதானவன். மனைவியில்லாதவன். லியருக்கு சொந்த மனைவியான ஒரு ஸ்திரியிடம் பிறந்த மூன்று பெண்கள். கிளஸ்டருக்கு மனைவியிற் பிறந்த மகன் ஒருவன், தாசி புத்ரன் ஒருவன். இருபிள்ளைகளையும் மிகவும் நேசிக்கிறான். சட்டம் இடம் கொடுத்தால் எட்மண்டுக்கும் சரியானபடி ஆஸ்திகள் கொடுத்திருப்பான். இப்படிப்பட்ட ஒரு மனிதன் திடீரென்று ஒரு புதல்வன் மற்றவன்மேல் குற்றம்சாட்ட விருப்பமில்லாதவன்போல் நடிப்பதை அறிந்துகொள்ள முடியாமல், தன் புத்ரர்களின் உண்மையான நடத்தைகளை உணராமல் லியர்போல் ஏமாற்றப்படுகிறான். தன் அரசனைப்போலவே சிந்திக்கவேயில்லாது எட்மண்டின் வலையில் விழுகிறான். ஆனும் லியர் விஷயத்தில் கதையின் ஆரம்பம் எவ்வளவு அசம்பாவிதமாக இருக்கிறதோ அதேபோல் கிளஸ்டர் விஷயத்திலு

மிருக்கிறது. தன் அன்புக்குரிய மகனை, முதல் நாளிரவு கூடிக்குலாவியிருந்தவனைக் கூப்பிட்டு ஒரு வார்த்தைகூடக் கேட்காமல் அவன் தன்னைக் கொல்ல விரும்பினான் என்று நம்புவது நம்பத்தக்கதில்லை. இரு சகோதரர்களின் கை எழுத்து ஒத்திருக்கக்கூடுமென்பதை அறியவில்லை. எட்மண்டாவது அன்னிய நாடுகளுக்குச் சென்றிருந்தான். எட்கார் தன்னுடனேயே வசித்துவந்தான். ஒரே கட்டிடத்திற்குள் வசிக்கும் இருவரில் ஒருவன் மற்றவனுக்குக் கடிதம் எழுதுவானேன். அதிலும் அத்தகைய விஷயத்தைப்பற்றி எழுத்து மூலம் அகப்பட்டுக்கொள்ள சந்தர்ப்பம் தருவானா என்பதைச் சற்றும் கவனிக்கவில்லை. ஆனால் கடிதத்தில் குறிப்பிட்ட விஷயம் உண்மையானால் லியரை விடத் தன் மகன்பேரில் கோபமடைவதற்குக் கிளஸ்டருக்குக் காரணமிருந்தது.

கிளஸ்டரும் கென்ட்டும் லியரின்பேரில் விசுவாசமுள்ள பிரபுக்கள். ஆனால் கிளஸ்டர் கூடுமானால் கார்ன்வாலையும் லியரையும் தழுவிச்செல்ல நினைக்கிறான். கென்ட்டைப்போல் அப்பட்டையாக நேருக்கு நேராகக் கண்டித்துப்பேச விரும்பவில்லை. ஆனால் அவசியம் நேரிட்டபின் தயக்கமில்லாமல் ரீகனுடையவும் கார்ன்வாலுடையவும் அக்ரமச் செயல்களைக் கண்டிக்கிறான். அரசனிடத்துள்ள அன்பு காரணமாகப் புயலில் அரசனைத் தேடிச் சென்று கண்டுபிடித்து வேண்டிய உதவியளிக்கிறார். அரசனுக்கு நேரவிருக்கும் ஆபத்தை அறிந்தவுடன் தக்க உதவியுடன் தப்பிச்செல்ல ஏற்பாடு செய்கிறார். அப்படிச் செய்தவன் எவ்வாறு யாதொரு துணையுமில்லாமல் கார்ன்வாலிடம் சென்று யாதொரு எதிர்ப்புமில்லாமல் கண்ணையிழக்கிறான் என்பது விளங்கவில்லை. அரசனுக்குரிய உரிமைகளை திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடுகள் செய்துவருபவன் அதற்குத்தக்க முன்னெச்சரிக்கையுடனிருக்கவேண்டும்.

கிளஸ்டர் ஒரு பெரிய பிரபு. அக்காலத்தில் பிரபுக்களின் குடிகள் அவர்களையே அரசனைவிட மேலாக மதித்தனர். மேலும் கிளஸ்டர் தன் குடிகளின் அன்பிற்குரியவரானவன். கார்ன்வாலும் ரீகனும் அதிகம் பரிவாரங்களுடன் வந்ததாகத் தெரியவில்லை. அப்படியிருக்கும் நிலையில் லியர் தப்பிய விஷயம் எப்படியும் தெரியும். அப்பொழுது கார்ன்வாலின் கோபத்திற்காளாவோமென்று எச்சரிக்கையுடனிருக்கவேண்டுமென்று எதிர்பார்க்கலாம். அதற்குமாறாக மிகவும் எளிமையான ஒருவனைப்போல் கண்களை இழப்பது ஆச்சரியமே.

ரீகன் மூலம் தான் நம்பிய எட்மண்ட் அயோக்கியனென்றும், தான் ஏமாற்றப்பட்டதுடன் எட்கார் அநியாயமாகப் பதவியை இழந்தான் என்றும் அறிந்தவுடன் ஒவ்வொரு விநாடியும் எட்காரின் க்ஷேமத்திற்காகத் தெய்வங்களை வேண்டுகிறான். அவனைக் காண்போமோ என்ற ஏக்கம் அதிகரிக்கிறது. அப்படியிருந்தும் தன்னுடன் எட்கார் மாறுவேடத்துடன் இருப்பதை அறிந்துகொள்ளவில்லை என்பது மிகவும் ஆச்சர்யமாகவிருக்கிறது.

எட்கார் பயித்தியக்காரனைப்போலல்லாது சாதாரணமாகப் பேசுவதைக் கண்டபொழுது கிளஸ்டர் சந்தேகிக்கிறான். ஆனால் எட்கார் என்று அறிய வில்லை. எவ்வளவுதான் மாற்றிக்கொண்டாலும் தந்தையால் மகனுடைய பேச்சையும் குரலையும் கண்டுபிடிக்க முடியாதா?

கிளஸ்டருக்கு ஜோஸ்யத்தில் நம்பிக்கை இருக்கிறது. எட்காரின் பொய்க்குற்றச்சாட்டுப்படி அவன் ஒருக்கால் கோள்களின் பலத்தால் நடந் திருக்கலாமென நினைக்கிறான். அதே நம்பிக்கை அவனை எப்படி துஷ்டப் பிள்ளைகளுக்கு வண்டுகளை அதேபோல் மனிதர்கள் தெய்வங்களுக்கு விளை யாட்டுக் கருவிகள் என்று குற்றம் சாட்டச்செய்கிறது. லியர் கோபத்துடன் புயலில் சென்று வெறுப்பால் பல துன்பங்களை அநுபவித்து மதியை இழக் கிறான். கிளஸ்டர் கண்களை இழந்த துன்பத்துடன் மகனைக் காணாத துன்பமும் வாட்டத் தன் ஆவியை கடலில் விழ்ந்து முடித்துக்கொள்ளத் தீர்மானிக்கிறான். எட்காரின் சூழ்ச்சியால் அவ்வெண்ணம் நிறைவேறாமல் தடுக்கப்பட்டு இன்ப துன்பங்களைச் சகிப்பதே மனிதனின் லக்ஷணம் என் பதை உணர்ந்து பொறுமையுடையவனாகிறான். லியர் புத்தியை இழந்து படும் பரிதாபகரமான துன்பங்களைக் கண்டபின் தன் துயரங்கள் மிகவும் அற்பமென நினைக்கிறான். இந்த நிலையில் யுத்தத்தின் எதிர்பாராத முடி வும் எதிர்பாராத விதமாய் எட்கார் தன்னிடமிருந்து உதவிபுரிந்து வந்ததை யும் அறிந்தவுடன் கிளஸ்டரால் அந்த முரண்பாடான செய்திகளைத் தாங்க முடியாமல் இறக்கிறான்.

லியரைப்போல் சுத்தமான வாழ்க்கையில்லாதவன். யாரை நம்புகி றாரோ அந்தப் புத்திரன் கிளஸ்டரிடம் சற்றும் அன்பு கொள்ளவில்லை. அநற்தமாகக் கிளஸ்டரை எளிதில் ஏமாறக்கூடிய மூடன் என்றும் ஸ்திரிலோலனென்றும், ஸ்திரிலோலனாயிருப்பதைக் கிரஹங்களால் ஏற்பட்ட கோளாறு என்று சொல்லித் தப்பிக்க நினைக்கிறானென்றும் எட்மெண்ட் ஏளனமாகக் கூறுகிறான். அன்புடன் ஆதரித்த எட்காரும், எட்மன்டைக் கண்டிக்கும் முறையில் கிளஸ்டர் பால்யத்தில் தவறாக நடந்துகொண்டு எட் மெண்டைப் பெற்றதால் தன் கண்களை இழந்தார் என்று கூறித் தந்தையின் தவறு தண்டிக்கப்பட்டதெனக் கூறுகிறான்.

கானரில். ரீகன்: அன்புடன் பெற்று வளர்த்துத் தன் அரசையும் பகிர்ந்தளித்த தந்தைக்குத் துரோகிகள், கைப்பிடித்த கணவனுக்குத் துரோ கள். உடன் பிறந்த தங்களுக்கே துரோகிகள் என்றால் அவர்களிருவரைப் பற்றிக் கூறவேண்டியதெல்லாம் கூறிவிட்டதாகும். உலகில் பெண்கள் ஆண் களைவிடப் பெற்றோரிடத்தில் அதிகம் அன்பு பாராட்டுவார்கள் என்பதியற்கை. இவர்கள் அதையும் பொய்யாக்கிவிட்டனர். கானரிலும், ரீகனும் பெண் ணல்ல, பேயே. மிகக் கொடியவர்களான இவர்களில் கானரில் அதிகம் கொடியவள். மிகவும் துணிகரமாகவும் தீர்க்கமான முன் எச்சரிக்கையுடனும் கானரில் எதையும் செய்கிறாள். தயக்கமென்பது கிடையாது. புருஷனையும் தங்கையையும் தந்தையையும் கொல்லச் சூழ்கிறாள். அவளுக்கு விஷம்

கொடுத்துக்கொல்கிருள். கணவன் குற்றச்சாட்டுக்கு மிகவும் அலக்ஷியமாகச் சட்டங்கள் அரசியை யாதொன்றும் செய்யமுடியாதென்கிருள். ஆனல் தன் ஜபம் சாயாதென்பது தெரிந்தவுடன் தன்னையும் மாய்த்துக்கொள்கிருள். கானரிலுக்கு ஆல்பனி ஓர் இடறுகட்டை,. ரீகனும் கார்ன்வாலும் காற்றும் நெருப்பும் கலந்தாற்போலிருக்கிருர்கள். இந் நாடகத்திலுள்ள பாத்திரங்களில் கானரிலும் எட்மண்டும் திராசில் சரியாக நிறுப்பார்கள். "மூர்க்கரை மூர்க்கர் முகப்பர், முதுகாட்டில் காக்கை உகக்கும் பிணம்" என்றபடி இந்த துஷ்ட சிரோமணிகள் ஒருவரை ஒருவர் காதலிக்கிருர்கள். கார்டிலியாவுடன் ஒப்பிட்டால் "சீதேவியார் பிறந்த செய்ய திருப்பாற் கடலில் மூதேவி ஏன் பிறந்தாள் முன்? என்ற பாடல் நினைவிற்கு வரும்.

எட்மண்ட்: ஒதெல்லோவில் எவ்வாறு அயாகோவைச் சுற்றிக் கதை வளர்கிறதால் முதல் காக்ஷியிலேயே அயாகோ நமக்கு அறிமுகமாக்கப் படுவதுபோல் இந் நாடகத்தின் "*Villain*" அல்லது துஷ்டனை எட்மண்ட் நமக்கு முதலெடுப்பிலேலே அறிமுகப்படுத்தப்படுகிருன். அவன் வாய் மூல மாகவே அவனுடைய இதயமும் மனப்பான்மையும் நமக்கு ஓரளவு அறி விக்கப்படுகிறது. பெண்களில் கானரில் எப்படியோ அப்படி ஆண்களில் எட்மண்ட்.

விதிகளை அனுசரித்த மண மனைவியின் மூலம் தன் பிறவி ஏற்படாததால் உலகம் தன்னை நிந்திப்பதால் எட்மண்ட் உலகத்தினரைச் சற்றும் மதிக்க வில்லை. இயற்கையானுசாரம் பிறந்த தனக்கு இயற்கையே தெய்வம் என் கிருன். வாலிழந்த நரிபோல் களவொழுக்கத்தால் பிறந்த குழந்தைகளே பெற்ருேரின் முழுச் சக்திகளுடன் கருத்தரிக்கப்பட்டு ஆண்மையும் அறிவும் பெற்றவர்களாயிருப்பார்கள் என்கிருன். உலகத்தினர் தன் போன்றவர்களைக் கேவலமாக நினைப்பது சரியல்லவென்பது அவனுடைய தீர்மானம். அவர் களின் சட்டதிட்டங்களால் தன் உரிமைகளை இழக்கும்படி செய்ததை அவன் ஏற்றுக்கொள்வதாயில்லை. மாந்தர்கள் அளிக்காத உரிமையைத் தன் மதி யால் பெறத்தீர்மானிக்கிருன். கள்வன் காளியைக் கும்பிடுவதுபோல் தன் தீச் செயலிற்குத் தெய்வங்களின் துணையை நாடுகிருன். எட்கார் எழுதிய தைப்போல் தானே ஒரு கடிதம் எழுதி அதன் மூலம் தந்தையை மிகவும் சாமர்த்தியமாக ஏமாற்றி நம்பும்படி செய்து எட்கார்மேல் தந்தையின் கோபத்தை உண்டாக்குகிருன்.

"ஒதெல்லோ" விற்குப்பின் எழுதப்பட்டதால் அயாகோவின் நடிப் பும், பேச்சும், அனுசரிக்கும் முறைகளும் தந்திரங்களும் எட்மண்டாலும் கையாளப்படுகின்றன. அயாகோவைப்போலவே தன்னுடைய சூழ்ச்சிக்கு இலக்காகவிருப்பவர்களின் சாமர்த்தியக்குறைவை நன்கு உணர்ந்து அவை களை மிகவும் ஈவிரக்கமில்லாமல் தன் எண்ணங்களை ஈடேற்றிக்கொள்ளப் பயன்படுத்திக்கொள்கிருன். எவ்வாறு அயாகோ ஒதெல்லோ முதலானவர் களை ஒருவருடன் ஒருவர் சந்திக்காதவாறு செய்து பிரிக்கிருனே அவ்வாறே எட்காரும் அடுத்தடுத்துவரும் தந்தையையும் தமையனையும் ஏமாற்றுகிருன்.

நடிப்புத் திறமை முழுவதும் பெற்ற இந்த கிளஸ்டரின் புதல்வர்களில் எட்மண்ட் எட்காரை ஏமாற்றுவது விசேஷம். “எதையும் நம்பும் ஒரு தகப்பன், எவருக்கும் தீங்கு நினையாததால் எவரைப்பற்றியும் சந்தேகிக்காத ஒரு தமையன் இருவருடைய மூட நம்பிக்கை என் சூழ்ச்சியை எளிதில் சபலமாகச் செய்யும்” என்கிறான்.

எட்மண்ட் தான் செய்யவேண்டியதைப்பற்றியோ செய்வதைப்பற்றியோ சற்றும் தயக்கமோ, பின்னிரக்கமோ கிடையாது. அயாகோவைப்போல் அவனுடைய எதிரிகள் பலமானவர்களல்ல. அதனால் அயாகோவைப்போல் மிகவும் ஜாக்கிரதையாக ஒவ்வொரு அடியையும் கவனிக்கவேண்டிய அவஸ்யம் ஏற்படவில்லை. என்றாலும் கிடைத்த சந்தர்ப்பத்தை முழுவதும் தாமதமில்லாமல் பயன்படுத்திக்கொள்வது ஆச்சரியமாயிருக்கிறது. அவனுடைய கூரிய புத்தியுடன் அவனுக்குதவியாகப் பேய்கள்போன்ற ரீகனும், கானரிலும் கண்டு மயங்கும் அழகும் பெற்றிருக்கிறான். அயாகோ ஏன் அவ்வாறு செய்கிறான் என்று அறியமுடியாது. எட்மண்ட் அப்படியல்ல, அவனுடைய நோக்கம் என்ன என்பது தெள்ளெனத் தெரிகிறது. அயாகோ கைக்குட்டையக்கொண்டு ஒதெல்லோவின் சந்தேகத்தை வளர்க்கிறான். எட்மண்ட் தான் உற்பத்தி செய்த கடிதத்தால் ஏமாற்றுகிறான்.

தன்னைப் பெற்ற கிளஸ்டரிடம் அவனுக்குச் சிறிதும் அன்பு கிடையாது. தன்னைக் களவொழுக்கத்தால் பெற்றதற்காகக் கிளஸ்டரை வெறுக்கிறான். ஸ்திரீலோலனான மனிதன் தன் குற்றத்தைக் கிரகங்களின்மேல் சுமத்துகிறான் என்று ஏளனமாகச் சொல்கிறான்.

அவன் முதலில் தந்தையின் நிலங்களை அடையவேண்டுமென முயல்கிறான். எட்காரைக் கிளஸ்டர் தன் வாரிசல்லவென்று அறிவித்து அவனைக் கொல்ல உத்தரவிட்டதும் அவ்வெண்ணம் கைகூடுகிறது. கிளஸ்டர் எட்மண்டைத் தன் வாரிசாக்க முயல்வதாகக் கூறுகிறார்.

ஈவிரக்கமற்ற ராக்ஷஸன். இந்த நிலையில் பரம ரகசியமான கார்டிலியாவின் படை எடுப்பைப்பற்றிய கடிதத்தைப்பற்றி கிளஸ்டர் மிகவும் நம்பிக்கையுடன் பிரஸ்தாபிக்கிறார். தந்தையைச் சிறையிலிட்டும் உடன் பிறந்தாரையும் உற்றாரையும் கொன்று ரத்தக் களரியில் அரியாதனம் ஏறியவர்களைப்பற்றிச் சரித்திரத்தில் படித்திருக்கிறோம். கிளஸ்டரின் வாக்குறுதி இப்பொழுது அவனுக்குப் போதியதாகத் தோன்றவில்லை. நம்பிக்கைத் துரோகம் செய்யத் தயங்கவில்லை. இரண்டாவது யோஜனைக்கிடமின்றி உடனே தந்தையைக் காட்டிக்கொடுத்துவிடுகிறான். பழையவர் விழ்தலும் புதியவர் பதவி ஏற்பதும் வழுவலவென்று தத்வம் போதிக்கிறான். கிளஸ்டரைக் காட்டிக்கொடுத்ததுமல்லாமல் கார்ன்வாலின் கோபத்திற்கு அவரை இறையாக்கிவிட்டுக் கானரிலுடன் காதல் யாத்திரையில் செல்கிறான். இந்தத் துரோகச் செயலின் வெகுமதியாக அவன் கிளஸ்டர் பிரபுவாக்கப் படுகிறான்.

கானரில்லுடன் சென்று திரும்பும் காலையில் கார்ன்வால் கொல்லப்பட்டு ரீகன் விதவையாகிருள். அவள் கணவன் இறந்ததால் யாதொரு தடையுமின்றி எட்மண்டை மணந்துகொள்ளலாமென நினைக்க இருவரும் பேசிக்கொள்கின்றனர். எட்மண்ட் கார்ன்வாலின் படைகளுக்குத் தலைவனுக்கப் படுகிருன். கார்டிலியாவின் படைகளுடன் போர் துவங்குமுன் கானரில்லும் ரீகனும் எட்மண்டை, தனக்கே உரியவனுக்கப் போட்டியிடுகின்றனர். கானரில் தன் கணவனை ஒழித்துவிடுமாறு எட்மண்டைத் தூண்டுகிருள். அவனுல் முடியாவிட்டால் தான் எப்படியாவது ஒழித்துவிடுவதாகக் கூறுகிருள். இந்த நிலையில் அவனுக்கு எப்படி இருவரையும் திருப்தி செய்வதென்பது தோன்றவில்லை. சுயநலத்தைத் தவிர வேருென்றும் அறியாத அவன் கானரில்தான் சாமர்த்தியசாலி என்றும் அவள் எப்படியும் தன் கணவனை ஒழித்துவிடுவாள் என்றும் அவளே அகில இங்கிலாந்திற்கும் உரியவளாவாள் என்றும் அப்பால் ரீகனையும் கைவிட்டு விடலாம் என்றும் எண்ணுகிருன். அவன் கண்முன் பெரிய மனக்கோட்டை தோன்றுகிறது. ஆனுல் காரியவாதியான அவன் அம்மனக்கோட்டையை எண்ணி மகிழாமல் தான் செய்யவேண்டியது யுத்தத்தில் வெற்றி பெறுவதென்பதை உணர்ந்து உடனே போருக்கெழுகிருன். ஆல்பனி லியரையும், கார்டிலியாவையும் மன்னிக்க எண்ணுவதைத் தான் எப்படியும் தடுத்துவிடப்போவதாக முன்கூட்டியே தீர்மானித்துவிடுகிருன். இப்பொழுது அவன் தான் பிரிட்டிஷ் அதிபதியாகிவிடலாமென்றெண்ணுகிருன்.

எட்மண்டின் எண்ணம் கைகூடும்போலிருக்கிறது. யுத்தத்தில் வெற்றி கிடைக்கிறது. அதிர்ஷ்ட தேவதை அவனைப்பார்த்துப் புன்முறுவல் செய்வது போலிருக்கிறது. ஆனுல் விதிவசத்தால் கானரில் தன் கணவனைக் கொன்றுவிடும்படி எழுதிய கடிதம் எட்கார் கையில் கிடைக்கிறது. எட்கார் வஞ்சம் தீர்க்கத் தீர்மானிக்கிருன். கடிதம் ஆல்பனியின் கையில் சேருகிறது. அவனுடைய மனக்கோட்டை எல்லாம் தகர்ந்துவிடுகிறது. எட்காரின் கையால் மாண்டொழிகிருன். ஆனுல் அவன் இறப்பதற்குமுன் ஒரு பைசாச காரியம் செய்துவிடுகிருன். தான் தீர்மானித்தபடி கார்டிலியாவையும் லியரையும் கொன்றுவிட உத்தரவிடுகிருன். படைத் தலைவன் கார்டிலியாவை தூக்கிவிடுகிருன். லியர் காப்பாற்ற முயன்றும் முடியவில்லை.

எட்மண்ட் தன்னை முற்றிலும் அறிந்திருந்தான். தான் துஷ்டனென்றும் காமாந்தகாரனென்றும், தான் எந்தக் கிரஹத்தின் கீழ் பிறந்தாலும் அவ்வாறேதானிருந்திருக்கக்கூடுமென்றும் கூறுகிருன். தன் இயற்கைக்கு மாருக ஒரு காரியம் செய்ய விரும்புகிருன். லியரையும் கார்டிலியாவையும் தான் கொல்ல உத்தரவிட்டிருப்பதாயும் அதைத் தவிர்க்க உடனே ஆளனுப்பும்படியும் கூறுகிருன். இதில் அவன் அயாகோவைப்போலில்லை. அயாகோ தன் வாயைக்கூடத் திறக்கமாட்டேனென்கிருன். எட்மண்ட் தன் முடிவைப் பற்றியும் வருந்தவில்லை. எட்கார் அவனைப் பார்த்து உன்னைத் தன் காம வேட்கையால் பெற்றதன் பலனுகத் தந்தை கண்களை இழந்தார் என்றும்,

ம. **

கடவுள் நம் கெட்ட செய்கைகளுக்காகத் தண்டிக்கிறார் என்று கூறவும், அவன் "ஆம், என்னுடைய காலச்சக்கரம் ஒருமுறை பூர்ணமாக சுழன்று வந்துவிட்டதால், நான் முடிவிற்கு வந்திருக்கிறேன்" என்று சொல்கிறான்.

ஆல்பனி: எட்மண்ட் எவ்வளவு காரியவாதியோ அதற்கு நேரிடை ஆல்பனி. ஆல்பனியின் சாந்த ஸ்வாபத்தைக் கோழைத்தனமென்று கானரில் கருதுகிறாள். இயற்கையிலேயே சுருசுருப்பில்லாத ஒருவனை அவன் மனைவி சதா கடிந்துகொண்டிருந்தால் அவன் எக்கதியாவான் என்பதை யாவருமறிவர். நல்ல குணம் படைத்தவனாயினும், நீதி தவறக்கூடாதென்ற எண்ணமுடையவனாயினும், தன் மனைவி லியரிடம் நடந்துகொண்டது தவறென்றுணர்ந்தும், அதைக் கண்டிக்கத் தொடங்கினும், கானரில் அதட்டிச் சொன்னவுடன் அத்துடன் மேற்செல்லாமல் நின்றுவிடுகிறான். ஆல்பனியின் இந்த அசமந்த குணம் நாடகத்தின் போக்கை மிகவும் பாதிக்கிறது. அந்த சந்தர்ப்பத்தில் கானரிலை அடக்கியிருந்தால் கதையில் நடந்தவாறு முடிவு ஏற்பட்டிராது. லியரிடம் தான் யாதொரு தவறும் செய்யவில்லை என்று மட்டும் கூறிவிட்டு நின்றுவிடுகிறான். அதற்குமாறாக எட்மண்டின் சுருசுருப்பும் காரியத்தில் கண்ணுங்கருத்துமாயிருப்பதும் கானரிலின் உள்ளத்தைக் கவருகிறது. அதனால் அவள் மூடனான ஆல்பனி தன்னை அக்ரமமாகப் பற்றுகிறான் என்கிறாள். மனைவியின் குற்றங்களை உணர்ந்தும் அதைக் கடிந்து சீர்திருத்தக்கூடிய உறுதி இல்லாததால் பிறரின் இகழ்ச்சிக்குரியவனாகிறான்.

ஆனால் நாட்கள் செல்லச் செல்ல ஆல்பனியின் பொறுமையும் குறைகிறது. கானரிலைக் கண்டிக்கத் தொடங்குகிறான். ஆனால் கானரில் அவனைக் கேலியாக ஏளனம் செய்கிறாள். பிரான்ஸின் படைகள் ராஜ்யத்தில் நுழைந்து அரசுரிமையைப் பிடுங்கிக்கொள்ள வந்திருக்கும்பொழுது, அவன் அப்படிச் செய்வானா? ஏன் செய்தான் என்றெல்லாம் தத்துவம் பேசிக் காலத்தைப் போக்குகிறாயா என்று கூறுகிறாள். கார்ன்வால் இறந்ததைக் கேட்டு அது நியாயம் என்றும் கடவுள் மேலே இருக்கிறார், அயோக்கியர்களைத் தண்டிப்பார் என்றும் சொல்லித் திருப்தியடைகிறான். க்ளஸ்டர் கண்களை இழந்ததற்கு வருந்துகிறான். எங்கு நியாயமில்லையோ அங்கு தன் பராக்ரமத்தைக் காட்டமுடியாதென்கிறான். ஆனால் அவனுடைய தவறான தேசபக்தி லியருக்கும் கார்டிலியாவிற்கும் மறலியாக முடிகிறது. நேரில் அதிகம் பங்கெடுத்துக்கொள்ளாவிடினும் அவனுடைய படைகளும் அவன் பேரும் கார்டிலியாவைத் தோற்கடிக்கின்றன.

ஆனால் கானரில் எழுதிய கடிதத்தின்மூலம் அவளுடையவும் எட்மண்டினுடையவும் துரோகமும் வெளியானவுடன் அவன் தீவிரமான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறான். அப்புறம் அவனுடைய தீர்மானத்தை ஒன்றும் அசைக்கவில்லை. வெகு முன்ஜாக்கிரதையுடன் நடந்துகொள்கிறான். அதனால் கானரில் தன் ஆவி துறக்கிறாள். எட்மண்ட் ரீகனை மணக்க முடியவில்லை. அவளும் விஷத்தாலிறக்கிறாள்.

இந்த சந்தர்ப்பத்திலும்கூட அவனுடைய இயற்கையான சாந்த ஸ்வரூபம்தான் கார்டிலியாவின் மரணத்திற்கு ஏதுவாகிறது. லியரையும் கார்டிலியாவையும்பற்றி விசாரிக்கத் தொடங்கியவன் அவர்கள் சிறையி லிருப்பதை உணர்ந்தும் அவர்களை உடனே விடுவிக்க முயலாமல் எட் மண்டுடன் தர்க்கம் செய்யத் தொடங்கி எட்மண்டிற்கும் எட்காருக்கும் நடந்த துவந்த யுத்தத்தில் ஈடுபடுகிறான். இதற்கிடையில் எட்மண்டின் உத்தரவுப்படி கார்டிலியா தூக்கிலிடப்படுகிறாள்.

இந்தத் துன்பங்களை எல்லாம் தாங்கமுடியாமல் தனக்குக் கிடைத்த ராஜ்யத்தை ஆள விரும்பாமல் எட்காரிடம் ஒப்படைத்துவிட்டு வெளியேறு கிறான்.

எட்கார்: எட்காரும், எட்மண்டும் லியரின் புதல்விகளைப்போன்ற வர்கள். ஒரே தந்தையின் குழந்தைகளாயினும் குணத்தில் முற்றிலும் மாறு பாடானவர்கள். இருவரும் நன்றாகக் கல்வி பெற்றவர்கள். இயற்கையி லேயே சாமார்த்தியமுள்ளவர்கள். நடிப்புத்திறமை இருவர்க்கும் விசேஷமாக இருக்கிறது. ஆண்மையிலும் தேகவன்மையிலும் வாலி சுக்ரீவர்கள்போலிருக் கிறார்கள். அவர்களுடைய ஒற்றுமை அத்துடன் முடிகிறது. மற்றப்படி ரீகன், கானரில் இவர்களுக்கும் கார்டிலியாவிற்கும் உள்ளதுபோல் ஒவ்வொரு விஷயத்திலும் முற்றிலும் வேறுபாடு இருக்கிறது. ஒருக்கால் எட்காரைப் போல் அவனும் மணவினையின்மூலம் பிறந்த மகனாயிருந்து உலகத்தாரின் பழிப்புக்கு உட்படவில்லையானால் நல்லவனாயிருந்திருக்கலாம்.

பிறர் யாருக்கும் யாதொரு தீங்கும் விளைக்க விரும்பாதவனும், அதனால் யாவரையும் நல்லவர்களென்றே எண்ணுபவனும் மிகவும் சிறந்தகுணவானு மாயிருப்பதால் மிகவும் எளிதாக ஏமாற்றப்படக்கூடியவன் என்று வைரியான எட்மண்டே கூறுகிறான். ஆயினும் மேலே கூறப்பட்டபடி எட்காரின் போக்கு அநேக சந்தர்ப்பங்களில் விநோதமாகவும் அசம்பாவிதமாகவுமிருக்கிறது. எட்கார் ஆல்பனியிடம் கடிதத்தைக் கொடுத்துவிட்டுத் தான் இன்னானென்று தெரிவிக்காமல் செல்வதுடன் யுத்தம் ஆரம்பிக்கும்முன் படிக்கும்படி சொல் கிறான். யுத்தத்தில் ஆல்பனிக்கு வெற்றி கிடைத்தால் தான் வந்து திருப்பிப்பதாகச் சொல்கிறான். இது மிகவும் அசம்பாவிதமாகவும் முட்டாள் தனமாகவுமிருக்கிறது. கடிதத்தை ஆல்பனி அப்பொழுதே படித்திருந்தால் யுத்தமே நடந்திராது. லியர், கார்டிலியா முதலானோர் இறந்திருக்கவுமாட் டார்கள். கதை சோகமாக முடியவேண்டுமானால் எட்கார் அப்பொழுது கடிதத்தைக் கொடுத்திருக்கக்கூடாது. எட்மண்டும் ஆல்பனியும், ரீகன், கானரில்லும் வாக்குவாதம் செய்துகொண்டிருக்கும்பொழுது கொடுத்திருந் தால் நன்றாகஇருக்கும். அதனால் ஏற்படும் "*Dramatic Interest*" நாடக ருசி, தனியாக இருக்கும்.

எட்கார் பயித்தியக்காரனாக மிகவும் திறமையுடன் நடிக்கிறான். அப்படி நடிப்பதால்தான் தன்னையும் பிறகு தந்தையையும் காப்பாற்ற முடி

கிறது. ஒரு பயித்தியம் பிடித்த அரசன், பயித்தியம் பிடித்தவனாக நடிக்கும் ஒருவன் இவைகளை உணராது தன்னுடைய விகடங்களை எல்லாம் விணாகப் பிரயோகம் செய்யும் பயித்தியக்கார அரசவை மூடன் (Court-fool) மூவரும் கூடி அளிக்கும் காக்ஷி ஒருங்கே பரிதாபகரமாகவும் நகைப்பைத் தருவதாகவுமிருக்கிறது. எட்கார் டோவரில் தந்தையை ஏமாற்றும்விதம் சாத்யமா என்பதைப்பற்றியும் அபிப்ராயபேத மேற்படலாம்.

கவி எட்கார் மூலமாகவும், லியர், விதூஷகன் வாயிலாகவும் அநேகம் அரிய கருத்துக்களை வெளியிடுகிறார். எத்தகைய துன்பம் நேரிட்டாலும் அதனால் எட்கார் தளர்வெய்துவதில்லை. எதையும் தன்னால் கடக்க முடியுமென்ற நம்பிக்கையுடனிருக்கிறான். அதற்காக ஆத்திரப்படவுமில்லை. அமைதியுடன் காலத்தை எதிர்பார்த்து நிற்கிறான். மரணதண்டனையிலிருந்து தப்பிக்கப் பயித்தியக்காரனாக நடிக்கிறான். அது பின்னால் தந்தையைக் காக்க உதவுகிறது. அவனுடைய உற்சாகமும் தன்னம்பிக்கையும் ஆச்சர்யமானது. "எல்லோராலும் மிகவும் எளியவன் அற்பன் என்று ஏளனம் செய்யப்படும், இதற்கும் கீழான நிலை எய்தமுடியாது என்றெண்ணத்தக்க" நிலையே மேலான பதவியைவிடச்சிறந்தது. ஏனெனில் கீழான பதவியிலிருப்பவன் இனி நாம் நல்ல நிலையை அடைவோம் என்ற நம்பிக்கை கொள்வான். மேலான பதவியிலிருப்பவன் தாழ்மையுறுவதே துயரத்தைத் தரும் என்கிறான். தன் தந்தை "துஷ்டப்பையன்களுக்குத் தட்டாரப்பூச்சி போல் தெய்வங்களுக்கு நாம்" என்று கூறும்பொழுது "துன்பத்தைத் தாளாது மதியிழந்து தன்னையும் பிறரையும் வெறுத்துக் கோபிப்பவன் கருமம் நல்லதல்லவென்கிறான். எட்காரின் சாந்தமான ஆறுதல் மொழிகள் நல்ல பலனை அளிக்கின்றன. கடவுள் மனிதனுக்குத் துன்பம் அளிப்பது மேல். அதிலும் பணம் படைத்தவர்கள் துன்பமடைந்தால் நல்ல புத்தியடைந்து தம்மிடம் அதிகமாக இருக்கும் பொருளை ஏழைகட்குக் கொடுப்பார்கள். பகிர்ந்து கொடுப்பதால் அதிகப்படியான தேக்கம் குறைந்து எல்லோரும் வேண்டியவற்றை பெறுவர் என்கிறான்.

சற்றும் ஆராயாது, காரணமின்றித் தன்னை வெறுத்து உதறி மரண தண்டனைக்குள்ளாக்கிய தந்தையை அவன் வெறுக்கவில்லை. கண்ணிழந்து தடுமாறி விட்டைவிட்டுத் துரத்தப்பட்ட தந்தையைக்கண்டதும் அவன் படும் துயரம் எல்லையற்றது. மிகவும் அன்புடனும் ஆதரவுடனும் தந்தைக்கு வழிகாட்டியாக டோவர் அழைத்துச்செல்கிறான். வழியில் படும் கஷ்டம் அளவில்லை. தற்கொலை செய்து கொள்ள விரும்பிய தந்தையை சாமர்த்தியமாகத்தடுக்கிறான். லியர் முற்றிலும் பயித்தியம் பிடித்துக் காட்டு மலர்களையும் தழைகளையும் அணிந்துகொண்டு பிதற்றும் காக்ஷி அவன் இதயத்தைப் பிளக்கிறது. லியரிடம் அவன் இரக்கம் அதிகரிப்பதால் தன்னுடைய மாறு வேடம் வெளியாகி விடுமென்று பயப்படுகிறான். தான் அதிர்ஷ்ட தேவதையின் கோபத்திற்களாகிப் பட்ட அவஸ்தையால் துன்பப்படுபவர்களிடமெல்லாம் இரக்கம் கொள்ளும் ஓர் எளிய மனிதன் என்று தன்னைக் கூறிக்கொள்கிறான்.

குணவானான எட்கார் கானரில் எழுதிய கடிதத்தைப் படித்ததும் அவனுடைய துன்பமும் ஆச்சர்யமும் அவனை "கண்டறியமுடியாத ஸ்திரிசாகசமே குணவானான கணவனைக் கொல்லச் சூழ்ச்சி, அவனுக்குப்பதில் என்னுடைய தம்பி" என்று அலரச்செய்கிறது. ஆயினும் அந்தக் கடிதத்தைக் கொண்டு உரிய காலத்தில் தன் காரியங்களைச் சாதிக்க முடிவுகட்டுகிறான். அதேபோல் செய்து எட்மண்ட், கானரில், ரீகன் சூழ்ச்சிகளைத் தவிர்க்கிறான்.

யுத்தத்தில் கார்டிலியா தோல்வியுற்று லியரும் அவளும் சிறைப்பட்டதைப்பற்றி அவன் கவலைப்படவில்லை. அவன் தந்தையைக் காப்பாற்ற விரைகிறான். தந்தை மறுபடியும் புலம்புவதைக் கேட்டதும் மிகவும் கடந்த ஞானியைப்போல் "உரிய காலத்தன்றி நாம் இவ்வுலகத்திற்கு வருவதும் அதை விட்டுச் செல்வதும் முடியாது. அவைகளை அவ்வப்பொழுது அனுபவித்தே தீரவேண்டும்" என்கிறான். கிளஸ்டர் அதை உண்மை என்று ஏற்றுக் கொள்வதைத்தவிர வேறொன்றும் கூற முடியவில்லை.

எட்கார் தெய்வபக்தி உள்ளவன். நல்லவர்களை உள்ளன்போடு நேசிக்கிறான். தன்னலமற்ற ராஜ விச்வாசியான கென்டிடம் அளவற்ற அன்பும் மரியாதையும் காட்டுகிறான். அவ்விருவருடைய நற்குண நற்செய்கைகளை கண்ட ஆல்பனி அவர்களிருவரையும் ராஜ்யத்தைத் தனக்குப் பதிலாக ஆளும்படி கேட்டுக்கொள்கிறான். கென்ட் மறுக்க, எட்கார் ஏற்றுக் கொள்கிறான்.

கென்ட்: தன்னலமற்ற ராஜ விசுவாசமுள்ள உயர்குலத்தோன்றல். கடமையுணர்ந்து அதைக் கடைப்பிடிப்பவன். காரியங்களின் விளைவுகளை உணர்ந்து எச்சரிக்கும் விவேகி. யதேச்சாதிகாரியான லியரின் கோபத்தைச் சற்றும் பொருட்படுத்தாதவன். லியரின் விவேகமற்ற செய்கை நன்மை பயக்காதென்பதை உணர்ந்து வெட்டெனப்பேசி லியரை ராஜ்யத்தைப் பகிர்ந்து கொடுக்கவேண்டாமென்கிறான். கானரில், ரீகன் இருவரையும்விட கார்டிலியா அன்பில் குறைந்தவள் அல்லவென்பதை எடுத்துக்காட்டுகிறான். லியரின் மூர்க்கத்தனத்தைக் கண்டு அஞ்சா நெஞ்சத்துடன் "லியர் மதியையிழக்கும்பொழுது கென்ட் மரியாதை காட்டமுடியாது" என்றும் "கிழவனே, நீ என்ன செய்வாய்" என்றும் ஆத்திரத்துடன் புகல்கிறான். வாசகர்கள்கூட கென்ட் மரியாதையில்லாமல் பேசுவதை விரும்பமாட்டார்கள். நாடு கடத்தப்பட்டவுடன் வருத்தத்துடன் விடை பெற்றுக்கொள்கிறான்.

ஆனால் கென்ட் அரசனுக்கு நேரக்கூடிய ஆபத்துக்களை உணர்கிறான். அதனால் தான் மிகவும் நேசித்த மன்னனைக் காக்க மாறுவேடம்பூண்டு பக்கலிலேயே இருந்து தொண்டுசெய்யத் தீர்மானிக்கிறான். மிகவும் சாமர்த்தியமாகவும் வெற்றிகரமாகவும் நடிக்கிறான். கள்ளங்கபடமற்றவன். ஆனால் சில சந்தர்ப்பங்களில் விவேகத்தைவிட ஆண்மையை அதிகமாகக் காண்பிக்கிறான். அயோக்யத் தனத்தைக் கண்டால் அஞ்சாது கண்டிப்பான்.

ஆஸ்வால்ட் அவனிடம் பன்முறை உதைவாங்குகிறான். கார்ன்வாலை "அஜாக்ஸ" என்று கேலி செய்யவும் அவனால் குட்டையிலடைக்கப்பட்டு வருந்துகிறான்.

லியர் கோப மிகுதியாலும் ஏமாற்றத்தாலும் புத்தி பேதளிக்கக்கூடு மென்பதை உணர்ந்து அதைத் தவிர்ப்பது ஓய்வளிப்பதென்பதே என்று தன்னாலியன்றமட்டும் லியரை ஓய்வெடுத்துக்கொள்ள வேண்டுகிறான். அம் முயற்சியில் சற்று வெற்றிபெறும்பொழுது க்ளஸ்டர் அரசன் உயிருக்கே ஆபத்து நேரிடுமென்றும் உடனே அரசனைத் தூக்கிச்செல்லுமாறு கூறு கிறான். அரசனை டோவருக்கு அழைத்துச் சென்றதால் அரசனுக்கு முற்றி லும் பயித்தியம் பிடித்துவிடுகிறது. வழியில் சொல்லொண்ணாக் கஷ்டம் அனுபவித்ததாகக் கூறப்படுகிறது.

எப்படியும் லியரின் இழந்த பதவியை மறுபடியும் பெறவேண்டு மென்று கார்டிலியாவுடன் முயற்சி செய்கிறான். க்ளஸ்டரும் அதை அறியா மல் தனியாக ஈடுபடுகிறான். கென்டின் சுத்தமான இதயமும், தன்னலமற்ற ராஜ விசுவாசமும் எல்லோருடைய உள்ளத்தையும் கவருகின்றன. ஆல்பனி, கார்டிலியா, எட்கார், க்ளஸ்டர் யாவரும் புகழ்கின்றனர். ஆல்பனி கென்ட் டிற்குத் தக்க மரியாதை செலுத்தச் சந்தர்ப்பமில்லையே என வருந்துகிறான். "நான் எவ்வளவு காலம் நல்லவளாக வாழ்ந்து தாங்கள் செய்த நன்றிக்கு பதில் செய்யப்போகிறேன்" என்று கார்டிலியா தவிக்கிறாள். மாறுவேடம் பூண்டு அடிமைகள் செய்யாத குற்றேவல்கள் புரிந்தும் அரசனின் துன்பத் தைச் சகிக்காமல் மதிமயங்கி நின்றதையும் கூறி எட்கார் பிரலாபிக்கிறான். லியர் இறந்தபின் தனக்கு வாழ்வு இல்லை என்று தன் மன்னனைப் பின்பற்று கிறான்.

கார்டிலியா: ஓர் அழகான புஷ்பச் செடி. அதில் ஓர் அழகான புஷ்பம் மலர்ந்து அழகும் மணமும் நிறைந்து எல்லோருடைய மனத்தையும் கவருகிறது. அதைத் திடீரென்று ஓர் குரங்கு பிய்த்தெறிந்தால் காண்பார் எல்லோரும் வருந்துவார்களல்லவா? அதேபோல் கார்டிலியா எழிலும், குணமும், சீலமும் படைத்துச் சிறந்துவிளங்குகிறாள். அத்தகைய ஓர் பெண் கள் நாயகத்திடம் யாவரும் அன்பு பாராட்டுவது இயற்கையாக அமை கிறது. பிறரைத் திருப்தி செய்வதற்காக அவள் எதையும் செய்யவில்லை. தன்னடக்கம் அதிகமுடையவள். துக்கத்திலகூடப் பெரிதாகப் பிரலாபிக்க வில்லை. தந்தையின் துன்பத்தைப்பற்றிக் கென்ட் எழுதியக் கடிதத்தைப் படித்தபொழுது அவளுடைய மனம் எவ்வாறு இருந்தது என்பதைக் கனவான் சித்தரிப்பது மிகவும் பொருத்தமானது. "தகுதியுள்ளவர் துக்க மடைவதுகூட அழகாக இருக்கிறது. அவள் தன் மனத்தெழும் இன்ப துன்பங்களின்பேரிலும் அரசியாக இருக்கிறாள்" என்கிறான். தந்தையின் அறிவின்மையும் தமக்கைகளின் நன்றிகெட்ட துரோகமும் அவள் அதரங் களில் ஏளனமான புன்னகையைத் தவழச் செய்கின்றன. ஆனால் அதே

சமயம் தந்தையின் பரிதாபமான நிலை அவ்வதரங்கள் அறியாமலே கண்களி லிருந்து முத்துக்களை உகுக்கின்றன. இச்சகம் பாடுவது அவள் இயற்கைக்கு முற்றிலும் விரோதமானது. அதனால் அவள் அக்காள்களிருவரும் அள்ளி விடும் பொய் மொழிகளை உடனடியாகக் கேலி செய்கிறாள். தந்தையின் கட்டளையைக் கேட்டு மிகவும் அடக்கமாகத்தான் மகள் தந்தையை எவ்வளவு நேசிக்கவேண்டுமோ, எவ்வளவு கடமை உணர்ந்து பணிந்து நடக்க வேண்டுமோ அவ்வளவு நேசிப்பதாகக் கூறுகிறாள். அதற்குமேல் எதுவும் கூற இஷ்டப்படவில்லை. இறில் லியரின் மகளாதலால் லியரைப்போல் பிடிவாத குணமுடையவளாகக் காணப்படுகிறாள்.

அறிவில்லாமல் அகாரணமாய் வெறுத்துத் தள்ளி வசைமொழிகள் புகன்று தன் மகள் அல்லவென்று கடவுளறியக் கூறிவிட்டபோதும் தந்தை யின்பாலுள்ள அன்பு சிறிதும் குறையவில்லை. தந்தையால் கைவிடப்பட் டாலும் பிரான்ஸின் அதிபன் அதைவிட அதிகம் மேன்மையான பதவியை அவளுக்கு அன்புடன் அளிக்கிறான். விடைபெற்றுச் செல்லும்பொழுது "நான் தந்தையின் அன்பிற்குரியவளென்று அவருடைய ஆதரவு பெற்றிருந் தால் அவருக்கு உங்களிருவர்களைவிட வேறு நல்ல இடமளிக்கவிருந்தேன்" என்றும் அப்படிச் செய்ய இயலாதுபோயிற்றே என்றும் வருந்துகிறாள். ஆயினும் தந்தையை மறக்கவில்லை.

சிலவதியாயினும் பிள்ளைப் பூச்சிபோல் இருப்பவளல்ல. பணத்தையும் பதவியையும் பெரிதென நினைத்த பர்கண்டியை நோக்கி "நீ அவைகளைக் காதலிப்பதால் நான் உனக்கு மனைவியாக இருக்கமுடியாது' என்று கூறி மூக்கை உரிக்கிறாள். சகோதரிகளின் வஞ்சக நெஞ்சத்தை அவர்கள்முன்பே தெளிவாகக்கூறி அவர்கள் கூறியபடி தந்தையை அன்பாக நடத்துமாறு கேட்கிறாள்.

அவள் பிரான்ஸ் சென்றதும் தந்தையை மறக்கவில்லை. தினந்தோறும் தன் கணவனை வேண்டித் தந்தையிழந்த அரசை மீட்டுக்கொடுக்க முயலு கிறாள். கென்ட், கிளஸ்டர் முதலிய நண்பர்களுடன் தொடர்புகொண்டு ஆவனவற்றைச் செய்ய ஏற்பாடு செய்கிறாள். கடைசியாக ஓர் படையுடன் டோவரில் வந்திறங்குகிறாள். அங்கு கென்டின் கடிதம் கிடைக்கிறது. படித்த வுடன் கண்ணீர் உகுக்கிறாள். கனவான் அவள் கண்ணீரை "அவள் தெய்விகமான கண்களிலிருந்து வழிந்த புனிதமான நீரைத் துடைத்துக் கொண்டாள்" என்கிறான்.

தந்தையின் பயித்தியத்தை நேரில் கண்டதும் அவள் பரிதவிப்பது எடுத்துரைக்கமுடியாது. லியரின் பித்தத்தைத் தெளிவிப்பவருக்குத் தன் உடமையெல்லாம் அளிப்பதாகக் கூறுகிறாள். அன்பிற்காக ஏங்கிய தந்தை தமக்கைகளின் கொடுமையால் மதியிழந்ததால் தன் அன்பின் காரணமாகத் தெளிவடையட்டும். அதற்குத் தெய்வம் துணைபுரியட்டும் என்பதை எவ்வளவு அழகாகக் கூறுகிறாள்! "தந்தையே என் அதரத்தில் உமது உடல்

நலத்தைத் திருப்பியளிக்கும் மருந்து தவழட்டும். என்னுடைய இந்த முத்தம் என் சகோதரிகள் இழைத்த கேடுகளை எல்லாம் போக்கட்டும்'' என்கிறாள்.

செய் நன்றி மறப்பவளல்ல. கென்ட் தந்தைக்குச் செய்த உதவியை மிகவும் பாராட்டுகிறாள். "நான் எவ்வாறு வாழ்ந்து எவ்வளவு கைம்மாறியற்றித் தங்களுடைய நல்ல குணத்திற்குச் சற்றாவது ஒப்பாக வருவேன் எவ்வளவு செய்தாலும் போதாது. எவ்வளவு காலமானாலும் முடியாது'' என்கிறாள்.

"மாந்தர் குறைக்கும்தனையும் குளிர் நிழலைத்தந்து மறைக்குமாம் கண்டீர்மரம்'' என்பதற்கொப்பத் தன்னை வெறுத்துத் துன்பமிழைத்தவர் கட்கும் நன்மையே செய்ய விரும்புகிறாள். தன்னலமென்பது சிறிதுமில்லை. "தான் படை எடுத்து வந்தது தந்தையின் உரிமையை அவருக்கு மறுபடியும் அளிப்பதற்காகவேயன்றி வேறு எவ்விதக் கீழ்த்தர நோக்கத்துடனன்று'' என்று அவள் கூறுவதை நாம் எல்லோரும் சற்றும் தயக்கமின்றி ஒப்புக்கொள்கிறோம். இத்தகைய சிறந்த ஓர் நாடக பாத்திரத்தை நாமெல்லோரும் விரும்புவதில் என்ன ஆச்சரியம். அவள் பிரிவாற்றாமையால் பெற்றெடுத்த லியர்மட்டுமல்ல நாமும் அவள் ஒருக்காலும் காணமுடியாமற் சென்றுவிட்டாளே என்று கதறுகிறோம்.

மேலே ஆங்காங்கு குறிப்பிடப்பட்ட அசம்பாவிதங்களைத் தவிர அநேக முரண்பாடுகளுமிருக்கின்றன. அவைகளில் முக்கியமானது கதை நிகழும் காலம். கதையின் சம்பவங்கள் ஒரு மாதத்திற்குள்ளாக நிகழ்கின்றன. லியர் கஷ்டப்படுவதன் முன்னரே கார்டிலியா படை எடுக்க ஏற்பாடு செய்ததாகக் காண்கிறது. ஏன் அவ்வாறு செய்யவேண்டும். குறைகளை விடுத்து நலன்களை மட்டிலும் கவனித்தால் ஓர் சிறந்த நாடகம் என்பது திண்ணம்.

A. ஸ்ரீநிவாஸய்யங்கார்,
ஆசிரியர்.

மன்னன் லியர்

(ஆங்கில மகாகவி ஷேக்ஸ்பியர் இயற்றியது)

மன்னன் லியர்

(ஷேக்ஸ்பியர் இயற்றியது மொழிபெயர்ப்பு)

நாடகப் பாத்திரங்கள்

லியர் — பிரிட்டனின் அதிபதி

ப்ரான்ஸ் தேசத்து அரசன்

பர்கண்டி கோமகன்

கார்ன்வால் கோமகன்

ஆல்பனி கோமகன்

கென்ட் பிரபு

கிளஸ்டர் பிரபு

எட்கார் — கிளஸ்டர் பிரபுவின் புதல்வன்

எட்மண்ட் — கிளஸ்டர் பிரபுவிற்கு வேசிமூலம் பிறந்தவன்

கூரான் — கார்ன்வால் கோமகனின் தூதன்

கிழவன் — கிளஸ்டர் பிரபுவின் பண்ணையாள்

ஓஸ்வால்ட் — கானரில்லின் தலைமைக் காரியஸ்தன்

வைத்தியர், விதூஷகன், வள்ளுவன், படைத் தலைவன், கனவான்கள், வேலையாட்கள்.

கானரில்
ரீகன்
கார்டிலியா } லியர் மன்னனின் புதல்விகள்

குறிப்பு :—[ ] இந்த அடையாளமிட்ட பகுதிகள் சில பகுதிகளில் காணப்படவில்லை.

மன்னன் லியர்

அங்கம் 1—காக்ஷி 1

கென்ட், க்ளஸ்டர் பிரபுக்களும் வேசிபுத்திரனும் (எட்மண்ட்) வருகின்றனர்.

கென்ட் : அரசன் கார்ன்வால் கோமகனைவிட ஆல்பனி கோமகனை அதிகமாக நேசிப்பதாக நான் இதுகாறும் நினைத்திருந்தேன்.

க்ளஸ்டர் : ஆம். நம்மெல்லோருக்கும் எப்பொழுதும் அவ்வண்ணமே தோன்றியது. ஆனால் இப்பொழுது நாட்டைப் பங்கிடுவதில் அக்கோமகன்களில் யாரை அதிகம் மதிக்கிறார் என்பது புலப்படவில்லை. ஏனெனில் இரு பகுதிகளையும் சரியானபடி நயமிடர பார்த்துச் செய்திருப்பதால் எவ்வளவு நன்றாகக் கவனித்துப் பார்த்தாலும் ஒருவர் பகுதியை மற்றவர் யோசியாமல் விரும்பலாம்.

கென்ட் : இது தங்களுடைய புதல்வனல்லவா, பிரபு ?

க்ளஸ்டர் : அவனுடைய பிறப்பும் வளர்ப்பும் என்னைச் சார்ந்ததாகக் கூறப்படுகிறது. பலமுறை அவனை நான் மகனாக ஏற்றுக்கொள்ள நாணியதுண்டு. ஆனால் இப்பொழுது அதைப்பற்றிய நாணம் அகன்றுவிட்டது.

கென்ட் : எனக்குத் தங்கள் கருத்தறிய முடியவில்லை.

க்ளஸ்டர் : இந்த இளஞ் சிறுவனின் தாயார் கருத் தரிக்கமுடியும். அதனால் அவள் படுக்கையைப் பகிர்வதற்குப் புருஷன் வருவதன் முன் அவள் வயறுகனத்து அவள் தொட்டிலை அலங்கரிக்க ஒரு மகனைப் பெற்றாள். இதில் தாங்கள் ஏதேனும் தவறு காண்கிறீர்களா ?

கென்ட் : அதன் முடிவு இவ்வளவு நேர்மையாக ஏற்பட்டுவிட்டமையால் அத்தவற்றை நான் நடக்கக்கூடாதென நினைக்கவில்லை.

க்ளஸ்டர் : ஆனால் எனக்குச் சட்டரீதியாக ஒரு மகன் இருக்கிறான். அவன் இவனைவிடச் சில வருடங்கள் மூத்தவன். எனினும் இந்தப் போக்கிரிப்பயல் அவனை எதிர்பார்ப்பதற்குமுன்பே அவிவேகமாக உலகத்தில் தோன்றியபோதிலும் அதற்காக இவனைவிட அதிகம் என் ப்ரீதிக்குரியவனல்லன். இவனுடைய தாய் அழகாயிருந்தாள் ; இவனைப் பெறுவதில் அதிகமான இன்பமும் கேளிக்கையும் இருந்தது.

வேசி புத்ரனை அங்கீகரிக்கவேண்டியதவசியம். இந்த உத்தமமான பிரபுவை நீ அறிவாயா, எட்மண்ட்?

எட்மண்ட்: இல்லை, பிரபுவே.

கிளஸ்டர்: கென்ட் பிரபு! என்னுடைய மிக்க கௌரவமான நண்பர் என்பதை நினைவுறுத்திக்கொள்.

எட்மண்ட்: பிரபுவிற்கு என் ஊழியம்.

கென்ட்: நான் உன்னை நேசிக்கிறேன். உன்னை நன்கு அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

எட்மண்ட்: ஐயனே! அதற்குப் பாத்திரனாகுமாறு நடந்து கொள்வேன்.

கிளஸ்டர்: அவன் ஒன்பது வருடங்கள் வெளிநாடுகளிலிருந்தான். மறுபடியும் போகவேண்டியவனாக இருக்கிறான். அதோ அரசன் வருகிறார்.

(எக்காளம் ஊதுகிறது. ஒருவன் ஒரு கிரீடத்தைத் தாங்கிவருகிறான். அதன்பின் லியர், பின்னர் ஆல்பனி, கார்ன்வால் கோமகன்களும் அப்பால் கானரில், ரீகன், கார்டீலியாவும் பணியாட்களும் வருகின்றனர்.)

லியர்: கிளஸ்டர்! ப்ரான்ஸ், பர்கண்டியின் அதிபர்களைக் கவனியும்.

கிளஸ்டர்: அவ்வாறே செய்கிறேன். பிரபு!

(கிளஸ்டரும், எட்மண்டும் செல்கின்றனர்.)

லியர்: அதுவரை நாம் நமது ரகசியமான காரியங்களைப்பற்றிக் கவனிப்போம். அந்தத் தேசப் படத்தைக் கொடுங்கள். நாம் நமது நாட்டை மூன்று பங்காகப் பிரித்துவிட்டோம் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். நமது தள்ளாத முதுமைப் பருவத்திலிருந்து எல்லா விதக் கவலைகளையும், எல்லா அலுவல்களையும் தள்ளி உதறிவிட்டு, அவைகளை இளமையின் பலத்தால் தாங்கும்படிவிட்டு, நாம் யாதொரு பளுவுமின்றி மரணத்தை நோக்கி ஊர்ந்துசெல்ல வேண்டுமென்பது நமது திடமான எண்ணம். நமது கார்ன்வால் மருமகனே! சற்றும் குறைவின்றி நேசிக்கும் ஆல்பனி மகனே! வருங்காலத்தில் யாதொரு பூசலுக்கிடமன்னியில், இப்பொழுதே அதைத் தவிர்க்குமாறு நமது புத்ரிகளுக்கு அவரவர்களின் சீதனங்களைத் தனித்தனி பிரித்துப் பிரகடனப்படுத்திவிட இந்நேரத்திலே எனக்கு விடாப்பிடியான எண்ணம் தோன்றுகிறது. நமது கடைப்புதல்வியின் காதலைப்பெறப் பெரிதும் போட்டியிடும் ப்ரான்ஸ், பர்கண்டியின் அதிபர்கள் நமது

அரண்மனையில் தங்கள் காதல் யாத்திரையை வெகுகாலம் செய்துவிட்டார்கள். அவர்களுக்கு இப்பொழுது பதில் அளித்தாகவேண்டும். இன்றுதொட்டு நாம் நமது அரசையும், நாட்டையும், ராஜ்யபாரத்தின் கவலைகளையும் விடுவிக்க நினைப்பதால், என் அருமைப் பெண்களே சொல்லுங்கள், உங்களில் யார் என்னை எல்லோரிலும் அதிகமாக நேசிக்கிறுள் என்று கூறி, எங்கு இயற்கையும் தகவும் கூடி என்னை ஜயித்து, அவளுக்கு எல்லோரைக் காட்டிலும் நான் அதிமான கொடையை அளிக்கச்செய்யலாம். கானரில்! என் முதற் செல்வியே, முதலில் நீ சொல்.

கானரில்: ஐயனே! நான் வாக்கால் கூறுமளவிற்கு மேலாக நேசிக்கிறேன். கண்ணொளி, இடம், சுதந்திரம், இவற்றைவிட அதிகம் பிரியமானது, எதை அபூர்வமென்றும் மிக்க விலையுயர்ந்ததாகவும் மதிக்கிறோமோ அதைவிட மேலானது, சீலம், உடல் நலம், அழகு, கண்யம் நிறைந்த வாழ்க்கை இவைகளைவிடச் சிறந்தது. எவ்வளவு அதிகமாக ஒரு குழந்தை நேசிக்கக்கூடுமோ, அல்லது தந்தை காணமுடியுமோ அவ்வளவு அன்பு, எந்த அன்பின் ஆழத்தையும், உயர்வையும் கூற நாவு தடுமாறுமோ, எடுத்துரைக்க வார்த்தைகளைக் காணமுடியாதோ, அதைவிட மேலான அன்பு; மேலே கூறிய எல்லாவற்றையும்விடச் சிறந்த முறையில் தங்களை நேசிக்கிறேன்.

கார்டிலியா: கார்டிலியா என்ன சொல்லக்கூடும்? அன்பைச் செலுத்தி மவுனமாயிரு.

லியர்: நிழல் நிறைந்த காடுகள், ஆறுகள் பல பாய்ந்து வளமிக்க புலன்கள், பரந்த புல்வெளிகள் நிறைந்ததும் இந்த எல்லைக் கோட்டிலிருந்து அந்தக் கோடுவரையுமுள்ள பிரதேசத்திற்கு உன்னை எஜமானியாக்குகிறேன். உன்னுடையவும் ஆல்பனியினுடையவுமான சந்ததிகளுக்குச் சாஸ்வதமாக அளிக்கிறேன். நமது இரண்டாவது புதல்வி என்ன சொல்கிருள்?—கார்ன்வாலின் மனைவியான நம் அன்புமிக்க ரீகன்.

ரீகன்: என் சகோதரி எங்கிருந்து உதித்தாளோ அங்கிருந்தே நானும் உதித்தேன். அதனுல் அவளைப்போலவே என்னையும் மதியுங்கள். என் மனச்சாக்ஷியின்படி அவள் நான் அன்பின் காரணமாக என்ன செய்வேனே அதையே குறிப்பிடுகிருள். ஆனுல் அவள் என்னைவிடக் குறைவாகவே இருக்கிருள். அரசரின் அன்பினுல் ஏற்படும் ஆனந்தம் ஒன்றில்மட்டும் நான் திளைத்து இன்புறுகிறேன். மற்ற எவ்வித இந்திரியங்களின்மூலம் ஏற்படக்கூடிய எவ்விதச் சிறந்த இன்பத்தையும் என் விரோதியாகக் கருதுகிறேன்.

கார்டிலியா : அவ்வாருயின் ஏழை, கார்டிலியா, ஆயினும அப்படியல்ல, ஏனெனின் என்னுடைய நாவைவிட என் அன்பு பளுவுள்ளதென்பதை நான் அறிவேன்.

லியர் : உனக்கும் உன் வாரிசுகளுக்கும் சாஸ்வதமாகவும் பரம் பரையாகவும் நம்முடைய சிறந்த ராஜ்பத்தின் விஸ்தாரமான இந்த மூன்றில் ஒருபாகமிருக்கிறது.—அது விஸ்தீரணத்திலும் இன்பம் தருவதிலுல் சட்ட ரீதியிலும் கானரில்லிற்குக் கொடுத்ததைவிடக் குறைந்ததில்லே. ஓ! என் ஆனந்தமே! யாருடைய யவ்வனத்தின் காதலுடன் ப்ரான்ஸின் திராக்ஷைகளும் பர்கண்டியின் பாலும் கலக்கப் போட்டியிடுகின்றனவோ, அந்த என் கடைக்குட்டியாயினும் எவ்விதத் திலும் குறைவற்றவளே! உன்னுடைய சகோதரிகளின் பாகங்களைவிட அதிகமான பலனுடைய மூன்றிலொரு பங்கைப்பெற நீ என்ன சொல்லப்போகிருய்? சொல்.

கார்டிலியா : ஒன்றுமில்லே, பிரபுவே.

லியர் : ஒன்றுமில்லையா?

கார்டிலியா : ஒன்றுமில்லே.

லியர் : சூன்யத்திலிருந்து ஒன்றும் வராது. மறுபடியும் கூறு.

கார்டிலியா : என் இதயத்திலுள்ளதை என் வாயால் கூற இயலவில்லே என்பதற்காக வருந்துகிறேன். மாக்ஷிமைதங்கிய மகா ராஜாவை எனக்கும் தங்களுக்குமுள்ள பந்தத்திற்கு ஒப்ப நேசிக் கிறேன். சற்றும் ஏற்றத்தாழ்வு இல்லே.

லியர் : எப்படி! எப்படி! கார்டிலியா! உன்னுடைய பேச்சைச் சிறிது சரிப்படுத்திக்கொள். இன்றேல், நீ, உனது வாழ்க்கையைக் கெடுத்துக்கொள்வாய்.

கார்டிலியா : என் நல்ல பிரபுவே! நீங்கள் என்னைப் பெற்றீர் கள், வளர்த்தீர்கள், நேசித்தீர்கள். நான் நேர்மையான முறையில் அவைகளுக்குப் பர்த்தியான என் கடமைகளைச் செய்து தங்களுக்குப் பணிந்தும், தங்களை நேசித்தும், தங்களைக் கவுரவித்தும் வருகிறேன். தங்களையே முற்றிலும் நேசிப்பதாகச் சொன்னல் என் சகோதரிகள் ஏன் மணந்தனர்? நல்லபடியாக நான் மணந்துகொள்ளும்பொழுது எந்தப் பிரபுவின் கரம் என் கரத்தைப் பற்றுமோ அவர் என் அன்பிலும் ஆதரவிலும் கடமையிலும் பாதிக்குரியவராவர். (என் தந்தையை முற்றிலும் நேசிக்க) நிச்சயமாக நான் என் சகோதரிகளைப்போல் மணம் செய்துகொள்ளேன்.

லியர் : இத்துடன் உன் இதயம் நின்றுவிடுகிறதா?

கார்டிலியா : ஆம், என் பிரபுவே.

லியர் : இவ்வளவு இளம் பருவத்தினள். ஆயினும் இவ்வளவு அன்பில்லாதவள் !

கார்டிலியா : அவ்வளவு இளமையும் உண்மையும் படைத்தவள்.

லியர் : அவ்வாறேயாகட்டும். அப்படியானால் உன் சத்யமே உனது சீதனமாகட்டும். சூரியனுடைய பவித்திரமான ஒளியின்பேரிலும், இரவினுடையவும் இரவின் அதி தேவதையான ஹெகேட்டினுடையவும் ரகசியத்தின்பேரிலும், எந்த கிரகங்களுடைய சக்தியால் நாம் எல்லோரும் பிறக்கவும் இறக்கவும் செய்கிறோமோ அவர்களின் பேராலும், நான் இப்பொழுதே தந்தை என்றதற்குரிய சிரத்தை, உறவு, ரத்தபந்தம், யாவற்றையும் விடுத்து இன்றுமுதல் உன்னை நிரந்தரமாக எனக்கும் என் அன்பிற்கும் அன்னியளாகவே கொள்கிறேன். காட்டுமிராண்டியான சித்தியன், அல்லது எவனொருவன் தனது பசிப்பிணியைப் போக்குவதற்குத் தன் பெற்றோரையே உண்கிறானோ அவனை, சிறிது காலம் என் பெண்ணாக இருந்த உன்னைப்போல் என் இதயத்திற்குகந்த அண்மையனாகவும் இரக்கப்படத் தகுந்தவனாகவும் கொள்ளலாம்.

கென்ட் : நன்றாயிருக்கிறது, என் எஜமானே !

லியர் : கென்ட் ! பேசாமலிரு. அரவத்திற்கும் அதன் கோபத்திற்கும் இடையே புகவேண்டாம். நான் அவளை எல்லோரையும்விட அதிகமாக நேசித்தேன். அவளுடைய அன்பான பராமரிப்பில் நான் ஓய்வெடுத்துக்கொள்ளலாமென நினைத்தேன். செல், என் பார்வையில் நிற்கவேண்டாம். அவளுடைய தந்தையின் இதயத்தை அவளிடமிருந்து அகற்றிவிட்டதால் என் சமாது என் சாந்தியாகட்டும். யார் அங்கே செல்வது? ப்ரான்சை அழையுங்கள். பர்கண்டியைக் கூப்பிடுங்கள். கார்ன்வால், ஆல்பனி, என்னிரு புதல்விகளுடைய சீதனத்துடன் மூன்றாவது பாகத்தையும் சேர்த்துக்கொள்ளுங்கள். அவள் கபடமற்ற வெள்ளையுள்ளம் என்று அழைக்கும் கர்வத்தை அவள் மணக்கட்டும். நீங்களிருவரும் ஏகோபித்து அனுபவிக்கும்படியாக எனது அதிகாரம், மாக்ஷிமை, மற்றும் ஒரு மன்னனுக்குரிய எல்லா ஏராளமான நலன்களையும் உரிமைகளையும் உங்களிருவருக்கும் அளிக்கிறேன். உங்களால் போஷிக்கப்பட்ட நூறு பிரபுக்களுடன் நாம் மாதம் ஒரு முறையாக உங்களுடன் கழிப்போம். நாம் அரசனென்ற பட்டத்தையும் அப்பட்டத்திற்குரிய கவுரவத்தையும் பேருக்குமட்டிலும் வைத்துக்கொள்வோம். அமல், அதிகாரம், வருமானம் மற்றும் சகல நடபடிகளும், அன்பார்ந்த புத்ரர்களே உங்களுடையதாகுக.

இதை ஸ்திரம் செய்யும்பொருட்டு இந்த மகுடத்தை உங்களிடம் ஒப்படைக்கின்றேன்.

கென்ட்: லியர் அரசே! யாரை நான் எஞ்ஞான்றும் என் அரசனாக மதித்து வணங்கினேனோ, என் தந்தையாக நேசித்தேனோ, எனது குருவாகப் பின்பற்றினேனோ, என் பிரார்த்தனைகளில் என் சுபோஷகனாகத் தியானித்தேனோ—

லியர்: வில்லை வளைத்து நாணேற்றியாகிவிட்டது. அம்பின் குறியிலிருந்து ஓடிவிடு.

கென்ட்: அது தைக்கட்டும், அதன்முனை என் இதயத்தில் பாய்ந்து தாக்குவதாயினும் சரி. லியர் பித்தனாகும்பொழுது கென்ட் மரியாதையற்றவனாகட்டும். கிழவனே! உன்னால் என்ன செய்யமுடியும்? அதிகாரம் முகஸ்துதிக்குப் பணியும்பொழுது என் கடமை பேசுவதற்குப் பயப்படுமென நினைக்கின்றீரா? அரசன் மடமைக்கு அடிமையானால் கடமை வெட்டெனப் பேசுதல் முறை. என் உயிரையும் என் அறிவையும் பணயமாக வைத்துச் சொல்கிறேன். தங்களுடைய அரசுரிமையைத் தங்களுக்கே வைத்துக்கொள்ளுங்கள். நன்றாகத் திர ஆலோசித்து இந்தப் பயங்கரமான அறிவின்மையைத் தடுங்கள். உம்முடைய கடைசிப் புதல்வி மற்றவர்களைக்காட்டிலும் உம்மைக் குறைவாக நேசிக்கவில்லை. யாருடைய மிருதுவான வார்த்தைகள் பொய்மை வெளிப்படுத்தவில்லையோ அவர்கள் இருதயமற்றவர்களல்ல.

லியர்: கென்ட்! உன் உயிரின் பேரிலிச்சையுண்டானால் மேற்கொண்டு பேசவேண்டாம்.

கென்ட்: என் உயிரை உமது பகைவர்களுடன் போர் புரிந்து அர்ப்பணிப்பதற்கான கையடை என்றே கருதினேன். உமது நலத்தின் பொருட்டு அதை இழப்பதற்கு எக்காலத்திலும் அஞ்சியதில்லை.

லியர்: என் பார்வையிலிராதே.

கென்ட்: லியர், நன்றாகப்பார். இன்னும் நான் உனது நேத்திரத்தின் உண்மையான கருவிழியாக இருக்கும்படி செய்.

லியர்: அப்பாலோவின்பேரில் ஆணை.

கென்ட்: அப்பாலோவின்பேரில் ஆணை. அரசே! தாம் தமது தெய்வத்தின்மீது வீணாகச் சபதம் செய்கிறீர்.

லியர்: ஓ! பிரஜையே, துஷ்டனே!

ஆல்பனி, கார்ன்வால்: அன்புடைய ஐயனே, பொறுங்கள்.

கென்ட் : தங்களுடைய வைத்தியனைக் கொன்றுவிட்டு அந்த ஊதியத்தைக் கொடிய ரோகத்திற்கே கொடும். தங்களுடையதான சாசனத்தை ரத்துச் செய்யுங்கள். இன்றேல் என் தொண்டையால் எவ்வளவுவரை கத்தமுடியுமோ அவ்வளவு நீர் கெட்ட காரியம் செய்கிறீர் என்று கூறுவேன்.

லியர் : கேள் துஷ்டனே! உன் விசுவாசப்பிரமாணத்தின்மீது கேள்! நீ என்னை என் சத்திய வாக்கினின்றும் பிறளும்படி செய்ய முயன்றதால்—இதுகாறும் துணிந்ததில்லை—மிகவும் அதிகமான கர்வத்துடன், நமது அந்தஸ்தும் இயற்கையும் சற்றும் ஏற்றுக்கொள்ளக் கூடாத முறையில், நமது அரசாக்ஷிக்கும் ஆக்ஞைகளுக்கும் இடையே குறுக்கிட்டதால், நமது அதிகாரப்பூர்வமாக உனது வெகுமதியைப் பெற்றுக்கொள். உலகத்தில் உனக்கு நேரக்கூடிய கஷ்டங்களிலிருந்து காப்பாற்றிக்கொள்வதற்கு வேண்டிய பொருளைச் சேகரிப்பதற்காக ஐந்து நாள் தவணை தருகிறோம். ஆறும் நாள் நம் நாட்டைவிட்டு வெறுக்கத்தக்க நீ அகலவேண்டும். பத்தாம் நாள் நாடுகடத்தப்பட்ட உன் சரீரம் நமது ராஜ்யத்தில் காணப்படுமாயின் அக்கணமே நீ இறப்பாய். செல். ஜுபிடர்மேல் ஆணை. இதை மாற்றமுடியாது.

கென்ட் : க்ஷேமமாயிரும் அரசே! தாங்கள் இம்மாதிரித் தோன்றுவதால் (கொடுங்கோலனாக) ஸ்வதந்திரம் வெளியே இருக்கிறது. நாடு கடப்பது இங்கே இருக்கிறது. நியாயமாக நினைத்து தக்க முறையில் பேசிய கன்னிகையே! உன்னைத் தெய்வங்கள் தங்கள் அன்பார்ந்த நிழலில் ஏற்றுக்கொள்ளட்டும். உங்களிருவர்களுடைய பிரமாதமான பேச்சுக்களை உங்கள் செய்கைகள் ருஜுப்பித்து அன்பான சொற்களிலிருந்து நல்ல பலன்கள் ஏற்படட்டும். ஓ! இளவரசிகளே! இவ்வாறு உங்களிடமிருந்து கென்ட் விடைபெற்றுக்கொள்கிறான். அவனுடைய முதிய பருவத்தை ஒரு புதிய நாட்டில் கழிப்பான்.

(செல்கிறார்.)

(எக்காளம் ஊதுகிறது. கிளஸ்டர், ப்ரான்ஸ், பர்கண்டி, ஏவலாட்கள் பிரவேசிக்கின்றனர்.)

கிளஸ்டர் : ப்ரான்ஸும் பர்கண்டியும் வந்துவிட்டனர், மகாபிரபு!

லியர் : இந்த அரசனுடன் என் புதல்வியைப் பெறப் போட்டியிட்ட பர்கண்டி ப்ரபுவே! தங்களுடன் நாம் முதலில் பேசுவோம். எது கிடைக்காவிடில் தமது காதல் போட்டியைக் கைவிடுவீரோ அந்த மிகக் குறைவான சீதனப் பொருள் யாது?

பர்கண்டி : மாக்ஷிமை தங்கிய மகாராஜாவே! தாங்கள் கொடுப்பதாகச் சொன்னதைவிட நான் அதிகம் ஒன்றும் விரும்பவில்லை. தாங்களும் அதற்குக் குறையமாட்டீர்கள்.

லியர் : மிகவும் சிறந்த பர்கண்டி பிரபுவே! அவள் நம் அன்பிற் குரியவளாக இருந்தபொழுது நாம் அவ்வாறு மதித்தோம். இப்பொழுது அவளுடைய மதிப்பு குறைந்துவிட்டது. ஐயா, அதோ அவள் நிற்கிறுள். அந்தச் சிறிய சரீரத்தில் ஏதாவது இருக்குமானுல், அல்லது என்னுடைய வெருப்புடன்கூடிய நலன்களைத் தவிர வேறென்று மில்லாதவள் தங்களுக்குச் சம்மதமானுல், அதோ இருக்கிறுள், அவள் தங்களுக்கு உரியவளாகிறுள்.

பர்கண்டி : எனக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை.

லியர் : அவளுக்கு இயற்கையாகவுள்ள குறைபாடுகளுடன், அகதியாய், ஆதரவற்றவளாய் நமது புதிய வெறுப்பின் இலக்காய், நமது சாபத்தையே சீதனமாகப்பெற்றவளாய், நமது சபதத்தால் வேற்றுமைப்பட்டவளாயிருக்கும் அவளை அவ்வாறே ஏற்றுக் கொள்வீரா, அல்லது கைவிடுவீரா?

பர்கண்டி : என்னை மன்னிக்கவும். அரசே! இந்த நிலையில் ஒருவன் தன் துணைவியைத் தேர்ந்தெடுக்கமாட்டான்.

லியர் : அவ்வாருயின் அவளை விட்டுவிடுங்கள். ஏனெனில், என்னைப்படைத்த அந்தச் சக்தியின்பேரில் அவளுடைய எல்லா ஆஸ்தியையும் கூறிவிட்டேன். சிறந்த அரசனே! உங்களுடைய காதலைக்கொண்டு நான் யாறை வெறுக்கிறேனே அவளை மணக்கும்படி செய்து வழி தவறி நடக்கமாட்டேன். இயற்கையே தன்னுடையதென ஏற்க நாணுமோ அத்தகைய அற்பப்பாவியை விடுத்துத் தங்களுடைய அன்பைத் தக்கதோர் வழியில் திருப்புமாறு தங்களை மிகவும் வேண்டிக் கொள்கிறேன்.

ப்ரான்ஸ் : இது மிகவும் விந்தையாகவும் அபூர்வமாகவுமிருக் கிறது! யார் சற்று முன்புதான் தங்களுடைய மிகச் சிறந்த பொருளாக வும், உங்களுடைய புகழ் மொழிகளின் லக்ஷியமாகவும், உங்கள் முது மையின் ஆறுதலளிக்கும் அமுதமாகவும், மிகச் சிறந்தவளாகவும், எல் லோரையும்விட உங்கள் அன்பிற்குரியவளாக இருந்தாளோ, அவளா ஒரு நொடியில் அவ்வளவு ஏராளமான அன்பின் கோட்டைகளை இடித்தழிக்கத்தக்க கொடிய பைசாசக்காரியத்தைச் செய்தாள்? ஒன்று, அவள் செய்த குற்றம் மிகவும் பயங்கரமானதாக இருக்கவேண் டும், அல்லது தாங்கள் முன் கூறிவந்த அன்பெல்லாம் போலியான நடிப்பாக இருக்கவேண்டும்; அதை அவள் செய்வாளென்று நான் நினைக்கத்தக்க நம்பிக்கையை மாயாஜாலமல்லாமல் பகுத்தறிவால் மட்டும் என் மனதில் தோன்றவிடாது.

கார்டிலியா: *அரசே! தங்களை இன்னும் வேண்டுகிறேன். சொல்வதொன்று, செய்வதொன்றுமாக இருக்கும் அந்த வழவழப்பான சாமர்த்திய மிகுந்த தந்திரமில்லாதவளானதாலும், நான் என்ன நினைக்கிறேனே அதைச் சொல்லுமுன் செய்பவளானதாலும் இதை எல்லோருக்கும் தெரியும்படி செய்யுங்கள்.—மிகப் பாவமான குற்றம், கொலை, துன்மார்க்கம், கற்பின் வழிதவறி அல்லது நியாயமற்ற முறையில் நடத்தல் முதலியவை என்னைத் தங்களுடைய மதிப்பையும் அன்பையும் இழக்கும்படி செய்யவில்லை என்பதையும், ஆனால் எது என்னிடம் இல்லாததால் நான் உண்மையில் செல்வியாக இருக்கிறேனோ—இல்லாததைக்குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்—எது இல்லாதிருப்பதால் நான் தங்களுடைய அன்பை இழக்க நேர்ந்ததோ அதாவது வழவழப்பான நாவும் வெகுமதியிலேயே கருத்துள்ள நோக்கும் இல்லாமையே காரணம் என்பதைத் தெரிவியுங்கள்.*

லியர்: *என்னை இதைவிட நன்றாகத் திருப்தி செய்யாததைவிட நீ பிறந்தே இருக்கவேண்டாம்.*

ப்ரான்ஸ்: *இதற்காகத்தானா? தான் என்ன செய்யப் போகிறாமென்பதை முன்கூட்டியே சொல்லி விளம்பரப்படுத்தாத, சங்கோசப்பட்ட பிரக்ருதி பர்கண்டிக் கோமகனே! தாங்கள் இந்தச் சீமாட்டிக்கு என்ன சொல்லுகிறீர்கள்? காதலைத் தவிரப் புறம்பாகவுள்ள விஷயங்களுடன் கூடிய காதல் காதலாகாது. தாங்கள் அவளை ஏற்றுக்கொள்வீர்களா? அவளே போதிய சீதனப் பொருள்.*

பர்கண்டி: *அரசே! தாங்கள் கொடுப்பதாக உத்தேசித்த அந்த பாகத்தைக் கொடுங்கள். உடனே கார்டிலியாவைப் பர்கண்டியின் சீமாட்டியாகக் கைப் பிடிப்பேன்.*

லியர்: *ஒன்றும் கிடையாது. நான் பிரமாணம் செய்துவிட்டேன். நான் பிறளமாட்டேன்.*

பர்கண்டி: *நான் வருந்துகிறேன். நீ இவ்வாறு தந்தையை இழந்ததால் ஒரு புருஷனையும் இழக்கவேண்டியதே.*

கார்டிலியா: *பர்கண்டிக்குச் சாந்தி ஏற்படட்டும். அந்தஸ்தும் தனமும்தான் அவருடைய காதலிகளாகையால் நான் அவருடைய மனைவியாக முடியாது.*

ப்ரான்ஸ்: *அழகிற் சிறந்த கார்டிலியா! தனமற்றவளாயினும் குணம் என்ற பெருந் தனம் படைத்தவளே! கைவிடப் பட்டாலும் மிகவும் விரும்பத்தக்கவளே! வெறுக்கப்பட்டாலும் மிகவும் அன்பானவளே! உன்னையும் உன் குண நலன்களையும் நான் கைப்பற்றுகிறேன். அனுதரவு செய்யப்பட்டதை நான் அடைவது நியாயமானதாகட்டும்.*

கடவுளே! கடவுளே! அவர்களுடைய கருணையற்ற அனாதரவிலிருந்து என் காதல் ஒளிவிட்டுக் கவுரவத்துடன் பிரகாசிக்கத் தொடங்குவது எவ்வளவு ஆச்சரியம். அதிர்ஷ்ட வசத்தால் என்பால் அனுப்பப்பட்ட தம்முடைய சீதனமற்ற மகள், அரசே, என்னுடையவும், என்னைச் சார்ந்தவர்களுடையவும் அழகிய பிரான்ஸினுடையவும் அரசி. நீர் சூழ்ந்த பர்கண்டியின் கோமகன்களால் இந்த விலையில்லா மாணிக்கத்தை என்னிடமிருந்து பெறமுடியாது. அவர்கள் உன்பாலன்பற்றவர்களானாலும் அவர்களுக்கு நல்விடை கொடுத்துவிட்டு வா. இங்கு நீ இழப்பதைவிடச் சிறந்த பதவியை வேறு இடத்தில் காண்பாய்.

லியர்: ப்ரான்ஸ்! நீங்கள் அவளை அடைந்தீர்கள். அவள் உங்களுடையதாகவே இருக்கட்டும். எனக்கு அவள் மகளுமல்ல, அவளுடைய முகத்தை இனி நாம் பார்க்கப்போவதே இல்லை. எனவே நம்முடைய தயவு, அன்பு, ஆசீர்வாதம் யாதுமின்றிச் செல்லுங்கள். உயர்குணத் தோன்றல் பர்கண்டி! வாருங்கள்.

(பின்னங்கள் ஊதுகின்றன. ப்ரான்ஸ், கானரில், ரீகன், கார்டிலியாவைத் தவிர மற்ற யாவரும் செல்லுகின்றனர்.)

ப்ரான்ஸ்: உன் சகோதரிகளிடம் விடை பெற்றுக்கொள்.

கார்டிலியா: நம் தந்தையின் ரத்னங்களே! கண்ணீர் நிறைந்த கண்களுடன் விடைபெற்றுக் கொள்கிறேன். நீங்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை நானறிவேன். ஆயினும் சகோதரி என்பதால் உங்களுடைய குற்றங்களை உள்ளபடி கூற விரும்பவில்லை. நம் பிதாவை நன்றாக நேசியுங்கள். நீங்கள் பறைசாற்றிய அன்பிற்கு அவரை ஒப்படைக்கிறேன். ஆயினும் அந்தோ! நான் அவருடைய அன்பிற்குரியவளாயிருந்தால் அவருக்கு வேறு சிறந்த இடத்தை அளிக்க விரும்புவேன். நீங்களிருவரும் க்ஷேமமாயிருங்கள்.

ரீகன்: எங்களுக்கு எங்கள் கடமையைப் போதிக்கவேண்டாம்.

கானரில்: ஏழ்மையின் மறு எல்லையில் இருக்கும் உன்னை ஏற்றுக்கொண்ட உன் கணவனைத் திருப்தி செய்வதற்குக் கற்றுக்கொள். நீ தந்தைக்குப் பணிந்து நடக்கக் கற்றுக்கொள்ளவில்லை. அதனால் நீ விரும்பிய ஏழ்மை உனக்குத் தகும்.

கார்டிலியா: சூழ்ச்சி எதை ஒளிக்கிறதோ அதையும் தங்கள் குற்றங்களை ஒளிப்பவர்களையும் காலம் வெளிப்படுத்தி அவமானத்துடன் தாழ்ச்சியுறச் செய்யும். நல்லது, நீங்கள் க்ஷேமமாயிருங்கள்.

ப்ரான்ஸ்: வா, அழகிற் சிறந்த என் கார்டிலியா.

(ப்ரான்ஸும் கார்டிலியாவும் செல்கிறார்கள்.)

கானரில்: தங்கையே! நம்மிருவரையும் பொருத்த விஷயமாக நான் அநேக விஷயங்கள் கூற வேண்டியிருக்கிறது. நமது தந்தை இன்றிரவு புறப்படுவாரென்று நினைக்கிறேன்.

ரீகன்: அது நிச்சயம். உன்னிடம், அடுத்தமாதம் எங்களுடன்.

கானரில்: பார், அவருடைய வயோதிகத்தால் அவர் சித்தம் எவ்வளவு மாறுதல்களை அடைகிறது. நாம் கண்கூடாகக் கண்டவை ஒன்றல்ல, இரண்டல்ல. அவர் நமது தங்கையை எப்பொழுதும் நம்மை எல்லாம்விட அதிகமாக நேசித்தார். இப்பொழுது எவ்வளவு அறிவின்மையுடன் அவளைத் தள்ளிவிட்டார் என்பதை நோக்க எவ்வளவு கேவலமாக இருக்கிறது.

ரீகன்: அது அவருடைய மூப்பினுல் ஏற்பட்ட குறை. ஆயினும் அவர் தன்னைச் சிறிதேனும் உணரவில்லை.

கானரில்: அவருடைய மிகவும் சிறந்ததும் அறிவுடன் கூடியதுமான காலமே யோசனையற்றதாயிருந்தது. எனவே நெடுங்காலமாக அவருடைய ரத்தத்தில் ஊறிய சீர்கேடுகளுடன் கிழமையும் தள்ளாமையும் கொடுக்கும் கட்டுப்படாத முரண்டுகளையும் பிடிவாதத்தையும் நாம் எதிர்பார்க்கலாம்.

ரீகன்: கென்டை நாடு கடத்தியதுபோன்ற திகில்களை அவரிடமிருந்து எதிர்பார்க்கலாம்.

கானரில்: பத்தாக்குறைக்கு அவரும் ப்ரான்ஸும் விடைபெற்றுக்கொண்டது வேறு இருக்கிறது. வா, நாமிருவரும் உட்கார்ந்து பேசுவோம். நம் தந்தை இத்தகைய குணத்துடன் அதிகாரத்தையும் செலுத்துவதாயிருந்தால் அவர் நம்மிடம் தன் பதவியை அளித்தது நமக்குத் துன்பத்தைத் தரும்.

ரீகன்: நாம் அதைப்பற்றி மேலும் சிந்திப்போம்.

கானரில்: ஆறின கஞ்சி பழங்கஞ்சியாவதன்முன் நாம் ஏதாவது செய்தாகவேண்டும்.

(செல்கிறார்கள்.)

அங்கம் 1—காக்ஷி 2

(எட்மண்ட் வருகிருன்)

எட்மண்ட்: இயற்கையே! நீதான் என் தெய்வம். உன்னுடைய விதிகளுக்கே என் கடமை உரியது; ஆகவே நான் ஏன் வழக்கம் என்னும் கொள்ளைநோயால் பீடிக்கப்பட்டு அரசாங்கங்களின் விநோதங்களால் என் உரிமையை இழக்கவேண்டும்? அப்படி இழப்பதற்குக் காரணம் நான் என் சகோதரனைவிட 12 அல்லது 14 மாதங்கள் சிறியவனாக இருப்பதே. ஏன் வேசி புத்திரன்? எதனுல் கேவலம்? உண்மையாக மணக்கப்பட்ட மனைவியின் குழந்தையைப்போலவே என் அங்கங்கள் தொகுக்கப்பட்டும், என் மனம் அதேபோல் தாராளமாகவும் என் உருவம் அதேபோலவும் இருக்கும்பொழுது அவர்கள் ஏன் என்னைப் பழிசுட்டவேண்டும்? பழியுடன் வேசித்தனம்! பழிப்பு, பழிப்பு! உறக்கத்திற்கும் விழிப்பிற்குமிடையே சலித்துப்போன உற்சாகமற்ற கல்வியால் கோழைகளான ஒரு முழுக் கூட்டத்தையே உற்பத்தி செய்வதைவிட, இயற்கையின் திமிரோடு கூடிய களவொழுக்கத்தால் ஏற்படும் சந்ததி பலம்பொருந்தியதாகவும் நல்ல அமைப்புடன் கூடியதாகவுமிருக்கும். நல்லது, விதி பூர்வமான புத்ரனுன எட்கார்! உனது நிலங்களை நான் அடையவேண்டும். நமது தந்தையின் அன்பு தாசி புத்ரனுன எட்மண்டுக்கும் விதி பூர்வமான புத்ரனுன எட்காருக்கும் சம உரிமையே. விதி பூர்வமான புத்ரன்! அழகான பதம்! நல்லது சரியான புத்ரனே! இந்தக் கடிதம் சரியானபடி சென்று என் சூழ்ச்சி பலனுடையதானுல் கீழ்த்தர எட்மண்ட் சரியான புத்ரனின் பதவியை அடைவான். நான் உயர்வேன், க்ஷேமமுறுவேன். தெய்வங்காள்! தாசி புத்ரர்களின் கக்ஷியைச்சாருங்கள்.

(கிளஸ்டர் வருகிருர்)

கிளஸ்டர்: கென்ட் இவ்வாறு நாடுகடத்தப்பட்டு, ப்ரான்ஸ் கோபத்துடன் பிரிந்தார். அரசன் இன்றுடன் ஒழிந்தார். தனது அதிகாரத்தையெல்லாம் இழந்து ஜீவனும்சம் பெற்றுர். எல்லாம் திடீரெனத் தூண்டப்பட்டவர்போல் நடந்தன. எட்மண்ட் இப்பொழுதென்ன? என்ன சமாச்சாரம்?

எட்மண்ட்: ஒன்றுமில்லை, பிரபுவே.

கிளஸ்டர்: அந்தக் கடிதத்தை மறைக்க ஏன் அவ்வளவு முயற்சி செய்கிருய்?

எட்மண்ட்: எனக்கு ஒரு சமாச்சாரமும் தெரியாது, பிரபுவே.

கிளஸ்டர்: நீ என்ன காகிதம் படித்துக்கொண்டிருந்தாய்?

எட்மண்ட் : ஒன்றுமில்லை ப்ரபோ !

கிளஸ்டர் : இல்லையா ? அப்படியானால் அதை உன் சட்டைப் பைக்குள் செலுத்த அவ்வளவு கடிய அவசரமெதற்கு ? ஒன்றுமில்லை என்ற விஷயத்திற்கு ஒளிக்கவேண்டிய அவசியம் கிடையாது. நாம் பார்ப்போம், வா. அது ஒன்றுமில்லையானால் அதைப் படிக்க எனக்குக் கண்ணாடி தேவையில்லை.

எட்மண்ட் : ஐயனே, உங்களை வேண்டிக்கொள்கிறேன். என்னை மன்னிக்கவும். அது எனது சகோதரனிடமிருந்து வந்த கடிதம். நான் அதை முற்றிலும் படிக்கவில்லை. படித்தமட்டில் அது தங்களுடைய பார்வைக்கு வர லாயக்கற்றதாகக் காண்கிறேன்.

கிளஸ்டர் : அந்தக் கடிதத்தை என்னிடம் கொடு.

எட்மண்ட் : அதைக் கொடுத்தாலும் அல்லது நிறுத்திக் கொண்டாலும் நான் தவறிழைத்தவனாவேன். நான் அரைகுறையாக அறிந்தவரையில் அவை தவறானவை.

கிளஸ்டர் : எங்கே, நாம் பார்ப்போம். நாம் பார்ப்போம்.

எட்மண்ட் : என்னுடைய அண்ணன் எழுதியதற்கு இதுதான் சமாதானம் என்றெண்ணுகிறேன் ; அதை அவன் ஓர் வியாசம் எழுதுவதாக நினைத்திருக்கவேண்டும், அல்லது எனது சீலத்தைப் பரிசோதிக்க நினைத்திருக்கவேண்டும்.

கிளஸ்டர் : (வாசிக்கிறார்) "இந்த முதியவர்களுக்கு அளிக்கப்படும் மரியாதையும் வழக்கமும் நம்முடைய வாழ்க்கையின் சிறந்த காலத்தில் இந்த உலகத்தை மிகவும் கசப்பாக்குகிறது. நமது விருத்தாப்பியதசை வந்து நாம் அதை அனுபவித்து ருசிக்கமுடியாதபடி நமது செல்வத்தை நாம் அடையாதபடி தடுக்கிறது. முதியோர்களின் கொடுங்கோன்மையில்—அது அதிகாரம் செலுத்துவது தன் பலத்தாலல்ல, நாம் அனுமதிப்பதால்தான். நான் ஒரு பலனற்றதும் முட்டாள்தனமானதுமான ஓர் பந்தனத்தைக் காண்கிறேன். என்னிடம் வா. இதைப்பற்றி மேலும் பேசலாம். நமது தந்தை நான் எழும்பும்வரை தூங்குவதாயிருந்தால், நீ அவருடைய வருவாயில் பாதியை நிரந்தரமாக அனுபவிப்பதுடன் உனது சகோதரனுக்குப் பிரியமுள்ளவனாக இருப்பாய் எட்கார்." ஹும், வஞ்சகச் சூழ்ச்சி ! 'நான் எழும்பும்வரை தூங்கவேண்டும், நீ அவருடைய வருவாயில் பாதியை அனுபவிக்கலாம்.' என் புதல்வன் எட்காருக்கு இதை எழுதக் கை இருந்ததா ? இதைச் சிந்திப்பதற்கு மனதும் மூளையும். இதை நீ எப்பொழுது அடைந்தாய் ? யார் கொண்டுவந்தார்கள் ?

எட்மண்ட் : இதை என்னிடம் யாரும் கொண்டுவரவில்லை பிரபு. அதில்தான் சூழ்ச்சியிருக்கிறது. என் அறையின் சாளரத்தில் அது எறியப்பட்டிருந்ததைக் கண்டேன்.

கிளஸ்டர் : இந்த எழுத்து உன் அண்ணனுடையதென்பது உனக்குத் தெரியுமா ?

எட்மண்ட் : விஷயம் நல்லதாயிருந்தால் அது அவனுடையது தான் என்று தைரியமாக நான் பிரமாணம் செய்வேன். ஆனல் இது சம்பந்தமாக அது அவனுடையதாக இல்லாதிருக்கட்டுமென்று நினைப்பேன்.

கிளஸ்டர் : இது அவனுடையதே.

எட்மண்ட் : இது அவனுடைய எழுத்தே பிரபு. ஆனல் இதில் அவனுடைய மனது இல்லை என நம்புகிறேன்.

கிளஸ்டர் : இந்த விஷயத்தில் அவன் இதற்குமுன் உன்னைக் கலந்ததில்லையா ?

எட்மண்ட் : ஒருக்காலுமில்லை. ஆனல் தந்தை தளர்வெய்தித் தனயன் தக்க வயதடைந்தபொழுது தகப்பன் மைந்தன் பாதுகாப்பிலிருந்தும், மகன் ஆஸ்தியைக் கண்காணிப்பதும்தான் சரி என்று பன்முறை கூறியிருக்கிறன்.

கிளஸ்டர் : ஓ ! அயோக்யன் ! அயோக்யன் ! இந்தக் கடிதத்தில் கண்ட அதே அபிப்ராயம். அருவருக்கத்தக்க அயோக்யன். இயற்கைக்கு மாறன, வெருக்கத்தக்க மிருகப் பிராயமான அயோக்யன் ! மிருகத்திலும் கேவலமான துஷ்டன். அவனைப் பாரடா. நான் அவனைப் தளைப்படுத்துவேன். மகா பாவியான போக்கிரி. அவன் எங்கே இருக்கிறன் ?

எட்மண்ட் : என் பிரபுவே, எனக்குச் சரியாகத் தெரியாது. நீங்கள் தயதுசெய்து அவன் எண்ணம் யாதென நன்கு உணர்ந்துகொள்ளும்வரை உங்களுடைய கோபத்தைச் சற்று அடக்கிக்கொண்டீர்களானல் அப்பொழுது நீர் நேர் பாதையில் நடப்பதாகும். நீங்கள் அவனுக்கு விரோதமாக அவனைத் தவறுதலாகச் சந்தேகித்து ஆத்திரத்துடன் நடந்துகொண்டால் அது உங்களுடயை கவுரவத்திற்கே மிகப் பெரிய களங்கத்தை உண்டாக்குவதுடன் அவன் தங்களிடம் பணிவாக நடந்துகொள்ளும் எண்ணத்தையும் சிதற அடிக்கும். நான் தைரியமாக அவனுக்காக என் உயிரையும் பணயமாக வைத்துக் கூறுகிறேன். அவன் தங்களிடம் எனக்குள்ள அன்பைச் சோதிப்பதற்காகவே இதை எழுதியிருக்கிறனேயன்றி யாதொரு ஆபத்தும் விளைக்கும் நோக்கத்துடனன்று.

கிளஸ்டர் : நீ அவ்வாறு எண்ணுகிருயா ?

எட்மண்ட் : நீங்கள் அது சரியானதென நினைத்தால் நாங்களிருவரும் அதைப்பற்றிப் பேசுவதைத் தாங்கள் காதாலேயே கேட்டுத் தாங்கள் திருப்தி செய்துகொள்ளும்படி ஓரிடத்தில் மறைத்துவைக்கிறேன். தாமதத்திற்கு இடமில்லாமல் இன்று மாலையிலேயே அவ்வாறு செய்யலாம்.

கிளஸ்டர் : அவன் அத்தகைய கொடிய பூதமாக இரான்.

எட்மண்ட் : நிச்சயமாக இல்லை.

கிளஸ்டர் : அவனை அவ்வளவு அன்பாகவும் முற்றிலும் நேசிக்கும் அவன் தந்தைக்கா ? பூதேவியே ! ஆகாயவாணியே ! எட்மண்ட் அவனைக் கண்டுபிடி. நான் உன்னை வேண்டிக்கொள்கிறேன். என்னை அவனிடம் இட்டுச்செல். உனது புத்திக்கொப்ப விஷயத்தை முடி. சரியான முடிவிற்குவர என் ஜமீனை இழப்பேன்.

எட்மண்ட் : நான் அவனைப் பார்க்கிறேன். சந்தர்ப்பம் எப்படி ஏற்படுகிறதோ அதற்குத் தக்கபடி காரியத்தை முடித்து உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

கிளஸ்டர் : கடந்த இந்தச் சந்திர சூர்ய கிரஹணங்கள் நமது நின்மைக்காகவல்ல. இயற்கையைப்பற்றிய ஞானம் இவ்வாறெல்லாம் பகுத்தறிந்தாலும் அவ்வியற்கையே அவைகளின் பலனாக நாசமாக்கப் படுகிறது. காதலின் வேகம் தணிகிறது. நட்பு பிரிகிறது. உடன் பிறந்தோர் சண்டையிடுகின்றனர். நகரங்களில் கலகங்கள், நாடுகளில் ஒற்றுமைக்குறைவு, அரண்மனைகளில் ராஜதுரோகம், மகன் தந்தைக்குள்ள பந்தம் பிளவுபடுகிறது. இந்த என் துஷ்டனான மகன் இந்த கிரகபலனுக்குள் வருகிறான். இங்கு மகன் தந்தைக்கு விரோதமாகக் கிளம்பி இருக்கிறான். இயற்கைப்படி யாரிடம் சார்பாக இருக்க வேண்டுமோ அதற்கு மாறாக அரசர் நடக்கிறார். அங்கு தகப்பன் மகனுக்கு விரோதமாக இருக்கிறார். நாம் நமது மிகச்சிறந்த காலத்தைப் பார்த்துவிட்டோம். சூழ்ச்சிகள், அவதந்திரங்கள், துரோகம், எல்லா நாசகாரிகளான கலகங்கள் நம்மைப் பின்தொடர்ந்து நம்மை நம் சவக்குழிக்கு அனுப்புவதாக இருக்கின்றன. அந்தப் போக்கிரியைக் கண்டுபிடி. எட்மண்ட், அதனால் உனக்கு யாதொரு நஷ்டமும் ஏற்படாது. ஜாக்கிரதையாகச் செய். உண்மையுடன் நடந்த குற்றத்திற்காக மேலான, உண்மையான கென்ட் நாடு கடத்தப் பட்டார். அது மிகவும் ஆச்சரியம், விந்தையே. (செல்கிறார்).

எட்மண்ட் : இதுதான் உலகத்தின் மிகச் சிறந்த மடமை. நாம் கஷ்டத்தால் துயருறும்பொழுது—பெரும்பாலும் நமது நடத்தையின் பயன்—நமது கேடுகளுக்கெல்லாம் காரணம், சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் என்று குற்றம் சாட்டி, நாம் நமது தரித்திரத்தின் காரணமாக அயோக்கியர்களாகவும், கடவுளின் கட்டாயத்தால் முட்டாள்களாகவும், கிரகங்களின் செயலால் துஷ்டர்களாகவும் திருடர்களாகவும் துரோகிகளாகவுமிருக்கிறோமென்று சொல்கிறோம். குடிகாரர்களாகவும், பொய் பேசுபவர்களாகவும், ஸ்திரீலோலர்களாகவுமிருப்பதெல்லாம் கிரகங்களின் பலத்தை அனுசரித்து இருப்பதாகவும், நம்முடைய கெட்ட குணங்களெல்லாம் தெய்வத்தால் விதிக்கப்பட்டதாகவும் கூறுகிறோம். காமாந்தகாரனை ஓர் மனிதன் ஆட்டுக்கடா போன்ற குணத்தை ஒரு நக்ஷத்திரத்தின் மீது சுமத்தித் தன் குற்றத்தை எவ்விதம் சாமர்த்தியமாக மறைக்கிறான். என் தந்தை என் தாயுடன் அசுரப்பாம்பின் வாலின்கீழ் சேர்ந்து நான் ஜனித்தேன். அதனால் என்ன ஏற்படுகிறதென்றால் நான் முரடனாகவும் காமாந்தகாரனாகவுமிருக்கிறேன். மிகவும் கற்புடைய ஒரு நக்ஷத்திரம் நான் களவொழுக்கத்தால் ஜனிக்கும்பொழுது விசும்பில் மினிர்ந்து கொண்டிருந்தாலும் நான் இப்பொழுதிருப்பதுபோலவேதான் இருந்திருப்பேன். (எட்கார் வருகிறான்) ரொம்ப சரி. அவன் பழைய ஹாஸ்ய நாடகத்தின் முடிவுபோல் நினைத்தவுடன் சௌகர்யமாக வருகிறான். என்னுடைய நடிப்பின் பாகம் பெட்லம், பயித்தியக்காரன். டாமின் பெருமூச்சுடன் கூடிய வஞ்சகத் துயரம். ஓ, இந்தக் கிரஹணங்கள் இத்தகைய பிழைகளைக்குறிக்கின்றன. பா, சோல், லா, மி.

எட்கார் : என்ன விஷயம் எட்மண்ட்! எதைப்பற்றி இந்த ஆழ்ந்தசிந்தனை?

எட்மண்ட் : அண்ணா! நான் சின்னாட்களுக்கு முன் படித்த ஜோஸ்யப்பலனைப்பற்றிச் சிந்தித்து அதன்படி இந்த கிரஹணங்களால் என்ன நேரிடுமென்று யோசித்துக்கொண்டிருக்கிறேன்.

எட்கார் : நீ இதில் காலத்தைக் கழிக்கிறாயா?

எட்மண்ட் : உறுதியாகச் சொல்வேன். அவன் சொல்லும் கெட்ட பலன்கள் நிச்சயமாகப் பலிக்கின்றன.—குழந்தைகளுக்கும் பெற்றோருக்குமிடையே இயற்கைக்குமாறான வருத்தம், சாவு, பஞ்சம், நெடுநாளைய நேசஉறவுகள் முறிபடுதல், நாட்டில் கக்ஷிகள், அரசனுக்கும் பிரபுக்களுக்கும் ஆபத்துகள், தேவையில்லாத சந்தேகங்கள், நண்பர்கள் நாடு கடத்தப்படுதல், துணைவர்களின் பிரிவு, மனை வாழ்வில் கசப்புகள், இன்னும் என்னால் அறியமுடியாத எவ்வளவோ துயரங்கள்.

எட்கார் : நீ எவ்வளவு காலமாக வான சாஸ்திர (ஜோஸ்ய) சபையின் அங்கத்தினராகயிருக்கிருய்?

எட்மண்ட் : அதிருக்கட்டும், வா. நீ கடைசியாக நம் தந்தையை எப்பொழுது பார்த்தாய்?

எட்கார் : கடந்த இரவு.

எட்மண்ட் : அவருடன் உரையாடினுயா?

எட்கார் : இரண்டு மணி நேரம் கூடிப்பேசினேம்.

எட்மண்ட் : நீங்கள் நேசமாகப் பிரிந்தீர்களா? அவர் முகத்திலாவது பேச்சிலாவது நீ ஏதும் வெறுப்பைக் காணவில்லையா?

எட்கார் : ஒன்றுமே யில்லை.

எட்மண்ட் : நீ எந்த வகையில் அவரைக் கோபமடையச் செய்திருக்கலாம் என்பதை யோசித்துப்பார். நான் உன்னை வேண்டிக்கொள்கிறேன். அவருடைய கோபம் காலத்தின்போக்கால் தணியும்வரை அவர் முன் செல்லாதே. இப்பொழுது பொங்கி எரிந்து கொண்டிருக்கும் அவருடைய கோபத்தணல் உன்னைக் காண்பதால் கொஞ்சமும் தணியாது.

எட்கார் : ஒரு வஞ்சகன் எனக்குத் தீங்கிழைத்திருக்கிருன்.

எட்மண்ட் : நானும் அப்படியே சந்தேகிக்கிறேன். அவருடைய கோபத்தின் வேகம் தணியும்வரை நீ சாந்தமாகவும் பொறுமையாகவுமிருக்கக் கோருகிறேன். என்னுடன் என்னுடைய இருப்பிடத்திற்கு வந்து தங்கு. அங்கே நம் பிரபு பேசுவதைக் கேட்கும்படி செய்கிறேன். இப்பொழுது செல். இதோ என் சாவி. நீ வெளியேறிச் சென்ருல் ஆயுதபாணியாகச் செல்.

எட்கார் : ஆயுதம் தாங்கியா, தம்பி?

எட்மண்ட் : அண்ணு, உன்னிடத்தில் ஏதேனும் நல்லெண்ணம் இருக்குமாயின், நன்மையை நாடியே கூறுகிறேன், இல்லாவிடில் நான் யோக்கியனல்ல, நான் கண்டதையும், லேசாகக் கேட்டதையும் உனக்குத் தெரிவித்தேன். அதன் பயங்கரத்தையோ, பிம்பத்தையோ போல ஒன்றுமேயில்லை. நீ சென்று விடு.

எட்கார் : உன்னிடமிருந்து அவ்வப்பொழுது சமாசாரம் எதிர்பார்க்கலாமா? (செல்கிருன்)

எட்மண்ட் : நான் இவ்விஷயத்தில் உனக்கு உதவி புரிகிறேன். எதையும் எளிதில் நம்பும் ஓர் தந்தை, குணத்திற்சிறந்த ஒரு

சகோதரன்—அவனுடைய இயற்கை எவருக்கும் தீங்கிழைக்க விரும்பாத தால் யாரையும் அவன் சந்தேகிப்பதில்லை. அப்படிப்பட்ட அவனு டைய மூட நம்பிக்கை என்னுடைய சூழ்ச்சிகள் எளிதில் வெற்றி பெறு மாறு செய்கின்றது. ஆ! நான் அக்காரியத்தை எண்ணிப்பார்க்கிறேன். பிறப்புரிமை இல்லாவிட்டாலும் எனது சாமர்த்தியத்தால் நிலங்களைப் பெறுவேன். என்னிடம் எல்லா சாமர்த்தியமும் பொருந்தியிருப்பதால் நான் எல்லாவற்றையும் சரிவர முடிப்பேன். (செல்கிறான்)

அங்கம் 1—காக்ஷி 3

(கானரிலும் காரியஸ்தனும் வருகிறார்கள்.)

கானரில்: விதூஷகனை என் மனிதன் கண்டித்ததற்காக என் தந்தை என் மனிதனை அடித்தாரா?

காரியஸ்தன்: ஆம், சீமாட்டியே.

கானரில்: இரவிலும் பகலிலும் அவர் எனக்குத் தவறிழைக் கிறார். ஒவ்வொரு மணியிலும் அவர் ஏதாவது ஒரு பெரிய தவறைத் திடீரென்று செய்து நம்மை எல்லாம் திகைத்துத் தடுமாறும்படி செய் கிறார். நான் இனி அதைப் பொறுக்கமாட்டேன். அவருடைய வீரர் கள் கொட்டமடிக்கத் தொடங்கிவிட்டனர். அவரோ ஒவ்வொரு அற்ப விஷயத்திற்கும் நம்மைத்தான் கடிந்து பேசுகிறார். அவர் வேட்டையி லிருந்து திரும்பும்பொழுது நான் அவருடன் பேசமாட்டேன். நான் வியாதியுற்றிருப்பதாகத் தெரிவி. நீ முன் செய்த அளவிற்கு அவருக் குத் தொண்டு செய்யாமலிருப்பது நலம். நான் அக்குறைக்குப் பதில் சொல்லிக்கொள்கிறேன்.

காரியஸ்தன்: அவர் வருகிறார். சீமாட்டி, நான் அவர் குரலைக் கேட்கிறேன்.

கானரில்: நீயும் உன் ஆட்களும் எவ்வளவுதூரம் களைப்பால் கவனிப்புக்குறைவாக இருக்கமுடியுமோ அவ்வாறிருங்கள். அதைப் பற்றிக் கேள்வி எழ எதிர்பார்க்கிறேன். அவர் அதை விரும்பவில்லை என்றால் என் தங்கையிடம் சொல்லட்டும். அது விஷயத்தில் என்னு டையவும் என் தங்கையுடையவும் மனது ஒன்றே என்பதை நானறி வேன் (தான் இழந்துவிட்ட அதிகாரங்களைச் செலுத்தவிரும்பும் சோம் பேறிக் கிழவனே! உன்னால் அடக்கியாளப்படமுடியாது. வயதான

கிழ முட்டாள்கள் குழந்தைகளே. என் உயிரின் மேலாணை, குழந்தைகள் சரியானபடி நடக்காவிட்டால் எப்படி நயம் பயமாக வளர்க்கப்பட வேண்டுமோ அதேபோல் அவர்களையும் நடத்தவேண்டும்.) நான் உனக்குச் சொன்னவற்றை நன்றாக ஞாபகத்தில் வை.

காரியஸ்தன் : நல்லது, பெருமாட்டி.

கானரில் : அவருடைய வீரர்களிடம் முகங்கொடுத்துப் பேச வேண்டாம். அதனால் என்ன விளைந்தாலும் சரி. உன் ஆட்களுக்கும் தெரிவித்துவிடு. (இதிலிருந்து நான் அவரிடம் நேரில் கண்டிப்பாய்ப் பேசுவதற்குத் தக்க சந்தர்ப்பங்களை உண்டாக்கிக்கொள்ள முயல்வேன்) நான் என் தங்கைக்கு என்னைப் பின்பற்றுமாறு நேரே எழுதி விடுகிறேன். சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்.

(செல்கிறார்கள்)

அங்கம் 1—காக்ஷி 4

(கென்ட் வருகிறார்)

கென்ட் : என்னுடைய சொற்களையும் உச்சரிப்பையும் மாற்றி என் பேச்சை முற்றிலும் மாற்றிக்கொண்டால் நான் எதற்காக என் உருவத்தை மாற்றி மாறுவேடம் பூண்டேனோ அந்த எண்ணம் முழுவதும் வெற்றிகரமாகச் செல்லும். ஆ! நாடு கடத்தப்பட்ட கென்ட்! நீ எங்கே குற்றம் சாட்டப்பட்டாயோ அங்கேயே நீ உதவியாக இருந்தால்—அவ்வாறேபாகட்டும். நீ நேசிக்கும் எஜமானன் உன்னை மிகவும் தன்பால் சிரத்தையுள்ளவனாகக் காண்பார்.

(உள்ளே கொம்புகள் ஊதுகின்றன. லியரும் பரிவாரங்களும் வருகின்றனர்.)

லியர் : சாப்பாட்டிற்காக நான் ஒரு நொடியும் காத்திருக்க வேண்டாம். செல், தயார் செய். என்ன, நீ யார்?

கென்ட் : ஒரு மனிதன், ஐயனே.

லியர் : உனக்கு என்ன தெரியும்? நம்மிடம் என்ன விரும்புகிறாய்?

கென்ட் : நான் எவ்வாறு தோன்றுகிறேனோ அதற்குச் சற்றும் மாறுதல் இல்லாதவன் என நம்புகிறேன். என்னிடம் நம்பிக்கை வைப்பவர்களுக்கு உண்மையுடன் உழைப்பது, நேர்மையானவரை

நேசிப்பது, அறிவாளியானாலும் அதிகம் பேசாதவருடன் உரையாடுவது, குற்றம் சாட்டப்படுவதற்கு அஞ்சுவது, தெய்வத்திற்கு அஞ்சுவது, வேறு வழியில்லையானால் சண்டையிடுவது, மீனை அருந்தாமலிருப்பது என் கொள்கை.

லியர் : நீ யார்?

கென்ட் : மிகவும் உண்மையான நெஞ்சம் படைத்தவன். அரசனைப்போல் எளியவன்.

லியர் : அரசன் அரசர்களில் எளியவனாவதுபோல் நீ குடிகளில் எளியவனானால் எளியவனே. நீ என்ன விரும்புகிறாய்?

கென்ட் : வேலை.

லியர் : யாரிடம் வேலைசெய்ய விருப்பம்?

கென்ட் : தங்களிடம்.

லியர் : அடே! நீ என்னை அறிவாயா!

கென்ட் : இல்லை, ஐயா. ஆனால் உங்கள் முகத்தில் எஜமான் என்று அழைப்பதற்குரிய லக்ஷணம் இருக்கிறது.

லியர் : என்ன அது?

கென்ட் : அதிகாரம்.

லியர் : உனக்கு என்ன வேலை செய்யத் தெரியும்?

கென்ட் : நான் நேர்மையான யோசனை கூறுவேன். குதிரை சவாரி செய்வேன்; ஓடுவேன், பழங்காலக் கதைகளைச் சொல்லத் தெரியாமல் கெடுத்துவிடுவேன். எதையும் ஒளிமறைவில்லாமல் வெளிப்படையாகக் கூறுவேன். சாதாரணமான மனிதன் எதற்குத் தகுதியுடையவனோ அதற்குரியவன்; என் முக்கியமான குணம் விடா முயற்சி.

லியர் : உன் வயதென்ன?

கென்ட் : பாடுவதற்காக ஒரு பெண்ணைக் காதலிக்கக்கூடிய இளமையுமல்ல, எல்லாவற்றிற்கும் அவளையே சரணமென்றிருக்கும் முதுமையுமல்ல. என் தோள்கள் நாற்பத்தெட்டு வருடங்களைச் சுமந்துவிட்டன.

லியர் : என்னுடன் வா. சாப்பாட்டின்பிறகும் உன்னிடம் இதே மாதிரி நான் பிரியப்பட்டால் நீ என்னிடம் வேலைக்கமரலாம். நான் இப்பொழுது உன்னைப் போகச் சொல்லவில்லை. சாப்பாடு, எங்கே சாப்பாடு? என்னுடைய வேலையாள் எங்கே? என்னுடைய

விதூஷகன்? நீ சென்று என் விதூஷகனை வரச்சொல். (காரியஸ்தன் வருகிறான்). நீ, நீ, அடே, என் மகள் எங்கே?

காரியஸ்தன்: ஐயா—தங்கள் சித்தம்.—(போகிறான்)

லியர்: அந்தப் பயல் என்ன சொல்கிறான்? அந்தக் களிமண்ணைக் கூப்பிடு; என் விதூஷகன் எங்கே? ஹோ! உலகமே தூங்குவதுபோலிருக்கிறது. ஏன் அப்படி? அந்த நாடோடி நாய் எங்கே?

சீமான்: உங்கள் புதல்விக்கு உடல் நலமில்லை என்று சொல்கிறான், பிரபு.

லியர்: அந்த அடிமை நான் கூப்பிடும்பொழுது ஏன் திரும்பி வரவில்லை?

சீமான்: ஐயனே, தான் வரமுடியாதென்று அவன் என்னிடம் திட்டவட்டமாகச் சொல்லிவிட்டான்.

லியர்: அவன் வரமாட்டானா?

சீமான்: என் அரசே! எனக்கு விஷயம் இன்னதென்று புலப்படவில்லை. தாங்கள் எப்பொழுதும்போல் முறைப்படிக்குள்ள மரியாதையுடனும் அன்புடனும் கவனிக்கப்பட்டு ஆதரிக்கப்படவில்லை என்று என் புத்திக்குப்படுகிறது. பொதுவாக எல்லா வேலைக்காரரிடமும், ட்யூக்கிடமும் தங்கள் மகளிடமும் அன்பு குறைவாகக் காணப்படுகிறது.

லியர்: ஹா! நீர் அவ்விதமா கூறுகிறீர்?

சீமான்: எஜமானே! நான் தவறாக எண்ணினால் என்னை மன்னித்துவிடுங்கள். ஆனால் மகா ராஜாவை அவமானப்படுத்தும்பொழுது என் கடமை என்னை மௌனமாக இருக்கவிடவில்லை.

லியர்: நீர் நான் எண்ணியதையே ஞாபகப்படுத்துகிறீர். நான் சில நாட்களாகக் கொஞ்சம் கவனிப்புக் குறைவு இருப்பதைக் கண்டேன். ஆனால் நான் அதை அவர்கள் வேண்டுமென்று அன்பின் குறைவால் செய்யவில்லையென்றும் என்னுடைய தற்பெருமையால் சந்தேகப்பட்டதாக என்னையே கடிந்துகொண்டேன். நான் இன்னும் அதைக் கவனிப்பேன். நம் விதூஷகன் எங்கே? நான் இரண்டு தினங்களாக அவனைக் காணவில்லை.

சீமான்: சின்ன இளவரசி ப்ரான்ஸிற்குச் சென்றதிலிருந்து விதூஷகன் மனமுடைந்துபோயிருக்கிறான்.

லியர் : அதைப்பற்றி மேலும் சொல்லவேண்டாம். நான் அதை நன்குணர்வேன். என் மகளிடம் சென்று அவளுடன் நான் பேச விரும்புவதாகச் சொல். நீ சென்று என் விதூஷகனை இங்கு அழைத்து வா. (காரியஸ்தன் வருகிறான்.) ஓ, ஐயா, நீங்கள், இப்படி வாருங்கள் ஐயா, நான் யார் ஐயா?

காரியஸ்தன் : என் எஜமானியின் தந்தை.

லியர் : என் எஜமானியின் தந்தை! என் பிரபுவின் அடிமை. வேசி மகன் நாயே, அயோக்கியப்பயலே! நாயே!

காரியஸ்தன் : என்னை மன்னிக்கவும். நான் அவைகளில் ஒன்றுகூட இல்லை.

லியர் : என்ன, என்னை முறைத்துப்பார்க்கிறாயா? அயோக்கியப் பயலே:

கார்யஸ்தன் : நான் இதற்கெல்லாம் பயப்படமாட்டேன் பிரபுவே!

கென்ட் : காலவாரி வீழ்த்தப்படமாட்டாய், கீழ்த்தரப் பந்து விளையாட்டுக்காரனே.

லியர் : உனக்கு வந்தனம். நீ என்னிடம் வேலைசெய். நான் உன்னை நேசிப்பேன்.

கென்ட் : வாருமையா. எழும். சென்றுவிடும். நான் உனக்கு மரியாதை மட்டு கற்றுக்கொடுப்பேன். போ, போ. நீ உதைபட்டுக் கீழே விழுந்து உனது நாகரீகமற்ற சரீரத்தை அளக்கவேண்டுமானால் இரு. ஆனால் சென்றுவிடு, அகன்றுவிடு, உனக்கு அறிவிருக்கிறதா?

(காரியஸ்தன் செல்கிறான்)

லியர் : அன்புடைய ஊழியனே உனக்கு வந்தனம். இதோ உன் வேலைக்கு முன்பணம்.

(விதூஷகன் வருகிறான்)

விதூஷகன் : அவனை நானும் வேலைக்கமர்த்திக்கொள்ள அனுமதியுங்கள், இதோ என்னுடைய முட்டாளின் குல்லா.

லியர் : என்ன விசேஷம், என் நேர்த்தியான ஊழியனே உன் உடல்நலமெப்படியிருக்கிறது.

விதூஷகன் : என்னுடைய முட்டாள் குல்லாவை நீர் அணிந்து கொள்வது நன்றாகப் பொருந்தும்.

லியர் : ஏன் பையா?

விதூஷகன் : ஏன் ! செல்காலமில்லாதவன் கக்ஷியை ஆதரித்த தற்காக, எப்படிக் காற்றடிக்கிறதோ அப்படித் தூற்றிக் கொள்ளாத தற்காக, கூடிய சீக்கிரம் உங்களுக்குத் தடுமன் பிடிக்கும். ஆகையால் என் குல்லாவை வாங்கிக்கொள்ளுங்கள். இவன் தன் பெண்களில் இருவரை விரட்டிவிட்டு, விருப்பத்திற்கு மாருக மூன்ருவது பெண் ணுக்கு நன்மையைச் செய்தான். அவனைப் பின்பற்றுவதானுல் தாங்கள் அவசியம் என் குல்லாவை அணியவேண்டும். என்ன, என் மாமா, எனக்கு இரண்டு பெண்களும் இரண்டு குல்லாக்களுமிருந்தால் நலமென நினைக்கிறேன்.

லியர் : ஏன் பையா ?

விதூஷகன் : நான் என்னுடைமையெல்லாம் அவர்களுக்கு அளித்து விட்டு என் குல்லாக்களை வைத்துக்கொள்வேன். இதோ என்னுடைய திருக்கிறது, தங்கள் பெண்களிடத்தில் மற்ருென்றை யாசியுங்கள்.

லியர் : சவுக்கை ஞாபகப்படுத்திக்கொள்.

விதூஷகன் : செல்லமான பெண்நாய் கணப்பிற்கு அருகில் நின்று துர்க்கந்தம் வீசினுலும் ஆண் நாயைச் சவுக்காலடித்து விரட்டு வதுபோல் உண்மையும் விரட்டப்படும்.

லியர் : எனக்கு ஒரு கொள்ளைப் பித்தம்.

விதூஷகன் : உனக்கு ஒரு பிரசங்கம் கற்றுக்கொடுக்கவா ?

லியர் : செய்.

விதூஷகன் : கவனி, மாமா.

" நீ காட்டுவதைவிட அதிகம் வைத்திரு.
நீ அறிந்திருப்பதைவிடக் குறைவாகப் பேசு.
நீ வைத்திருப்பதைவிடக் குறைவாகக் கொடு.
நீ போகவேண்டியதைவிட அதிகம் சவாறி செய்.
நீ நம்புவதைவிட அதிகம் கேள்.
நீ எறியக்கூடியதைவிட உன் லக்ஷ்யம் குறைவாக இருக்கட்டும்.
உன் குடியையும் கூத்தியையும்விட்டு வீட்டில் கிட.
அப்படியானுல் இருபதுடன் இரண்டு பத்துக்குமேல் உனக்குக் கிடைக்கும்."

லியர் : முட்டாளே ! இதில் ஒன்றுமில்லையே.

விதூஷகன் : அவ்வாருயின் அது ஊதியம் (பீசு) இல்லாமல் பேசும் வக்கீலின் வார்த்தைகளை ஒக்கின்றன. நீர் அதற்காக எனக்கு

ஒன்றும் தரவில்லை. தாங்கள் சூன்யத்தை ஒருவிதத்திலும் உபயோகிக்க முடியாதா?

லியர்: ஏன், பையா, முடியாது. சூன்யத்திலிருந்து ஒன்றும் தோன்ருது.

விதூஷகன்: (கென்டிடம்) தயவுசெய்து அவரிடம் அவருடைய நிலத்திலிருந்து அவ்வளவுதான் வருமானமென்று தெரிவியுங்கள். அவர் முட்டாள் சொல்வதில் நம்பிக்கைகொள்ளார்.

லியர்: ஒரு கசப்பான முட்டாள்.

விதூஷகன்: பையா, உனக்குக் கசக்கும் மூடனுக்கும் இனிக்கும் மூடனுக்கும் உள்ள வேற்றுமை தெரியுமா?

லியர்: இல்லை, பையா. எனக்கு எடுத்துச்சொல்.

விதூஷகன்: தங்கள் ராஜ்யத்தைக் கொடுத்துவிடும்படி போதித்த அந்தப் பிரபுவை இங்கே என் பக்கலில் நிறுத்தும். அவனுக்குப் பதிலாக நீர் நில்லும். உடனே இனிய முட்டாளும் கைக்கும் முட்டாளும் தோன்றுவார்கள். ஒருவன் இங்கே கந்தையிலும் மற்றவன் அங்கேயும் காணப்படுவார்கள்.

லியர்: நீ என்னை முட்டாளென்றழைக்கிருயா?

விதூஷகன்: தங்களுடைய மற்றப் பட்டங்களை எல்லாம் கொடுத்துவிட்டீர்கள். இது உங்களுடன் பிறந்தது.

கென்ட்: பிரபு! இவன் முழு முட்டாளாகக் காணப்படவில்லை.

விதூஷகன்: உண்மையில் இல்லை. பிரபுக்களும் பெரிய மனிதர்களும் அதில் எனக்கு சர்வமானிபம் இருக்கவிடமாட்டார்கள். அவர்கள் பாகத்திற்கு வருகிருர்கள். சீமாட்டிகள்கூட முட்டாள்தனம் முழுமையும் எனதுரிமையாக்க விடவில்லை. அவர்களும் பிடுங்கி எடுத்துக்கொள்கிருர்கள். எனக்கு ஒரு முட்டை கொடும். நான் உங்களுக்கு இரண்டு முடிகள் தருகிறேன்.

லியர்: அவையிரண்டும் எத்தகைய முடிகளாயிருக்கும்?

விதூஷகன்: ஏன், நான் முட்டையை மத்தியில் உடைத்து உள்ளிருக்கும் கருவை உண்டபின் மீதமிருக்கும் முட்டையின் இரு ஓடுகள்; தங்களுடைய முடியை இரண்டாகப் பகிர்ந்து இரண்டு பாகத்தையும் கொடுத்தபின் தங்களுடைய கழுதையைத் தங்கள் முதுகில் தாங்கிப் புழுதியில் நடந்தீர்கள். தங்கள் பொன்முடியைக் கொடுத்தபொழுது தங்களுடைய வழுக்கை முடியில் மூளை சிறிது மில்லை. நான் இவ்வாறு என் இயற்கையாகப் பேசினல் அதை முதலில்

கண்டுபிடிப்பவர்களுக்குச் சவுக்கடி கொடுங்கள். மூடர்கள் எந்தக் காலத்திலும் இவ்விதம் வெகுமதியற்றவர்களானதில்லை. ஏனெனில் அறிவாளிகள் வீணர்களாகவும் கர்விகளாகவும் மாறித் தங்கள் அறிவை உபயோகிக்க அறியவில்லை. அவர்கள் மூடர்களைப் பின்பற்றுகிறார்கள்.

லியர்: அடே, நீ எப்பொழுது இவ்வாறு பாடக் கற்றுக் கொண்டாய்?

விதூஷகன்: தாங்கள் எப்பொழுது தங்கள் புதல்விகளைத் தங்கள் தாயாராகச் செய்தீர்களோ, எப்பொழுது தங்கள் பிரம்பை அவர்களிடம் கொடுத்துவிட்டுத் தங்களுடைய அரைச் சட்டையை அணிந்தீர்களோ, அப்பொழுது அவர்கள் எதிர்பாராத சந்தோஷத்தால் அழுதார்கள். நான் இச்சிறந்த அரசன் மறுபடியும் குழந்தையாகி முட்டாள்களுடைய கோஷ்டியில் சேர்ந்துவிட்டாரே என்று வருத்த மிகுதியால் பாடினேன். தயவுசெய்து தங்கள் விதூஷகனுக்குப் பொய் கற்பிக்க ஓர் உபாத்தியாயரை நியமியுங்கள். நான் பொய் சொல்லக் கற்றுக்கொள்ள விரும்புகிறேன்.

லியர்: அடே, நீ பொய் சொல்கிறாய். உனக்குச் சவுக்கடி கொடுக்கவேண்டும்.

விதூஷகன்: தாங்களும் தங்கள் பெண்களும் எவ்வளவு நெருங்கிய உறவினர்களாயிருக்கிறீர்களென்று நான் ஆச்சரியப்படு கிறேன். அவர்கள் நான் உண்மை உரைத்தால் சவுக்கடி கொடுக்க விரும்புகிறார்கள். தாங்கள் பொய் சொன்னால் சவுக்கடி கொடுக்கச் சொல்கிறீர்கள். சில சமயம் நான் மவுனமாயிருந்தாலும் அடி கிடைக் கிறது. நான் விதூஷகனாக இருப்பதைவிட வேறு ஏதாகவாவது இருக்கலாமென நினைக்கிறேன். ஆனால் நான் தாங்களாக இருக்க விரும்பமாட்டேன். தாங்கள் தங்கள் மூளையை இருபுறத்திலுமிருந்து உறித்துக்கொண்டுவந்து அதன் மத்தியில் ஒன்றுமில்லாமல் செய்து விட்டீர்கள். இதோ உறித்தவர்களில் ஒருவர் வருகிறார்.

(கானரில் வருகிறாள்)

லியர்: இப்பொழுதென்ன, மகளே! அந்தப் புருவ நெறிப்பின் காரணமென்ன? சின்னாட்களாக நீ எப்பொழுதும் முகத்தைச் சுளுக்கிக்கொண்டே இருக்கிறாய்.

விதூஷகன்: அவளுடைய கோபத்தை நீர் சட்டை செய்ய வேண்டிய அவசியம் உமக்கில்லாதபொழுது நீர் நேர்த்தியான மனுஷனாக இருந்தீர். இப்பொழுது எண்ணிக்கை முன்னில்லாத பூஜ்ய(0)மாக இருப்பதால் நான் உம்மைவிட மேலானவனாக இருக்கிறேன். நான் ஓர்

முட்டாள். நீர் ஒன்றுமேயில்லே. ஆம். நான் என் வாயை மூடிக் கொள்கிறேன். நீர் பேசாவிடினும் உமது முகம் அவ்வாறு கட்டளை யிடுகிறது. நிசப்தம். நிசப்தம். எவனொருவன் சலிப்பால் தூள், துண்டம் யாதொன்றும் வைத்துக்கொள்ளவில்லேயோ அவனுக்கு ஏதாவது வேண்டியிருக்கும். அது பட்டாணி இல்லாத கடலேத்தோல்.

காளரில் : சர்வ சுதந்திரமளிக்கப்பட்ட இந்த முட்டாள்மட்டு மல்ல, உங்களுடைய அதிகப்பிரசங்கிகளான கூட்டத்தினர்களும் ஒவ் வொரு மணிக்கும் சண்டையிட்டு மிகவும் கேவலமான சகிக்கமுடியாத கலகங்களை விளைக்கின்றனர். ஐயா, அதை நான் தங்களுக்கு விளக்கிச் சொல்லிப் பரிகாரம் பெறலாமென நினைத்தேன். ஆனால் தாங்கள் இப்பொழுது பேசுவதிலிருந்தும் செய்வதிலிருந்தும் நீங்கள் அவர்கள் செய்கையை ஆதரிக்கிறீர்களென்றும், உங்களுடைய அனுமதியின் பேரிலேயேதான் செய்கிறார்களென்றும் பயப்படுகிறேன். இம்மாதிரி நீங்கள் செய்வதனால் அத்தவறு கண்டிக்கத்தான்படும். சரிப்படுத்து வதற்கான முயற்சிகள் தூங்கமாட்டா. என் ராஜ்யத்தைக் கலக மில்லாமல் இருக்க எடுக்கும் நடபடிகள் சாதாரணமாக ஒரு தந்தைக்கு அவமானம் விளைப்பதாயும் குற்றமானதாயும் இருப்பினும் இந்த நிலேயில் புத்திசாலித்தனமான செய்கை என்றே கருதப்படும்.

விதூஷகன் : வளர்த்தகடா மார்பில் பாய்ந்ததாம் என்பதைத் தாங்கள் அறிவீர்களல்லவா? காட்டுக்குருவி குக்கு பக்ஷியைப் பன்னாள் வளர்த்தது. பருவம் வந்தவுடன் குக்குவினால் குருவி தலே கொத்தப் பட்டது. மெழுகுவத்தி அணைக்கப்பட்டது. நாமெல்லோரும் இருட்டில் வசிப்பவர்களானோம்.

லியர் : நீ நம்முடைய பெண்ணா?

காளரில் : நீங்கள் இயற்கையாகப் படைத்த அறிவை உப யோகித்துச் சின்னாட்களாக உங்களுக்கேற்ற ஸ்தானத்திலிருந்து இட்டுச் செல்லும் இந்த நடபடிக்கைகளை விட்டுவிடும்படி வேண்டு கிறேன்.

விதூஷகன் : எப்பொழுது வண்டி குதிரையை இழுக்கும் என் பதைக் கழுதைகூட அறியாதா? கண்ணே! உன்னை நான் மதிக்கிறேன்.

லியர் : இங்கு யாராவது என்னை அறிவார்களா? இது லியர் அல்ல. லியர் இப்படி நடப்பானா? இப்படிப் பேசுவானா? அவ னுடைய கண்கள் எங்கே? அவனுடைய பார்வை மங்கிப்போயிருக்க வேண்டும், அல்லது புத்தி மழுங்கிப்போயிருக்கவேண்டும். ஹா! விழித்திருக்கிறேனா? அப்படியல்ல. நான் யாரென்று யாராலாவது சொல்லமுடியுமா?

விதூஷகன் : லியரின் நிழல்.

லியர் : எனது ராஜாங்க அந்தஸ்து, அனுபவம், புத்தி முதலிய வற்ருல் நான் அதை அறிந்துகொள்வேன். நான் பெண்களைப் பெற்றிருந்தேன் என்று தவருக நினைத்திருந்தேன்.

விதூஷகன் : அந்தப் பெண்கள் தங்களை அடங்கி ஒடுங்கி, நடக்கும் தந்தையாக்குவார்கள்.

லியர் : அழகிய சிலவதியான பெண்ணே ! நீ யார் ?

கானரில் : இந்தப் புகழ்ச்சி தங்களுடைய புதிய திருவிளையாடல்களை மிகவும் ஒத்திருக்கிறது. நான் சொல்வதைச் சரியானபடி புரிந்து கொள்ளவேண்டுகிறேன். நீங்கள் வயதானவர்களாயும் மரியாதைக் குரியவர்களாயுமிருப்பதால் அறிவாளியாக இருக்கவேண்டும். தங்களுடன் நூறு போர்வீரர்களை வைத்திருக்கிறீர்கள். அம்மனிதர்கள் சற்றும் ஒழுக்கமில்லாதவர்களாயும் துன்மார்க்கர்களாகவும், கலகக்காரர்களாகவும், அடக்கமில்லாதவர்களாகவும் இருப்பதால் அவர்களுடைய நடத்தையால் பாதிக்கப்பட்ட இந்த அரண்மனை குடிகாரர்கள் நிறைந்த ஒரு கள்ளுக்கடையாகக் காட்சியளிக்கிறது. மட்டற்ற சிற்றின்பமும் போகமும் இதை ஒரு கவுரவமான அரண்மனை என்று நினைக்கமுடியாமல் வேசிகள் தங்குமிடம்போல் தோன்றுகிறது. அந்த அவமானம் உடனே சீர்திருத்தப்படவேண்டும் என்று அறை கூவி அழைக்கிறது. எனவே நான் விரும்பியபடி செய்து—இல்லாவிடில் நானே அம்மாதிரி செய்ய நேரிடும்—தங்களுடைய சகாக்களைக் கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள். மீதம் தங்கியிருப்பவர்களும் தங்களையும் உங்களையும் உணர்ந்தவர்களாய் உங்களுடைய வயதிற்கேற்றவர்களான மனிதர்களாக இருக்கட்டும்.

லியர் : இருள் ! பேய்கள் ! என் குதிரைகளுக்குச் சேணம் போடுங்கள். என் பரிவாரங்களை அழையுங்கள். கீழ்த்தர வேசி மகளே ! உன்னை இனித் தொந்தரவு செய்யப்போவதில்லை.

கானரில் : நீர் என் பரிவாரங்களை அடிக்கின்றீர். உங்களுடைய ஒழுங்கற்ற கூட்டம் தங்களுக்கு மேலானவர்களைத் தங்கள் வேலைக்காரர்களாக நடத்துகிருர்கள்.

(ஆல்பனி வருகிருர்)

லியர் : வெகு காலங்கடந்தபின் கடந்ததைக் குறித்து வருந்துவது, ஆ ! துக்கம். இது தங்களுடைய விருப்பமா ? சொல்லுங்கள் ஐயா ! என்னுடைய குதிரைகளைத் தயார் செய்யுங்கள். செய்நன்றி கொல்லுதல், ஓ ! கன்னெஞ்சம்படைத்த பிசாசே ! நீ தான்

பெற்ற குழந்தையிடம் தோன்றும்பொழுது கடல் பூதத்தைவிடப் பயங்கரமாக இருக்கிறுப்.

ஆல்பனி : ஐயனே! பொருமையுடனிருங்கள்.

லியர் : அருவருப்பான பருந்தே! நீ பொய் சொல்கிருய். என் பரிவாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட யோக்யர்கள். நல்ல குணவான்கள். அவர்களுடைய கடமையின் ஒவ்வொரு அங்கத்தையும் நன்குணர்ந்தவர் களாய் மிகவும் கவனமாக நடந்து தங்களுடைய பேரையும் கவுரவத் தையும் தாங்குபவர்கள். நீ எப்படி கார்டிலியாவின் ஒரு சிறு குற்றத் தையும் விகாரமானதாகக் காட்டினுய்? அது ஒரு யந்திரம்போல் என் இயற்கை ஸ்வரூபத்தை அதற்குரிய இடத்திலிருந்து இழுத்துச் சென்று என் இதயத்திலிருந்து எல்லா அன்பையும் விரட்டி கசப்பை அதிகரிக்கச் செய்தது. ஓ! லியர்! லியர்! லியர்! உன்னுடைய அறிவை வெளியேற்றி அறிவின்மையை உட்புகவிட்ட இந்தக் கதவில் மோதிக்கொள். என் பரிவாரங்களே, போங்கள், போங்கள்.

(கென்டும் ஏவலாட்களும் செல்கின்றனர்)

ஆல்பனி : என் பிரபுவே! நான் குற்றமற்றவன். ஏனெனில் தங்களுக்கு வருத்தத்தைக் கொடுத்த விஷயம் இன்னதென்று தெரியாது.

லியர் : அவ்வாறேயிருக்கலாம், பிரபுவே. இயற்கையே கேள். அன்புமிக்க தெய்வமே கேள். இந்த ஜந்து பலனுள்ளதாக வேண்டு மென நினைத்திருந்தால் அதை நிறுத்திவிடு. அவளுடைய கர்ப்பத்தில் மலட்டுத் தன்மையைப் புகுத்து. உற்பத்திக்குரிய உருப்புகளை எல்லாம் வற்றச்செய்து அவளுடைய பாழடைந்த பலனற்ற சரீரத்தி லிருந்து அவளுக்குப் பெருமையளிக்கக்கூடிய குழந்தை பிறக்கவேண் டாம். ஒருக்கால் அவள் மகப்பேறு பெறுவதானுல் அவள் குழந்தை பித்தம்மிக்கதாய் பிறந்து இயற்கைக்கு மாருக அவளுக்குக் கொடிய துன்பத்தை அளிப்பதாக வாழட்டும். அக்குழந்தை அவளுடைய இன்முகத்தில் முதுமையின் சுருக்கங்களைத் தரட்டும். அவளுடைய கன்னங்களில் வற்ருத கண்ணீர் ஒழுக்கு அருவிபோல் துன்புறுத் தட்டும். அவள் தாயாவதற்காக அடைந்த சிரமமும் பலமும் எல்லாம் நகைப்பும் ஏளனமுமாக மாறட்டும். நன்றியற்ற குழந்தையைப் பெறுவது கொடிய விஷப் பாம்பின் பல்லைவிடக் கூரியதென்பதை அவள் அப்பொழுதுணர்வாள். செல்லுங்கள். செல்லுங்கள்.

(போகிருர்)

ஆல்பனி : நாம் தொழும் தெய்வங்களே! எதன் காரணமாக இதெல்லாம்?

கானரில் : அதைப்பற்றி அதிகம் தெரிந்துகொள்ளவேண்டு மென்று தங்களைச் சிரமப்படுத்திக்கொள்ள வேண்டாம். அவருடைய கிழமையின் காரணமாக ஏற்படும் சித்த விகசில்பின் போக்கின்படி விட்டுவிடுங்கள்.

(லியர் வருகிறார்.)

லியர் : என்ன, என்னுடைய பரிவாரங்களில் 50 பேர் வேலை நிறுத்தமா? ஒரு பக்ஷத்திற்குள்ளா?

ஆல்பனி : என்ன விஷயம் ஐயா?

லியர் : உனக்குநான் சொல்கிறேன் : வாழ்வும் சாவும். இம் மாதிரி என் ஆண்மையை இழந்து அழும்படி செய்ய உனக்குச் சக்தியிருப்பதற்கு நான் வெட்கப்படுகிறேன். ஆனால் இந்த ரத்தக் கண்ணீர் என்னிடமிருந்து கட்டாயத்தின் பேரில் வெளியேறுபவை. உனக்குத் தக்க பலனை அளிக்கும். புயல்களும் மூடுபனிகளும் உங் களைச் சூழட்டும். தகப்பனின் சாபத்தால் எற்படும் அளவற்ற காயங்கள் உன்னுடைய ஒவ்வொரு அங்கத்தைம் பிளக்கட்டும். ஓ! மூடக் கிழக் கண்களே! மறுபடியும் இதற்காக அழுதால் உங்களைப் பிடுங்கி எடுத்து அவை இழக்கும் கண்ணீருடன் களிமண்ணை நனைக்க எறிவேன். ஹா! அப்படியே ஆகட்டும். அன்பும் ஆதரவுமுள்ளவள் என நான் நிச்சயமாய் நம்பும் மற்றொரு பெண் எனக்கிருக்கிறாள். நீ இவ்விதம் செய்தாய் என்பதைக் கேட்டால் அவள் தன்னுடைய நகங்களால் உன் ஓநாய் முகத்தின் தோலை உரித்துவிடுவாள். நான் ஏதோ சாஸ்வதமாகத் தள்ளிவிட்டேன் என்று நீ நினைக்கும் என் பழைய உருவை நான் மறுபடியும் ஏற்றுக்கொள்வதை நீ காண்பாய்.

(போகிறார்.)

கானரில் : அதைக் கவனித்தீர்களா?

ஆல்பனி : கானரில், நான் உன்பால் வைத்திருக்கும் பேரன்பிற்கு அவ்விதம் பாரபக்ஷமாக இருக்கமுடியாது.

கானரில் : நீங்கள் பேசாதிருங்கள். என்ன, ஆஸ்வால்ட், ஹோ! ஐயா, நீர் முட்டாளல்ல, போக்கிரி, உன் எஜமானைப் பின்பற்று.

விதூஷகன் : லியர் மாமா, லியர் மாமா, சற்றுப் பொறுங்கள். தங்களுடைய விதூஷகனையும் அழைத்துச்செல்லுங்கள். பிடிபட்டால் ஒரு குள்ளநரி, அத்தகைய புத்ரி, என் குல்லாய் ஒரு தூக்குமேடைக்கு லாயக்கானால் நிச்சயமாகக் களபலி எனவே விதூஷகன் தங்களைப் பின்பற்றுகிறான். (செல்கிறான்.)

கானரில் : இந்த மனிதன் நல்ல யோசனை செய்திருக்கிறான். நூறு வீரர்கள். அப்படி எப்பொழுதும் தயாராக நூறு வீரர்களை அவர் வைத்திருக்க அனுமதிப்பது தற்காப்புமல்ல, புத்திசாலித்தனமுமல்ல. ஆம், ஒவ்வொரு கனவு, ஒவ்வொரு பிரமை, சிறு குற்றம், வெறுப்பு, குட்டிக்கலகம் காரணமாக அவர்களுடைய பலத்தைக் கொண்டு தன் முதுமையின் காரணமான மூடத்தனத்தைக் காக்க முயல்வதுடன் நம்முடைய உயிரை அவருடைய தயவில் வைத்துக் கொள்வார். ஆஸ்வால்ட், இங்கே வா.

ஆல்பனி : நன்று. உனது பயம் வீணாக வெகுதூரம் செல்கிறது.

கானரில் : அதிக நம்பிக்கை வைப்பதைவிட ஜாக்ரதையாக இருக்கலாம். நான் எதிர்பார்க்கும் ஆபத்துகளை நான் தவிர்த்துவிடுகிறேன். அவைகளைச் செய்ய நான் பயப்படவில்லை. எனக்கு அவருடைய மனதைத் தெரியும். அவர் என்ன சொன்னாரோ அதை என் தங்கைக்கு எழுதிவிட்டேன். நான் அவருடைய தகுதியற்ற தன்மையைக் காட்டியபிறகு அவள் அவரையும் அவருடைய நூற்றுவரையும் போஷிப்பாளா? (காரியஸ்தன் வருகிறான்) என்ன ஆஸ்வால்ட், நீ என் தங்கைக்கு அந்தக் கடிதத்தை எழுதிவிட்டாயா?

ஆஸ்வால்ட் : ஆம், சீமாட்டி.

கானரில் : துணைக்குச் சிலரைக் கூட்டிக்கொள். குதிரை ஏறிச் செல். என்னுடைய அந்தரங்கமான பயத்தை அவளுக்கு எடுத்துரை. அத்துடன் உனக்குத் தோன்றிய காரணங்களையும் கூறி விஷயத்தைப் பூர்த்திசெய். செல். சீக்கிரமாகவே திரும்பு. (ஆஸ்வால்ட் செல்கிறான்) இது சரியல்ல, நாதா. தங்களுடைய பால்போன்ற இரக்கமும் நடத்தையும், நான் அதைக் கண்டிக்கவில்லை என்றாலும், என்னை மன்னியுங்கள். தங்களுடைய அபாயகரமான சாந்தகுணத்திற்காகப் புகழப்படுவதைவிடத் தங்கள் சாமர்த்தியக் குறைவிற்காகப் பலமாகக் கண்டிக்கப்படுகிறீர்கள்.

ஆல்பனி : நீ எவ்வளவு தீர்க்கதரிசினி என்பது என்னால் அறிய முடியவில்லை. பொதுவாக, நாம் இருப்பதை அபிவிருத்தி செய்யத் துணிந்து நன்றாயிருப்பதையும் நாசமாக்கிவிடுகிறோம்.

கானரில் : இல்லை, அப்பொழுது—

ஆல்பனி : நன்று, நன்று. நடப்பதைப் பார்ப்போம்.

(செல்கிறார்கள்.)

அங்கம் 1—காக்ஷி 5

(லியர், கெண்ட், கனவான், விதூஷகன் வருகிருர்கள்.)

லியர் : நீ கிளஸ்டரிடம் இக்கடிதங்களுடன் முன்னே செல். என் மகளிடம் அவள் இந்தக் கடிதங்களிலிருந்து கேட்பதற்கன்றி வேறு உனக்குத் தெரிந்தது யாதொன்றையும் தெரிவிக்கவேண்டாம். நீ வேகமாகச் செல்லவில்லை என்ருல் நான் உனக்குமுன் அங்கிருப்பேன்.

கெண்ட் : என் பிரபுவே, தங்கள் கடிதத்தைச் சேர்ப்பிக்கும் வரை நான் தூங்கமாட்டேன். (போகிருர்.)

விதூஷகன் : ஒருவனுடைய மூளை அவனுடைய காலில் இருக்குமாஞல் வெடிப்புகளுக்கு இடமில்லாதிருக்குமல்லவா ?

லியர் : ஆம், பையா.

விதூஷகன் : அப்படியாளுல் சந்தோஷமாயிருங்கள். தங்கள் மூளை செருப்புகளை அணிந்து செல்லவேண்டியிராது.

லியர் : ஹா, ஹா, ஹா.

விதூஷகன் : தங்களுடைய மற்ருெரு பெண் தங்களிடம் அன்புடன் நடந்துகொள்கிருளாவென்று பார்ப்போம். அவள் ஒரு நண்டு, ஆப்பிள்பழம் போலவே தோன்றுவதுபோல, இவள் இம்மாதிரி காணப்படுகிருள். ஆயினும் என்ன ஊகித்தறிகிறேனே அதைச் சொல்வேன்.

லியர் : பையா, என்ன சொல்லப்போகிருய் ?

விதூஷகன் : ஒரு கிராப் ஆப்பிள் ஒரு நண்டிற்கு எவ்வாறு ருசிக்குமோ அவ்வாறே அவளும் ருசிப்பாள். ஒருவனுடைய நாசி ஒருவனுடைய முகத்தின் மத்தியில் ஏன் இருக்கிறதென்பதைச் சொல்ல முடியுமல்லவா ?

லியர் : முடியாது.

விதூஷகன் : ஏனெனில், நாசியின் இருபுறத்திலும் ஒவ்வொரு கண் இருப்பதற்காக. அப்படியிருப்பதால்தான் மோப்பத்தால் கண்டுபிடிக்கமுடியாததை ஒருவன் கண்ணுல் ரகசியமாய்ப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

லியர் : நான் அவளுக்குத் தவறிழைத்தேன்.

விதூஷகன் : சிப்பி எப்படி தன் ஓட்டைச் செய்துகொள்கிறதென்பது தெரியுமா ?

லியர் : தெரியாது.

விதூஷகன் : எனக்கும் தெரியாது. ஆனால் நத்தைக்கு ஏன் கூடு இருக்கிறதென்பது தெரியும்.

லியர் : ஏன் ?

விதூஷகன் : ஏன், அதன் தலையைப் பத்திரமாக உள்ளே வைத்துக்கொள்ள. தலையைப் பெண்களிடம் கொடுத்துவிட்டுத் தன் கொம்புகளுக்குப் பேழையில்லாமல் செய்வதற்கல்ல.

லியர் : நான் என் இயற்கையை மறந்துவிடுவேன். அவ்வளவு அன்புடைய தந்தை ! என் குதிரைகள் தயாராக இருக்குமா ?

விதூஷகன் : அந்தக் கழுதைகள் அவைகளைக் கொண்டுவரச் சென்றிருக்கின்றன. சப்தரிஷி மண்டலத்தில் ஏன் ஏழு நக்ஷத்திரங்களுக்குமேல் இல்லை என்பதற்கு ஒரு சிறந்த காரணம் ?

லியர் : ஏனென்றால் அவை எட்டாக இல்லை.

விதூஷகன் : ஆம், சந்தேகமில்லாமல் நீர் சிறந்த கோமாளியாகத்தக்கவர்.

லியர் : மறுபடியும் அதைப் பலாத்காரமாக கைப்பற்றுவதா ? கொடிய பயங்கரமான நன்றிகெட்ட செய்கை !

விதூஷகன் : தாங்கள் எனது விதூஷகனாக இருந்தால் காலத்திற்கு முன்னதாகக் கிழவனானதற்கு அடிப்பேன்.

லியர் : அதெப்படி ?

விதூஷகன் : தாங்கள் அறிவு படைக்குமுன் முதுமையை அடையக்கூடாது.

லியர் : ஓ ! எனக்குப் பித்துப் பிடிக்கவேண்டாம். கருணையுள்ள தெய்வமே, பித்துப் பிடிக்கவேண்டாம். என்னை நிதானமாக இருக்க அருளும். நான் பயித்தியக்காரனாகக்கூடாது. என்ன, குதிரைகள் தயாரா ?

கனவான் : தயாராகிவிட்டன.

லியர் : பையா, வா.

விதூஷகன் : யார் இப்பொழுது கன்னியாயிருந்து நான் போவதைப் பார்த்துச் சிரிக்கிறாளோ, அவள் விஷயங்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிவடைந்தாலல்லது நெடுங்காலம் கன்னிகையாக இருக்கமுடியாது. (செல்கிறார்கள்)

அங்கம் 2—காக்ஷி 1

(எட்மண்டும், கூரானும் வெவ்வேறு திசைகளிலிருந்து வருகிறார்கள்)

எட்மண்ட் : கூரான், க்ஷேமமுண்டாகட்டும்.

கூரான் : உங்களுக்குமப்படியே. நான் உங்கள் தகப்பனருடன் பேசிவந்தேன். கார்ன்வால் கோமகனும் அவருடைய மனைவி ரீகனும் இன்று இரவு இங்குவந்து அவருடன் தங்குவார்களென்று தெரிவித்து விட்டேன்.

எட்மண்ட் : ஏன் அப்படி ?

கூரான் : எனக்குத் தெரியாது. சமாச்சாரம் கேள்விப்பட வில்லையா ? ரகசியமான வதந்திகள்—ஏனெனில் அவை இன்னும் குசுகுசுவென்று காதைக் கடிக்கும் அளவில்தானிருக்கின்றன.

எட்மண்ட் : எனக்குத் தெரியாது. தயவுசெய்து அவை என்ன வென்று கூறுங்கள்.

கூரான் : ஆல்பனிக்கும் கார்ன்வாலுக்கும் போர் தொடங்கக்கூடு மென்பதைப்பற்றிக் கேள்விப்படவில்லையா ?

எட்மண்ட் : ஒரு வார்த்தைகூட இல்லை.

கூரான் : உரியகாலத்தில் கேட்பீர். தங்களுக்கு நன்மை யுண்டாகுக. (போகிறான்).

எட்மண்ட் : ட்யூக் இன்று இங்கே வருகிறார் ! நல்லது. சிறந்த தானது. இது நமது காரியத்திற்குள் தக்கமுறையில் சேர்ந்து கொண்டது. என் தந்தை என் அண்ணனைப் பிடிக்க ஆட்களை ஏவி யிருக்கிறார். நான் மிகவும் சாமர்த்தியமான முறையில் ஒரு காரியம் செய்தாகவேண்டும். நல்லதிர்ஷ்டமும் காலவிளம்பரமின்மையும் வேலை செய்யட்டும். (எட்கார் வருகிறான்). அண்ணா ! ஒரு வார்த்தை. கீழே இறங்கிவா, அண்ணா, நான் சொல்கிறேன். தந்தை கவனித்துக் கொண்டிருக்கிறார். ஐயா, இந்த இடத்தைவிட்டு ஓடிவிடு. நீ எங்கே ஒளிந்துகொண்டிருக்கிறாய் என்பதைப்பற்றித் தகவல் கொடுக்கப்பட்டு விட்டது. இப்பொழுது உனக்கு இரவின் உதவியிருக்கிறது. நீ கார்ன்வால் கோமகனுக்கு விரோதமாகப் பேசியதுண்டா ? அவர், அவசரம் அவசரமாக இன்றிரவு இங்கே வருகிறார். ஆல்பனி பிரபு விடம் அவர்களைப்பற்றி யாதொன்றும் கூறவில்லையா ? யோசித்துப் பார்.

எட்கார்: நான் நிச்சயமாகச் சொல்கிறேன். ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை.

எட்மண்ட்: தந்தை வருகிறார். என்னை மன்னி. நான் உன்னுடன் வாள் யுத்தம் புரிவதுபோல் நடிக்கவேண்டும். வாளையுருவு. உன்னைக் காத்துக்கொள்வதுபோல் நடி. நன்றாக நடி. "பணிந்துவிடு, என் தந்தை முன்வா. விளக்குக் கொண்டுவாருங்கள் இங்கே." அண்ணா, ஓடிவிடு. தீவட்டிகள், தீவட்டிகள், நலமுண்டாகுக. (எட்கார் போகிறான்.) கொஞ்சம் ரத்தக்காயம் ஏற்பட்டால் ஏதோ நான் பிரமாதமாகச் சண்டையிட்டதாக அபிப்ராயம் ஏற்படும். குடிகாரர்கள் விளையாட்டாக இதைவிட அதிகம் அடித்துக்கொள்வதைப் பார்த்திருக்கிறேன். அப்பா, அப்பா. நில், நில். யாரும் உதவி இல்லையா?

(க்ளஸ்டரும், சேவகர்களும் தீவட்டியுடன் வருகின்றனர்.)

க்ளஸ்டர்: எட்மண்ட், அந்த துஷ்டன் எங்கே?

எட்மண்ட்: இங்கே இருட்டில் தன் கூரிய வாளை உருவிக் கொண்டும், மந்திரங்களை முணுமுணுத்துக்கொண்டும், மதியைத் தன் அதிர்ஷ்ட தேவதையாகுமாறு வேண்டிக்கொண்டும் நின்றான்.

க்ளஸ்டர்: அவன் எங்கே?

எட்மண்ட்: பாருங்கள் ஐயா, எனக்கு ரத்தக் காயம் ஏற்பட்டிருக்கிறது.

க்ளஸ்டர்: அந்த அயோக்கியன் எங்கே, எட்மண்ட்?

எட்மண்ட்: இப்படி ஓடிவிட்டான், ஐயா. எப்பொழுது அவன் எந்தவிதத்திலும்—

க்ளஸ்டர்: அவனைத் துரத்திப் பிடியுங்கள். பின்பற்றுங்கள் எந்தவிதத்திலும் என்ன?

எட்மண்ட்: தங்களை கொலைசெய்வதற்கு என்னை உடன்படச் செய்ய. ஆனால் நான் பித்ருஹத்தி செய்பவர்களுக்காகவே வஞ்சம் தீர்க்கும் தெய்வங்கள் எல்லா இடிகளையும் தயாராக வைத்திருப்பதாகச் சொல்லிவிட்டேன். குழந்தை தகப்பனுடன் எவ்வளவு அவிழ்க்கமுடியாததும் பல்வகைப்பட்டதுமான தளையால் பந்தகப்பட்டிருக்கிறதென்பதை எடுத்துச்சொன்னேன். அவனுடைய இயற்கைக்கு மாறான கொடிய எண்ணத்திற்கு நான் எவ்வளவுதூரம் விரோதமாக இருக்கிறேன் என்பதைக் கண்டு, திடீரெனக் கொடிய எண்ணத்துடன் உருவிய வாளுடன் கவசமணியாத என்மேல் பாய்ந்து என் கரத்தைத்

தலையிட்டான். ஆனால் நான் நியாயமான சண்டையில் மிகவும் தைரியமாகவும் துணிச்சலுடனும் நின்று யுத்தத்திற்கு ஆயத்தமானதைக் கண்டோ, அல்லது நான் போட்ட சத்தத்தால் பயந்தோ, திடீரென ஓட்டம் பிடித்துவிட்டான்.

கிளஸ்டர் : அவன் வெகுதூரம் பறந்து செல்லட்டும். இந்நாட்டில் அவன்பிடிபடாமலும் தண்டனைக்குள்ளாகாமலும் இருக்கமுடியாது. என்னுடைய எஜமானர், என்னுடைய விதானமும் போஷகருமான ட்யூக் இன்றிரவு வருகிறார். அந்த கொலைக்காரக் கோழையை எவன் கண்டுபிடிக்கிறானோ, எவன் அவனைத் தண்டனைக்குள்ளாக்குகிறானோஅவனுக்கு நமது நன்றி உரித்தாகுமென்றும், எவன் அவனை ஒளிக்கின்றானோ அவனுக்கு மரணத் தண்டனை என்றும் அவருடைய கட்டளையின்பேரில் பறைசாற்றுவேன்.

எட்மண்ட் : நான் அவன் எண்ணத்தை விடுக்குமாறு அவனைத் திருப்ப முயன்றதில் அவன் தீவிரமாக அக்காரியத்தில் முனைந்திருப்பதைக் கண்டேன். அப்பொழுது கண்டிப்பாக நான் அவனைக் காட்டிக் கொடுத்துவிடுவதாகப் பயமுறுத்தினேன். அவன் பதில் சொன்னதாவது " ஓ பிச்சைக்கார வேசிமகனே, நான் உனக்கு எதிராக நின்றால், உன்பேரிலிருக்கக்கூடிய நம்பிக்கை, உன் நன்னடக்கை, அந்தஸ்து முதலியவை உன் வார்த்தைகளை யாரையாவது நம்பச் செய்யுமென்று நினைக்கிறாயா? இல்லை. நான் மறுத்தால்—நான் இதை மறுப்பேன். நான் எழுதிய கடிதத்தையே நீ காட்டினாலும், நான் அவை யாவற்றையும் உன்னுடைய சூழ்ச்சி, அவதந்திரம், உன் முயற்சி என்று உன் மேலேயே திருப்புவேன். என்னுடைய மரணத்தால் உனக்கு ஏற்படக் கூடிய ஏராளமான லாபம் உன்னை அவ்வாறு என்னைக் குற்றம் சாட்டுவதற்குப் போதுமான தூபங்கள் என்று உலகத்தார் எண்ணாவிடில் நீ உலகத்தையே பெருத்த முட்டாளாக்கிவிடுவாய்."

(உள்ளே வாத்ய கோஷம்)

கிளஸ்டர் : ஓ! அபூர்வ தீவிரமான அயோக்யன். அவனுடைய கடிதத்தையே மறுப்பதாகக் கூறினானா? கவனி. ட்யூக்கின் சின்னங்கள் அவர் ஏன் வருகிறாரென்று தெரியவில்லை. நான் எல்லாத் துறை முகங்களையும் மூடிவிடுகிறேன். அந்தப் போக்கிரி தப்பிவிடக்கூடாது. ட்யூக் அந்த உத்தரவு கொடுத்தாகவேண்டும். அவனுடைய உருவப் படத்தை எங்கும் அனுப்பி தேசத்திலுள்ளார் அனைவரும் அவனைக் கவனித்துக்கொள்ளச் செய்வேன். அன்பும் விசுவாசமுமுள்ள பையனே! நீ என் பூஸ்திதியை எல்லாம் அடைவதற்குவேண்டிய ஏற்பாடுகளைச் செய்வேன்.

(கார்ன்வால், ரீகன், ஏவலாட்கள் வருகின்றனர்)

கார்ன்வால் : என் உத்தம நண்பனே! நான் இங்கு வந்தபிறகு நான் சற்றுமுன்தான் வந்தேன். மிகவும் ஆச்சரியமான சமாச்சாரம் கேள்விப்பட்டேன்.

ரீகன் : அது உண்மையானால் அந்தக் குற்றவாளியைப் பின் தொடரும் எவ்வித தண்டனையும் மிகவும் குறைவானதாகவே இருக்கும்; பிரபு தாங்கள் எவ்வாறிருக்கிறீர்கள்?

கிளாஸ்டர் : எனது வயதான மனம் உடைந்துவிட்டது. உடைந்து விட்டது.

ரீகன் : என்ன, என் தந்தையின் தேவபுத்திரன் தங்களுடைய உயிரை விரும்பினானா? எவனுக்கு என் தந்தை நாமகரணம் செய்தாரோ, அந்த உங்கள் எட்கார்?

கிளாஸ்டர் : பெருமாட்டியே! அவமானமே அதை மறைக்க விரும்பும்.

ரீகன் : என் தந்தையுடனிருக்கும் கட்டுக்கடங்காத வீரர்களின் தோழனல்லவா அவன்?

கிளாஸ்டர் : சீமாட்டியே, நான் ஒன்றுமறியேன். இது மிகவும் கெட்டது. மிகவும் கெட்டது.

எட்மண்ட் : ஆம் அம்மா, அவன் அக்கூட்டத்தைச் சேர்ந்தவன்.

ரீகன் : அப்படியானால் அதில் ஆச்சரியமொன்றுமில்லை. அவனுக்கு விருப்பமில்லாவிடினும், அவருடைய ஆஸ்தியை அழித்துச் சூறையாடுவதற்காக அவர்கள்தான் அவனைக் கிழவனைக் கொல்லத் தூண்டியிருக்கிறார்கள். இன்றுமாலை என் அக்காளிடமிருந்து அவர்களைப்பற்றிப் பூரணமாக எச்சரித்துத் தகவல் கிடைத்திருக்கிறது. அத்தகைய எச்சரிப்புப்பெற்ற நான் அவர்கள் என் வீட்டில் தங்குவதற்கு வந்தால் அங்கிருக்கமாட்டேன்.

கார்ன்வால் : ரீகன், பிரமாணமாகச் சொல்கிறேன். நானுமிருக்கமாட்டேன். எட்மண்ட்! நீ உன் தகப்பனாரிடம் புத்திரன் செய்யவேண்டிய காரியத்தைச் செய்தாய் என்று கேள்விப்பட்டேன்.

எட்மண்ட் : அது என் கடமை, ஐயனே.

கிளாஸ்டர் : இவன் அவனுடைய முயற்சியைப் பயனற்றதாக்கினான். அவனைப் பிடிக்க முயன்றதில், இதோ பாருங்கள், இந்தக் காயமடைந்தான்.

கார்ன்வால் : அவன் பின்பற்றப்பட்டானா?

கிளஸ்டர் : ஆம், துரையே.

கார்ன்வால் : அவன் பிடிபட்டால் இன்னும் அவன் தீங்கு விளைப்பானென்று. யாரும் பயப்படவேண்டியதிராது. என்னுடைய பலத்தைக்கொண்டு உமதிஷ்டப்படி உமது காரியத்தைப் பூர்த்திசெய்து கொள்ளும். எட்மண்ட், உன்னுடைய சீலமும் பித்ரு பக்தியும் நமக்கு விசேஷமாகத் தோன்றுவதால் நீ நம்முடையவனாகிவிட்டாய். அத்தகைய ஆழ்ந்த நம்பிக்கையுடையவர்கள் நமக்குத் தேவையாயிருக்கும். எனவே நாம் முதலில் உன்னைக் கைப்பற்றிக்கொள்வோம்.

எட்மண்ட் : வேறு என்ன நேர்ந்தாலும் தங்களுக்கு நான் உண்மையுடன் உழைப்பேன்.

கிளஸ்டர் : அவன்பொருட்டுச் சமுகத்திற்கு வந்தனமளிக்கிறேன்.

கார்ன்வால் : நாங்கள் ஏன் காலந்தவறி இங்கு வந்தோமென்பதை அறியீரா ?

ரீகன் : காலந்தவறி, காரிருள் சூழ்ந்த இரவில் வழிநடந்து வருவதென்றால், மேலான கிளஸ்டர், அது தங்களுடைய ஆலோசனையைப் பெறவேண்டிய முக்கியமான சந்தர்ப்பமாயிருக்கவேண்டும். என்னுடைய தந்தையாரும் எழுதியிருக்கிறார். அதேபோல் தமக்கையும் தங்களுக்குள்ள வருத்தங்களைப்பற்றி எழுதியிருக்கிறார்கள். அவைகளுக்கு எங்கள் இருப்பிடத்திலிருந்தே பதிலனுப்ப நினைத்தோம். அந்த தூதர்கள் பதிலுக்குக் காத்திருக்கின்றனர். எங்களின் அனுபவசாலியான நண்பரே, உங்களுடைய மனதைச் சமாதானப்படுத்திக்கொண்டு உடனடியாகக் கவனிக்கவேண்டிய எங்களுடைய விஷயங்களுக்கு உங்களுடைய உபயோகமிகுந்த ஆலோசனையைக் கூறுங்கள்.

கிளஸ்டர் : நான் உங்களுக்கு ஊழியம் செய்யக் காத்திருக்கிறேன், சீமாட்டி. பெருமை பொருந்திய உங்களுக்கு நல்வரவு.

(செல்லுகிறார்கள். எக்காளம் ஊதுகிறது).

அங்கம் 2—காக்ஷி 2

கென்டும், ஆஸ்வால்ட் (காரியஸ்தன்)-டும் தனித்தனியே வருகின்றனர்.

காரியஸ்தன் : அன்பனே! நல்லகாலை, இந்த வீட்டைச் சேர்ந்தவரா ?

கென்ட் : ஆம்.

காரியஸ்தன்: நம் குதிரைகளை எங்கே கட்டலாம்?

கென்ட்: சேற்றில்.

காரியஸ்தன்: தயவுசெய்து தாங்கள் என்னை நேசித்தால் கூறுங்கள்.

கென்ட்: நான் உன்னை நேசிக்கவில்லை.

காரியஸ்தன்: அப்படியானால் நான் உன்னை லக்ஷியம் செய்ய வில்லை.

கென்ட்: உன்னை லிப்ஸ்பரி கொண்டித்தொழுவில் சந்தித்தேனுகில் அப்பொழுது என்னை நீ லக்ஷியம் செய்யும்படி செய்வேன்.

காரியஸ்தன்: ஏன் என்னை இவ்வாறு நடத்துகிருய்? நான் உன்னை அறியேன்.

கென்ட்: அடே, உன்னை எனக்குத் தெரியும்.

காரியஸ்தன்: என்னை யார் என்று தெரிந்துகொண்டாய்?

கென்ட்: ஒரு அற்பன், அயோக்யன், எச்சில் இலை பொறுக்கித் தின்பவன், ஓர் கீழ்த்தரமான, கர்வம்படைத்த, மூட, பிச்சைக்கார, மூன்று ஆடைகளும் நூறு பவுனுக்குமேல் ஆஸ்தியில்லாத மாசடைந்த கேவலமான ஆடையணிந்த அயோக்யன். கோழையான, நியாஸ்தலத்திற்கே ஓடுகிற, வேசிமகனுன, ஒரு பெட்டிமட்டும் உடைய, சதா கண்ணுடியிலழகு பார்க்கும் டம்பாச்சாரி. தான்தான் என்று முந்திக் கொள்ளும் நாருக்கான போக்கிரி. துன்மார்க்கக் காதலரின் தூதன். அயோக்யன். பிச்சைக்காரன். கோழை என்பவை ஒன்றுகூடிய அலைந்து திரியும் நாயின் மகன். நான் உனக்களித்த பட்டங்களில் ஒன்றையாகிலும் நீ மறுத்தாயானுல் உன்னை அந்நாய் ஊளையிடுவது போல் ஊளையிடும்படி உதைப்பேன்.

காரியஸ்தன்: என்ன, இவ்வாறு உன்னை அறியாதவனும் அறிமுகமில்லாதவனுமான ஒருவன்மேல் வசைமாரி பொழிய நீ எத்தகைய பைசாசமப்பா?

கென்ட்: என்னைத் தெரியாதென்று மறுக்க நீ எத்தகைய நாணமற்ற போக்கிரியாக இருக்கவேண்டும். உன் காலைப்பிடித்து இழுத்து அரசன்முன் உதைத்து இரண்டு நாட்களிருக்குமா? அயோக்யனே! உன் வாளை உருவு. இப்பொழுது இரவானுலும் சந்திரன் பிரகாசிக்கிறது. கீழ்த்தரமான க்ஷவரக் கூடத்தில் பொழுது போக்கும் வேசிமகனே! உன் அலங்காரத்தையும் அழகையும் குழம்பாக்கிவிடுகிறேன்.

காரியஸ்தன் : போய்விடு. உன்னிடம் எனக்கு யாதொரு சம்பந்தமுமில்லை.

கென்ட் : ராஸ்கல் ! உன் வாளை உருவு. நீ அரசனுக்கு விரோதமாகக் கடிதங்கள் கொண்டுவந்திருக்கிறாய். அந்த அகங்காரம் பிடித்தவளின் சார்பாக அவளுடைய தகப்பனின் அரசிற்கு விரோதமாக, அவள் கக்ஷியைச் சார்ந்திருக்கிறாய். அயோக்யப்பயலே, எடு வாளை, இல்லாவிடில் நான் உன் சரீரத்தைச் சந்துசந்தாக வெட்டுவேன்.

காரியஸ்தன் : உதவிக்கு வாருங்கள். கொலை, உதவி, உதவி.

கென்ட் : அடிமையே, சண்டைக்கு வா. அயோக்யனே, நில், வெளிப்புறம் நன்றாக இருக்கும் அடிமையே சண்டைக்கு வா.

காரியஸ்தன் : உதவி ! ஹோ ! கொலை, கொலை.

(எட்மண்ட், கார்ன்வால், க்ளஸ்டர், ரீகன், வேலையாட்கள் வருகின்றனர்)

எட்மண்ட் : என்ன சமாசாரம்? விலகி நில்லுங்கள்.

கென்ட் : உனக்கு விருப்பமானால், நல்ல மனிதன் பிள்ளையே, உன்னுடன் சண்டையிடத் தயார். வா, உன் சதையைக் கழட்டுகிறேன். இளைஞனே வா.

க்ளஸ்டர் : ஆயுதங்கள்? இது என்ன சமாசாரம்?

கார்ன்வால் : உங்கள் பிராணன் மேலாணை. அமைதியாய் இருங்கள். மறுபடியும் அடிப்பவன் இறப்பான். என்ன விஷயம்?

ரீகன் : நம் அக்காளுடையவும் அரசருடையவும் தூதர்கள்.

கார்ன்வால் : உங்களுடைய தகராறு என்ன? சொல்லுங்கள்.

காரியஸ்தன் : பிரபுவே ! எனக்குப் பேச மூச்சில்லை.

கென்ட் : ஆச்சரியமொன்றுமில்லை. உன்னுடைய ஆண்மையை அவ்வளவுதூரம் காட்டியிருக்கிறாய். ஆ ! கோழையான போக்கிரி ! இயற்கை உன்னை அனுதரவு செய்கிறது. உன்னை ஒரு தையற்காரன் ஆளாக்கினான்.

கார்ன்வால் : நீ ஓர் விநோத மனிதன். ஒரு தையற்காரன் ஒரு மனிதனை ஆக்குவதா?

கென்ட் : அவர்கள் அந்த வேலையில் இரண்டு மணி நேரம் ஈடுபட்டாலும், ஐயா, ஒரு தையற்காரன், ஒரு கல் தச்சன், ஒரு ஓவியன் கூட அவனை இவ்வளவு கேவலமாக்கியிருக்கமுடியாது.

கார்ன்வால் : சொல், உங்களுடைய சண்டை எப்படி ஏற்பட்டது?

காரியஸ்தன் : அவனுடைய நரைத்த தாடிக்கிரங்கி நான் அவன் உயிரைக் கொல்லாது விடுத்த இந்தப் பழம் போக்கிரி.

கென்ட் : அடே, வேசிமகனே, தேவையில்லாத எழுத்தே! பிரபு! தாங்கள் அனுமதியளித்தால் இந்த சுத்தப்படுத்தப்படாத அயோக்கியனைத் துகைத்துச் சாந்தாக்கி ஒரு கக்கூஸ் சுவற்றிற்குப் பூச்சடிப்பேன். என் வெள்ளைத் தாடிக்காக விடுத்தாயா! அடே, வாலாட்டி நாயே!

கார்ன்வால் : அடே, சத்தம் போடாதே. அடே காட்டுமிராண்டிப்பயலே, உனக்கு மரியாதை மட்டுத் தெரியாதா?

கென்ட் : தெரியும். ஆனால் கோபத்திற்குச் சில உரிமைகள் உண்டு.

கார்ன்வால் : நீ ஏன் கோபமாயிருக்கிறாய்?

கென்ட் : உண்மையைக் கடைப்பிடிக்காத இந்த அயோக்கிய நாய் வாளைத் தரிப்பதா? இத்தகைய நகைக்கும் திருடர்கள், எலிகளைப் போல் கடமையுடையவும் அன்பினுடையவும் நுண்ணிய அவிழ்க்க முடியாத நூலைக்கடித்து நாசமாக்குபவர்கள், அவர்களுடைய எஜமானர்களின் கோபத்தை எவ்விதத்திலும் மாற்றி ஏமாற்றித் தங்களுக்குப் பயன்படுத்திக்கொள்பவர், எரிகிற தழலில் எண்ணெயை ஊற்றியும், அணைந்த அடுப்பில் தண்ணீரை ஊற்றியும் அரசமீன் (king-fisher) பறவைபோல் தங்களுடைய எஜமானர்களின் மனத்தெழும் ஒவ்வொரு கொந்தளிப்புக்கும் ஏற்றவாறு தலை அசைத்தும் மூக்கை நீட்டியும், தாளம் போடுபவர்கள், நாயைப்போல் பின்பற்றிச் செல்வதைத்தவிர வேறொன்றும் அறியாதவர்கள். உன் வலிப்பு நோய் முகத்திற்கு ஒரு கொள்ளை நோய்! நான் ஓர் மூடன் என்று நான் பேசும் பொழுது நகைக்கிறாய்? அடே, முட்டாள் வாத்தே! உன்னை சாலிஸ்பரி வெளியில் சந்தித்தால் காமிலாட்டிற்குக் கதறிக்கொண்டு செல்லும்படி செய்வேன்.

கார்ன்வால் : கிழப்பயலே, உனக்குப் பயித்தியமா என்ன?

கிளாஸ்டர் : நீங்கள் ஏன் அடித்துக்கொண்டீர்கள்? அதைச் சொல்.

கென்ட் : என்னையும் அந்த அயோக்கியனையும்விட ஒன்றிற்கொன்று முரண்பாடான, நேர் விரோதமான ஆத்மாக்கள் கிடையாது.

கார்ன்வால்: அவனை, ஏன் அயோக்கியனென்று அழைக்கிறாய்? அவன் குற்றமென்ன?

கென்ட்: எனக்கு அவன் முகமே பிடிக்கவில்லை.

கார்ன்வால்: என்னுடையவும், அவருடையவும், அவளுடையவும் முகங்கள்கூட ஒருக்கால் பிடிக்காமலிருக்கலாம்.

கென்ட்: ஐயா, நான் எப்பொழுதும் ஒளிவு மறைவு இல்லாமல் பேசுவது வழக்கம். இப்பொழுது நான் என் முன் காணும் எந்த முகத்தையும்விடச் சிறந்த முகங்களை என் ஆயுளுக்குள் கண்டிருக்கிறேன்.

கார்ன்வால்: சிலர் தங்களை யாராவது அப்பட்டையாகப் பேசுபவன் என்று சொன்னதைக்கொண்டு எப்பொழுதும் தங்கள் இயற்கைக்கு மாறாக ஒளிமறைவில்லாமல் பேசுவதாக வேஷம் போட்டுப் போக்கிரித்தனமாகவும் முரட்டுத்தனமாகவும் நடந்துகொள்வார்கள். அவர்களைச் சார்ந்தவன் இவன். அவன் எப்பொழும் உண்மையே பேசுகிறவனாதலால் அவன் முகஸ்துதி செய்யமாட்டான் என்று சொல்லிக்கொள்வான். அதனால் ஒன்று அவன் சொல்லுவதை நம்பவேண்டும், இல்லாவிடில் அவன் உண்மையாகப் பேசுவதை நம்பாவிட்டால் அவன் பேரில் குற்றமில்லை. இப்படிப்பட்ட போக்கிரிகளை நான் அறிவேன். மிகவும் தந்திரமாகத் தாழ்மையுள்ளவர்களாக நடித்து தங்கள் காரியங்களை மிகவும் முறைப்படி செய்பவர்கள்போல் காட்டியும் பல்லைக் காட்டியும் முடித்துக்கொள்ளும் ராஜ சபையினரைக் காட்டிலும் இருபது மடங்கு அதிகமாக இந்த அயோக்கியர்கள் தங்களுடைய வெளி வேஷத்தைக் கொண்டு தந்திரமாகவும் மோசமாகவும் நடந்து கொள்ளுவார்கள்.

கென்ட்: ஐயா, பூர்ண நம்பிக்கையுடனும், சத்யத்துடனும், தங்களுடைய அனுமதியின்மேல், பீபஸ்ஸின் முகத்திலிருந்து ஜ்வலிக்கும் நெருப்பு மாலைபோல் தோன்றும் தங்களுடைய மேலான பார்வையின் கீழ்—

கார்ன்வால்: நீ சொல்வதன் பொருள் என்ன?

கென்ட்: தாங்கள் என்னுடைய வழக்கமான பாணியை மிகவும் கண்டித்ததால் என் பேச்சை மாற்றிக்கொண்டேன். ஐயா, நான் முகஸ்துதி செய்பவனல்ல என்பது எனக்குத் தெரியும். சாதாரணமாகப் பேசி உங்களை ஏமாற்றியவன் சாதாரணப் போக்கிரி. நீங்களே என்னை வேண்டிக்கொண்டாலும், உங்களுடைய கோபத்திற்கு ஆளானாலும் நான் அவ்வாறு நடந்துகொள்ளமாட்டேன்.

கார்ன்வால்: நீ அவனுக்குக் கோபம் வரும்படி என்னசெய்தாய்?

காரியஸ்தன்: நான் ஒன்றும் தவறிழைக்கவில்லை. சமீபத்தில் அவனுடைய எஜமானனை அரசர் தப்பாக என்னை அடித்தார். அவன் பக்கத்தில் இருந்து அரசனுடைய கோபத்தைப் பயன்படுத்திப் பின்னாலிருந்து தள்ளினான். அரசனுடைய கோபம் வருமென்று பயந்ததாலும், நான் கீழே விழுந்ததாலும், பெரிய சுத்த வீரனைப்போல் நடித்து என்னை அவமானப்படுத்தி, அவதூறாகப் பேசி, அரசனிடமிருந்து வெகுமதிபெற்றான். அந்தப் பயங்கரமான வெற்றியால் பெருமித மடைந்து இங்கும் என்மேல் வாளையுருவினான்.

கென்ட்: அஜாக்ஸ் போன்ற மூடர்களை ஏமாற்றியதுபோல் ஏமாற்றுவார்களாகையால் இத்தகைய போக்கிரிகளும் கோழைகளும் இங்கு வேண்டாம்.

கார்ன்வால்: குட்டையைக் கொண்டுவாருங்கள். ஓ! பிடிவாதக் காரக் கிழட்டுப் போக்கிரி! நாகரிகமாகப் பேசும் உளறுவாயா! உனக்குப் பாடம் கற்பிப்போம்.

கென்ட்: ஐயா, நான் இனிக் கற்பதற்கு முடியாத கிழவன். நான் அரசனது வேலையாள். அவருடைய காரியமாகத் தங்களிடம் அனுப்பப்பட்டேன். எனவே எனக்காகக் குட்டையை வரவழைக்க வேண்டாம். என்னைக் குட்டையிலிடுவதால் எனது எஜமானன அரசனுக்குத் தாங்கள் அவமரியாதை காட்டுவதாகவும் மிகவும் துணிகரமான துரோகம் செய்வதாகவுமாகும்.

கார்ன்வால்: எனக்கு மானமும் வாழ்வுமிருப்பதானல் குட்டையைக் கொண்டுவாருங்கள். அவன் நண்பகல்வரை குட்டையிலடைக்கப்படவேண்டும்.

ரீகன்: நண்பகல் வரையிலுமா? இரவு வரையிலும் துரையே; ஏன் இரவு முழுவதுமாகட்டும்.

கென்ட்: சீமாட்டியே! நான் தங்களுடைய தந்தையின் நாயாக இருந்தாலும் நீங்கள் என்னை இம்மாதிரி நடத்தமாட்டீர்கள்.

ரீகன்: நீ அவருடைய வேலையாளாக இருப்பதால் நான் செய்வேன்.

(குட்டையைக் கொண்டுவருகிறார்கள்)

கார்ன்வால்: நம் சகோதரி எழுதியிருக்கிற அதேமாதிரியான ஆசாமி இவன். வாருங்கள், குட்டையைக் கொண்டுவாருங்கள்.

கிளஸ்டர்: நான் சமூகத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அவ்விதம் செய்யாதீர்கள். (அவனுடைய குற்றம் பெரிது). அவனுடைய

எஜமானரான அரசன் அவனைக் கண்டிப்பார். நீங்கள் பிரஸ்தாபிக்கிர தாழ்வான தண்டனை சாதாரண முடிச்சுமாரிகளுக்கும் சுவரேறிக் குதிப்பவர்களுமான மிகக் கீழான அற்பக் குற்றவாளிகளுக்கும் அளிக்கப் படுவதாகும். அரசர் தன் தூதனை இம்மாதிரித் தளைப்படுத்தி வைக்கப் பட்டுக் கேவலமாக மதிக்கப்பட்டதை மிகவும் குற்றமாக எடுத்துக் கொள்வார்.

கார்ன்வால்: நான் அதற்குப் பதில் சொல்லிக்கொள்வேன்.

ரீகன்: என் அக்காள் தனது பரிவாரத்தைச் சேர்ந்தவன். தன் காரியத்திலிறங்கி இருக்கும்பொழுது அவன் இம்மாதிரி வைதும் இம்சிக்கப்பட்டும் அடிக்கப்பட்டானென்று கேட்டால், அதை இன்றும் வருத்தத்துடன் ஏற்றுக்கொள்வாள். குட்டைக்குள் அவன் கால்களைப் போடுங்கள். (கென்ட் குட்டையில் தளைப்படுகிறார்). என் பிரபுவே, வாருங்கள் போகலாம்.

(க்ளஸ்டரும் கென்டும் தவிர மற்றவர்கள் போகிறார்கள்).

க்ளஸ்டர்: அன்பனே, நான் உனக்காக வருந்துகிறேன். இது ட்யூக்கின் சித்தம். உலகம் அறியும். அவரைச் சீண்டவும் கூடாது. தடுக்கவும் கூடாது. நான் உனக்காக அவரை மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கென்ட்: வேண்டாமய்யா. நான் கஷ்டப்பட்டுக் காவல் புரிந் திருக்கிறேன். பிரயாணமும் செய்திருக்கிறேன். நான் சில நேரத்தைத் தூங்கிக்கழிப்பேன். பாக்கியைச் சீட்டியடித்துக் கழிப்பேன். ஒரு நல்ல மனிதனின் நல் அதிர்ஷ்டம் அவன் காலிலிருந்து கிளம்பலாம். தங்களுக்கு நற்காலை.

க்ளஸ்டர்: இதில் ட்யூக்தான் பிழை செய்தவர். அரசர் இதை மிகவும் குற்றமாகக் கொள்வார். (போகிறார்).

கென்ட்: அரசே! தாங்கள் பழமொழியைப் பதுக்கிக் கடவுளின் கருணையைவிட்டு சூரிய வெப்பத்தில் குளிர்காய வருகிறீர். ஓ! சூரியனே, இந்த பாதாள உலகத்திற்கு வா. உன்னுடைய கிரணங் களின் உதவியைக் கொண்டு இக்கடிதத்தைப் படிக்கலாம். துன்பத் தைத்தவிர மற்ற யாதும் தெய்வீக சம்பவங்களைக் காணமுடியாது. அதிர்ஷ்டவசமாக என்னுடைய மாறுவேடமணிந்து திரியும் இவ்வாழ்க் கையைப்பற்றித் தெரிந்துகொண்ட கார்டிலியாவிடமிருந்துதான் வந் திருக்கும் என அறிவேன். இந்தத் துன்பகரமான, இயற்கைக்கு மாறான, நிலையிலிருந்து கஷ்டங்களை விலக்கி இன்பத்தை அளிக்க அவளால் முடியும். அதிக உழைப்பினால் தளர்வுற்ற கண்களே!

தூக்கத்தினுல் கண்களை மூடி இந்த வெட்கமற்ற வீட்டைப் பாராம லிரு. அதிர்ஷ்ட தேவதையே நல்விரவாகுக. மறுபடியும் என்பேரில் மந்தகாசம் புரி. உன் சக்கரத்தை என்பக்கம் திருப்பு.

(எட்கார் வருகிறன்)

எட்கார் : என்னைப்பற்றிய விளம்பரத்தைக் கேட்டேன். ஒரு மரத்தின் பொந்தின் உதவியால் கண்டுபிடிக்கப்படாமல் தப்பினேன். ஒரு துறைமுகமும் காப்பில்லாமல் இல்லை. ஒரு இடமாவது மிகவும் கடுமையான காவலுக்குட்படாமலும் எனக்காகத் தேடப்படாமலு மில்லை. எவ்வாருவது நான் தப்பி என்னைக் காப்பாற்றிக்கொள்வேன். மிகவும் கொடிய தரித்திரம் எப்படி மனிதனைக் கேவலமாக மிருகத் திற்கு ஒப்பாகச் செய்யுமோ அத்தகைய கேவலமான பிச்சைக்கார வேஷத்தைத் தாங்குவேன். என் முகத்தில் கரியை அறைத்துப் பூசிக் கொள்வேன். அறையில் கம்பளியை அணிந்து என் தலை மயிரை முடிச்சுப்போட்டுக் குட்டையாக்குவேன். தேகத்தில் ஆடையற்றுக் காற்றினுடையவும் வானினுடையவும் கடுமையான சோதனைகளை எதிர்ப்பேன். நாட்டிலே பைத்தியசாலையிலிருந்து கிளம்பிய பிச்சைக் காரர்களின் உதாரணம் ஏராளமாக இருக்கிறது. அவர்கள் உரத்த குரலுடையவர்களாய் தங்களுடைய மறத்துப்போன கைகளில் குண் டூசிகள், மரக்குச்சிகள், ஆணிகள், தழைகள் இவைகளைக் குத்திக் கொண்டும் பயங்கரமான ஸ்வரூபத்துடன் ஏழைக் குடிசைகள், சிறு கிராமங்கள், ஆட்டுக்கிடைகள், யந்திரசாலைகள் முதலியவிடங்களில் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு பயித்தியக்காரத்தனமான சேஷ்டைகளா லும் அல்லது பிரார்த்தனைகளாலும் பலவந்தமாகப் பிச்சை வாங்கு வார்கள். எளியடர்லிகாட், எளியடாம்—அவர்களுக்காவது உலகில் ஸ்தானமுண்டு. எட்கார்—நான் ஒன்றுமேயில்லை. (போகிறன்.)

(லியர், விதூஷகன், பரிவாரம் வருகிறர்கள்)

லியர் : அவர்கள் என் தூதர்களை அனுப்பாமல் அவர்களுடைய வீட்டைவிட்டு அம்மாதிரி செல்வது ஆச்சரியம்.

சீமான் : முதல்நாளிரவு நான் விசாரித்ததில் அவர்கள் இம்மாதிரி புறப்பட்டதற்கு யாதொரு காரணமுமில்லை எனத் தெரிகிறது.

கென்ட் : மேன்மைதங்கிய எஜமானே! உங்களுக்கு வெற்றி யுண்டாகுக.

லியர் : ஹா! இந்த அவமானத்தை உன் பொழுதுபோக்காகக் கொண்டாயா?

கென்ட் : இல்லை. பிரபுவே.

விதூஷகன்: ஹா! ஹா! அவர் கொடிய கால்சராயை அணிந்திருக்கிறார். குதிரைகளைத் தலையிலும், நாய்கள், கரடிகளைக் கழுத்திலும், குரங்குகளை இடுப்பிலும் மனிதர்களைக் காலிலும் கட்டுவார்கள். ஒரு மனிதனுக்குக் காலில் அதிகம் கொழுப்பிருந்தால் அப்பொழுது மரக் கால்சட்டை அணிகிறான்.

லியர்: உன் அந்தஸ்தை மிகவும் தவருக நினைத்து உன்னை இங்கு இந்நிலையில் வைத்தவன் யார்?

கென்ட்: அவனும் அவளும், தங்களுடைய மகனும் மகளும்.

லியர்: இல்லை.

கென்ட்: ஆம்.

லியர்: நான் இல்லை என்று சொல்கிறேன்.

கென்ட்: நான் ஆம் என்று சொல்கிறேன்.

லியர்: இல்லை. இல்லை. அவர்கள் செய்திரார்கள்.

கென்ட்: ஆம். அவர்களே செய்தார்கள்.

லியர்: ஜூபிடர்மேலாணையாக அவர்களில்லை.

கென்ட்: ஜூனேமேலாணையாக அவர்கள்தான்.

லியர்: அதைச்செய்ய அவர்களுக்குத் தைர்யம் கிடையாது. அவர்களால் முடியாது. செய்யமாட்டார்கள். கவுரவமானவன்பேரில் இத்தகைய அத்யாசாரம் செய்வது கொலையைவிடக் கொடியது. எவ்வளவு வேகமாகக் கூறமுடியுமோ அவ்விதம் எப்படி நீ, என்னிடமிருந்து வந்த நீ, இம்மாதிரி நடத்தப்படுவதற்கு தகுதியுற்றவனுகவோ அல்லது அவர்கள் தண்டிக்கவோ எற்பட்டதென்பதை எனக்குத் தெரிவி.

கென்ட்: என் பிரபுவே, அவர்கள் வீட்டில் நான் தங்களுடைய கடிதங்களை அவர்களிடம் சமர்ப்பித்து, அவர்களை மண்டியிட்டுப் பணிந்த இடத்தைவிட்டு எழுமுன் அங்கு கிரிச்சென்று கத்திக்கொண்டு தபால்வண்டி வந்தது. அதிலிருந்து தான் வந்த வேகத்தால் தடுமாறிக் கொண்டும், மூச்சுத் திணறிக்கொண்டும், பெருமூச்சுவிட்டுக்கொண்டும் ஒருவனிறங்கி, தன் எஜமானியான கானரில்லிற்காக வந்தனம் தெரிவித்து, அது என்னிடையே குறுக்கிடுவதாயிருந்தும், கடிதங்களைக் கொடுத்தான். அதை உடனே வாங்கிப் படித்தார்கள். அதன் கருத்தின்படி அவர்களுடைய பணியாட்களைக் கூப்பிட்டும், என்னை அவர்களைப் பின்பற்றிவந்து பதிலறிந்துகொள்ளும்படி சொல்லிவிட்டுக் குதிரை ஏறிச் சென்ருர்கள். என்னை வெறுப்புடன் நோக்கினுர்கள். எவனுடைய வரவேற்பு என்னுடையதைக் கெடுத்ததோ அந்தத்

தூதனை இங்கு சந்தித்தேன். எவன் மகாராஜாவிடம் சின்னுட்களாக மிகவும் மரியாதை இல்லாமல் நடந்துகொண்டானே அவனை இருந்தமையாலும் என்னிடம் அறிவைவிட ஆண்மை அதிகமாக இருந்தாலும் நான் அவன்மேல் வாளையுருவினேன். அவன் நடுங்கிக்கொண்டு பலமான சத்தம்போட்டு வீட்டிலுள்ளாரைக் கூட்டிவிட்டான். தங்களுடைய மகளும் மருமகனும் இந்த அதிசாரத்திற்கு நான் இப்பொழுது அடைந்திருக்கும் அவமானம் தக்கதென நினைத்துச் செய்தார்கள்.

விதூஷகன் : காட்டுப் பக்ஷிகள் பறந்துசெல்வதிலிருந்து மாரிக்காலம் அடுத்துவிட்டதென அறியலாம். கந்தையணிந்த பெற்றோர் மக்களைக் குருடராக்குகின்றனர். பணப்பையுடன்கூடிய பெற்றோர் மக்களின் அன்புக்குரியர். அதிர்ஷ்டம் என்கிற அந்தக் கர்வம்படைத்த வேசி ஏழைகளுக்குத் தன் கதவைத் திறப்பதில்லை. இதற்கெல்லாம் தாங்கள் தங்கள் பெண்களிடமிருந்து ஒரு வருடமானாலும் சொல்லிமுடியாத அவ்வளவு துன்பங்களை அடையப்போகிறீர்.

லியர் : ஓ! எவ்வாறு இந்தத் 'தாய்' மாரடைப்பு, என் இதயத்தை நோக்கிப் பொங்கி வருகிறுள். மேலெழும் துக்கமே, இறங்கு, உன் இடம் கீழேதான் இருக்கிறது. இந்தப் பெண் எங்கே?

கென்ட் : க்ளஸ்டர் பிரபுவுடன் இங்கேதானிருக்கிருள்.

லியர் : என் பின் வரவேண்டாம். இங்கே இருங்கள்.

(போகிறுர்).

கனவான் : நீ சொல்வதைத் தவிர வேறு யாதொரு தவறு மிழைக்கவில்லையே?

கென்ட் : ஒன்றுமில்லை. அரசன் ஏன் இவ்வாறு குறைந்த பரிவாரங்களுடன் வந்திருக்கிறுர்?

விதூஷகன் : அந்தக் கேள்வியைக் கேட்டதற்காகக் குட்டையிலடைபட்டிருந்தால் அது உனக்குத் தக்க தண்டனையாகும்.

கென்ட் : ஏன் விதூஷகனே?

விதூஷகன் : மாரிக்காலத்தில் உழைப்பில்லை என்று கற்பிக்க ஒரு எறும்பிடம் உன்னைப் படிக்க அனுப்பவேண்டும். குருடர்களைத் தவிர, தங்கள் மூக்கை அனுசரித்து நடப்பவர்கள்கூடத் தங்கள் கண்களால் வழிகாட்டப்படுகிருர்கள். கண்ணில்லாதவர்களிலும் துர்நாற்றம் உடையவர்கள் மோப்பத்தால் கண்டுகொள்ள முடியாத ஒருவனைக் கூடக் காணமுடியாது. எனவே ஒரு பெரிய யந்திரத்தின் சக்கரம் ஒரு மலையிலிருந்து உருண்டுவரும்பொழுது அதைவிட்டுவிடவேண்டும்.

இன்றேல் அதைப் பின்பற்றும்பொழுது உன் கழுத்து ஒடிந்துவிடும். மேல் நோக்கி அந்தச் சக்கரம் செல்லும்பொழுது அது உன்னையும் சேர்த்து உயரச் சேர்க்கும்படி செய். இது உலக இயற்கை. ஒரு அறிவாளி உனக்கு இதைவிட மேலான புத்திமதி கொடுக்கும்பொழுது என் யோசனையை என்னிடமே விட்டுவிடு. ஏனென்றால் ஒரு முட்டாள் சொல்லும் யோசனையை மூடர்களைத் தவிர மற்றவர்கள் பின்பற்றக் கூடாதென்பது என் அபிப்பிராயம்.

"எவன் தன்னுடைய லாபத்திற்காகமட்டிலும் கண்ணுங்கருத்துமாய், ஆனால் வெளிக்குமட்டிலும் எஜமானனைப் பின்பற்றுவதாகப் பாவித்து வருகிறானோ, அவன் மழை பெய்யத் தொடங்கியவுடன் உன்னைப் புயலில் விட்டுச் செல்வான். ஆனால் நான் கூடவே இருப்பேன். மூடன் (விதூஷகன்) இருப்பான். புத்திசாலியானவன் ஓடி விடட்டும். கடவுளறிய முட்டாள் ஓடிப்போவதால் அயோக்கியனாகிறான். ஓடிப்போகிற வேலையாள் அயோக்கியனாகக் கருதப்படுவதால் மூடனாகிறான்."

(லியரும் கிளஸ்டரும் வருகிறார்கள்.)

கென்ட் : இதை எங்கே கற்றுக்கொண்டாய் முட்டாளே !

விதூஷகன் : குட்டையில் கற்றுக்கொள்ளவில்லை, முட்டாளே.

லியர் : என்னுடன் பேச மறுத்தார்களா ? அவர்கள் அசௌக்யமாயிருக்கிறார்கள், களைப்பாயிருக்கிறார்கள், இரவு முழுதும் பிரயாணம் செய்தார்கள். எல்லாம் சாக்குப்போக்குகள். துரோகத்தின் பிம்பங்கள். சரியான பதிலைப் பெற்றுவாரும்.

கிளஸ்டர் : அன்பிற்குரிய அரசே ! ட்யூக்கின் உஷ்ணமான (கோபமான) இயற்கை தங்களுக்குத் தெரிந்ததே. அவர் தான் வகுத்த வழியிலிருந்து, கொஞ்சமும் மாறாமல் அதையே பிடிவாதமாகச் செய்வார்.

லியர் : வஞ்சம், கொள்ளைநோய், சாவு, குழப்பம். 'உஷ்ணமான' என்ன குணம் ? என்ன கிளஸ்டர், கிளஸ்டர், நான் கார்ன்வால் பிரபுவிடமும் அவர் மனைவியிடமும் பேசியாகவேண்டும்.

கிளஸ்டர் : நல்லது பிரபுவே, நான் அவர்களிடம் தெரிவித்து விட்டேன்.

லியர் : சொல்லிவிட்டீரா ? நான் சொல்வதைப் புரிந்து கொண்டீரா ?

கிளஸ்டர் : ஆம், அரசே !

லியர்: அரசன் கார்ன்வால் ட்யூக்கிடம் பேசவேண்டும். அன்புடைய தந்தை மகளிடம் பேசவேண்டும். சேவையும் பணிவும் விரும்புகிருர். உத்தரவிடுகிருர். இது அவர்களுக்கு அறிவிக்கப் பட்டதா? என்னுடைய மூச்சும், ரத்தமும்—நெருப்புப்போன்ற ட்யூக். உஷ்ணமான ட்யூக்கிடம் சொல்லும்—வேண்டாம்—இப்பொழுது வேண்டாம்—ஒருக்கால் அவர்கள் அசௌக்கியமாக இருக்கலாம். தேகம் சௌக்கியமாக இருந்தால்தான் செய்யக்கூடியவற்றை தேக அசௌக்யம் செய்யவொட்டாமல் தடுக்கிறது. இயற்கை அசௌக்யத்தால் பரவசபட்டுத் தேகத்துடன் மூளையும் பாதிக்கப்படும்பொழுது நாம் ஸ்வாதீனமுள்ளவர்களாயில்லை. நான் என் மூளையை இழந்து அசௌக்யமாயிருப்பவர்களை நல்ல நிலையிலிருப்பவர்களாக நினைத்தேன். என் வாழ்க்கைக்குச் சாவு. அவன் ஏன் இங்கு தங்கவேண்டும்? ட்யூக்கும் அவளும் இம்மாதிரி புறப்பட்டு வந்தது வேண்டுமென்றே தந்திரமாகச் செய்தது என்று எனக்குத் தோன்றுகிறது. என்னுடைய வேலையாளை உடனே வரவழை. ட்யூக்கிடமும் அவர் மனைவியிடமும் நான் அவர்களிடம் உடனே பேசவேண்டுமென்றும், அவர்கள் உடனே என்னை வந்து கண்டு நான் சொல்வதைக் கேட்கவேண்டுமென்றும் இல்லாவிடில் அவர்கள் அறையின் வாசலில் தூக்கம் கலையும்வரை முரசறையும்படி செய்வேன் என்றும் சொல்லும்.

குளஸ்டர்: உங்களிடையே யாவும் நல்லபடியாக வேண்டுமென்று விரும்புகிறேன். (போகிருர்.)

லியர்: ஐயோ, என் இதயமே, மேலெழுந்துவரும் இதயமே, கீழே செல்.

விதூஷகன்: சமையற்காரி மீன்களை உயிருடன் சட்டியில் போட்டுவிட்டு அவைகள் தலை எழுந்தபொழுது அவைகளிடம் அவள் சத்தம் போட்டதுபோல் கத்துங்கள். மாமா, அவள் அவைகளைத் தலையில் தடியாலடித்து 'அதிகப்பிரசங்கிகளே உள்ளே செல்லுங்கள்' என்று கத்தினள். புத்தியில் அவளது சகோதரனை ஒருவன் அன்புடன் குதிரைகளின் வைக்கோலில் வெண்ணெயைத் தெளித்தான்.

(கார்ன்வால், ரீகன், குளஸ்டர், பணியாட்கள் வருகின்றனர்.)

லியர்: உங்களிருவருக்கும் நல்ல காலையாகுக.

கார்ன்வால்: மகாராஜாவிற்கு வெற்றியுண்டாகுக.

(கென்ட் தளையினின்றும் விடுதலை பெறுகிருர்.)

ரீகன்: மகாராஜாவைக் காண மனமகிழ்வெய்துகிறேன்.

லியர் : ரீகன் ! நீ சந்தோஷப்படுகிருய் என்றே நினைக்கிறேன். அம்மாதிரி நினைப்பதற்கு என்ன காரணமிருக்கிறதென்பதை நானறிவேன். நீ சந்தோஷமடையாவிட்டால் உன் தாயை ஓர் கற்பிழந்தவள் என்று அவள் சமாதியிலிருந்து விவாகரத்துச் செய்துகொள்வேன். ஓ! நீ விடுதலை பெற்ருயா? அதைப்பற்றி மற்ருெரு சந்தர்ப்பத்தில் கவனிப்போம். அன்பிற்குரிய ரீகன்! உன் சகோதரி கெட்டவளாகி விட்டாள். ஓ! ரீகன்! அவள் ஒரு கழுகைப்போல் நன்றி மறந்தமை என்ற கொடிய பற்களுடன் என் இதயத்தைக் கொத்திப்புண்படுத்தி விட்டாள். என்ருல் அதை உனக்குச் சொல்லக்கூடமுடியவில்லை. அவ்வளவு கேவலமானதால் நீ நம்பக்கூடமாட்டாய் ரீகன்.

ரீகன் : நான் தங்களை வேண்டிக்கொள்கிறேன். பொறுமையுடனிருங்கள். அவள் தன் கடமையைச் செய்யாமலிருக்கத் தெரிந்துகொண்டதைவிட அவளுடைய பெருமையை மதிப்பிடத் தாங்கள் அறிந்துகொண்டிருப்பது குறைவாக இருக்கிறதென்று நான் நம்புகிறேன்.

லியர் : என்ன சொல்கிருய்? அதெப்படி?

ரீகன் : எனது அக்காள் தன் கடமையிலிருந்து சிறிதும் தவறுவாள் என்று நான் எண்ணவே முடியாது. ஒருவேளை அவள் தங்களுடைய பரிவாரங்களின் முறையற்ற நடத்தையைக் கண்டித்திருந்தால், அது அவள்பேரில் யாதொரு குற்றச்சாட்டிற்கும் இடமன்னியில் சரியான காரணத்தின்பேரில் நல்ல பலனைக் கருதியே செய்திருப்பாள்.

லியர் : அவளுக்கு என் சாபங்கள்.

ரீகன் : ஓ! ஐயனே! நீங்கள் வயதடைந்துவிட்டீர்கள். உமது இயற்கையான வாழ்க்கை தன் முடிவின் எல்லையை அடைந்துவிட்டது. எனவே தங்களுடைய நிலைமையைத் தங்களைவிட நன்ருகப் பார்த்தறியக் கூடியவர்களால் தாங்கள் நடத்தப்படவேண்டும். எனவே தாங்கள் என் சகோதரியிடம் திரும்பிச்செல்லவேண்டுகிறேன். அவளுக்குத் தவறிழைத்துவிட்டீர்கள். இது நமது வம்சத்திற்கு ஏற்றதா?

லியர் : அவளிடம் மன்னிப்புக் கேட்கவா? அன்புள்ள பெண்ணே! நான் விருத்தனுகிவிட்டேன் என்பதை ஒப்புக்கொள்கிறேன். கிழத்தனம் தேவையற்றது. நான் முழந்தாளிட்டுப் பிச்சை கேட்கிறேன். நீ எனக்கு ஆடை, படுக்கை, ஆகாரம் அளிக்க வழி தேடு.

ரீகன் : ஐயா, போதும். இதெல்லாம் பார்க்கத் தகாத சேஷ்டைகள். என் சகோதரியிடம் செல்லுங்கள்.

லியர்: ஒருக்காலுமில்லை. ரீகன். அவள் என் பரிவாரங்களில் பாதியைப் போகச் சொல்லிவிட்டாள். என்னைக் கோபத்துடன் பார்த்தாள். நாகப்பாம்பைப்போல் தன் கொடிய நாவால் என் இருதயத்திலேயே கடித்தாள். நன்றிகெட்ட அவள் தலையில் தேவனால் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் வஞ்சமெல்லாம் விழட்டும். காற்றில் உலவித் திரியும் அவளுடைய இளம் எலும்புகளை முடமாக்கட்டும்.

கார்ன்வால்: கேவலம், ஐயா, கேவலம்.

லியர்: ஒ! வேகமான மின்னல்களே, அவளுடைய எகத்தாளம் நிறைந்த கண்களில் உங்களுடைய அக்னியைச் செலுத்திக் குருடாக்குங்கள். சூர்யனின் கிரணங்களால் இழுக்கப்பட்டு வற்றிப்போன மூடு பனியே! அவளுடைய அழகைத் தொலைத்து அழிந்து நாசமாகும்படி செய்யுங்கள்.

ரீகன்: ஆ! கடவுளே! தங்களுக்கு கோபம் வரும்பொழுது எனக்கும் இவ்வாறுதானே சாபமிடுவீர்கள்.

லியர்: இல்லை, ரீகன். நீ என் சாபத்திற்குள்ளாகமாட்டாய். உன்னுடைய நளினமான குணம் உன்னைக் கோபத்திற்கடிமையாக்காது. அவளுடைய கண்கள் பயங்கரமானவை. நெருப்புடன் கூடியவை. உன் கண்கள் ஆறுதல் அளிக்கின்றன. எரியவில்லை. என்னுடைய விருப்பங்களை மறுக்கவோ, என் பரிவர்ரங்களை குறைக்கவோ, துடுக்காகப் பதிலளிக்கவோ, என் பையைச் சுறுக்கவோ, ஏன் சுருங்கச் சொல்லின் என் வருகையைத் தடுத்துத் தாளிடவோ உன் மனதில் தோன்ருது. அன்பின் தொண்டையும், மக்களின் கடமையும், மரியாதையின் உரிமையும், நன்றியின் கடனையும் நீ நன்கு அறிவாய். நான் உனக்களித்த பாதி ராஜ்பத்தை நீ மறந்துவிடவில்லையே?

ரீகன்: ஐயனே! விஷயத்திற்கு வாருங்கள்.

(உள்ளே சப்தம்)

லியர்: யார் என் ஆளைக் குட்டையில் போட்டது?

(கார்யஸ்தன் வருகிருன்)

கார்ன்வால்: யாருடைய எக்காளமது?

ரீகன்: எனக்குத் தெரியும். என் அக்காளுடையது. அவள் சீக்கிரமாக இங்கு வருவதாகச் சொன்னதை மெய்ப்பிக்கிறது. உன் யஜமானி வந்துவிட்டார்களா?

லியர்: இந்த அடிமை யாரைப் பின்பற்றுகிருனே அவளுடைய மனவருத்தம்தரும் தயவில் இவனுடைய லகுவில் உண்டான கர்வம் வளர்கிறது. அயோக்கியனாயே! என் பார்வையில் நிற்காதே செல்.

கார்ன்வால்: தங்கள் கருத்தென்ன அரசே?

(கானரில் வருகிருள்)

லியர்: என் வேலையாளை யார் குட்டையில் அடித்தது? ரீகன், உனக்கு அதைப்பற்றித் தெரிந்திருக்காது என்று நம்புகிறேன். யார் வருகிறது? ஓ! தெய்வங்களே, நீங்கள் கிழவர்களிடம் அன்புடையவர்களானுல், உங்களுடைய இனியமனம் பணிந்து நடப்பதை விரும்புமானுல், நீங்களே வயதானவர்களானுல், அதை உங்களுடைய கார்யமாகக்கொள்ளுங்கள். கீழே வந்து என் கக்ஷியை எடுத்துக்கொள்ளுங்கள். இந்த தாடியை நோக்க வெட்கமாயில்லையா? ரீகன், நீ அவளைக் கரம்பற்றி வரவேற்பாயா?

கானரில்: ஐயா, ஏன் கரத்தைப்பற்றக்கூடாது? நான் என்ன குற்றம்செய்தேன்? அறியாமை காண்பதெல்லாம் குற்றமாகாது. முதுமையின் மனத்தளர்ச்சி கூறுவதால் அவ்விதமாகாது.

லியர்: ஓ! என் விலாப்புறங்களே, நீங்கள் பலமானவையாக இருக்கின்றீர்கள். நீங்கள் இன்னும் தாங்குகின்றீர்களா? என்னுடைய மனிதன் எவ்வாறு குட்டையிலகப்பட்டான்?

கார்ன்வால்: நான் அவனை அங்கனுப்பினேன். ஐயா, அவனுடைய முறையற்ற நடத்தைக்கு இவ்வளவு உயர்தரமாக நடத்தப்படுவது ஏற்காது.

லியர்: நீ! நீயா செய்தாய்?

ரீகன்: தந்தையே, உங்களை வேண்டிக்கொள்கிறேன். எனக்குத் தோன்றுவது, நீங்கள் பலஹீனமாயிருக்கிறீர்கள். மாதம் முடியும்வரை நீங்கள் உங்கள் பரிவாரங்களில் பாதியை அனுப்பிவிட்டு அக்காளுடன் இருந்த பின்னர் என்னிடம் வாருங்கள். நான் வீட்டைவிட்டு வந்துவிட்டேன். அதனுல் தங்களுடைய அந்தஸ்திற்கேற்ப தங்களை போஷிப்பதற்கான பொருள்கள் தயாராக இல்லை.

லியர்: அவளிடம் திரும்பிச் செல்வதா? ஐம்பது ஆட்களைக் குறைப்பதா? இல்லை. அதைவிட நான் எல்லா வீடுகளையும் வெறுத்து வெளியேறிக் காற்றுடன் போரிடுவதுமேல். ஓநாய், ஆந்தை இவைகளின் தோழனுய்த் தரித்திரத்தின் கொடுமையை அனுபவிக்கலாம். அவளுடன் திரும்பவா? என் இளைய மகளை யாதொரு தனமுமின்றி ஏற்றுச் சென்ற கர்வமுள்ள ப்ரான்சின் சிம்மாதனத்தின் முன்பு முழந்தாளிட்டுப் பணிந்து எனக்குச் உபகாரச் சம்பளம் கொடுக்கும்படி பிச்சை கேட்கலாம். என்னுடைய பிராணனை உடலில் தங்கி உலாவு

மாறு செய்ய அவளுடன் திரும்பவேண்டும்? இந்த அற்ப வெறுக்கத் தக்க குசினிக்காரனின்கீழ் அடிமையாகவும் மூட்டை தூக்கவும் என்னைக் கேட்டுக்கொள்ளலாம்.

கானரில் : தங்கள் சித்தம் எப்படியோ, அப்படியே.

லியர் : என் பெண்ணே! உன்னை வேண்டுகிறேன். என்னைப் பயித்தியமாக்காதே. என் குழந்தையே, உன்னை நான் தொந்தரவு செய்யப்போவதில்லை. க்ஷேமமாயிரு. நாம் இனித் சந்திக்கப்போவ தில்லை. மறுமுறை ஒருவரையொருவர் பார்க்கப்போவதில்லை. ஆயினும் நீ என் சதை, ரத்தம், என் பெண், அல்ல. என் சதையில் ஏற்பட்ட ஓர் வியாதி. அதனால் என்னுடையதென்று கூறவேண்டும். நீ ஒரு சிரங்கு, ஒரு கொள்ளைப் புண், என் அசுத்தமான கெட்ட இரத்தத்தில் ஏற்பட்ட வீங்கிய பிளவை. நான் உன்னை கண்டிக்கவில்லை. அவமானம் வரும் பொழுது தானாக வரட்டும். நான் அழைக்கவில்லை. நான் இடியின் தெய்வத்தினிடம் இடியிடிக்கக் கேட்கவில்லை. உன்னைப்பற்றி உயர்ந்த நீதிமானான ஜோவிடம் குறைகளை முறையிடவில்லை. நீ எப்பொழுது முடியுமோ அப்பொழுது சீர்திருந்து. உன்னிஷ்டம்போல் நன்றாக நடக்கக் கற்றுக்கொள். நான் பொறுமையுடனிருப்பேன். நான் ரீக னுடன் தங்கியிருக்க முடியும்—நானும் என் நூறு பரிவாரங்களும்.

ரீகன் : முழுவதும் அப்படியல்ல. நான் அதற்குள் தங்களை எதிர்பார்க்கவில்லை. உங்களுக்குத் தக்கவாறு விருந்தளிக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யவில்லை. என் அக்காள் சொல்வதைக் கேளுங்கள். உங்களுடைய கோபதாபங்களைத் தங்களுடைய அறிவின் திறமையால் பரிசோதிப்பவர்களுக்கு அவை தங்களுடைய முதுமையினால் ஏற்பட் டவை என்று எண்ணுவார்கள். நீங்கள் அப்படியே இருக்கிறீர்கள். அவளுக்கு அவள் என்ன செய்கிறாள் என்பது தெரியும்.

லியர் : இப்படிச் சொல்வது நன்றா?

ரீகன் : நான் அதற்குத் தைர்யமாக பொறுப்பேற்றுக்கொள் வேன். என்ன, ஐம்பது வேலையாட்கள், அது சரியல்லவா? அதற்கு மேல் தங்களுக்கு என்ன தேவை? அவ்வளவு ஆட்கள்தான் எதற்கு? செலவும் அதனால் ஏற்படும் ஆபத்தும் அவ்வளவு எண்ணிக்கைக்கு விரோதமாக இருக்கின்றன. ஒரே வீட்டில் இரண்டுபேர்களின் அதிகாரத்திற்குட்பட்ட பெருவாரியான பேர்கள் ஒற்றுமையாக எப்படி இருக்கமுடியும்? அது கடினம். நடவாதது.

கானரில் : தாங்கள் அவளுடையவும் என்னுடையவும் வேலை யாட்களிடமிருந்து ஏன் பணிவிடைகள் பெறக்கூடாது?

ரீகன்: ஏன் கூடாது? பிரபு. அவர்கள் சரியானபடி நடக்கவில்லையானல் நாங்கள் அவர்களைக் கண்டிக்கலாம். நீங்கள் என்னிடம் வருவதானல் (நான் அதில் ஓர் ஆபத்தைக் காண்கிறேன்). தாங்கள் இருபத்தைந்து பேர்களுடன்தான் வரவேண்டும். அதற்குமேல் வந்தால் அவர்களுக்கு இடங்கொடேன். கவனிக்கவும் மாட்டேன்.

லியர்: உனக்கு யாவற்றையும் அளித்தேனே.

ரீகன்: நீங்கள் தக்க சமயத்தில்தான் கொடுத்துவிட்டீர்கள்.

லியர்: உங்களை நான் என் போஷகர்களாக்கினேன். என் பொருளுக்கெல்லாம் பொக்கிஷதாரிகளாக்கினேன். ஆனல் அந்த எண்ணிக்கையுள்ள பரிவாரங்களை வைத்துக்கொள்ள ஒரு ஷரத்து ஏற்பட்டிருந்தது. என்ன, நான் உன்னிடம் இருபத்தைந்து ஆட்களுடன்தான் வரவேண்டுமா? ரீகன், நீ அப்படிச் சொன்னயா?

ரீகன்: மறுபடியும் சொல்கிறேன். அதற்குமேல் என்னிடம் வரக்கூடாது.

லியர்: அவர்களைவிடக் கொடியவர்களிருக்கும்பொழுது கொடியவர்கள் நல்லவர்கள்போல் தோற்றமளிக்கிறார்கள். எல்லோரையும் விடக் கெட்டவர்களாயிராததால் போற்றவும் படுகிறார்கள். நான் உன்னுடன் செல்வேன். இருபத்தைந்தைவிட ஐம்பது இருமடங்காகிறதல்லவா. உன் அன்பு அவளைவிட இருமடங்காகிறது.

கானரில்: பிரபு, நான் சொல்வதைக் கேளுங்கள். உங்களுக்குப் பணிவிடை செய்ய அதைப்போல் இரட்டிப்பு ஆட்களுக்குக் கட்டளையிடப்பட்டுத் தயாராக இருக்கும்பொழுது இருபத்தைந்துபேர் என்ன தேவை? பத்து, ஐந்து கூட?

ரீகன்: ஒருவருக்கு என்ன தேவை?

லியர்: அவஸ்யத்தைப்பற்றிச் சிந்திக்க வேண்டாம். நம்மிடையுள்ள மிகவும் கேவலமான பிச்சைக்காரர்களிடம்கூட அவர்களுடைய தேவைக்கு மேற்பட்ட பொருள் ஏதேனுமிருக்கும். இயற்கைக்கு இயற்கையின் தேவைக்குமேல் கொடுக்கவேண்டாம். மனிதனுடைய வாழ்க்கையை மிருகத்திற்கொப்பானதாகச் செலவன்னியில் நடத்தலாம். நீ ஒரு சீமாட்டி. நீ கணகணப்பாக இருப்பதற்காக அணிந்திருக்கும் ஆடைகள் மிகவும் ஆடம்பரமானதாக இருக்கிறது. உங்களைக் குளிரிலிருந்து காப்பாற்றத் தகுதியில்லாத ஆடைகளை அணிந்திருப்பது இயற்கைக்கு மாருக இருக்கிறது. தேவையற்றதாயிருக்கிறது. ஆ! தெய்வங்களே! எனக்குப் பொறுமையை அளியுங்கள். எனக்குப் பொறுமை அவஸ்யம். தெய்வங்களே! வயதாலும் துக்கத்தாலும்

பூர்ணமான, ஒரு எளிய, இருவிதத்திலும் பரிதாபமான ஓர் முதியோனை இங்கே காண்கின்றீர்கள். நீங்கள்தான் இப்பெண்களின் இதயங்களைத் தந்தைக்கு விரோதமாக நடக்கும்படி தூண்டியிருந்தால் அதைப் பொறுத்துக்கொள்ளும்படி செய்து என்னை மூடனுக்கவேண்டாம். எனக்கு கௌரவமான கோபத்தைக் கொடுங்கள். என்னுடைய ஆண்மை மிக்க கன்னங்களைப் பெண்களின் ஆயுதமான கண்ணீர் அசுத்தப்படுத்த வேண்டாம். இயற்கைக்கு மாருன சூன்யக்காரிகளே! நான் உங்கள் மேல் எத்தகைய வஞ்சம் தீர்த்துக்கொள்ளப்போகிறேனே அதனுல் உலகமே—நான் அவை என்னவென்று இப்பொழுது அறியேன்; ஆனுல் நான் செய்யப்போவது உலகத்திலேயே மிகப் பயங்கரமானவை. நான் அழுவேனென்று நீங்கள் நினைக்கின்றீர்கள். இல்லை நான் அழமாட்டேன். அழுவதற்குப் பூரணமான காரணம் எனக்கிருக்கிறது. (புயலும் மழையும்). நான் அழுவதன் முன் இந்த இதயம் கோடி சுக்கலாக வெடிக்கும். ஓ! முட்டாளே! நான் பித்தம் பிடித்தவனுவேன்.

(லியர் தன் பரிவாரங்களுடனும் கௌஸ்டருடனும் செல்கிருர்.)

கார்ன்வால்: நாம் உள்ளே செல்வோம். பெரும் புயலடிக்கப் போகிறது.

ரீகன்: இந்த வீடு மிகவும் சிறியது. கிழவனையும் ஆட்களையும் இங்கு தக்கபடி இருக்கச்சொல்ல முடியாது.

கானரில்: அவர் இம்மாதிரி அலைந்து திரிவது அவருடைய குற்றமே. அவருடைய மடமையின் ருசியை அனுபவித்தே தீர வேண்டும்.

ரீகன்: அவருக்காக, அவரைமட்டிலும் சந்தோஷமாக வரவேற்பேன். ஆனுல் பரிவாரங்களில் ஒருவனையும் முடியாது.

கானரில்: எனக்கும் அதே கருத்துத்தான். கௌஸ்டர் பிரபு எங்கே? (கௌஸ்டர் வருகிருர்.)

கார்ன்வால்: கிழவன்பின் சென்ருர். இதோ திரும்பிவிட்டார்.

கௌஸ்டர்: அரசர் கடுங்கோபமாக இருக்கிருர்.

கார்ன்வால்: அவர் எங்கே போகிருர்?

கௌஸ்டர்: அவர் குதிரைகளைக் கொண்டுவரச் சொன்னுர். எங்கு போவாரென்பது தெரியவில்லை.

கார்ன்வால்: அவரை விட்டுவிடுவது நல்லது. அவரிஷ்டப்படியே நடக்கட்டும்.

கானரில் : பிரபுவே! என்னகாரணத்தைக்கொண்டும் அவரைத் தங்கும்படி சொல்லவேண்டாம்.

க்ளஸ்டர் : அந்தோ! இரவு வந்துகொண்டிருக்கிறது. அநேக மைல்கள் வரை ஒரு புதர்கூடக் கிடையாது.

ரீகன் : ஐயா, பிடிவாதக்காரர்களுக்கு அவர்களுடைய செய்கையால் ஏற்படும் துன்பமே அவர்களுக்குப் போதிக்கும் உபாத்தியாயர்கள். உங்களுடைய கதவுகளை எல்லாம் மூடிவிடுங்கள். அவர்பின் எதற்கும் துணிந்த ஆட்களிருப்பதால், அவரும் அவர்களுடைய பேச்சைக் கேட்பதால் அவர்கள் அரசனை என்ன செய்யத் தூண்டுவார்களோ தெரியாது. அறிவுடைமை பயப்படச் செய்கிறது.

கார்ன்வால் : உங்கள் கதவுகளைத் தாளிடுங்கள். இன்று பயங்கரமான இரவு. ரீகன் நல்ல யோசனை கூறுகிறாள். புயலிலிருந்து வெளியேறுங்கள். (செல்கிறார்கள்.)

அங்கம் 3—காக்ஷி 1

(புயலடித்துக்கொண்டிருக்கிறது. கென்டும் ஓர் கனவானும் தனித் தனி வருகிறார்கள்.)

கென்ட் : புயலைத் தவிர அங்கு வேறு யார்?

கனவான் : காற்றைப்போல் அலைப்புண்ட மனத்தை உடைய ஒருவன்.

கென்ட் : உங்களை எனக்குத் தெரியும். அரசர் எங்கே?

கனவான் : அமைதியற்ற சிறிவரும் பூதங்களுடன் போராடிக் கொண்டிருக்கிறார். பூமியைக் கடலில் தள்ளும்படிக்கும் அல்லது அலைகள் நிரம்பிய கடலைப் பொங்கி எழுந்து பூமியை மூழ்கடிக்கும்படி உத்தரவிடுகிறார். அவ்வாறு செய்து யாவும் மாறுதலோ நாசமோ அடைய எதிர்பார்க்கிறார். [அவருடைய வெள்ளிய தலைமயிரைப் பிய்த்து எறிகிறார். அவைகளை வேகமாக வீசும் காற்றுப்பற்றி இருந்ததே தெரியாமல் செய்கின்றன. அவருடைய இந்த எளிய மனித உலகத்தில் முன்னும் பின்னுமாக அலறி அடித்துக்கொள்ளும் மழையையும் புயலையும் அலக்ஷியமும் அவமானமும் செய்ய நினைக்கிறார். குட்டி முற்றிலும் பாலைக் குடித்ததால் பசியால் துடிக்கும் கரடிகூட வெளியேறுமல் படுத்திருக்குமோ, சிங்கமும் பசியால் வாடும் ஓநாயும் மழையில் தங்கள் மயிரை நனையாது வைத்திருக்குமோ அப்படிப்பட்ட இன்றிரவில் அவர்

தலைக்கு ஒன்றும் அணியாமல் ஓடுகிறார். அன்றியும் எல்லோருக்கும் உத்தரவிட்டுக்கொண்டிருக்கிறார்.]

கென்ட் : அவருடன் யார் இருக்கிறார்கள் ?

கனவான் : அவருடைய இதயத்தின் காயங்களைத் தன் ஹாஸ்யங்களால் போக்க முயலும் விதூஷகனைத் தவிர வேறு ஒருவருமில்லை.

கென்ட் : ஐயா, உங்களை நான் அறிவேன். நான் பார்த்துத் தெரிந்துகொண்ட அத்தாக்ஷியுடன் உங்களிடம் மிகவும் விரும்பத்தக்க விஷயத்தை ஒப்புவிக்கிறேன். இருதரப்பினருடையவும் தந்திரத்தால் மூடப்பட்டிருந்தாலும் ஆல்பனிக்கும் கார்ன்வாலுக்கும் விரோதம் மூண்டிருக்கிறது. கிரகங்களின் நற்பலனால் பெரும் உயர்ந்த பதவியை அடைந்தவர்களிடம்—யாரிடம்தான் இல்லை—வேலைக்காரர்களிருக்கிறார்கள்—அப்படியே தோன்றுவார்கள். அவர்கள் நம் தேசத்தில் நடப்பவைகளைத் தெரிவிக்கும் ப்ரான்ஸின் ஒற்றர்கள். ட்யூக்குகளின் குற்றங்களிலிருந்தும் சூழ்ச்சிகளிலிருந்தும் அல்லது அவர்கள் பழைய அரசன் சம்பந்தமாக இழைத்த கொடுமைகளிலிருந்தும், இன்னும் இரகசியமான வேறு காரணங்களிலிருந்தும் நாம் இவைகளைப்பற்றி ஊகிக்க வேண்டியிருக்கிறது. [ஆனால் இதுமட்டும் உண்மை. நமது அஜாக்ரதையைத் தெரிந்துகொண்டு நமது சில நேர்த்தியான துறைமுகங்களில் ரகசியமாக இறங்கிய ப்ரெஞ்சுப் படை ஒன்று இருக்கிறது. அவர்கள் வெளிப்படையாகத் தோற்றமளிக்க காலத்தை எதிர்பார்த்திருக்கின்றனர். நீங்கள் நான் சொல்வதை நம்பி டோவருக்கு விரைவீர்களானல், அங்கு அரசனுக்கு நேர்ந்திருக்கும் பயித்தியம் விளைக்கக்கூடிய கொடிய இயற்கைக்கு மாறான துயரத்தைப்பற்றி அரசன் குறை சொல்லவேண்டியிருப்பதைப்பற்றித் தங்களிடம் தெரிவித்ததற்காக உங்களுக்கு வந்தனம் அளிக்கக்கூடிய சிலரைக் காண்பீர். நான் உயர்ந்த வம்சத்தைச் சேர்ந்தவன். நான் எனக்குக் கிடைத்திருக்கும் நம்பத்தக்க செய்திகள்மூலம் இந்தக் கார்யத்தை உம்மிடம் ஒப்புவிக்கிறேன்.]

கனவான் : நான் உங்களிடம் இதைப்பற்றி இன்னும் பேச நினைக்கிறேன்.

கென்ட் : இல்லை, வேண்டாம். நான் என் வெளித்தோற்றத்தை விட அந்தஸ்தில் மிகவும் மேலானவன் என்பதை நிரூபிக்க இந்தப் பணப்பையைத் திறந்து அதிலிருப்பதை எடுத்துக்கொள்ளும். நீர் கார்டிலியாவைக் கண்டால்—நீங்கள் காணமாட்டீர்கள் என்ற பயமில்லை. அவள் நீர் இன்னும் யாரென்று அறிந்துகொள்ளாதவன், யார் என்பதைச் சொல்வாள். இந்தப் புயலுக்கஞ்சவா. வெட்கம். நான் அரசனைத் தேடிக் காண்பேன்.

கனவான் : என்னுடன் கைகுலுக்குங்கள், நீங்கள் வேறு ஒன்றும் சொல்லவேண்டியதில்லையே.

கென்ட் : ஒரு சில வார்த்தைகள், அவை நாம் அரசனைக் கண்ட பின். நீங்கள் அந்த வழியாகத் தேடுங்கள். நான் இப்படிச் செல்கிறேன். முதலில் யார் கண்டுபிடிக்கிருர்களோ அவர் மற்றவருக்குக் குரல் கொடுக்கட்டும். (போகிருர்கள்.)

அங்கம் 3—காக்ஷி 2

(புயலடிக்கிறது. லியரும் விதூஷகனும் வருகிருர்கள்.)

லியர் : மாருதங்களே வீசுங்கள். உங்கள் கன்னங்களைப் பிளந்துவிடுங்கள், வேகமாக வீசுங்கள். பெரிய நீர்வீழ்ச்சிகளையும், காரானைகளையும் பெய்து கோபுரங்களையும் காற்றுடிகளையும் மூழ்கடியுங்கள். தேவர்களின் கருத்தை நிறைவேற்றும் கந்தகம் நிறைந்த மின்னற் கொடிகளே, ஓக் மரங்களை ஒடித்துத்தள்ளும் பேரிடிகளின் முன்னேடிகளே என் வெண்தலையைப்பற்றி எரியுங்கள். எல்லாவற்றையும் ஆட்டும் இடியே பூமியின் கனமான உருண்டை வடிவத்தைத் தகர்த்துச் சமதளமாக்கி இயற்கையின் எல்லா ஜீவராசிகளும் உற்பத்தியாகும் ஸ்தானங்களைப் பொடிசெய்து நன்றிகெட்ட மனிதனைப் படைக்கும் எல்லாக் கருமூலங்களையும் அழித்துவிடு.

விதூஷகன் : மாமா! காய்ந்த ஈரமில்லாத வீட்டில் ராஜாங்கத் தண்ணீர் (அரசவை முகஸ்துதி) இந்த வெட்ட வெளியில் விழும் மழைத் தண்ணீரைவிடமேல். நல்ல மாமாவே! தங்கள் மகளின் ஆசீர்வாதத்தைப் பெறுங்கள். இந்த இரவு அறிவிற் சிறந்தவர்க்கும் மூடர்களுக்கும் ஒருவருக்கும் இரக்கம் காட்டுவதாயில்லை.

லியர் : விசும்பே! உன் நிறை வயிற்றிலிருந்து குமுறு, தீயைக் கக்கு, மழையைக் கொட்டு. மழை, காற்று, இடி, நெருப்பு இவை என் பெண்களல்ல. பஞ்ச பூதங்களே உங்களை நான் நன்றி மறந்தவர்களெனக் குற்றம் சாட்டவில்லை. நான் உங்களுக்கு யாதொரு ராஜ்யமும் கொடுக்கவில்லை. பெண்களென அழைக்கவில்லை. எனக்கு நீங்கள் எவ்விதத்திலும் கட்டுப்படவில்லை. எனவே உங்களுடைய பயங்கரமான வெகுமதிகளைச் சரமாரியாகப் பொழியுங்கள். இங்கே நான் நிற்கிறேன்—உங்கள் அடிமை, ஒரு எளிய, தடுமாறும், பலஹீனமான வெறுத்துத் தள்ளப்பட்ட கிழவன். நீங்கள் என் இரண்டு கொடிய

பெண்களுடன் சேர்ந்து வெளுத்து நரைத்த முதிய கிழவன்மேல் உங்களுடைய பெரிய படைகளை அனுப்பிவிட்டீர்களென்பதால் உங்களை நான் கேவலமான அடிமைகள் என அழைப்பேன். ஹோ, ஹோ! அது மிகவும் மோசமான விஷயம்.

விதூஷகன்: எவனொருவன் தன் தலையைச் சாய்ப்பதற்கு வீடுடையவனாயிருக்கிறானோ அவன் நல்ல விவேகமுள்ள தலையுடையவன். தலைக்கு மறைவு ஏற்படுமுன் காலுக்கு ஓட்டைச் சராயை அணியும் நாகரீகமற்றவன் தானும் தன் தலையும் பேன்பிடித்துத் திரிவான். அதனால் பிச்சைக்காரர்கள் பலரை மணக்கிறார்கள். எந்த மனிதன் எதைத் தன் மனதுக்குச் செய்யவேண்டுமோ, அதைத் தன் கட்ட விரலுக்குச் செய்கிறானோ அவன் காலாணியால் வலிபொறுக்காமல் கதறித் தூக்கமிழந்து இரவைப் பகலாக்குவான். கண்ணாடியைப் பார்த்து முகத்தைக் கோண வலிக்காத அழகிய ஸ்திரி கிடையாது.

(கென்ட் வருகிறார்.)

லியர்: இல்லை. நான் பொறுமைக்கே உதாரணமாக இருப்பேன். நான் ஒன்றுமே சொல்லமாட்டேன்.

கென்ட்: யாரங்கே?

விதூஷகன்: இங்கு அரசரும் ஒரு நாகரீகமற்றவனும் அதாவது ஒரு அறிவாளியும் ஒரு மூடனும்.

கென்ட்: அந்தோ, ஐயா, இங்கா இருக்கின்றீர்கள்! இரவை விரும்பக்கூடியவையும் இத்தகைய இரவுகளை விரும்பா. கோபங்கொண்டவானம் இருட்டில் சஞ்சரிப்பவர்களை வெருட்டி அவர்களுடைய குகைக்குள் கிடக்குமாறு செய்கிறது. நான் நினைவு பெற்றதிலிருந்து இப்படிப்பட்ட நெருப்புப்பிழம்பையும், பயங்கரமான பேரிடிகளையும், காற்றின் அலறலையும், ஓலத்தையும் மழையையும் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. மனிதனின் சக்தி இந்தத் துன்பத்தையும் பயத்தையும் தாங்கவியலாது.

லியர்: இந்தப் பயங்கரக் குழப்பத்தை நம் தலைமேல் வைத்திருக்கும் மகிமை பொருந்திய பெரும் தெய்வங்கள், தங்களுடைய விரோதிகளைக் கண்டுபிடிக்கட்டும், நீதி ஸ்தலத்தில் தண்டனை பெறுமல் மறைத்து வைத்திருக்கும் குற்றங்களைச் செய்திருக்கும் பாபியே! இப்பொழுது அவைகளுக்காக நடுங்கு. கொலை செய்த ரத்தம் தோய்ந்த கையை உடையவனே, பொய்க்கரி உரைத்தவனே, முறை தவறி மாதரைப்புணர்ந்தும் யோக்கியனைப்போல் நடிப்பவனே, இப்பொழுது ஓடி ஒளிந்துகொள். ஒளிந்திருந்து தந்திரமாக மனிதன் உயிரைப் பறித்த கோழையே, சின்னாபின்னமாகும்படி நடுங்கு. மிகவும் பலமாக

நன்கு மூடப்பட்ட குற்றங்களே. அந்த மூடு திரைகளைக் கிழித் தெறிந்துவிட்டுத் தெய்வ தூதர்களின் கருணையைப்பெறக் கதறுங்கள். நானோ பிறர் பாபச் செயல்களுக்கு இலக்கானவனேதவிர யாதொரு பாபமும் அறியேன்.

கென்ட் : ஐயோ! தலைக்கு யாதொரு ஆதரவுமில்லாமலா! என் கருணையுள்ள பிரபுவே! அடுத்தாற்போல் ஓர் பாழடைந்த குடிசை இருக்கிறது. அது இந்தப் புயலில் சிறிது உதவியாக இருக்கும். எந்தக் கற்களால் கட்டப்பட்டிருக்கிறதோ அவைகளைவிடக் கடின சித்தமுடையதும் இப்பொழுதுதான் தங்களுக்குப்பின் உள்ளே தங்க அனுமதி மறுத்ததுமான அந்தக் கடினமான வீட்டுக்கு திரும்பிச் சென்று மறுக்கப்பட்ட உபசரணையைச் செய்யும்படி நான் கட்டாயப் படுத்தும்வரை இங்கே தங்கியிருங்கள்.

லியர் : என் மூளை கலங்கத் தொடங்கிவிட்டது. என் பையா, வா. பையா, எப்படி இருக்கிறாய்? குளிரால் நடுங்குகிறாயா? நான் குளிரால் நடுங்குகிறேன். இந்த வைக்கோல் எங்கேஇருக்கிறது. கஷ்டத்தின் சக்தியும் சாமர்த்தியமும் அற்புதமானது. மிகவும் அற்ப வஸ்துக்களையும் விலையுயர்ந்ததாக மாற்றுகிறது. தொடக்கூட விரும்பப்படாதவைகளை விரும்பி உபயோகிக்கச்செய்கிறது. நீ குறிப் பிட்ட அந்தக் குடிசைக்கு வா. உனக்காக வருந்தும் ஓர் பாகம் என் இதயத்திலிருக்கிறது.

விதூஷகன் : எவனுக்கு அறிவு சொற்பமாவது இருக்கிறதோ அவன் தினந்தோறும் மழை பெய்தாலும் மழையுடனும் காற்றுடனும் தன் நிலையை அனுசரித்து அவைகளுடன் பொறுமையாக வாழ வேண்டும்.

லியர் : பையா, உண்மையே. அந்தக் குடிசைக்கு அழைத்துச் செல்.

(லியரும் கென்டும் செல்கிறார்கள்)

விதூஷகன் : ஒரு வேசியின் நம்பிக்கையைப்போக்கும் இரவு. நான் போகுமுன் ஒரு ஜோஸ்யம் சொல்கிறேன். பாதிரிமார் உபதேசம் கருத்துக்கள் இல்லாமல் வெறும் வார்த்தைகள் நிரம்பியதாக இருக்கும் பொழுது, சாராயம் காய்ச்சுபவர்கள் காடியைத் தண்ணீரால் கெடுக்கும் பொழுது, பிரபுக்கள் தையற்காரர்களுக்குப் பாடம் கற்பிக்கும்பொழுது, மத விரோதிகள் எரிக்கப்படாமல் காதலர்கள் எரிக்கப்படும்பொழுது, நீதி ஸ்தலத்திற்கு வரும் ஒவ்வொரு வியாஜ்யமும் நியாயமானதாயிருக் கும்பொழுது, குதிரை வீரர்கள் ஏழைகளாகவும் கடன்காரர்களாகவு மில்லாதிருக்குங்கால், தூஷண வார்த்தைகள் மனிதர் நாவில் இல்லாத

சமயம், முடிச்சுமாறிகள் கூட்டங்களுக்கு வாராதபொழுது, அதிக வட்டி வாங்குபவர்கள் புலங்களில் பணத்தை எண்ணும்கால், வேசிகளும் தூர்த்தர்களும் கோவில் கட்டும்கால், ஆல்பியன் தேசம் தலைகீழாகும். அப்பொழுது இருக்கப்போகிறவர்கள் காலால் நடப்பதைக்காண்பார்கள். இந்தக்குறியை மெர்லின் சொல்வார். ஏனெனில் நான் அவருக்கு முந்தியகாலத்தவன். (செல்கிறான்)

அங்கம் 3—காக்ஷி 3

(க்ளாஸ்டரும் எட்மண்டும் வருகிறார்கள்.)

க்ளாஸ்டர் : அந்தோ! அந்தோ! எட்மண்ட், எனக்கு இந்த மாறுபாடான செய்கை சற்றும் பிடிக்கவில்லை. நான் அவரிடம இரக்கம் காட்ட இவர்களிடம் அனுமதி கேட்டதற்கு இவர்கள் என் வீட்டைத் தங்களுடைய உபயோகத்திற்கு எடுத்துக்கொண்டதுமன்னியில் அவருக்காக நான் பரிந்து பேசக்கூடாதென்றும் அவரை ஆதரிக்கக்கூடாதென்றும் அப்படிச் செயதால் தங்களுடைய நிரந்தரமான கோபத்திற்கு ஆளாவேனென்றும் கூறிக் கடுமையான உத்தரவிட்டார்கள்.

எட்மண்ட் : மனிதத் தன்மை சற்றுமில்லாத மிருகத்தனம்.

க்ளாஸ்டர் : போ. ஒன்றும் பேசாதே. இரண்டு ட்யூக்குகளுக்கும் ஒற்றுமையில்லை. அதைவிட இன்னும் அபாயகரமான மற்றோர் விஷயம். நான் இன்றிரவு ஓர் கடிதம் வரப்பெற்றேன்.—அதைப் பற்றிப் பேசுவதே அபாயம்.—அதை என் அறையில் பூட்டி வைத்திருக்கிறேன். அரசனுக்கு இழைக்கப்பட்ட இத்துன்பங்கள் வஞ்சம் தீர்க்கப்படும். ஒரு சேனையின் பகுதி ஏற்கனவே வந்துவிட்டது. நாம் அரசனின் கக்ஷியைச் சேரவேண்டும். நான் அவரைக் கண்டு ரகசியமாக அவருக்கு உபசாரம் செய்வேன். நீ ட்யூக்கிடம் சென்று பேசிக்கொண்டிரு. நான் செய்யும் தர்ம கார்யம் அவருக்குத் தெரியாமலிருக்கட்டும். அவர் என்னைக் கூப்பிட்டால் நான் அசௌகர்யமாயிருப்பதாகவும் உறங்கிவிட்டதாகவும் தெரிவி. நான் இறப்பதாயினும் சரி. (அந்த தண்டனை கிடைக்குமென்று பயமுறுத்துகிறார்கள்.) என் எஜமானர்—என் அரசன் துன்பமில்லாதிருக்கவேண்டும். எதிர்பாராத சம்பவங்கள் நடக்கவிருக்கின்றன. எட்மண்ட், நீ ஜாக்கிரதையாக இரு.

(செல்கிறார்.)

எட்மண்ட் : இந்த மரியாதை தடுக்கிறது. டியூக்கிற்கு உடனே தெரிவிக்கலாமா—அந்தக் கடிதத்தைப்பற்றிக்கூட? ஆம், இது நியாய மானதாகத் தோன்றுகிறது. என் தந்தை எதை இழக்கிருரோ அவை யாவற்றையும் நான் பெறவேண்டும். முதியோர் கீழே செல்லும் பொழுது இளைஞர் மேலேறிவருகிருர்கள். (போகிருன்.)

அங்கம் 3—காக்ஷி 4

(லியர், கென்ட், விதூஷகன் வருகிருர்கள்.)

கென்ட் : அரசே! அந்த இடம் இதோ இருக்கிறது. உள்ளே செல்லுங்கள். வெளியே இரவின் கடுமையான துன்பம் தாங்க முடியாமலிருக்கிறது. (புயலடிக்கிறது.)

லியர் : என்னைத் தனியே விட்டுச் செல்லுங்கள்.

கென்ட் : நல்லது பிரபு! இங்கே வாருங்கள்.

லியர் : இது என் இதயத்தைப் பிளக்குமா?

கென்ட் : அரசே! அதற்கு மாருக என் இதயத்தைப் பிளக்க விரும்புவேன். இங்கு வாருங்கள், பிரபுவே.

லியர் : நீ இந்தப் புயல் நம்மை நம் தோலிற்குள்ளும் பாய்ந்து அதிகமாகத் தாக்குமென்று நினைக்கிருய். உன்மட்டில் அது சரிதான். ஆனல் எங்கே பெருந் துயரம் பீடித்துக்கொண்டிருக்கிறதோ அங்கு சிறிய துன்பத்தைப்பற்றிச் சிந்திப்பதே இல்லை. நீ கரடியைக் கண்டால் ஓடுவாய். ஆனல் நீ ஓடும் திசை சமுத்திரத்திற் சேர்க்குமானல் கரடியை அதன் வாயில் நுழைந்தே எதிர்ப்பாய். மனசு உல்லாசமாய் இருக்குக்கும்பொழுது தேகம் நளினமாய் இருக்கும். என் மனதில் அடித்துக்கொண்டிருக்கும் புயல் ஒன்றைத் தவிர மற்ற எல்லா அனுபவங்களையும் என் பஞ்சேந்திரியங்களிலிருந்தும் விலக்குகிறது.—அதாவது என் இதயத்தைக் கலக்கிக்கொண்டிருக்கும் பித்ரு துரோகம். ஆகாரத்தை எடுத்துக்கொடுத்ததற்காகக் கையை வாயானது கடிப்பது போலிருக்கிறதல்லவா? நான் அவர்களுக்குப் புத்திவரும்படி தண்டனை கொடுப்பேன். நான் இனி அழப்போவதில்லை. இப்படிப்பட்ட இரவில் என்னை வெளியே தள்ளிக் கதவை அடைப்பதா? கொட்டு, கொட்டு. நான் தாங்குவேன்.—இந்த இரவிலா? ரீகன், கானரில்,

உங்களுடைய வயதான அன்புள்ள தந்தை கபடமற்ற உள்ளத்தோடு எல்லாவற்றையும் கொடுத்தவர்—ஓ. அதில்தான் பயித்தியக்காரத்தனம் இருக்கிறது. நான் அதை வெறுக்கிறேன். அதைப்பற்றி இனி ஒன்றும் வேண்டாம்.

கென்ட் : கருணையுள்ள பிரபுவே! இங்கு வாருங்கள்.

லியர் : நீ உள்ளே செல். உன்னுடைய சௌகர்யத்தைக் கவனித்துக்கொள். இந்தப் புயல் எனக்கு அதிகம் துன்பம் தரும் விஷயங்களைப்பற்றி யோசிக்க அனுமதிக்காது. சரி. நான் உள்ளே செல்கிறேன். பையா, நீ முதலில் செல். ஆ! வீடில்லாத ஏழ்மை. உள்ளே செல். நான் கடவுளை வணங்கிவிட்டுப் பிறகு உறங்குவேன். பரிதாபமான ஆடையற்ற ஏழைகளே! நீங்கள் எங்கிருந்தாலும் சரி. இந்த இரக்கமற்ற கடும்புயலில் தவிப்பவர்களே! கூரையின் கீழில்லாத உங்கள் தலையும், ஆகாரமில்லாமல் வெளியே தெரியும் விலாக்களும் சாளரங்கள், சாளரங்களாகத் தெரியும் கிழிந்த கந்தைகளும் உங்களை எவ்வாறு இந்தப் பருவத்திலிருந்து காக்கும்? நான் இதைப் பற்றிச் சற்றும் கவலைப்பட்டதே இல்லை. ஆடம்பரமே! நீ இத்தகைய துன்பங்களை அனுபவித்து ஏழைகளின் இன்னலை அறிந்துகொள். அம்மருந்தை உண்டால் உனக்குத் தேவையானதற்குமேல் உள்ளவற்றை ஏழைகளுக்கு உதறித் தள்ளலாம். அதனால் இறைவனுக்கு நீ நியாயமாக நடந்துகொள்வது தெரியும்.

(எட்காரும், விதூஷகனும் வருகிறார்கள்.)

எட்கார் : ஒரு பாகமும் பாதியும், ஒரு பாகமும் பாதியும். பஞ்சையான டாம்.

விதூஷகன் : மாமா! இங்கு வரவேண்டாம். இங்கே ஒரு பிசாசு இருக்கிறது. உதவி, உதவி.

கென்ட் : உன் கையைக் கொடு. யார் அங்கே?

விதூஷகன் : ஒரு பிசாசு. அவன் தன் பெயர் டாம் என்று சொல்கிறான்.

கென்ட் : அங்கே வைக்கோல் பரப்பிலிருந்து முனங்கும் நீ யார்? வெளியே வா?

எட்கார் : ஓடுங்கள். அந்தத் துஷ்டப் பேய் என்னைப் பின்பற்றி வருகிறது. கூறிய ஹாதார்ன் செடிகளினூடே காற்று அடிக்கிறது. ஹூம். உன் படுக்கைக்குச் சென்று குளிருக்கு அடக்கமாயிரு.

லியர் : நீ உன் பெண்களுக்கு எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு இந்த நிலைமைக்கு வந்திருக்கிறாயா?

எட்கார்: யார் ஏழைடாமிற்கு ஏதாவது கொடுக்கிறீர்கள்! அவனை அந்தப் பிசாசு நெருப்பினிடையிலும், கத்திமுனையிலும், சுழல் காற்றிலும் சேறு செகதிகளிலும் இட்டுச்செல்கிறது. அப்பேய் என் தலையணையின் கீழ் கத்திகளும், கோவிலில் என் ஆசனத்தின் கீழ் தூக்குகளும், கஞ்சியில் எலிப்பாஷாணமும் வைத்திருக்கிறான். அவன் என்னைக் கர்வமடையச்செய்து அவனுடைய சிவப்பு மரக்குதிரை மேலேறி நாலு அங்குலப் பாலங்களைத் தாண்டிச்சென்று தன்னுடைய நிழலையே தனக்குத் துரோகியாக நினைத்துத் துரத்திக்கொண்டு செல்வதில் பெருமையடையச்செய்கிறான். உன் பஞ்சப்புலன்களையும் ஆசீர்வதிக்கிறேன். டாம் குளிரால் நடுங்குகிறான். ஓ! டே. டே. டே. டி; டே. டீ. சுழல் காற்று முதலியவைகளிலிருந்து நீங்கள் ரக்ஷிக்கப்படட்டும். துஷ்டப் பிசாசுகளால் துன்புறுத்தப்பட்ட டாமிற்கு ஏதாவது தர்மம் கொடுங்கள். அங்கே அவனை இப்பொழுது நான் அடைவேன். அங்கே, மறுமுறை—அங்கே—அங்கே. (புயலடிக்கிறது.)

லியர்: அவனுடைய பெண்கள் அவனை இக் கதிக்குக்கொண்டு வந்தார்களா? நீ ஒன்றும் வைத்துக்கொள்ளவில்லையா? நீ அவர்களுக்கு எல்லாவற்றையும் கொடுத்துவிட்டாயா?

விதூஷகன்: இல்லை. அவன் ஒரு கம்பளியைக் கொடுக்காமல் வைத்திருக்கிறான். இல்லாவிட்டால் அவனுடைய நிர்வாணம் நம்மை அவமானப்படுத்தியிருக்கும்.

லியர்: மனிதர்களுடைய தவறுக்காக அவர்களின் தலைமேல் தொங்கும் காற்றிலுள்ள சகல கொள்ளை நோய்களும் உன் பெண்களைப் பற்றட்டும்.

கென்ட்: அவனுக்குப் பெண்கள் கிடையாது.

லியர்: துரோகி. உன்னைக் கொல்வேன். அவனுடைய இரக்கமற்ற பெண்களைத்தவிர வேறு ஒன்றும் அவனுடைய புத்தியை இவ்வளவு தாழ்மையான நிலைக்குக் கொண்டுவராது. வெறுத்துத் தள்ளப்பட்ட தந்தைகளின் சரீரத்தின்மேல் இவ்வாறு யாதொரு இரக்கமுமில்லாது இருப்பதுதான் நாகரீகமும் வழக்கமும்போலும். நியாயமான தண்டனை. இந்தச் சரீரம்தானே அந்தப் 'பெலிகன்' பெண்களைப் பெற்றது.

எட்கார்: பில்லிக்குருவி பில்லிக்குருவிக்குன்றில் உட்கார்ந்திருந்தது. அலோ, அலோ, லூ, லூ.

விதூஷகன்: இந்த மிகக் குளிர்ந்த இரவு, நம்மை எல்லாம் மூடர்களாகவும் பயித்தியக்காரர்களாகவும் மாற்றிவிடும்.

எட்கார்: அந்தப் பொல்லாத பிசாசைப்பற்றி ஜாக்கிரதை. பெற்ருேருக்குப் பணிந்துநட. நீதிபதி உன் வார்த்தையைக்காப்பாற்று. பிரமாணம் செய்யாதே. பிறர் மனைவிமையாதே. உன் காதலியை ஆடம்பரமாக அலங்காரம்செய்யாதே. டாம் குளிரால் நடுங்குகிருன்.

லியர்: நீ வாழ்க்கையில் என்ன செய்துகொண்டிருந்தாய்?

எட்கார்: ஒரு வேலைக்காரன்! இதயத்திலும் புத்தியிலும் கர்வம்படைத்தவன். தலைமயிரைச் சுருள் சுருளாக வைத்திருந்தேன். என் குல்லாயில் கையுறை அணிந்திருந்தேன். என் காதலியுடன் கூடி அவள் ஆசையைத்தீர்த்தேன். நான் எவ்வளவு வார்த்தைகள் பேசினேனே அவ்வளவும் பிரமாணங்களே. அவையாவற்றையும் தெய்வத்தின் திருமுன்பாகவே முறித்து மாறிநடந்தேன். ஸ்திரீலோலனுகவே தூங்கியும் எழுந்தும் கழித்தேன். மதுவையும் சூதையும் மிகவும் நேசித்தேன். ஸ்திரீகள் விஷயத்தில் துருக்கியைவிட அதிகம் துன்மார்க்கனுயிருந்தேன். மனதில் பொய், எதையும் கேட்கும் காது, கொலைக்கஞ்சாத ரத்தம்தோய்ந்த கை, சோம்பலில் பன்றி, களவில் நரி, பேராசையில் ஓநாய், வெறியில் நாய், இரைதேடுவதில் சிங்கம். மிதியடியின் சப்தமும் பட்டாடையின் அசைவும் உன் இதயத்தை மாதருக்கு இழக்கச் செய்யவேண்டாம். வேசிகள் வீட்டில் காலடிவைக்காதே. உன் கை ரவிக்கைக்குள் செல்லவேண்டாம். கடன் கொடுப்பவர்கள் புத்தகத்தில் உன் பேனுவை நாட்டாதே. கொடிய பைசாசத்தை எதிர்த்துநில். ஹாதார்ன் செடிகளின் ஊடே குளிர்காற்று அடித்துக்கொண்டிருக்கிறது.—ஸம், மன், நானி. டால்பின், பையா போகட்டும். அவன் குதிரை ஓடட்டும்.

(புயல் அடித்துக்கொண்டிருக்கிறது.)

லியர்: நீ ஆடையின்றி இந்த வானின் கடுமையான நிலைமையைச் சமாளிக்க முயல்வதைவிட உன் சமாதியிலிருப்பதுமேல். மனிதன் இவ்வளவுதானு? அவனைப்பற்றி நன்ருகச் சிந்தனைசெய். நீ பட்டுப் பூச்சியிடம் பட்டுக் கடன்படவில்லை, மிருகங்களிடம் தோல், ஆடுகளிடம் கம்பளி, புனுகுப்பூனையிடம் வாசனைத் திரவியம் கடன்படவில்லை.—(ஏனெனில் அவை மனிதனுக்குத் தேவையில்லை. இங்கு 3 மனிதர்கள் இயற்கையின்படி இல்லாத போலி ஆசாமிகளிருக்கின்றனர். நீ ஒருவன்தான் பிறந்தமேனி இருக்கிருய். நாகரீகத்தின் சின்னங்கள் இல்லாமலும் ஆடையில்லாமலுமிருக்கிற மனிதன் உன்னைப்போல் கேவலம் எளிய இரண்டுகால் மிருகமே. கடன் வாங்கப்பட்டவைகளே போங்கள். போங்கள். வா. இங்கு என் பொத்தானைக்கழற்று.

(ளௌஸ்டர் ஒரு தீவட்டியுடன் வருகிறுர்.)

விதூஷகன் : மாமா, தயவுசெய்து உள்ளே செல்லுங்கள். இது வெளியே தங்க அபாயமான இரவு. ஒரு பெரிய புலத்தில் ஒரு சிறிய நெருப்பு, பழைய தூர்த்தனின் இதயம்போன்றது—ஒரு சிறு பொறி, மற்றதெல்லாம் ஒரேகுளிர், பாருங்கள். இங்கு நடமாடும் நெருப்பு வருகிறது .

எட்கார் : இதுதான் பிளிப்பர்டி கிப்பட் என்ற பொல்லாத பேய். அவன் மாலை மணி அடித்தவுடன் சஞ்சரிக்கத் தொடங்கி கோழி கூவும் வரை நடக்கிறுன். அவன்தான் கண்ணோய்கள், பிளந்த உதடுகள், முதலியவற்றைத் தருகிறுன். அவன் பயிர்களைப் பாழாக்கிப் பூமியில் எல்லோருக்கும் தீமை விளைவிக்கிறுன்.

விட்டோல்ட் ஸ்வாமியார் உலகத்தை மூன்றுதபா சுற்றினுர். அவர் இராப் பூதத்தையும் அவளுடைய ஒன்பது பேய்களையும் சந்தித்து, அவளை குதிரையிலிருந்து இறங்கச்சொல்லி மேலும் உலகினருக்குத் துன்பம் செய்வதில்லை என்று பிரமாணம் வாங்கிக்கொண்டு "சூன்யக்காரியே" ஓடிவிடு, ஓடிவிடு, என்று துரத்திவிட்டார்.

கென்ட் : அரசே! தாங்கள் இப்பொழுது எப்படியிருக்கிறீர்கள் ?

லியர் : அவன் யார் ?

கென்ட் : அங்கு யார் ? நீ என்ன தேடுகிறுய் ?

கிளஸ்டர் : அங்கே இருக்கும் நீங்கள் யார் ? உங்கள் பெயர் என்ன ?

எட்கார் : நீந்தும் தவளைகள், தவளைக் குஞ்சுகள், பெரிய தவளை, பல்லி, தண்ணீர், முதலியவற்றையும், அந்தப் பேய் அலைக்கும்பொழுது அவனுடைய கோபத்தில் சாணத்தைச் சாலட்டுகளாகவும், சாப்பிடும். டாம் செத்த எலிகள், நாய்களையும் சாப்பிடுகிறுன். குட்டைத் தண்ணீரில் படிந்திருக்கும் பாசியைக் குடிக்கிறுன். அவன் ஊர் ஊராகச் சவுக்காலடிக்கப்பட்டும், குட்டையிலடிக்கப்பட்டும், சிறையிலடைக்கப்பட்டும் தண்டிக்கப்படுகிறுன். அவனிடம் மூன்று நிஜார்களும் ஆறு சட்டைகளுமிருந்தன. சவாரி செய்யக் குதிரையும் தாங்குவதற்கு ஆயுதங்களுமிருந்தன. ஆனுல் எலிகள், சுண்டெலிகள் போன்ற சிறு மிருகங்கள்தான் ஏழு வருஷங்களாக டாமிற்கு ஆகாரம். என்னைப் பின்பற்றுபவனே ஜாக்ரதை. ஸ்மல்கின் சாந்தமாயிரு, பேயே பேசாமலிரு.

கிளஸ்டர் : என்ன, அரசருக்கு, வேறு துணை கிடைக்கவில்லையா ?

எட்கார் : இருளின் இளவரசன் ஒரு நல்ல கனவான். மோடோ என்றும் மாகூ என்றும் பெயர்.

க்ளஸ்டர் : நமது சதையும் ரத்தமும், அரசே, மிகவும் கெட்டு விட்டதால் அது தன்னை ஈன்றவரையே வெறுக்கிறது.

எட்கார் : டாம் குளிரால் நடுங்குகிறான்.

க்ளஸ்டர் : என்னுடன் வாருங்கள். என்னுடைய கடமை தங்களுடைய மகளின் எல்லாக் கட்டளைகளையும் பணியுமாறு அனுமதிக்காது. அவர்களுடைய கட்டளை என் கதவை அடைத்துத் தங்களை இந்தக் கொடிய இரவிற்குப் பலியாக விடவேண்டுமென்பதானாலும் நான் தங்களைக் கண்டுபிடித்துத் தங்களை எங்கே சாப்பாடும் படுக்கையும் தயாராக இருக்கிறதோ அங்கு அழைத்துச் செல்லத் துணிந்து வந்திருக்கிறேன்.

லியர் : முதலில் நான் இந்த ஞானியுடன் பேசப்போகிறேன். இடியின் காரணம் என்ன?

கென்ட் : அரசே, அவர் சொல்வதை ஏற்றுக்கொண்டு வீட்டிற்குள் செல்லுங்கள்.

லியர் : நான் இந்தக் கற்றுணர்ந்த கிரேக்கனுடன் ஒரு வார்த்தை பேசவேண்டும். நீ என்ன கற்றிருக்கிறாய்?

எட்கார் : பேயை வராமல் தடுக்கவும் கொள்ளைப் பூச்சிகளை ஒழிக்கவும்.

லியர் : உன்னை ரகசியமாக ஒன்று கேட்க்க விரும்புகிறேன்.

கென்ட் : பிரபுவே! அவரை மறுபடியும் புறப்படும்படி வேண்டுங்கள். அவருடைய மூளை சிதரத் தொடங்கிவிட்டது.

க்ளஸ்டர் : அவரைக் குறைசொல்லமுடியுமா? அவருடைய பெண்கள் அவரைக் கொல்ல விரும்புகிறார்கள். ஆ! அந்த நாடு கடத்தப்பட்ட எளிய மனிதன், நல்ல கென்ட், இம்மாதிரியாகுமென்றார். நீ அரசருக்குப் பித்தம் பிடிக்கிறதென்று சொல்கிறாய். நண்பனே, நானும் அநேகமாகப் பித்துப்பிடித்தவனைப்போலவே இருக்கிறேன். எனக்கு ஒரு மகனிருந்தான். அவனை என் வம்சத்திலிருந்தே பிரஷ்டம் செய்துவிட்டேன். சமீபத்தில், இப்பொழுதுதான், அவன் என்னைக் கொல்ல நினைத்தான். நான் அவனை மிகவும் நேசித்தேன். என்னைவிட வேறு எந்தத் தந்தையும் தன் மகனை அவ்வளவு நேசித்திருக்கமாட்டான். அந்த துக்கம் என் மூளையைச் சிதற அடித்துவிட்டது. ஆ! எத்தகைய இரவு இது? தங்களை வேண்டிக்கொள்கிறேன். அரசே!

லியர் : என்னை மன்னியுங்கள் ஐயா. மிகச்சிறந்த யோகியே, உங்களுடைய சம்பாஷணம்.

எட்கார் : டாம் குளிரால் பாதிக்கப்படுகிருன்.

கிளஸ்டர் : அடே, குடிசைக்குள் செல். உள்ளே குளிருக்கு அடக்கமாக இரு.

லியர் : வாருங்கள். நாம் எல்லோரும் உள்ளே செல்வோம்.

கென்ட் : இந்தப்பக்கம் வாருங்கள், அரசே !

லியர் : அவனுடன், நான் என் ஞானியுடன் இன்னும் இருக்க விரும்புகிறேன்.

கென்ட் : பிரபுவே ! அவரைச் சமாதானப்படுத்துங்கள். அவர் அவனை அழைத்துச் செல்லட்டும்.

கிளஸ்டர் : அவனை நீங்கள் அழைத்து வாருங்கள்.

கென்ட் : அடே, வா. எங்களுடன் செல்லலாம்.

லியர் : வா. நல்ல ஏதென்ஸ் நகரத்தானே.

கிளஸ்டர் : பேசாதீர்கள், பேசாதீர்கள். அமைதி.

எட்கார் : ரோலண்டு இருட்டுக் கொட்டகைக்கு வந்தான். பூதத்தின் முழக்கம் "பை, போ, பம், நான் ஒரு பிரிட்டிஷ்காரனுடைய ரத்தத்தை முகர்கிறேன்" என்றே இருந்தது.

அங்கம் 3—காக்ஷி 5

(கார்ன்வாலும், எட்மண்டும் வருகிருர்கள்)

கார்ன்வால் : நான் அவன் வீட்டைவிட்டுச் செல்லுமுன் என் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்வேன்.

எட்மண்ட் : அது எப்படி பிரபுவே ! ராஜ விஸ்வாசத்திற்காகத் தந்தையிடமுள்ள அன்பை விட்டான் என்பதற்காகப் பலரும் என்னைக் கண்டிப்பார்கள் என்ற ஒருவித பயம் என்னைப் பீடிக்கிறது.

கார்ன்வால் : உன்னுடைய சகோதரனுடைய துர்குணம்தான் அவனை இவருடைய மரணத்தை விரும்பச்செய்ததென்று கூறமுடியாதென்பதை நான் காண்கிறேன். இவருடைய கண்டிக்கப்படவேண்டிய கெட்டதன்மையே அவனுடைய நற்குணத்தையும் தூண்டியது.

எட்மண்ட்: நான் நியாயமாக நடந்துகொள்வதற்கு வருந்த என்னுடைய விதி எவ்வளவு கொடியது? இதுதான் அவர் சொன்ன கடிதம். அது ப்ரான்ஸ் அரசரின் சகாயத்திற்கு இவர் தெரிந்து கொண்டே உட்கையாக இருக்கிறார் என்பதை நிரூபிக்கிறது. ஓ, கடவுளே! இந்த ராஜத்துரோகம் இல்லாமலிருக்கலாகாதா? அல்லது, நானு அதைக்கண்டுபிடித்தவனாகவேண்டும்.

கார்ன்வால்: என்கூடச் சீமாட்டியிடம் வா.

எட்மண்ட்: இந்தக் கடிதத்தில் கண்டவிஷயம் உண்மையானால் உங்களுக்குப் பெருத்தவேலையிருக்கிறது.

கார்ன்வால்: உண்மையோ, பொய்யோ! அது உன்னைக் கிளஸ்டர் பிரபுவாகச் செய்துவிட்டது. உன் தகப்பன் எங்கு இருக்கிறார் என்று பார். அவருக்குரிய தண்டனைக்குத் தயாராகட்டும்.

எட்மண்ட்: அவர் அரசனுடைய பணிவிடையில் ஈடுபட்டிருந்தால் அது நமது சந்தேகத்தைப்பலப்படுத்தும். நான் ராஜ விஸ்வாசப் பாதையில் செல்வதை—அதனால் என் ரத்தபாசத்திற்கும் அன்பிற்கும் முரண்பட்டாலும், துடர்ந்துசெய்வேன்.

கார்ன்வால்: நான் உன்னிடம் பரிபூர்ண நம்பிக்கைவைக்கிறேன். நீ என் அன்பில் ஒரு தந்தையைக்காண்பாய். (செல்கிறார்கள்.)

அங்கம் 3—காக்ஷி 6

(கிளஸ்டரும், கென்டும் வருகிறார்கள்.)

கிளஸ்டர்: வெட்ட வெளியைவிட இதுமேல். இதை நன்றியுடன் ஏற்றுக்கொள்ளுங்கள். இன்னும் என்னாலானதைச்செய்து உங்களுடைய சௌகர்யத்தைப் பூர்த்திசெய்வேன். உங்களைவிட்டு வெகு நேரம் இருக்கமாட்டேன். (போகிறார்.)

கென்ட்: அவருடைய ஞாபகசக்தி எல்லாம் அவருடைய பொறுமையின்மையால் போய்விட்டது உங்களுடைய அன்பிற்குக் கடவுள் அருள்புரிவாராக.

(லியர், எட்கார், விதூஷகன் வருகிறார்கள்.)

எட்கார்: ப்ராட்டட்டோ என்னை அழைக்கிறான். நீரோ இருள் ஏரியில் மீன் பிடிக்கிறவன் என்று சொல்கிறான். குற்றமற்றவர்களே தொழுங்கள். கொடிய பேயைக்குறித்து ஜாக்கிரதையாக இருங்கள்.

விதூஷகன்: மாமா, ஒரு பயித்திக்காரன் கனவானா, பாட்டாளியா சொல்லுங்கள்.

லியர்: ஒரு அரசன். ஒரு அரசன்.

விதூஷகன்: இல்லை. அவன் ஒரு பாட்டாளி. அவனுக்கு ஒரு கனவான்மகன். தன் முன்னால் தன் மகனைக் கனவானாகக்காண்பவன் ஒரு பயித்தியக்கார உழவன்.

லியர்: அவர்கள்மேல் சீறிக்கொண்டுவரும் சிவந்த எரிந்து கொண்டிருக்கிற நாக்குகள் ஆயிரம்வேண்டும்.

எட்கார்: அந்தக் கொடியபேய் என் முதுகைக்கடிக்கிறது.

விதூஷகன்: ஓநாய் பழகிப் படிந்துவிட்டதென்றும், குதிரை சௌக்கியமாயிருக்கிறதென்றும், பையனுடைய அன்பையும், வேசியர் பிராமணத்தையும் நம்புகிறவன் பயித்தியமே.

லியர்: அது செய்து தீரவேண்டும். நான் அவர்களை நேராகக் குற்றம்சாட்டி விசாரிப்பேன். வாரும் கற்றுணர்ந்த நீதிபதியே! இங்கு அமரும். அறிவிற்சிறந்த ஐயா, நீங்கள் இங்கு உட்காருங்கள். பெண் நரிகளே நீங்கள்—

எட்கார்: அவர் எங்கு நின்றுகொண்டு பார்க்கிறார்—கவனி. சீமாட்டி, நீ, காதற்பார்வை பார்க்கிறாயா? பெஸ்ஸி என்னிடம் சிற்றோடையைத் தாண்டிவா.

விதூஷகன்: அவளுடைய படகில் ஓர் ஓட்டை இருக்கிறது உன்னிடம் அவள் ஏன் வரப் பயப்படுகிறாள் என்பதை அவள் சொல்லக்கூடாது.

எட்கார்: அந்தக் கொடிய பிசாசு ஒரு நைட்டிங்கேல் பக்ஷியின் குரலில் டாமைப் பயமுறுத்திக்கொண்டிருக்கிறது. ஷாப் டான்ஸ், டாமின் வயிற்றிலிருந்து இரண்டு வெள்ளைக் கடல்மீன்கள் கேட்கிறது. கருப்பு தேவதூதனே! நீ கத்த வேண்டாம். என்னிடம் உனக்கு ஆகாரமில்லை.

கென்ட்: தங்களுக்கு எவ்வாறிருக்கிறது? இம்மாதிரி திகைத்து நிற்கவேண்டாம். தாங்கள் படுத்துக்கொண்டு இந்தத் தலையணையில் சிரமம் தீர்த்துக்கொள்ளுங்கள்.

லியர்: நான் முதலில் அவர்களை விசாரிப்பேன். அவர்கள் சாக்ஷியத்தைக் கொண்டுவாருங்கள். ஐயா, உரிய ஆடை அணிந்த

நீதிபதி! உம்முடைய ஸ்தானத்திலமரும்; அவருடைய தர்ம நியாய சகாவான நீர் அவர்பக்கலில் அமரும். நீரும் இந்த வியாஜ்யத்தை விசாரிக்கும் குழுவில் சேர்ந்தவர். நீரும் உட்காரும்.

எட்கார் : நாம் நியாயமாக நடந்துகொள்வோம். குதூகலமாயிருக்கும் ஆயனே! நீ தூங்கினாலும் விழித்தாலும் உன் ஆடுகள் தான்ய மண்டியில் இருக்கட்டும். உன் சிறிய வாயின் ஒரு கொட்டாவியால் உன் ஆட்டுக்கிடைக்கு யாதொரு தீமையும் ஏற்படாது. பர் என்னும் பூனை பழுப்பு நிறமாயிருக்கிறது.

லியர் : அவளை முதலில் விசாரியுங்கள். அதுதான் கானரில். இந்த கனவான்கள் நிறைந்த சபையின்முன் சத்யமாகப் பிரமாணம் செய்து சொல்கிறேன். அவள் தன் தந்தையை—அரசனை, உதைத்து விரட்டினுள்.

விதூஷகன் : இங்கு வாருங்கள் அம்மா. உங்கள் பெயர் கானரில்.

லியர் : அதை அவள் மறுக்கமுடியாது.

விதூஷகன் : உங்களை மன்னிப்புக் கோருகிறேன். உங்களைத் தவறுதலாக ஒரு தொகுப்புக் குறிச்சியாக எண்ணினேன்.

லியர் : இங்கு மற்றொருவளிருக்கிருள். அவளுடைய கடுமையான பார்வை அவள் எப்படிப்பட்டவள் என்பதைத் தெரிவிக்கிறது. அவளை அங்கேயே நிறுத்துங்கள். ஆயுதங்கள், கத்தி, நெருப்பு, இங்கு வஞ்சம் தாண்டவமாடுகிறது. நீதி தவறிய நீதிபதியே அவளை ஏன் தப்பவிட்டாய்?

எட்கார் : தாங்கள் ஐம்புலன்களையும் ரக்ஷியுங்கள்.

கென்ட் : ஐயோ, பாவம். ஐயா, நீங்கள் பன்முறை கூறிய அந்தப் பொறுமை எங்கே?

எட்கார் : என்னுடைய இரக்கம் அவர் பால் அதிகரித்து வருவதால் என் மாறுவேடத்திற்கு இடஞ்சல் செய்கிறது.

லியர் : ட்ரே, பிளான்ச், ஸ்வீட்ஹார்ட் என்ற சிறு நாய்கள்கூட, பாருங்கள், என்னைப் பார்த்துக் குலக்கின்றன.

எட்கார் : டாம் தன்னுடைய தலையை அவைகள்பால் நீட்டுவான். நாய்களே நீங்கள் செல்லுங்கள். உங்களுடைய வாய் கருப்பாயிருந்தாலும் சரி, வெளுப்பாயிருந்தாலும் சரி, கடித்தால் பற்கள் விஷமுள்ளவையாக இருந்தாலும் சரி, மாஸ்டிவ், கிரேஹவுண்டு, மாங்கரல்,

ஹவுண்டு, ஸ்பானியல் எத்தகைய வாலுடையதாயினும் அவைகளை டாம் அழுது ஊளை இடச் செய்வான். நான் என் தலையை இப்படிக் காட்டினால் போதும் நாய்கள் வேலியைத் தாண்டிக் குதித்து எல்லாம் ஓடிவிடும். டூ. டீ, டீ, டீ. செஸ்ஸி, வா. சந்தைகளுக்கும் விழாக் களுக்கும், சந்தைகளுள்ள ஊர்களுக்கும் செல்வோம். ஏழை டாமின் உள் பை காலியாக இருக்கிறது.

லியர் : அப்படியானால் ரீகனின் சரீரத்தைப் பரீக்ஷிக்கட்டும். அவள் இருதயத்தில் என்ன வளர்கிறது என்று பார்க்கட்டும். இம்மாதிரி இறக்கமற்ற கடின இதயங்களாவதற்கு இயற்கையில் என்ன காரண மிருக்கிறது? ஐயா, தங்களை நான் என் நூற்றுவரில் ஒருவராகக் கொள்கிறேன். ஆனால் உங்களுடைய ஆடை அணியும் மாதிரிதான் எனக்குப் பிடிக்கவில்லை. அவை பாரசீகதேச நாகரீகம் என்னலாம். ஆனால் நீங்கள் அதை மாற்றியாகவேண்டும். (கிளஸ்டர் வருகிறார்.)

கிளஸ்டர் : நல்லது பிரபுவே. இங்கே படுத்துக்கொண்டு கொஞ்சம் இளைப்பாறுங்கள்.

லியர் : சத்தம் போடாதீர்கள். சத்தம் போடாதீர்கள். திரை களை இழுத்து விடுங்கள். அப்படி. நாம் காலையில் சாப்பாட்டிற்குச் செல்வோம்.

விதூஷகன் : நான் நண்பகலில் தூங்கச்செல்வேன்.

கிளஸ்டர் : என் நண்பனே இங்கு வா. என் எஜமானனை அரசர் எங்கே?

கென்ட் : இங்கே இருக்கிறார் ஐயா, ஆனால் அவரை தொந்தரவு செய்யவேண்டாம். அவருடைய மூளை சபலித்துவிட்டது.

கிளஸ்டர் : நண்பனே அவரை உங்கள் கரத்தால் எடுத்துச் செல்லுங்கள். அவரைக் கொல்லச் செய்யப்படும் சதியை நான் மறைந் திருந்து கேட்டேன். இங்கு ஒரு சிறு குதிரை வண்டி இருக்கிறது. அதில் அவரைக் கிடத்தி டோவருக்கு ஓட்டிச் செல்லுங்கள். அங்கு உங்களுக்கு வரவேற்பும் பாதுகாப்பும் கிடைக்கும். உன் எஜமானைத் தூக்கிச் செல். இன்னும் அரை மணி நேரம் தாமதம் செய்தால், அவரும், நீயும், மற்றும் அவரைக் காக்கத் துணிந்த யாவரும் நாசமடை வது நிச்சயம். இட்டுச் செல், செல். உங்களுக்குச் சீக்கிரம் செல் வதற்கு வேண்டியவற்றை அளிக்க என்னுடன் வா.

கென்ட் : [பாடுபட்ட சரீரம் உறங்குகிறது. இந்த ஓய்வு ஒருக்கால் உங்களுடைய தளர்ந்த நரம்புகளுக்கு மருந்தாகக் குணமளித் திருக்கும். ஓய்வில்லாவிட்டால் குணப்படுத்துவது கடினம். வாருங்கள்.

எஜமானனைத் தூக்கிச்செல்ல உதவுங்கள். தாங்கள் பின்தாங்குவது சரியல்ல.]

கிளஸ்டர்: வாருங்கள் செல்வோம்.

(எட்காரைத் தவிர மற்றவர்கள் செல்கிறார்கள்.)

எட்கார்: [நமக்கு மேலானவர்கள் நமது கஷ்டங்களைத் தாங்குவதைக் காணும்பொழுது நமது கஷ்டங்களை நமது விரோதிகள் என்று நாம் நினைப்பதில்லை. கவலையற்ற தளைப்படாத வஸ்துக்களையும் ஆனந்தமான காக்ஷிகளையும் பின்னால் விட்டுவிட்டுத் தனியாகத் துக்கிப்பவன் மனதில் மிகவும் வருந்துகிறான். துக்கத்தில் பங்கெடுத்துக் கொள்ளச் சகாக்களிருந்து பகிர்ந்துகொள்ளும்பொழுது, என்னை வளையச் செய்வது அரசனையும் வணங்கும்படி செய்யும்பொழுது, என்னுடைய துன்பம் எவ்வளவு அற்பமாகவும் தாங்கத்தக்கதாகவுமிருக்கிறது. நான் எவ்வாறு தந்தையை அடைந்தேனோ அவ்வாறு அவர் குழந்தைகளை அடைந்தார். டாம் சென்றுவிடு. பேரிரைச்சலைக் கவனி. நீ ஓடிப்போய்விடு. எப்பொழுது தவறான அபிப்பிராயத்தின் தப்பான எண்ணங்கள் உன்னை மாசுடையவனாகச் செய்கின்றனவோ, அவைகளை உன்னுடைய சரியான ருஜுக்களால் மாற்றி உன்னைப் பழையபடியாகச் செய்கின்றனவோ அப்பொழுது உன்னை வெளிப்படுத்து. இன்றிரவு இன்னும் என்ன நடக்குமோ? அரசன் க்ஷேமமாகத் தப்பிச் செல்லட்டும். ஒளிந்துகொள். ஒளிந்துகொள்.]

(போகிறான்.)

அங்கம் 3—காக்ஷி 7

(கார்ன்வால், ரீகன். கானரில், எட்மண்ட், வேலையாட்கள் வருகின்றனர்)

கார்ன்வால்: தங்கள் புருஷனுக்கு மிகவும் வேகமாக இந்தக் கடிதத்தைக் காண்பிக்கும்படி ஆளனுப்ப வேண்டும். ப்ரான்ஸின் படை இறங்கிவிட்டது. அந்தத் துரோகி கிளஸ்டரைக் கண்டுபிடித்துக் கொண்டு வாருங்கள். (ஒரு சேவுகன் வருகிறான்.)

ரீகன்: அவரை இந்த க்ஷணமே தூக்கிவிடுங்கள்.

கானரில்: அவர் கண்களைப பிடுங்கிவிடுங்கள்.

கார்ன்வால்: அவரை என்னுடைய கோபத்திற்கு விட்டுவிடுங்கள். எட்மண்ட் உன் சகோதரியுடனிரு. உன்னுடைய துரோகியான தந்தையின்மேல் நாம் வஞ்சம் தீர்க்கும் முறைகள் உன் பார்வைக்குத் தக்கவை அல்ல. நீங்கள் ட்யூக்கிடம் சென்று அவரை மிகவும் பிரயோஜனமான முறையில் தயாராகும்படி சொல்லுங்கள். நாமும் அதே போல் தயாராவோம். நமது தகவல்கள் வேகமானதாகவும் நம்முள் ரகசியமானதாகவுமிருக்கவேண்டும். அருமைத் தங்கையே, என் கிளஸ்டர் பிரபுவே, க்ஷேமமாயிருங்கள். விடைபெற்றுக்கொள்கிறேன். (கார்யஸ்தன் வருகிறான்.) என்ன விஷயம்? அரசர் எங்கே?

காரியஸ்தன்: என்னுடைய கிளஸ்டர் பிரபு அவரை இங்கிருந்து அனுப்பிவிட்டார். 35, 36 வீரர்கள், நல்ல குதிரை வீரர்களும் இன்னும் சில பிரபுக்களுடனும் சகாக்களுடனும் இடையே சந்தித்து எல்லோரும் டோவருக்குச் செல்கின்றனர். அங்கே அவர்களுக்கு நல்ல பலமான ஆயுதம்தாங்கிய நண்பர்களிருப்பதாக கூறுகிறார்கள்.

கார்ன்வால்: உன் எஜமானிக்குக் குதிரைகள் கொண்டுவா.

கானரில்: அன்பார்ந்த பிரபுவே, தங்கையே, க்ஷேமமாயிருங்கள். விடைபெற்றுக்கொள்கிறேன்.

(கானரில், எட்மண்ட், கார்யஸ்தன் செல்கின்றனர்.)

கார்ன்வால்: எட்மண்ட், விடைபெற்றுக்கொள். அந்த துரோகி கிளஸ்டரைக் கண்டுபிடி. அவனைத் திருடனைப்போல் கட்டு. என் முன் கொண்டுவந்து சேருங்கள். நாம் நீதியின் முறைப்படிக் கல்லாமல் அவர் உயிரை போக்காவிடினும் நமது சக்தி நமது கோபத்திற்கு கவ்ரவம் கொடுக்கவேண்டும். அதை ஜனங்கள் கண்டிக்கலாம். ஆனால் தடுக்கமுடியாது. (கிளஸ்டரும், வேலையாட்களும் வருகின்றனர்.) அங்கே யார்? துரோகியா?

ரீகன்: நன்றிகெட்ட நரி. அவர்தான்.

கார்ன்வால்: அவருடைய சுருக்கம்விழுந்த கைகளை நன்றாகக் கட்டுங்கள்.

கிளஸ்டர்: ட்யூக் அவர்கள் என்ன உத்தேசித்திருக்கிறார்கள்? என் நண்பர்களே, நீங்கள் என் விருந்தினர்கள் என்பதை மறவாதீர்கள். எனக்கு யாதொரு தீங்குமிழைக்காதீர்கள். நண்பர்களே!

கார்ன்வால்: நான் உத்தரவிடுகிறேன். அவரைக் கட்டுங்கள்.

ரீகன்: பலமாக, பலமாக. கேவலமான துரோகியே!

கிளஸ்டர் : இரக்கமற்ற பெண்ணே ! நான், நீ கூறுபவைகளில் ஒன்றுமல்ல.

கார்ன்வால் : இந்த நாற்காலியுடன் சேர்த்துக் கட்டுங்கள். துராத்மாவே, நீ காண்பாய்.

கிளஸ்டர் : கருணையுள்ள தெய்வத்தின்மீது ஆணை. என் தாடி மயிரைப்பற்றிப் பிடுங்கி மிகவும் கேவலமாக நடத்துகிறீர்கள்.

ரீகன் : அவ்வளவு நரை, ஆயினும் அத்தகைய துரோகி.

கிளஸ்டர் : துஷ்டச் சிமாட்டி ! என்னுடைய முகத்திலிருந்து நீ பிடுங்கி எறியும் இந்த மயிர்கள் வளர்ந்து உன்னைத் தூஷிக்கும். நான் உங்களுக்கு விருந்தளிப்பவன். என்றால் விருந்தளிக்கப்பட்ட நீங்கள் கொள்ளைக்காரர்களின் கைகளோடு இம்மாதிரி துன்பமிழைக்கக் கூடாது. நீ என்ன செய்யக்கூடும் ?

கார்ன்வால் : வாரும் ஐயா, ப்ரான்ஸிலிருந்து என்ன கடிதங்கள் உமக்கு வந்தன.

ரீகன் : நேராகச் சுருக்கமாக பதில் சொல்லும். எங்களுக்கு உண்மை தெரியும்.

கார்ன்வால் : சமீபத்தில் வந்திறங்கிய துரோகிகளுடன் நீர் என்ன சூழ்ச்சி செய்திருக்கிறீர் ?

ரீகன் : அவர்களிடம் நீர் பயித்தியம்பிடித்த அரசனை அனுப்பி யிருக்கிறீர். சொல்லும்.

கிளஸ்டர் : எனக்குப் பொதுவாக உள்ள ஒரு இடம்—எதிரி தரப்பல்ல—அங்கிருந்து சந்தேகத்தைத் தெரிவிக்கும் முறையில் ஒரு கடிதம் வந்தது.

கார்ன்வால் : சாமர்த்தியசாலி.

ரீகன் : பொய்.

கார்ன்வால் : நீங்கள் அரசனை எங்கு அனுப்பினீர்கள் ?

கிளஸ்டர் : டோவருக்கு.

ரீகன் : டோவருக்கு எதற்காக ? அதற்குப் பதில் சொல்லும்.

கிளஸ்டர் : என்னைக் கழுவில் கட்டப்பட்டிருக்கிறது. நான் அதை அனுபவித்தாகவேண்டும்.

ரீகன் : எதற்காக டோவருக்கு ?

க்ளஸ்டர் : உன்னுடைய கொடிய நகங்கள் அவருடைய முதிய கண்களைப் பிடுங்கி எறிவதைக் காண நான் விரும்பாததால் ; உன் கோபம் மிக்க தமக்கை அவளுடைய கோரப் பற்களால் அவருடைய திருவபிஷேகம் செய்யப்பட்ட சரீரத்தைக் கடிக்காமலிருக்க, அந்த நரகலோகம்போல் கருத்த இரவில் அவருடைய மூடப்படாத தலை தாங்கிய அந்தப் புயலால் எழுப்பப்பட்ட கடல் பொங்கி எழுந்து நக்ஷத்திரங்களை எல்லாம் அணைத்திருக்கும். ஆயினும் பரிதாபமான அந்த முதிய இதயம் மழை பொழியுமாறு கடவுளை வேண்டியது. அந்தக் கொடிய நேரத்தில் ஓநாய்கள் உன் வாயிலில் நின்று ஊளையிட்டிருந்தால், நீ, "வாயிற்காப்போனே, கதவைத்திற, அவர்கள் முன் செய்த கொடிய காரியங்களை மறந்துவிடு" என்று கூறியிருப்பாய். இம்மாதிரியான குழந்தைகளைக் கடவுளின் வஞ்சம் வெகுசீக்கிரம் பிடிப்பதை நான் காண்பேன்.

கார்ன்வால் : நீ ஒருக்காலும் பார்க்கமாட்டாய். அடே, நாற்காலியில் பிணித்துக்கட்டு. உன்னுடைய இந்தக் கண்களை முதலில் தண்டிப்பேன்.

க்ளஸ்டர் : தான் கிழவனாகும்வரை வாழ்வேன் என்று நினைப்பவன் எனக்கு உதவி செய்யட்டும். ஓ ! கொடுமை. கொடுமை.

ரீகன் : ஒருபக்கம் மற்றதையும் நகும். மற்றதையும் போக்கும்.

கார்ன்வால் : நீ கடவுளின் தண்டனையைக் காண்பாயா ?

முதல் வேலையாள் : உங்கள் செய்கையை நிறுத்துங்கள், பிரபுவே. நான் என் குழந்தைப் பருவத்திலிருந்து உங்களுக்குத் தொண்டாற்றியிருக்கிறேன். ஆனால் இப்பொழுது உங்களை மேற்கொண்டு யாதொன்றும் செய்யாதபடி தடுப்பதைவிடச் சிறந்த தொண்டு வேறு எப்பொழுதும் செய்ததில்லை.

ரீகன் : என்ன சமாசாரம், நாயே ?

மு. வேலையாள் : உன் முகத்தில் மீசை முளைத்திருந்தால் இந்தச் சண்டையில் அதைப் பிடித்து ஆட்டுவேன். நீ என்ன சொன்னாய் ?

கார்ன்வால் : என்னுடைய அடிமையா ? (அவர்கள் கத்தியை உருவிச் சண்டை செய்கின்றனர்).

மு. வேலையாள் : அப்படியானால் வா. கோபத்தின் பலனை அடைவாய்.

ரீகன் : உன் வாளைக் கொடு. ஒரு குடியானவன் இவ்விதம் எதிர்ப்பதா ? (அவள் வாளை எடுத்துக்கொண்டு அவனைப் பின்புறமாகக் குத்துகிறாள்).

மு. வேலையாள் : ஓ! நான் கொல்லப்பட்டேன். என் பிரபுவே! அவனுக்கு என்ன துன்பம் நேரிடுகிறதென்பதைப் பார்க்கத் தங்களுக்கு இன்னும் ஒரு கண் இருக்கிறது. ஐயோ! (இறக்கிறான்).

கார்ன்வால் : அது இன்னும் அதிகம் பார்க்கக்கூடும். அதைத் தடுத்துவிடு. மாமிசப் பிண்டமே, வெளியேறு. உன்னுடைய ஒளி இப்பொழுது எங்கே?

கிளஸ்டர் : ஒரே இருள்மயம். துன்பக்கடல்! என் மகன் எட்மண்ட் எங்கே! எட்மண்ட், இந்த நினைப்பதற்கே கொடிய செய்கையைப் பழிவாங்க உன் கோபத்தணலை ஒளிவீசச்செய்.

ரீகன் : தீயோனே! வெளியேறு. உன்னை வெறுக்கிறவனுடைய உதவியை நீ நாடுகிறாய். அவன்தான் உன்னுடைய இந்தத் துரோகங்களை எல்லாம் எங்களுக்குத் தெரிவித்தது. அவன் மிகவும் நல்லவன். உன்பேரில் இரக்கம் கொள்ளான்.

கிளஸ்டர் : ஐயோ! என் மடமை! அவ்வாறாயின் எட்கார்மேல் பொய்க்குற்றம் சாட்டப்பட்டது. இரக்கமுள்ள தெய்வங்காள், என்னை மன்னியுங்கள். அவனுக்கு க்ஷேமத்தைக் கொடுங்கள்.

ரீகன் : அவனைக் கதவிற்கு வெளியே தள்ளுங்கள். அவன் டோவருக்குத் தன் வழியை முகர்ந்துகொண்டு செல்லட்டும். (ஒருவன் கிளஸ்டரை அழைத்துச்செல்கிறான்.) பிரபுவே! எப்படி இருக்கிறது.

கார்ன்வால் : எனக்குக்காயம் ஏற்பட்டிருக்கிறது. என்னுடன் வாருங்கள். அந்தக் கண்ணில்லாத அயோக்கியனை விரட்டுங்கள். இந்த அடிமையைக் குப்பைமேட்டில் எறியுங்கள். ரீகன்! என் காயத்திலிருந்து அதிகமாக ரத்தம் வெளியேறுகிறது. இந்தக் காயம் அகாலத்தில் ஏற்பட்டிருக்கிறது. தங்கள் கரத்தால் என்னைத் தாங்குங்கள். (செல்கிறார்கள்.)

2-வது வேலையாள் : இந்த மனிதனுக்கு நன்மை ஏற்படுமானால் நான் எத்தகைய பாபம் செய்கிறேன் என்பதைப்பற்றியே சிந்திக்க மாட்டேன்.

3-வது வேலையாள் : அவள் நெடுநாள் ஜீவித்தபின் இயற்கையாக மரணத்தை அடைவாளானால் எல்லா ஸ்திரிகளும் பூதங்களாக மாறிவிடுவார்கள்.

2-வது வேலையாள் : நாம் பழைய பிரபுவைப் பின்பற்றிச் சென்று அந்தக் கிழவனை அவரை எங்கேயாவது அழைத்துச்செல்லும்

படி செய்வோம். அவனுடைய கிருக்கு வேஷம் அவனை எது செய்வதற்கும் அனுமதியளிக்கும்.

3-வது வேலையாள் : நீ போ. நான் கொஞ்சம் வெண்கருவும் சணலும் கொண்டுவந்து அவருடைய ரத்தம் ஒழுகும் முகதிற்குப் போடுகிறேன். அவருக்குத் தெய்வம் துணைசெய்யட்டும்.

(செல்கிறார்கள்.)

அங்கம் 4—காக்ஷி 1

(எட்கார் வருகிறான்)

எட்கார் : இபபடிப் பிறரால் தெரிந்தே தூஷிக்கப்படும் நிலையிலிருப்பது முகஸ்துதி செய்யப்பட்டும் மறைவில் இகழப்பட்டுமிருப்பதைவிடமேல். மிகவும் கேடுற்ற, கீழான, எல்லோராலும் ஏளனம் செய்யப்படும் நிலையிலிருந்தால் அது நல்லது. ஏனெனில் அவன் எப்பொழுதும் தன்னுடைய நிலைமை நன்மைக்கே மாறுமென்ற நம்பிக்கையுடனிருப்பான். பயமில்லாமல் வாழ்வான். மேலான நிலையிலிருந்து தாழ்வான நிலையுறும்பொழுதுதான் வருந்தத்தக்கது. தாழ்வுற்றவன் சந்தோஷத்தை மறுபடியும் பெறுகிறான். நான் தழுவிய இந்த எளிய வேடம் வரவேற்கத்தக்கதே. நீ மிகவும் கீழான நிலைமைக்குத் தள்ளிய அந்த ஏழை மனிதன் உன் சுழல் காற்றுகளுக்கு எவ்விதத்திலும் கடன் பட்டவனுயில்லை.

(க்ளஸ்டரும் ஓர் கிழவனும் வருகிறார்கள்)

இங்கு யார் வருகிறார்கள்? என் தகப்பனார்! இம்மாதிரி கேவலமான நிலையில் அழைத்துவரப்படுகிறார்! உலகமே, உலகமே, ஓ! உலகமே! உன்னுடைய விசித்திரமான மாறுதல்கள் உன்னை நாங்கள் வெறுக்கும்படி செய்கின்றன. உயிர் வயதானதற்காகச் செல்வதில்லை.

கிழவன் : என் நல்ல பிரபுவே! நான் இந்த 80 வருஷங்களாகத் தங்களுடையவும் தங்கள் தந்தையுடையவும் குடியானவனாக இருந்து வந்திருக்கிறேன்.

க்ளஸ்டர் : சென்றுவிடு. அன்பனே, அகன்றுசெல். உன்னுடைய ஆறுதல்கள் எனக்கு யாதொரு நன்மையும் தராது. உனக்கும் அவர்கள் தீங்கிழைக்கக்கூடும்.

கிழவன் : நீங்கள் வழி தெரிந்து செல்லமுடியாதே.

கிளஸ்டர் : எனக்கு இனி யாதொரு வழியும்கிடையாது. அதனுல் எனக்குக் கண்கள் தேவையில்லை. கண் இருந்தபொழுது நான் சரியாகப் பார்க்கத்தவறினேன். நம்முடைய பலமும் பணமும் நம்மை அஜாக்கிரதையில் ஆழ்த்துகின்றனவென்றும் நமது குறைகளே நமக்கு உதவி செய்பவை என்றும் நாம் சாதாரணமாகக் காண்கிறும். ஆ! அன்பிற்குரிய மகன் எட்கார்—ஏமாற்றப்பட்ட உன் தந்தையின் கோபத்திற்கிலக்கானவனே, நான் உன்னைத் தொட்டுப்பார்ப்பதற்காவது ஜீவித்திருந்தால் நான் கண்ணுள்ளவனுவேன் என்று கூறுவேன்.

எட்கார் : கடவுளே! நான் எல்லாவற்றிற்கும் கீழான நிலையி லிருக்கிறேன் என்று யாரால் சொல்லமுடியும்? நான் எப்பொழுதும் இருந்ததைவிட இப்பொழுது அதிகம் கேவலஸ்திதிக்கு வந்துவிட்டேன்.

கிழவன் : அது பயித்தியக்காரடாம் :

எட்கார் : இன்னும் அதிகம் தாழ்வான நிலையை நான் அடையலாம். நாம் இதுதான் மிகவும் தாழ்வான நிலை என்று சொல்லக் கூடியதாயிருந்தால் அது அந்நிலையாகாது.

கிழவன் : அடே, நீ எங்கே போகிருய்?

கிளஸ்டர் : அது ஒரு பிச்சைக்காரனு?

கிழவன் : பயித்தியக்காரனும் பிச்சைக்காரனும்.

கிளஸ்டர் : அவனுக்குக் கொஞ்சம் அறிவிருக்கவேண்டும். இல்லாவிட்டால் அவன் பிச்சைக் கேட்கமாட்டான். நேற்றிரவு அடித்த புயலில் நான் அம்மாதிரியான ஒருவனைப் பார்த்தேன். அவனைப் பார்த்தபொழுது எனக்கு மனிதன் ஒரு புழுவிற்கு சமானம் எனத் தோன்றியது. அப்பொழுது என்னுடைய மகன் ஞாபகம் வந்தது. ஆயினும் அப்பொழுது என் மனது அவனுடன் நேசமாயில்லை. நான் இப்பொழுது வெகு விஷயங்கள் தெரிந்துகொண்டேன். துஷ்டப் பையன்களுக்கு வண்ணுத்திப்பூச்சி எப்படியோ அவ்வாறே நாம் தெய்வங்களுக்கு அவர்களுடைய பொழுதுபோக்கிற்காக நம்மைக் கொல்கிருர்கள்.

எட்கார் : அது எப்படி இருக்கும்? தன்னையும் பிறரையும் கோபத்திற்காளாக்கித் துயரத்திற்குத் தன் அறிவை இழக்கும் வியாபாரம் மிகவும் கெட்டது. எஜமானே, க்ஷேமமுண்டாகுக.

கிளஸ்டர் : இவனு அந்த நிர்வாண மனிதன் ?

கிழவன் : ஆம் பிரபுவே.

கிளஸ்டர் : நீ அகன்று செல். என்பொருட்டு நீ டோவரை நோக்கிச் செல்லும் பாதையில் ஒன்றிரண்டு மைல்கள் என்முன் சென்றால், பழைய அன்பின் காரணமாகச் செய், அத்துடன் இந்த நிர்வாண ஆத்மாவிற்கு ஏதாவது ஒரு போர்வை கொண்டுவந்து கொடு. அதை நான் எனக்கு வழிகாட்டுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

கிழவன் : ஐயோ, அவன் பயித்தியம்.

கிளஸ்டர் : இது காலத்தின் கொடுமை. குருடர்களைப் பயித்தியங்கள் வழிகாட்டிச் செல்வது. நான் சொல்கிறபடி செய், அல்லது உன்னிஷ்டம். எல்லாவற்றையும்விட நீ போய்ச் சேர்.

கிழவன் : என்னிடத்திலுள்ள மிகச்சிறந்த ஆடையைக் கொண்டு வருகிறேன். அதனால் வருவது வரட்டும். (போகிறான்.)

கிளஸ்டர் : அடே ! நிர்வாணப்பயலே.

எட்கார் : ஏழை டாம் குளிரால் வருந்துகிறான். நான் இனியும் தாங்கமுடியாது.

கிளஸ்டர் : இங்கு வா, பையா.

எட்கார் : ஆனாலும் நான் வரத்தான் வேண்டும். உங்களது இனிய கண்கள் நலமடையட்டும். அவைகளிலிருந்து ரத்தம் கொட்டுகிறதே.

கிளஸ்டர் : உனக்கு டோவருக்குச் செல்ல வழி தெரியுமா ?

எட்கார் : வேலி, கதவு, குதிரைரஸ்தா, கால்நடைப்பாதையாவும் தெரியும். பரிதாபமான டாம். அவனுடைய மூளையைச் சிதறடிக்கப் பட்டான். நல்ல மனிதன் மகனே ! கொடிய பேயிடமிருந்து நீ ரக்ஷிக்கப்படட்டும். [டாமிடம் ஒரே காலத்தில் ஐந்து பேய்களிருந்தன— பேராசைக்கு ஒபிடிகட், ஹாப்டி—டான்ஸ் என்ற ஊமைத்துரை, மாஹு என்ற திருடன், கொலைக்கு மோடோ, பலவித முகங்களுடன் பயங்காட்டுவதற்கு பிளிப்பர்டி கிப்பட். இப்பொழுது அவர்கள் பணிப்பெண்களையும் வேலைக்காரிகளையும் பிடித்துகொண்டுவிட்டார்கள். தங்களுக்கு நலமுண்டாகுக.]

கிளஸ்டர் : இதோ, இந்தப் பணப்பையைப் பெற்றுக்கொள். தெய்வங்கள் தங்களுடைய கொடுமையால் எல்லாவிதத்தாலும் தாழ்த்தப்பட்ட நீ, நான படும் துன்பத்தைக்கண்டு உன் நிலைமையைப்பற்றிச்

சந்தோஷமடைகிறுப். கடவுள் அம்மாதிரியே செய்யட்டும். தங்களுடைய நியதியைத் தனனுடைய சுயநலத்திற்காகப் பயன்படுத்தி அடிமையாக்கிக்கொள்ளும் தேவைக்குமேல் பணம் படைத்த பேராசையுள்ள பணக்காரர்கள், தாங்கள் அனுபவியாததால் பிறருடைய துன்பங்களைக் கவனியாமலிருக்கிறுர்கள். அவர்கள் விரைவில் உங்களுடைய (கடவுளுடைய) சக்தியை உணரட்டும். அதனுல் விநியோகம் அதிகப்படியாக இருப்பதைக்குறைத்து ஒவ்வொருவனும் தேவைக்குத் தக்கதைப்பெறட்டும். உனக்கு டோவரைத் தெரியுமா?

எட்கார்: எஜமானே! தெரியும்.

குளஸ்டர்: அங்கே பயங்கரமான ஆழ்கடலைத் தன் உயர்ந்த முடியால் எட்டிப்பார்ப்பதுபோல் நிற்கும் ஓர் கொடுமுடி இருக்கிறது. அதன் ஓரத்திற்கு என்னை அழைத்துச்செல். அந்த உதவிக்காக நான் என்னிடத்தில் உள்ள விலையுயர்ந்த பொருளைத்தந்து நீ தாங்கித் திரியும் உன் துன்பத்தைப்போக்குவேன். அந்த இடத்தை அடைந்த பின் எனக்கு யாரும் வழிகாட்டவேண்டாம்.

எட்கார்: உங்களுடைய கையைக்கொடுங்கள். டாம், உங்களுக்கு வழிகாட்டுவான். (செல்கிறுர்கள்.)

அங்கம் 4—காக்ஷி 2

(கானரில், எட்மண்ட், கார்யஸ்தன் வருகிறுர்கள்)

கானரில்: பிரபுவே, தங்கள் வரவு நல்வரவாகுக. நமது சாந்தமான கணவர் நம்மை வழியில் சந்திக்காதது ஆச்சர்யமே. உன்னுடைய எஜமானர் எங்கே?

காரியஸ்தன்: சீமாட்டியே, உள்ளே இருக்கிறுர். இவ்வளவு மாறுதலடைந்த மனிதனை நான் பார்த்ததில்லை. நான் வந்திறங்கியிருக்கும் படைகளைபபற்றி அவருக்குத் தெரிவித்தேன். அதைக்கேட்டுச் சிரித்தார். உங்கள் வருகையைச் சொன்னேன். பதில் இன்னும் மோசமாக இருந்தது. குளஸ்டருடைய துரோகத்தையும் அவர் மகனுடைய விசுவாசத்தையும் கூறியபொழுது அவர் என்னைக் குடிகாரமுட்டாள் என்று திட்டி, நான் எல்லாவற்றையும் தலைகீழாகக்கொட்டிக் கெடுத்துவிட்டதாகச் சொன்னுர். எதை அவர் அதிகமாக வெறுக்கவேண்டுமோ அது அவருக்கு இன்பமாக இருக்கிறது. எது விரும்பத்தக்கதோ அது வெறுக்கத்தக்கதாயிருக்கிறது.

கானரில் : இதற்குமேல் நீங்கள் செல்லவேண்டாம். அவருடைய கோழைத்தனமான பசுவைப்போன்ற பயந்த சுபாவத்தின் காரணமாக அவர் யாதொரு முயற்சியும் செய்யத் துணிவதில்லை. பதிலுக்குப்பதில் செய்து தீரவேண்டிய அவமானங்களைக்கூட அவர் பொருட்படுத்துவதில்லை. நாம் வழியில் சிந்தித்த எண்ணங்கள் கைகூடுமென்பதில் தடையில்லை. எட்மண்ட் திரும்பி என் தங்கை புருஷனிடம் செல். அவருடைய படைகளைத் திரட்டி நீயே அவைகளை நடத்து. நான் வீட்டில் பேர்களை மாற்றி விளக்குமாறை என் புருஷன் கையில் கொடுக்கவேண்டும். இந்த நம்பிக்கையுள்ள வேலையாள் நம்மிடையே தூதனுக இருப்பான். [நீ உன் பொருட்டாகவே தைரியமாக இறங்குவாயானுல்] வெகு சீக்கிரமாகவே ஒரு காதலியின் கட்டளையைக் கேட்பாய். இதை அணிந்துகொள். பேச்சைச் சுருக்கு. தலையை வணங்கு (ஒரு அடையாளமான பொருளைக் கொடுக்கிருள்) இந்த முத்தம், அது பேசுவதாயின், உன்னுடைய உற்சாகத்தை வானை எட்டிப்பிடிக்கச் செய்யும். அதைப்பற்றி யோசித்துப்பார். நலமுண்டாகுக.

எட்மண்ட் : உன்பொருட்டாக என் உயிரை அர்ப்பணிக்கத் தயார்.

கானரில் : என் அன்புமிக்க கிளஸ்டர்! (எட்மண்ட் போகிருன்). ஓ! மனிதனுக்கும் மனிதனுக்குமிடையே எவ்வளவு தாரதம்யம்! உனக்கு ஒரு ஸ்திரியின் பணி உரித்தானது. என்னுடைய முட்டாள் என் சரீரத்தை அக்ரமமாக உபயோகிக்கிருன்.

காரியஸ்தன் : சீமாட்டியே! என் எஜமானர் வருகிருர்.
(செல்கிருன்).

(ஆல்பனி வருகிருர்)

கானரில் : நான் ஒருக்காலத்தில் ஓர் நாயின் அளவிற்காவது கவனத்திற்குரியவளாயிருந்தேன்.

ஆல்பனி : கானரில்! உன் முகத்தில் இக்கடுங்காற்றுக்கொண்டு வந்தடிக்கும் இந்த தூசியின் மதிப்புக்கூட உனக்குக் கிடையாது. [நான் உன் முகத்தைக் கண்டு பயப்படுகிறேன். எவனுடைய மனம் தன் பிறப்பிடத்தையே தூஷிக்குமோ அதை யாதொரு வரம்பிற்குள்ளும் நிலைத்துநிற்குமென நம்பமுடியாது. தனக்கு ஜீவாதாரத்தையளிக்கும் மரத்திலிருந்து கிளையை ஒடித்தால் அது எவ்வாறு வாடிவதங்கி நாசத்தை அடையுமோ அதேபோல் தன் பெற்ருேரையே இகழ்கிருளோ அவள் நாசத்தை நிச்சயமாய் அடைவாள்.

கானரில் : போதும். இந்த உபதேசம் மூடத்தனம்.

ஆல்பனி: அறிவும் நல்லொழுக்கமும் தீயோர்க்குத் தீயவையாகவே தோன்றும். காக்கை உகக்கும் பிணம். நீங்கள் என்ன செய்தீர்கள்? புலிகள், பெண்கள் அல்ல, நீங்கள் செய்தது என்ன? ஒரு தந்தை, வயது முதிர்ந்த மதிப்பிற்குரிய கனவான், அவருடைய பணிவதற்குரிய தன்மையால் கரடிகூடப் பணிந்து நக்கும். அவரை மிகவும் காட்டுமிராண்டித்தனமான, இழிகுணம் படைத்த நீங்கள் பயித்தியமாக்கிவிட்டீர்கள். என்னுடைய சகோதரன் இதைச் செய்ய உங்களை அனுமதிக்கக் கூடுமா? அவரால் இவ்விதம் இளவரசனுக்கப்பட்டவன். தெய்வங்கள் தங்களுடைய சக்தியை உடனே தெரியும்படி செய்து இறங்கி இந்தக் கொடிய குற்றத்தைத் தண்டிக்காவிடில் மனித வர்க்கம் கடலில் வசிக்கும் பூதங்கள்போல் ஒன்றை ஒன்று அழித்துத் தின்ன நேரிடும்.

கானரில்: கோழை மனிதனே! அடிவாங்குவதற்குக் கன்னங்களும், அவமானங்களை பொறுக்கத் தலையும் படைத்தவனே, உன்னுடைய புருவங்களினிடையே பகுத்தறிந்து மானத்தையும் கஷ்டத்தையும் அறியக்கூடிய கண்களில்லாதவனே! [அவர்கள் செய்யும் விஷயங்களை முடிக்குமுன் தண்டிக்கப்படும் துஷடர்கள் அத்தகைய மூடர்களைக் கண்டு பரிதாபமடைகிறார்கள். உன்னுடைய முரசு எங்கே? ப்ரான்ஸ் தன்னுடைய கொடியை நம் நாட்டில் ஓசைப்படாமல் பறக்க விட்டிருக்கிறான், இறகுகளால் அலங்கரிக்கப்பட்ட முகமூடியணிந்த வீரர்களுடன் உனது ராஜ்யத்தை அழிக்க யத்தனிக்கிறான். தர்ம நியாயம் பேசும் மூடனான நீ, அசைவின்றி உட்கார்ந்துகொண்டு " ஐயோ, அவன் ஏன் அவ்வாறு செய்கிறான் " என்று கேட்கிறாய்.]

ஆல்பனி: சைத்தானே! நீயே பார். சைத்தானுக்குரிய அவலக்ஷணம்கூட ஸ்திரிகளிடத்தில் காணப்படும் அளவிற்கு அருவருக்கத் தக்கதாயில்லை.

கானரில்: ஓ! அகங்காரம் படைத்த மூடனே!

ஆல்பனி: [தன்னுடைய இயற்கை ஸ்வரூபத்தை மாற்றிப் போர்வையால் மூடிக்கொண்டிருக்கும் நீ, அவமானத்திற்குப் பயந்து உன்னுடைய முகத்தைப் பூதாகாரமாக்கிக்கொள்ளாதே. என்னுடைய இந்தக் கைகள் என்னுடைய ரத்தக் கொதிப்பை அனுசரித்து நடப்பது எனக்குத் தகுதியானால் அவைகள் உன் சதையையும் எலும்புகளையும் பிய்த்தும் ஒடித்தும் சின்னாபின்னமாக்கியிருக்கும். எவ்வளவு பயங்கரமான பேயாக இருந்தபோதிலும் உன்னுடைய பெண்ணுருவம் உன்னைக் காப்பாற்றும் கேடயமாக இருக்கிறது.

கானரில்: உன் ஆண்மையை மணந்துகொள்.]

(ஒரு தூதன் வருகிறான்)

ஆல்பனி: *[என்ன சமாசாரம்?]*

தூதன்: *துரையே! கார்ன்வால் ட்யூக் இறந்தார். கிளஸ்டர் பிரபுவின் மற்றொரு கண்ணை அவிக்கும்பொழுது தன்னுடைய வேலையாளால் வெட்டப்பட்டிறந்தார்.*

ஆல்பனி: *கிளஸ்டரின் கண்கள்!*

தூதன்: *அவர் வளர்த்த ஒரு வேலையாள், துயரப் பெருக்கால் அச்செய்கையைத் தடுத்துத் தன் வாளையுருவித் தன் எஜமானைத் தாக்கினான். அதனால் கோபங்கொண்ட அவர் அவன்மேல் பாய்ந்தார். இருவருக்கும் நடந்த சண்டையில் அவனைக் கொன்றார். ஆனால் பின்னர், அவர் உயிரைப் போக்கிய அந்த அபாயமான காயத்தை அடைவதற்குமுன்னல்ல.*

ஆல்பனி: *பூலோகத்தில் நாங்கள் செய்யும் இக்குற்றங்களை இவ்வளவு விரைவினில் பழிவாங்கக்கூடிய நீதி பொருந்திய தெய்வங்களே! இச்சம்பவம் நீங்களிருப்பதை நிரூபிக்கின்றது. ஆனால் (பரிதாபமான கிளஸ்டர்) அவருடைய மற்றொரு கண்ணையும் இழந்தாரா?*

தூதன்: *இரண்டையும் இழந்தார், துரையே. இந்தக் கடிதம் தங்கள் தங்கையிடமிருந்து வந்திருக்கிறது. உடனே பதிலனுப்ப வேண்டும்.*

கானரில்: *ஒருவிதத்தில் நான் இதை மிகவும் விரும்புகிறேன். ஆனால் விதவையான அவள், என் கிளஸ்டர் அவளுடனிருக்க, என்னுடைய இன்ப மனக்கோட்டையை எல்லாம் பாழாக்கித் தகர்த்து என் வாழ்க்கையை வெறுக்கச் செய்துவிடுவாள். மற்றொரு விதத்தில் இந்த சமாச்சாரம் அவ்வளவு கசப்பாகத் தோன்றவில்லை. நான் படித்துப் பார்த்துவிட்டுப் பதிலனுப்புவேன். (போகிறாள்.)*

ஆல்பனி: *அவருடைய மகன் எங்கே? எப்பொழுது அவருடைய கண்களைப் பிடுங்கினர்?*

தூதன்: *என் எஜமானியுடன் இங்கு வந்தான்.*

ஆல்பனி: *அவன் இங்கு இல்லையே.*

தூதன்: *இல்லை, பிரபுவே. அவன் திரும்பி அங்கு வந்துவிட்டான்.*

ஆல்பனி: *அவனுக்கு இந்த அக்ரமச் செய்கை தெரியுமா?*

தூதன் : ஆம் பிரபுவே ! அவன் தான் தந்தைக்கு விரோதமாகக் கோள் சொல்லிவிட்டு, அவர்களுடைய தண்டனை தங்குதடையில்லாம லிருக்கும்படி வேண்டுமென்றே வீட்டைவிட்டு வெளியேறிச் சென்றான்.

ஆல்பனி : கிளஸ்டர் ! நீர் அரசனிடம் கொண்டுள்ள அன்பிற்கு நன்றிசெலுத்தவும் இழந்த உம் கண்களுக்காக வஞ்சம் தீர்க்கவும் நான் உயிர் வாழ்கிறேன். அன்பனே ! இங்கு வா. இன்னும் நீ அறிந்த வற்றை எல்லாம் எனக்குத் தெரிவி. (போகிறார்கள்.)

அங்கம் 4—காக்ஷி 3

(கென்டும் ஒரு கனவானும் வருகின்றனர்.)

கென்ட் : ஏன் ப்ரஞ்சு அரசர் திடீரென்று திரும்பிச்சென்று விட்டார் ? காரணம் ஏதேனும் தெரியுமா ?

கனவான் : அவர் தன் ராஜ்யத்தில் ஏதோ ஒரு விஷயம் பூர்த்தி செய்யாமல் அரைகுறையாகவிட்டு வந்ததாகவும், அவர் தானே திரும்பிச் சென்று கவனிக்கவேண்டியது அவஸ்யமென்றும், இல்லாவிடில் அவ ருடைய அரசிற்கே மிகவும் பயத்தையும் ஆபத்தையும் விளைக்கக்கூடிய தாயுமிருக்கிறதென்றும் அவர் இங்கு வந்தபின் தெரிந்தது.

கென்ட் : இங்கு சேனாதிபதியாக யாரை விட்டுச் சென்றார் ?

கனவான் : ப்ரான்ஸின் மார்ஷல்—மான்ஷ்யூர்லாபார்.

கென்ட் : உம் கடிதங்கள் அரசியின் உள்ளத்தில் பதிந்து அவர் கள் துயரத்தை வெளிப்படுத்திற்றா ?

கனவான் : அவர்கள் அதை எடுத்து என் முன் படித்தார்கள். அப்பொழுது இடையிடையே அவர்களுடைய மெல்லிய கன்னங்களில் பெரிய கண்ணீர்த் துளிகள் வழிந்தோடின. கலகக்காரனைப்போல் அவர்கள்மேல் ஆக்ஷிபுரிய நினைத்த கோபதாபங்களை அடக்கி அவை களின்மேல் ஆணைபுரிவதாகத் தோற்றமளித்தார்கள்.

கென்ட் : அப்படியானால் அது அவர்களுடைய இதயத்தைத் தொட்டது.

கனவான் : கோபத் தனல் வீசவில்லை. பொறுமையும் துக்கமும் தம்முள் யார் அவர்களை மேலானவள் என்று தெரிவிக்கப் போரிட்டன. நீங்கள் வெயிலும் மழையும் சேர்ந்து அடிக்கக் கண்டிருக்கலாம்.

அவளுடைய புன்முறுவலும் கண்ணீரும் இன்னும் அழகாக இருந்தன. அவளுடைய அதரங்களில் தவழ்ந்த அழகிய இளநகை அவளுடைய கண்களிலிருந்து வைரத்திலிருந்து முத்துக்கள் விழ்வனபோல், பிரிந்து சென்ற விருந்தாளிகள் யார் என்று அறியாதவைபோல் தோன்றின. சுருங்கச் சொல்லின் எல்லோரும் தகுதியுள்ளவர்களானால் துக்கம் என்பது எல்லோரும் விரும்பத்தக்க உயர்ந்த பொருளாகிவிடும்.

கென்ட் : வாய் திறந்து ஒன்றும் கேட்கவில்லையா ?

கனவான் : உண்மையாக ஒன்றிரண்டு தடவை பெருமூச்சுடன் தந்தையே என்று அதைக் கூறும்பொழுது தன் இதயம் அமுக்கப் படுவதுபோல் பதைபதைப்புடன் அழைத்தாள். சகோதரிகளே, பெண்குலத்தின் அவமானமே, சகோதரிகளே, கென்ட், தந்தையே, சகோதரிகளே, இரவில் கடும் புயலில் என்றெல்லாம் கத்தினாள். இரக்கம் என்று ஒன்றிருப்பதாக நம்பப்படவேண்டாம். அப்பொழுது தன் தெய்வீகக் கண்களினின்றும் புனிதமான தண்ணீரை உகுத்தாள். துக்கம் அவளை நனைத்தது. பின்னர் தன் துயரத்தைத் தனிமையில் போக்க எழுந்துசென்றாள்.

கென்ட் : கிரஹங்கள், நமக்குமேல் வானிலிருக்கும் கிரஹங்கள் தான் நம் குணாதிசயங்களுக்குக் காரணம். இன்றேல் ஒரே பெற்றோர் கள் இவ்வளவு வேறுபாடுடைய குழந்தைகளை எவ்வாறு பெறமுடியும்? பின்னர் நீர் அவர்களுடன் பேசவில்லையா ?

கனவான் : இல்லை.

கென்ட் : அது அரசன் திரும்பிச் செல்வதற்கு முன்பா ?

கனவான் : பிற்பாடுதான்.

கென்ட் : நல்லதய்யா. பரிதாபமான துன்பப்படும் லியர் நகரத்தி லிருக்கிறார். அவர் நல்ல நினைவிலிருக்கும்பொழுது நாம் எதற்காக வந்திருக்கிறோம் என்பதை உணர்கிறார். ஆனால் எக்காரணத்தைக் கொண்டும் தன் மகளைச் சந்திக்க விரும்பவில்லை.

கனவான் : ஏன் ஐயா ?

கென்ட் : தவிர்க்கமுடியாத பலமான அவமானம் அவரை அவ்வாறு தடுக்கிறது. அவருடைய ஆசிர்வாதத்திற்கு அவரைப் புறம்பாக்கி, அவளை அன்னிய நாட்டிற்குத் துரத்தி, அவளுடைய உரிமைகளை அவளுடைய நாயுள்ளமுள்ள சகோதரிகளுக்களித்த இப்படிப்பட்ட அன்பற்ற செய்கைகள் அவருடைய மனதை மிகவும் புண்படுத்த, அந்த மனத்தை அறுக்கும் அவமானம் அவரைக் கார்டிலியாவிடம் செல்லாமல் தடுத்து நிறுத்துகிறது.

கனவான்: ஐயோ, பரிதாபகரமான மனிதன்.

கென்ட்: ஆல்பனியுடையவும் கார்ன்வாலுடையவும் சைன்யங்களைப்பற்றிக் கேள்விப்படவில்லையா?

கனவான்: அவைகள் கிளம்பிவிட்டன.

கென்ட்: நல்லது. ஐயா, தங்களை நம் அரசரிடம் அழைத்துச் சென்று அவருக்குத் தொண்டாற்றவிட்டுச் செல்கிறேன். ஒரு முக்கியமான காரணத்தால் நான் இன்னும் சிலகாலம் மாறுவேடத்துடன் கழிக்கவேண்டும். நான் யாரென்று வெளியாகும்பொழுது என்னுடன் பழகியதற்காக வருத்தப்படவேண்டியிராது. என்னுடன் வாரும்.

(போகிறார்கள்)

அங்கம் 4—காக்ஷி 4

(முரசப்கோட்டக் கொடிகள்தாங்கிய படைகள், கார்டிலியா, கனவான் வருகின்றனர்.)

கார்டிலியா: ஐயோ, அவர்தான். இப்பொழுதுதான் அவரைச் சந்தித்தேன்.—கொந்தளிக்கும் கடலைப்போல் பயித்தியமாய், உரத்த குரலில் பாடிக்கொண்டு, காட்டில் வளரும் செடிகொடிகள், விஷப் பூண்டுகள், டார்னல், கக்கூ புஷ்பங்கள், மற்றும் உபயோகமற்ற நம் புலன்களில் உண்டாகும் புற்கள் முதலியவற்றைத் தலையில் அணிந்துகொண்டுமிருப்பதைக் கண்டேன். நூறு பேர்களை அனுப்பி மேடு காடுகளை எல்லாம் துருவி என்னிடம் அவரைக் கொண்டுவாருங்கள். அவர் இழந்த புத்தியை மறுபடியும் அவர் பெறுவதற்கு மனிதனால் என்ன செய்யக்கூடும்? யார் அவருக்கு இவ்வுதவி செய்கிறார்களோ அவர்கள் என்னுடைய பொருள் எல்லாவற்றையும் அடையட்டும்.

கனவான்: அம்மையே, அதற்கு வழியிருக்கிறது. நம் இயற்கையின் ஊட்டிவளர்க்கும் செவிலி, ஓய்வு, அது அவருக்கு இல்லை. சில எளியமுறையால் அதை அவருக்குக் கிடைக்கும்படி செய்தால் துன்பம் மிகுந்த கண்களை மூடக்கூடும்.

கார்டிலியா: எல்லா தெய்விகரகசியங்களும், உலகில் இதுவரை அறிந்து கொள்ளப்படாத சக்திகளும் என் கண்ணீருடன் எழுங்கள். அந்தச் சிறந்த மனிதனின் கஷ்டத்தைப் போக்குவதில் உதவியாக இருங்கள். தேடுங்கள், தேடி அவரைக்கண்டுபிடியுங்கள். இன்றேல் மட்டற்ற கட்டிலடங்காத அவருடைய கோபம், பிழைத்திருக்க வழி தேடிக்கொண்டிருக்கும் அவருடைய ஆவியைக்குலைத்துவிடும்.

(தூதன் வருகிறான்)

தூதன் : செய்தி—அம்மையே, பிரிட்டிஷ் படைகள் நம்மை நோக்கி வருகின்றன.

கார்டிலியா : அது முன்னமேயே தெரியும். அவர்களை எதிர் பார்த்து நம்முஸ்திபுகளிருக்கின்றன. ஓ! அன்புள்ள தந்தையே, உங்களுடைய கார்யமாகவே நான் செயலில் ஈடுபடுகிறேன். அதனால் சிறந்த ப்ரான்ஸின் அரசர் என் துக்கத்திற்கும் கண்ணீருக்குமிரங்கினார். எங்களுடைய படைகள் அன்பையும், எங்கள் வயதான தந்தையின் பாத்யதையையும் அடைவதையும்தவிர வேறு எவ்வித மட்டற்ற பேராசையையும் தூண்டவில்லை. விரைவில் அவரைக் கண்டுபிடித்துச் சந்திப்பேன். (போகிறார்கள்.)

அங்கம் 4—காக்ஷி 5

(ரீகனும், காரியஸ்தனும் வருகிறார்கள்)

ரீகன் : என்னுடைய தமக்கை புருஷனின் படைகள் புறப்பட்டு விட்டனவா?

காரியஸ்தன் : ஆம், அம்மா.

ரீகன் : அவரே நேரில் படையை நடத்துகிறாரா?

காரியஸ்தன் : அம்மையே, வெகு சிரமத்தின்பேரில் தங்களுடைய அக்காள்தான் சிறந்த போர்வீரன்.

ரீகன் : எட்மண்ட் பிரபு உங்கள் பிரபுவுடன் வீட்டில் பேசவில்லையா!

காரியஸ்தன் : இல்லையம்மா.

ரீகன் : அவருக்கு என் அக்காள் கடிதத்தில் என்ன எழுதியிருக்கக் கூடும்?

காரியஸ்தன் : சீமாட்டியே, எனக்குத் தெரியாது.

ரீகன் : அவரை மிகவும் முக்கியமான வேலையில் அனுப்பப்பட்டிருக்கிறது. கிளஸ்டரின் கண்ணைப்பிடுங்கியபின் அவரை வாழவிட்டது பெரிய முட்டாள்தனம். அவர் எங்கு சென்றாலும் எல்லோரையும் நமக்கு விரோதமாகத்தூண்டுகிறது. கண்ணிழந்து துயரப்படும் அவர் பேரில் இரங்கி அவருடைய வாழ்வைப்போக்க எட்மண்ட் சென்றிருக்க வேண்டும். அத்துடன் எதிரியின் பலத்தையும் அறிந்து கொள்ள.

காரியஸ்தன் : நான் என் கடிதத்துடன் அவர்பால் செல்லத்தான் வேண்டும்.

ரீகன் : நமது படைகள் நாளைப் புறப்படுகின்றன. எங்களுடன் தங்கியிரு. வழி ஆபத்து நிறைந்திருக்கிறது.

காரியஸ்தன் : அம்மையே, என்னால் முடியாது. என் எஜமானி இந்தக் காரியத்தில் என் கடமையைச் செய்யப் பணித்தார்கள்.

ரீகன் : அவள் ஏன் எட்மண்டிற்கு எழுதவேண்டும்? நீ அவள் சொல்வதை வாய்மொழியாகத் தெரிவிக்கலாகாதா? இருக்கலாம். சில விஷயங்கள் எனக்கு இன்னதென்று தெரியவில்லை. இந்தக் கடிதத்தைப் பிரித்துப்பார்க்க அனுமதிப்பாயானால் நான் உன்னை மிகவும் அன்பாக நடத்துவேன்.

காரியஸ்தன் : தாயே, நான் அதற்குமாறாக—

ரீகன் : உன் எஜமானி தன் கணவனை நேசிக்கவில்லை என்பது எனக்குத் தெரியும். அது எனக்கு நிச்சயமாகத் தெரியும். அவள் இங்கு சமீபத்தில் வந்திருந்தபொழுது சிறந்த எட்மண்டைக் காதல் பார்வை பார்த்துக் கண்ணால் தெரிவித்தாள். நீ அவளுடைய அந்தரங்கக் காரியஸ்தன் என்பதை நானறிவேன்.

காரியஸ்தன் : நானா அம்மா!

ரீகன் : நான் தெரிந்தே பேசுகிறேன். நீ அவள் அந்தரங்க வேலையாள். எனக்குத் தெரியும். அதனால் இதை நீ கவனத்தில் வைத்துக்கொள். என் புருஷன் இறந்துபோய்விட்டார். நானும் எட்மண்டும் பேசிக்கொண்டுவிட்டோம். அவர் உன் எஜமானியின் கரத்தைவிட என் கரத்தைப் பற்றுவதுதான் சுலபம். நீ இன்னும் அதிகம் தெரிந்துகொள்வாய். நீ அவரைச் சந்தித்தால் இதை அவரிடம் கொடு. உன் எஜமானி இதை உன்னிடமிருந்து தெரிந்துகொள்ளும்பொழுது அவளைத் தன் விவேகத்தைத் தரவழைத்துக்கொள்ளும்படி நான் விரும்பியதாகச் சொல். நல்லது நீ விடைபெற்றுச் செல். ஒருக்கால் நீ அந்தக் குருட்டுத் துரோகியைச் சந்தித்தால்— அவனை ஒழிப்பவர்களுக்குத் தக்க வெகுமானம் கிடைக்கும்.

காரியஸ்தன் : நான் அவரைச் சந்திக்கக் கொடுத்துவைத்தால், அம்மா, நான் யாருடைய கக்ஷியைச் சேர்ந்தவன் என்று காண்பிப்பேன்.

ரீகன் : சென்று வா. (போகிறார்கள்.)

அங்கம் 4—காக்ஷி 6

(கிளஸ்டரும், எட்காரும் வருகின்றனர்.)

கிளஸ்டர்: அந்தக் குன்றின் உச்சியை நான் எப்பொழுது அடைவேன்?

எட்கார்: இப்பொழுது நாம் அதன்மேலேறிக்கொண்டிருக்கிறோம். பாருங்கள், நாம் எவ்வளவு சிரமப்படுகிறோம்.

கிளஸ்டர்: தரை சமதளமாக இருப்பதாகத் தோன்றுகிறது.

எட்கார்: பயங்கரமான ஏற்றம். கவனியுங்கள். சமுத்திரத்தின் கோஷத்தைக் கேட்கவில்லையா?

கிளஸ்டர்: உண்மையாக இல்லை.

எட்கார்: அப்படியானல் உங்களுடைய கண்ணின் வலியால் உங்களுடைய மற்றப் புலன்களின் சக்தியும் குறைவுபட்டுவிட்டது.

கிளஸ்டர்: அதுபோல் இருக்கலாம். உன்னுடைய குரல் மாறிவிட்டது. நீ முன்னைவிட நல்ல அர்த்தமுள்ள வார்த்தைகளையும் கருத்துக்களுடனும் பேசுகிறாய் என்று நினைக்கிறேன்.

எட்கார்: நீங்கள் மிகவும் தப்பாக நினைக்கிறீர்கள். என்னுடைய உடையைத் தவிர மற்ற எதிலும் மாறுதலடையவில்லை.

கிளஸ்டர்: நீ நன்றாகப் பேசுகிறாய் என நினைக்கிறேன்.

எட்கார்: வாருங்களய்யா. குறிப்பிட்ட இடம் இதோ இருக்கிறது. அசைவற்று நில்லுங்கள். கீழே அவ்வளவு ஆழத்தைப் பார்க்கும்பொழுது எவ்வளவு பயங்கரமாகவும் கிருகிருப்பாகவுமிருக்கிறது. நடு வானத்தில் பறக்கும் காக்கைகள் முதலிய பறவைகள் விட்டில் பூச்சிகளைப்போல் சிறிதாகக் காணப்படுகின்றன. பாதி ஆழத்தில் சாம்பைர் பொறுக்கும் ஒருவன் தலைகீழாகத் தொங்குகிறான். மிகவும் ஆபத்தான தொழில். அவன் அவனது தலையைவிடப் பெரிய உருவமுடையவனாகத் தோன்றவில்லை. கடற்கரையில் நடக்கும் செம்படவர்கள் சுண்டெலிகள்போல் காணப்படுகிறார்கள். தூரத்தில் தெரியும் கப்பல் அதிலுள்ள வத்தையைப்போலவும், வத்தை மிதப்பானைப்போலவும் கண்ணுக்குத் தெரியாத அளவு சிறியதாகத் தென்படுகின்றன. எண்ணற்ற கூழாங் கற்களின்மேல் கோபத்துடன் மோதும் புலம்பலுடன் கூடிய அலைகள் இவ்வளவு உயரத்தில் கேட்கப்படவில்லை. நான் மேலும் பார்க்கமாட்டேன்; ஏனெனில் என் தலை சுற்றிக் கண் சரியானபடி தெரியாமல் தலைகீழாகத் தடுமாறி விழுவேன்.

கிளஸ்டர் : நீ நிற்குமிடத்தில் என்னை விடு.

எட்கார் : உங்கள் கரத்தைக் கொடுங்கள். நீங்கள் கடாசி விளிம்பிற்கு ஒரு அடிக்குள் இருக்கிறீர்கள். சந்திரனுக்குக் கீழே உள்ள யாவையும் கிடைப்பதானாலும் நான் நேராகக் குதிக்கமாட்டேன்.

கிளஸ்டர் : என் கையை விடு. நண்பனே இதோ இன்னொரு பை. அதில் ஒரு ஏழைக்குப் போதுமான விலை மதிப்புள்ள ஒரு நகை இருக்கிறது. தேவதைகளே, தெய்வங்களே ! நீ அத்துடன் க்ஷேமமாயிரு. நீ வெகுதூரம் சென்றுவிடு. நீ செல்வதை நான் கேட்க வேண்டும்.

எட்கார் : க்ஷேமமாயிருங்கள். ஐயா, விடை பெற்றுக்கொள்கிறேன்.

கிளஸ்டர் : மனப்பூர்வமாக.

எட்கார் : நான் இவ்வாறு அவருடைய நிராசையான நிலையுடன் விளையாட்டுத்தனமாக நடப்பது அதைப் போக்குவதற்காகவே.

(அவர் முழந்தாளிட்டுப் பணிகிறார்).

கிளஸ்டர் : ஓ ! சர்வ வல்லமையுள்ள தெய்வங்களே ! இந்த உலகத்தை நான் பரித்யாகம் செய்கிறேன். உங்கள் முன்னிலையில் என்னுடைய பெருத்த துயரத்தைப் பொறுமையுடன் கழிக்கிறேன். நான் அதை சகிக்கக்கூடுமானால், தள்ளரிய உங்களுடைய சித்தங்களுடன் எதிர்த்துப் போராடாமலிருந்தால், என்னுடைய வெறுக்கத்தக்க மங்கிய வாழ்க்கை தானாக எரிந்தழியும். எட்கார் உயிருடனிருந்தால் அவனை வாழ்த்துங்கள். அப்பா, நீ, க்ஷேமமாயிரு.

(கீழே விழுகிறார்).

எட்கார் : போய்விட்டீர்களா ? ஐயா. சென்றுவாருங்கள். உயிரையே களவாடப்படும்பொழுது எவ்வாறு எண்ணம்மட்டும் வாழ்க்கையின் செல்வத்தைக் களவாடமுடியும். அவர் எங்கிருப்பதாக நினைத்தாரோ அங்கிருந்தால் அவரை இத்துடன் இறந்தகாலத்தவராக எண்ணி இருப்போம். உயிரோடிருக்கிறாரா, இறந்துவிட்டாரா ? ஹோ ! நீங்கள்தான் ஐயா, நண்பரே, காதில் விழவில்லையா, பேசுங்கள். இப்படி அவர் இறக்கலாம். ஆயினும் அவர் தெளிவடைகிறார். நீங்கள் யார் ஐயா ?

கிளஸ்டர் : செல். நான் இறப்பதைத் தடுக்காதே.

எட்கார் ? நீங்கள் நுண்ணிய நூலாம்படை, மெல்லிய இறகுகள், அல்லது காற்றாயிருந்தாலும் (இவ்வளவு ஆழம் செங்குத்தாக விழுந்ததற்கு) ஒரு முட்டையைப்போல் நொறுங்கிப் போயிருப்பீர்கள்.

ஆனால் நீங்கள் மூச்சுவிடுகிறீர்கள். நீங்கள் கனத்த சமாசாரம். ரத்தக் காயமில்லை. பேசுகிறீர், பூர்ண சௌக்யமாயிருக்கிறீர். ஒன்றின்மேல் ஒன்ருக அடுக்கப்பட்ட பத்துப் பாய்மரங்கள் நீங்கள் செங்குத்தாக விழுந்த உயரத்தைக் காட்டாது. உங்களுடைய உயிர் ஒரு அத்புத மானது. நீங்கள் மறுபடியும் பேசுங்கள்.

க்ளஸ்டர்: நான் விழுந்தேனு இல்லையா?

எட்கார்: கிரிச்சுக் குரலுடன்கூடிய வானம்பாடியை இதுவரை கண்டிராத, கேட்டிராத, இந்தச் சுண்ணும்பு மலையின் பயங்கரமான முடியிலிருந்து ஓர் உன்னத சிகரத்தைப் பாரும்—தயவுசெய்து மேலே பாரும்.

க்ளஸ்டர்: ஐயோ! எனக்குக் கண்ணில்லை. ஆவியைப் போக்கித் துயரத்தின் முடிவு காணக்கூட அதற்கு உரிமையில்லையா? யதேச்சாதிகாரியின் கோபத்தை எதிர்த்து அவனுடைய கர்வமிகுந்த எண்ணங்களைத் தடுக்கும்பொழுது துன்பத்திலும்கூட ஒரு இன்ப மிருந்தது.

எட்கார்: தங்கள் கையைக் கொடுங்கள். எழுங்கள். எப்படி யிருக்கிறது? உங்கள் கால்களை உணர்கிறீர்களா. நில்லுங்கள்.

க்ளஸ்டர்: நன்ருக நிற்கிறேன். நன்ருக நிற்கிறேன்.

எட்கார்: இது விந்தையினும் விந்தையே! குன்றின் முகட்டிலிருந்து உங்களைவிட்டுப் பிரிந்து சென்றதே அது என்ன?

க்ளஸ்டர்: ஒரு எளிய துன்பமிக்க பிச்சைக்காரன்.

எட்கார்: நான் இங்கே இருந்து பார்க்கும்பொழுது அவனுடைய கண்களை இரண்டு பூர்ண சந்திரன்கள் என்று நினைத்தேன். அவனுக்கு ஆயிரம் மூக்குகளும், பொங்கி எழும் அலைகள்போல் முறுக்கிக்கிடந்த கொம்புகளும் இருந்தன. அது ஒரு பேய். எனவே, அருமைப் பிதாவே, மனிதர்களால் செய்யமுடியாதவற்றைச் செய்து அவர்களின் மதிப்பைப்பெறும் பரிசுத்தமான தெய்வங்கள் உங்களைக் காப்பாற்றினுர்கள் என்பதை நம்பும்.

க்ளஸ்டர்: நான் இப்பொழுது நினைவூட்டிக்கொள்கிறேன். போதும், போதும் என்று அது கத்தித் திரும்வரை நான் இனிமேல் துயரத்தைத் தாங்கிப் பின்னர் இறப்பேன். நீ கூறிய அந்த ஜந்துவை நான் ஒரு மனிதன் என்று நினைத்தேன். அடிக்கடி அது 'பேய்,' 'பேய்' என்று சொல்லும். அவன் அந்த இடத்திற்கு என்னை அழைத்துவந்தான்.

எட்கார்: கவலையற்ற, பொறுமையுடன்கூடிய எண்ணங்களைக் கொள்ளுங்கள்.

(லியர் பயித்தியம் பிடித்து வருகிறார்)

இங்கு வருவது யார்? சாதாரண புத்தியுள்ளவன், இம்மாதிரி ஆடை அணியான்.

லியர்: இல்லை. கள்ள நாணயம் செய்வதாக என்னைத் தொடக்கூட முடியாது. நானே அரசன்.

எட்கார்: ஆ! விலாவை அறுக்கும் காக்ஷி!

லியர்: இந்த விஷயத்தில் கலையைவிட இயற்கை மேலானது. இதோ உங்களுடைய சம்பளப்பணமிருக்கிறது. அவன் காக்கை பிடிப்பவனைப்போல் தன் வில்லைப்பிடிக்கிறான். ஒரு தையற்காரனின் அளவுகோல்போன்ற அம்பைக்கொடுங்கள். பாருங்கள், பாருங்கள். ஒரு சுண்டெலி. அமைதி, அமைதி. பயப்படவேண்டாம். இந்த வருக்கப்பட்ட பாலாடைக்கட்டி போதுமானது. இதோ என்னுடைய கைக் கவசம். அதன் பெருமையை ஒரு அரக்கனிடம் உபயோகித்துக் காண்பிப்பேன். அந்தக் கோடரிப்படை வீரரை அழையுங்கள். ஆ! அப்பருந்து நன்கு பறந்தது. நடுமய்யத்தில், நடுமய்யத்தில்—ஹா—அடையாள வார்த்தை என்ன?

எட்கார்: இனிய மார்ஜோரம்.

லியர்: செல்லலாம்.

கிளஸ்டர்: எனக்கு அந்தக்குரல் பரிச்சயமானது.

லியர்: ஹா! வெள்ளைத்தாடியுடன் கூடிய கானரில்லா? அவர்கள் என்னை நாய்கள்போல் முகஸ்துதி செய்தார்கள். நான் இளமைப் பருவமடையுமுன்பே முதுமைக்குரிய அறிவு படைத்ததாகச் சொன்னார்கள். நான் சொன்னதற்கெல்லாம் 'ஆமாம்', 'இல்லை' என்று பதிலளித்தார்கள். 'ஆமாம்', 'இல்லை' என்று சொன்னது முற்றிலும் பொய்யானதால் அது தெய்விகத்தன்மையில்லாதது. எப்பொழுது மழை பெய்து நான் நனைந்தேனோ, எப்பொழுது காற்று என்னைக் குளிரால் உளரச் செய்ததோ, இடி என் ஆணைக்குக் கட்டுப்பட்டு நிற்கவில்லையோ, அப்பொழுது அவர்களின் உண்மையான தன்மையை உணர்ந்துகொண்டேன். செல், அவர்கள் உண்மை பேசுபவர்களல்ல. நான் சர்வ சக்திமான் என்று சொன்னார்கள். அது பெரும்பொய். நான் முதுமைக்கு மாற்றானவனல்ல.

கிளஸ்டர்: அந்தக் குரலின் பாணி, நான் நன்ருக அறிகிறேன். அது நமது அரசரல்லவா?

லியர் : ஒவ்வொரு அம்சத்திலும் ஓர் அரசன்! நான் உறுத்துப் பார்த்தால் என் குடிகள் எப்படி நடுங்குகிறார்கள், பார். நான் அந்த மனிதனை மன்னித்து உயிர்ப்பிச்சை அளிக்கிறேன். உன்னுடைய வியவகாரம் என்ன? வியபசாரமா? நீ இறக்கவேண்டியதில்லை. வியபசாரத்திற்காக இறப்பதா? அந்தப்பாடும் சிறு பறவை அதை நோக்கிச் செல்ல அந்த மின்னும் வண்டு என் கண்முன் வியபசாரம் செய்கிறது. வியபசாரம் வாழட்டும். ஏனென்றால் கிளஸ்டருக்கு வியபசாரத்தால் பிறந்த பிள்ளை எனக்கு நியாயமான படுக்கையில் பிறந்த பெண்களைவிடத் தந்தையிடம் அதிகம் கருணையுடனிருந்தான். அதனிடம் தலைவிரி கோலமாகச் சுகவாழ்வு—எனக்கு வேண்டிய அளவு யுத்த வீரர்களில்லை. அதோ புன்முறுவல் பூக்கும் பெண்மணியைப் பார். அவளுடைய புருவங்களின் மத்தியில் அவளுடைய முகம் பனிக் கட்டியைக் குறிக்கிறது. அது கற்பையும் நன்னடக்கையையும் துண்டிக்கிறது. சுகபோகங்களின் பெயரைக் கேட்கும்பொழுதே தலையை அசைக்கிறது. கொம்புப்பூனையும் (pole-cat) புழுதியில் புரண்ட குதிரையும்கூட அவ்வளவு அடக்கமற்ற ஆவலுடன் அதற்குச் செல்வதில்லை. இடுப்பிற்குக்கீழ் அவர்கள் குதிரை உருவம், மேலே பெண்ணுருவம். கச்சைவரை கடவுள் அடைகிறார். அரைக்குக்கீழ் எல்லாம் பேய் பிசாசுகள். அங்கே நரகம், இருள், கந்தகக்குழி, எரித்தல், கொதித்தல், போகம் எல்லாமிருக்கின்றன. சே, சே, சே. பா, பா. எனக்கு ஒரு அவுன்ஸ் புனுகு கொடு. நல்ல வைத்தியனே என் புத்தியை, சிந்தனையை, இனியதாக்கு. இந்தோ உனக்குப் பணம்.

கிளஸ்டர் : ஓ! அந்தக்கரத்தை முத்தமிட அனுமதியுங்கள்.

லியர் : அதை நான் முதலில் கழுவவேண்டும். அது இறப்பதைக் குறிக்கிறது.

கிளஸ்டர் : ஓ! அழிவுற்ற சிருஷ்டியின் அம்சமே! இந்தப் பெரிய உலகம் இவ்வாறே அழிந்து ஒன்றுமில்லாமல் சூன்யமாகும். என்னைத் தங்களுக்குத் தெரியுமா?

லியர் : எனக்கு உன் கண்கள் நன்றாக ஞாபகமிருக்கின்றன. நீ என்னைக் கண்ணடிக்கிறாயா? முடியாது குருட்டு மன்மதனே, உன்னாலானதைப் பார். நான் காதலிக்கமாட்டேன். நீ இந்தச் சவாலை வாசி. இந்தக் கடிதத்தைமட்டும் படி.

கிளஸ்டர் : உங்களுடைய எழுத்துக்கள் ஒவ்வொன்றும் சூர்யனாக இருந்தாலும் என்னால் பார்க்கமுடியாது.

எட்கார் : நான் கேள்விமட்டும்பட்டிருந்தால் நம்பி இருக்கமாட்டேன். ஆனால் வாஸ்தவமாக இருக்கிறது. அதைக்கண்டு என் இதயம் வெடிக்கிறது.

லியர் : வாசி.

கிளஸ்டர் : கண்களின் குழிகளைக் கொண்டா?

லியர் : ஓஹோ! நீ என்னைச் சேர்ந்தவனா? உன் தலையில் கண்கள் இல்லை. பையில் பணமில்லை. உன்னுடைய கண்கள் ஒரு கனமான பெட்டிக்குள்ளிருக்கின்றன. உன் பணம் லேசான பையிலிருக்கிறது ஆயினும் நீ உலகத்தைப் பார்க்கிறாயா?

கிளஸ்டர் : ஆம். துயரத்துடன்.

லியர் : நீ பயித்தியமா? உலகத்தின் போக்கைக் கண்ணில்லாதவன் பார்க்கலாம். உன்னுடைய காதால் அறிந்துகொள்ளப் பார். அந்த நீதிபதி அந்த ஏழைத் திருடன்மேல் எப்படி வசைமொழிகளைக் கொட்டுகிறான். கவனி உன் காதுகளை உபயோகி. இடத்தை மாற்றிவிடு பார்ப்போம். யார் திருடன், யார் நீதிபதி. நீ ஒரு குடியானவனின் நாய் ஒரு பிச்சைக்காரனைப் பார்த்துக் குலைப்பதைக் கண்டிருக்கிறாயா?

கிளஸ்டர் : பார்த்திருக்கிறேன். ஐயா.

லியர் : அந்த ஆத்மா அந்த நாயிடமிருந்து ஓடுகிறது. அங்கே அதிகாரத்தின் பூர்ண ஸ்வருபத்தை நீ தரிசிக்கலாம்—ஒரு நாய் அதிகார ஸ்தானத்திலிருக்கும்பொழுது அதன் கட்டளையைப் பணிந்து நடத்தப்படுகிறது. ஓ! ஜெபமாலையணிந்த போக்கிரியே; உன் கையை நிறுத்து. அந்த வேசியை ஏன் சவுக்காலடிக்கிறாய்? உன்னுடைய முதுகிலே அடித்துக்கொள். நீ அவளை எதற்காகச் சவுக்காலடிக்கிறாயோ, அந்தப்படி அவளை உபயோகிக்க நீ துடிக்கிறாய். வட்டிக்குப் பணம் கொடுக்கிறவன் தகல்-பாஜியைத் தூக்கிவிடுகிறான். கரடு முரடான கிழிந்த ஆடைகள்மூலம் கொடிய குற்றங்கள் காணப்படுகின்றன. பட்டாடையும் அங்கியும் அவைகளை எல்லாம் மறைத்து விடுகின்றன. பாபத்தைத் தங்கக் கவசத்தால் மூடு. நீதி ஸ்தலத்தின் பலமான ஈட்டி அதை ஒன்றும் செய்யமுடியாமல் பலனற்று முறிகிறது. ஒரு கந்தையைத் தரித்தால் ஒரு சிறு குள்ளன் கைப்புல்லும் அதை ஊடுருவிச் செல்லும். ஒருவனும் குற்றம் செய்வதில்லை. ஒருவனுமில்லை. நான் சொல்கிறேன், ஒருவனுமில்லை. குற்றம் சாட்டுபவனின் வாயை மூடச் சக்தியுள்ள நான் குற்றம் செய்தவர்களுக்கெல்லாம் வேண்டிய பொருளைக் கொடுக்கிறேன். நீ கண்ணாடிகள் அணிந்து கொண்டு அயோக்யனான ராஜதந்திரியைப்போல் காணாததை எல்லாம்

காண்பதாக நடி. என்னுடைய கால் மிதியை அகற்று.—பலமாக—பலமாக—அப்படி.

எட்கார்: பேத்தலும் விஷயமும் கலந்திருக்கின்றன. பயித்தியத்திலும் அறிவுடைமை!

லியர்: நீ என் அதிர்ஷ்டத்தைக் குறித்து அழுவதாயின் என் கண்களைப் பெற்றுக்கொள். உம்மை நான் நன்கறிவேன். நீர் கிளஸ்டர். நீர் பொறுமையுடனிருக்கவேண்டும். நாம் இங்கு அழுதுகொண்டு வந்தோம். நாம் முதன் முதலாகக் காற்றை முகரும்பொழுது (அதாவது பிறக்கும்பொழுது) நாம் பூனையைப்போல் அழுது தவிக்கிறோம். நான் உமக்குப் போதிப்பேன். கவனியும்.

கிளஸடர்: அந்தோ! அந்தோ! என்ன நாள்!

லியர்: நாம் பிறக்கும்பொழுது இந்த அறிவிலிகள் நிறைந்த அரங்க மேடையை அடைந்தோமே என்று அரற்றுகிறோம். இது ஒரு நல்ல தொப்பி. ஒரு குதிரைப்படையைக் கம்பளியால் லாடம் கட்டுவதென்பது மிகவும் தந்திரமானதும் சாமர்த்தியம் பொருந்தியதுமான காரியம். ஆனுல் அதைச் செய்து பரீக்ஷிப்பேன். நான் இந்த மருமகன்களை அவர்களறியாமல் அடைந்தேனுனல்,—அப்புறம் "கொல்லுங்கள், கொல்லுங்கள், கொல்லுங்கள்...."

(ஒரு கனவான் வருகிருர்)

கனவான்: ஓ! அவர் இங்கே இருக்கிருர். அவரைப் பிடியுங்கள். தங்களுடைய மிகவும் பிரியமுள்ள பெண்—

லியர்: யாரும் என்னை மீட்பவரில்லையா? என்ன நான் கைதியா? நான் காலத்தின் இயற்கையான விதூஷகன். என்னை நன்ருக நடத்துங்கள். உங்களுக்கு மீட்புப்பணம் கிடைக்கும். எனக்கு நல்ல வைத்தியர்களைத் தரவழையுங்கள். என் மூளைவரை நான் காயமடைந்திருக்கிறேன்.

கனவான்: நீங்கள் எது கேட்டாலும் தருகிறோம்.

லியர்: எனக்கு அடுத்தாள் இல்லையா? நான்மட்டுமா? ஏன், இது ஒரு மனிதனை உப்பு மனிதனுக்கிக் கண்ணீர் நிறைந்த கண்களைத் தோட்டத்தில் தண்ணீர் தொட்டிகளாக உபயோகப்படுத்தவும், இலையுதிர்காலத் தூசியைப் போக்கவும் செய்யும். நான் தைரியமாகவும் குஷாலாகவும் கல்யாண மாப்பிள்ளைபோல் இறப்பேன். என்ன? நான் சந்தோஷமாக இருப்பேன். வாருங்கள். வாருங்கள். நான் ஒரு ராஜா. ஐயன்மீர், அதை நீங்கள் அறிவீர்களா?

கனவான்: நீங்கள் அரசரே! நாங்கள் உங்களைப் பணிகிறோம்.

லியர் : அப்படியானால் அதில் ஜீவனிருக்கிறது. வாருங்கள். நீங்கள் அதைப் பெறுவீர்கள். அதை நீங்கள் ஓடிக்கொண்டே பெறுவீர்கள். சா—சா—சா—சா. (லியர் ஓடிச் செல்கிறார்).

கனவான் : ஒரு மிகவும் கேவலமான பிச்சைக்காரன் விஷயத்திலேயே மிகவும் பரிதாபகரமான காக்ஷி ! ஒரு அரசனென்றால் பேசவே முடியாது. தங்களுடைய இரண்டு பெண்களால் இயற்கைக்குக் கிடைத்திருக்கும் சாபத்தினின்றும் இயற்கைக்கு விமோசனமளிக்க ஒரு புதல்வி இருக்கிறாள்.

எட்கார் : ஐயா, கனவான் ! வெற்றியுண்டாகுக.

கனவான் : ஐயா, வேகமாக வரட்டும். தங்களுடைய இச்சை என்ன ?

எட்கார் : ஏதாவது யுத்தம் நடக்கப்போகிறதாகக் கேள்விப்படுகிறீர்களா ?

கனவான் : காதுபடைத்துக் கேட்கக்கூடியவர்கள் எல்லோரும் கேட்கிறார்கள். மிகவும் நிச்சயமாக, கேவலமாக,

எட்கார் : தயவுசெய்து சொல்லுங்கள். மற்றய சேனை எவ்வளவு தொலையிலிருக்கிறது ?

கனவான் : சமீபத்திலேயே வேகமாக வந்துகொண்டிருக்கிறது. பெரும் பகுதி மணிக்கணக்கில் வரக்கூடும்.

எட்கார் : தங்களுக்கு வந்தனம். அவ்வளவே விரும்பியது.

கனவான் : அரசி சில முக்கிய காரணங்களால் இங்கு இருந்தாலும் அவர்களுடைய சேனையும் சண்டைக்குப் புறப்பட்டுவிட்டது.

எட்கார் : உங்களுக்கு வந்தனம். (கனவான் போகிறார்).

கிளஸ்டர் : எப்பொழுதும் எளியவர்க்கிரங்கும் தெய்வங்களே, நீங்கள் என் ஆவியைப் போக்குங்கள். என்னுடைய கெட்ட மனது என்னை மறுபடியும் நீங்கள் விரும்புமுன் சாவதற்குத் தூண்ட வேண்டாம்.

எட்கார் : நல்லது. தந்தையே, துதிசெய்யுங்கள்.

கிளஸ்டர் : நல்ல கனவானே ! நீங்கள் யார் ?

எட்கார் : மிகவும் ஏழையான மனிதன். கெட்ட காலத்தின் அடிகளால் ஒடுக்கப்பட்டுத் துன்பத்தை அனுபவித்ததன் காரணமாகப் பிறரைக் கண்டிரங்குபவன். கையைக் கொடும். உங்களை ஓர் தக்க இடத்திற்குத் தங்க அழைத்துச் செல்கிறேன்.

கிளஸ்டர் : மனமார்ந்த வந்தனம். கடவுளின் ஆசீர்வாதமும் கொடையும் உனக்கு மேலும் மேலும் ஏற்படட்டும்.

(காரியஸ்தன் வருகிறான்.)

காரியஸ்தன் : பிரசுரம் செய்யப்பட்ட பரிசு. உன்னுடைய கண்ணில்லாத தலையை என் செல்வத்தைப் பெருக்கும்பொருட்டுப் படைத்ததற்கு நான் மிகவும் ஆனந்தமடைகிறேன். ஏ! துன்பமிகுந்த கிழத் துரோகியே, உன் பாபங்களைச் சுருக்கமாக நினைத்துக்கொள். உன்னைக் கொல்லவேண்டிய வாள் ஓங்கப்பட்டுவிட்டது.

கிளஸ்டர் : உன்னுடைய அன்பான கை அதற்கு வேண்டிய சக்தியைக் கொடுக்கட்டும்.

காரியஸ்தன் : தைரியமான குடியானவனே, நீ ஏன் இந்த ராஜத் துரோகிக்கு உதவியாக இருக்கிறாய்? போய்விடு. இல்லாவிடில் இவனுடைய துரதிர்ஷ்டம் என்ற தொத்து வியாதி உன்னையும் பிடித்துக்கொள்ளும். அவன் கையை விடு.

எட்கார் : காரணமில்லாமல் என்னால் விடமுடியாது.

காரியஸ்தன்: அடிமைக்காரப் பயலே! அவனை விடுகிறாயா, அல்லது இறக்கிறாயா?

எட்கார் : ஐயா, கனவானே, உங்கள் வழியைப் பார்த்துச் செல்லுங்கள். ஏழைகள் வழியில் குறுக்கிடாதீர். இப்படி மிரட்டல்களால் என் உயிர் நீங்குவதாயிருந்தால் இரண்டு வாரங்களுக்குள்ளாகவே இறந்திருப்பேன். வேண்டாம். கிழவரிடம் அணுகாதே. என்னை மன்னிக்கவும், உன்னை எச்சரிக்கிறேன். எட்டச்செல். இல்லாவிடில் உன்னுடைய தலை அல்லது என்னுடைய கதை இவைகளில் எது பலமானதென்பதைப் பார்ப்போம். நான் ஒளிக்காமல் சொல்கிறேன்.

காரியஸ்தன் : சாணமேடே! இறந்தொழி. (இருவரும் சண்டையிடுகின்றனர்.)

எட்கார் : உன் பல்லைப் பிடுங்கிவிடுவேன். வா. உன் வாள் யுத்த சாமர்த்தியம் செல்லாது.

காரியஸ்தன் : அடிமையே, என்னைக் கொன்றுவிட்டாய். அயோக்யனே, என் பணப்பையை எடுத்துக்கொள். நீ உயிருடனிருந்தால் என் சவத்தைப் புதை. என்வசமிருக்கும் கடிதங்களைக் கிளஸ்டர் பிரபுவான எட்மண்டிடம் கொடு. அவர் பிரிட்டிஷ் படையுடனிருப்பார். ஓ! அகால மரணம். மரணம். (இறக்கிறான்).

எட்கார்: உன்னை நான் நன்ருய் அறிவேன். ஒரு உபயோக முள்ள போக்கிரி. துன்மார்க்கம் எவ்வளவு விரும்புமோ அவ்வளவு உன்னுடைய எஜமானியின் கெட்ட நடத்தைக்கு அனுசரணையாக இருந்தாய்.

கிளஸ்டர்: என்ன அவன் இறந்துவிட்டான!

எட்கார்: அப்பா, உட்காருங்கள், இளைப்பாருங்கள். அவனுடைய சட்டைப்பையைப் பார்ப்போம். அவன் சொன்ன கடிதங்கள் என் நண்பர்களாயிருக்கலாம். அவன் இறந்துபோனன். அவனுக்கு வேறு யாரும் காலனுக இல்லையே என்று வருந்துகிறேன். எங்கே பார்ப்போம். நன்னடக்கையும், அரக்கும் சற்று விலகியிருங்கள். எதிரிகளின் மனதை அறிவதைப்பற்றிக் குற்றம்சாட்டவேண்டாம். நாம் அவர்கள் இதயத்தைப் பிளக்கிருேம். அவர்கள் கடிதங்களைப் பார்ப்பது அதைவிட உபயோகமானது. (கடிதத்தைப் படிக்கிருன்.) "நம்முடைய சத்யவாக்குகளை மறவாமலிருக்கட்டும். அவரைத் தொலைப்பதற்கு உங்களுக்கு அநேகம் சந்தர்ப்பங்களிருக்கின்றன. உங்கள் விருப்பத்திற்கு மேலாகவே வசதிகள் கிடைக்கும். ஒன்றும் இதுவரையும் செய்யப்படவில்லை. அவர் வெற்றியுடன் மீண்டால், நான் கைதியாவேன், என் படுக்கையே என் சிறை. அந்த வெறுக்கத் தக்க படுக்கையிலிருந்து என்னை விடுவித்து உன் முயற்சிக்கு இடமளி.

தங்கள் (மனைவி, என அழைக்க விரும்புகிறேன்)
பிரியமுள்ள ஊழியக்காரி
கானரில்"

ஓ! எல்லையற்ற பெண்களின் காமமே. அவளுடைய நன்னடத்தையுள்ள புருஷனின் உயிருக்கு உலைவைக்கச் சதி—அந்த இடத்திற்குப் பதிலாக வருவது என் தம்பி. இங்கே மணலில் உன்னைப் புதைப்பேன். கொலைகாரக் காமாந்தகாரர்களின் தூதனே! உரிய காலத்தில் உயிரிழக்கும் சூழ்ச்சியிலகப்பட்ட ட்யூக்கிடம் இந்தக் கௌரவமற்ற கடிதங்களைக் காட்டுவேன். உன்னுடைய சாவையும் காரியத்தைப்பற்றியும் அவருக்குத் தெரிவிப்பது நல்லது.

கிளஸ்டர்: அரசருக்குப் பயித்தியம், எனது கொடிய மனது எவ்வளவு கடினமாயிருந்து அதனுல் எனது துயரங்களைப்பற்றியே நினைந்து நின்றுகொண்டிருக்கிறேன். (வெகுதூரத்தில் முரசொலி கேட்கிறது). என்னுடைய மூளை கலங்கிவிடுவது நன்ருயிருந்திருக்கும்; ஏனென்ருல் என் நினைவு என் துயரங்களைவிட்டுப் பிரிந்திருக்கும். துயரங்கள் தவருக மனது சஞ்சரிப்பதால் அவைகளின் எண்ணமே இல்லாதுபோகும்.

எட்கார்: உங்கள் கையைக்கொடுங்கள். வெகு தூரத்தில் பேரிகை அடிப்பது கேட்கிறது. வாருங்கள், அப்பா, உங்களுக்கு ஒரு துணைவனை அளிப்பேன். (செல்கிருர்கள்.)

அங்கம் 4—காக்ஷி 7

(கார்டிலியா, கென்ட், டாக்டர் வருகின்றனர்.)

கார்டிலியா: ஓ! மிகவும் நல்ல கென்ட் பிரபுவே! நான் எவ்வாறு வாழ்ந்து, நடந்து, உங்களுக்கு நன்றிசெலுத்துவேன்? என்னுடைய ஆயுள் அதற்கு மிகவும் சுருக்கமாக இருப்பதுடன் ஒவ்வொரு முயற்சியும் கைகூடாது.

கென்ட்: தாயே, என்னை அங்கீகரித்ததே எனக்குக் கிடைக்க வேண்டியதற்குமேல் கொடுத்ததாகும். நான் கேள்விப்பட்டதெல்லாம் கேவலம். உண்மையே தவிர கொஞ்சமும் ஏற்றமோ குறைவோ கிடையாது.

கார்டிலியா: நல்ல ஆடையணிந்துகொள்ளும். இந்தக் கந்தைகள் பழைய துன்பமான காலத்தை ஞாபகமூட்டும் சின்னங்கள். நான் வேண்டுகிறேன். அவைகளைக் களையுங்கள்.

கென்ட்: அன்னையே! என்னை மன்னிக்கவும். இப்பொழுது என்னைத் தெரியப்படுத்திக்கொள்வது என் உத்தேசத்தைக் குறைத்துக் கொள்வதாகும். நற்காலமும் நானும் ஒன்றுகூடும்வரை என்னை ஒருவரும் அறியாதிருப்பது எனக்கு ஒரு வரம் எனக் கொள்கிறேன்.

கார்டிலியா: ஓ! அன்புள்ள தெய்வங்களே! அவருடைய ஏமாற்றப்பட்ட மூளையில் ஏற்பட்டிருக்கும் இந்தப் பெரும் பிளவைச் சிகிச்சைசெய்து சரிப்படுத்துங்கள். இந்தக் குழந்தைகளால் இவ்வாறு மாறிய அரசனின் ஒழுங்கின்றி லயமில்லாமல் முரண்படும் புலன்களைச் சரியானபடி சுருதி சேருங்கள்.

டாக்டர்: மகாராணிக்கு விருப்பமானல் அரசரை எழுப்பலாம். அவர் வெகுநேரம் தூங்கிவிட்டார்.

கார்டிலியா: உங்களுடைய சாஸ்திரப்படி செய்யுங்கள். உங்களுக்கு எது உசிதமாகத் தோன்றுகிறதோ அதை அனுசரித்து நடத்துங்கள். அவருக்குப் புத்தாடைகள் அணிவிக்கப்பட்டிருக்கிறதா?

டாக்டர்: தாயே, அவர் அசந்து தூங்கும்பொழுது அவருக்குப் புது ஆடைகள் அணிவித்தோம். அவர் விழிக்கும்பொழுது, தாங்கள் அருகிலிருங்கள். அவர் சாந்தமாயிருப்பாரென்று நான் நம்பவில்லை.

[கார்டிலியா: நல்லது.

டாக்டர்: அருகில் தயவுசெய்து வாருங்கள். அங்கே வாத்யங்களைப் பலமாக வாசியுங்கள்.]

கார்டிலியா: என் அருமைத் தந்தையே! சொஸ்தப்படுத்தும் மருந்து என் அதரங்களில் தவழட்டும். என் சகோதரிகள் தங்களுக்கிழைத்திருக்கும் மாபெரும் தீங்குகளை இம்முத்தம் நீக்கட்டும்.

கென்ட்: கருணையுள்ள இளவரசி!

கார்டிலியா: தாங்கள் அவர்களுடைய பிதாவாக இருந்திராவிடினும் இந்த வெண்மையான தலை மயிர்கள் அவர்களிடம் இரக்கத்தைக் கட்டாயமாக எதிர்பார்த்திருக்கும். பூசலிடும் புயல்காற்றை எதிர்க்கும் முகமா இது? [வானின் கனத்த பயங்கரமான பேரிடிமுன் நிற்கக் கூடியதா? இத்தகைய மிகவும் லேசான தலைக் கவசத்துடன் பளிச், பளிச்சென்று அடிக்கடி தோன்றும் பயங்கரமான மின்னல்களின்கீழ் ஓர் எளிய காவலாளிபோல் நிற்பதா?] அந்த இரவில் என் எதிரியின் நாய் என்னைக் கடித்தாலும்கூட என் கணப்புக்குமுன் குளிர் காய்ந்திருக்கும். பன்றிகளுடனும், திக்கற்ற பிச்சைக்காரர்களுடனும் மிகவும் சிறியதாகவும் துர்நாற்றமுடையதுமான வைக்கோல்மேல் ஒரு பொந்திலடைபட்டுக்கிடக்கத் தாங்கள் அவ்வளவு கேவலமா? அந்தோ, அந்தோ, தங்களுடைய அறிவும் உயிரும் ஒருங்கே உடனடியாக முடிவடையாதது பேராச்சர்யமே. அவர் விழிக்கிறார். அவருடன் பேசுங்கள்.

டாக்டர்: அரசியே, தாங்கள் பேசுங்கள். அதுதான் சரி.

கார்டிலியா: என்னுடைய அரசர் திலகம் எவ்வாறிருக்கிறார்? அரசே! தங்களுக்கு உடல்நிலை எப்படி இருக்கிறது?

லியர்: சவக்குழியிலிருந்து என்னை அப்புறப்படுத்தி எனக்குப் பெரும் தவறிழைத்துவிட்டீர்கள். நீ ஆனந்தமயமான ஒரு ஆத்மா. என்னுடைய கண்ணீர் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியதுபோல் பொசுக்கும்படி நான் ஒரு எரி நெருப்பாலான சக்கரத்தில் பிணிக்கப்பட்டிருக்கிறேன்.

கார்டிலியா: ஐயனே, தாங்கள் என்னை அறிவீர்களா?

லியர்: நீ ஒரு ஆத்மா என்பது தெரியும். நீ எப்பொழுது இறந்தாய்?

கார்டிலியா : இன்னும் வெகுதூரம் வழிதப்பியிருக்கிருர்.

டாக்டர் : அவர் இன்னும் சரியாக விழித்துக்கொள்ளவில்லே. சிறிதுநேரம் அவரைத் தொந்தரவு செய்யாமலிருங்கள்.

லியர் : நான் எங்கு சென்றிருந்தேன்? எங்கிருக்கிறேன்? நல்ல பகல்? நான் மிகவும் ஏமாற்றப்பட்டேன். நான் இம்மாதிரி மற்ருெருவரைப் பார்க்கப் பச்சாத்தாபத்தால் இறக்கவும் விரும்புவேன். எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லே. இவைகள் என்கைகள் என்று நிச்சயமாகக் கூறமாட்டேன். எங்கே பார்ப்போம், குண்டூசியால் குத்தப்படுவதை உணர்கிறேன். என் நிலே இன்னதென்று தெரிந்துகொள்ளமுடியுமா?

கார்டிலியா : என்னைப் பாருங்கள். என்னை ஆசீர்வதித்துத் தங்கள் கரத்தை என் சிரத்தில் வையுங்கள். நீங்கள் முழந்தாளிட்டுப் பணியக்கூடாது.

லியர் : தயவுசெய்து என்னைக் கேலிசெய்யவேண்டாம். நான் அறிவில்லாத கிழவன். வயது கூடுதல் குறைச்சலில்லாமல் எண்பதாகிறது. மேலும் உண்மையைக் கூறினல் எனக்கு மூளை சரியாக இல்லே. நான் உன்னையும் இந்த மனிதனையும் அறிவேன் என்று நினைக்கிறேன். ஆயினும் சந்தேகமாக இருக்கிறது. ஏனெனில், பொதுவாக நான் மறதி உடையவனக இருக்கிறேன். இது என்ன இடம்? என் சாமர்த்தியம் முழுவதையும் உபயோகித்தாலும் இந்த ஆடைகளை ஞாபகப்படுத்திக்கொள்ளமுடியவில்லே. நேற்றிரவு எங்கு தங்கினேன் என்றும் சொல்லமுடியாது. என்னைப் பார்த்து நகைக்கவேண்டாம். நான் எப்படி மனிதனே அதேபோல் இந்தச் சீமாட்டி என் மகள் கார்டிலியா என்று நினைக்கிறேன்.

கார்டிலியா : ஆம். நான் அவளே.

லியர் : உன் கண்ணீர் ஈரமாயிருக்கிறதா? ஆம். உண்மையில் அழவேண்டாம். நீ எனக்கு விஷம் கொடுப்பதானுலும் நான் அதைக் குடிப்பேன். நீ என்னை நேசிக்கவில்லே என்பதை அறிவேன். அதற்கு உனக்குப் போதிய காரணமிருக்கிறது. உன் சகோதரிகள் எனக்குத் தவறிழைத்தார்கள் என்று ஞாபகமிருக்கிறது. அவர்களுக்கு யாதொரு முகாந்தரமும் கிடையாது.

கார்டிலியா : ஒரு காரணமும் கிடையாது, கிடையாது.

லியர் : நான் ப்ரான்ஸிலிருக்கிறேனு?

கென்ட் : தங்களுடைய சொந்த நாட்டிலிருக்கிறீர்கள்.

லியர் : என்னை ஏமாற்றவேண்டாம்.

டாக்டர்: நம்பிக்கைகொள்ளுங்கள், சீமாட்டி! அவருடைய கொடிய கோபம் தணிந்துவிட்டதென்பதைப் பார்க்கிறீர்கள். ஆயினும் அவர் இழந்த காலத்தைச் சரிப்படுத்த நினைப்பது அபாயகரமானது. அவரை உள்ளே அழைத்துச் செல்லுங்கள். மேலும் அமைதி ஏற்படும்வரை தொந்தரவு செய்யவேண்டாம்.

கார்டிலியா: மகாராஜா நடப்பதற்கு இஷ்டப்படுவீர்களா?

லியர்: நீ என்னுடன் பொறுமையாக நடந்துகொள்ளவேண்டும். கடந்தவைகளை மறந்து என்னை மன்னி. நான் வயதானவன். அறிவிழந்தவன்.

(கென்டும், கனவானும்தவிர மற்ற எல்லோரும் செல்கின்றனர்.)

கனவான்: கார்ன்வால் பிரபு அம்மாதிரி கொல்லப்பட்டார் என்பது உண்மையா?

கென்ட்: சந்தேகமேயில்லை. உண்மையே.

கனவான்: அவருடைய படைகளை யார் நடத்துகிறார்கள்.

கென்ட்: கிளஸ்டர் பிரபுவின் வேசிமகன் என்று கூறப்படுகிறது.

கனவான்: அவருடைய நாடுகடத்தப்பட்ட மகன் எட்கார் கென்ட் பிரபுவுடன் ஜெர்மனியில் இருப்பதாகக் கேள்வி.

கென்ட்: வதந்தி மாறுதலாக இருக்கும். நாம் கவனமாக இருக்க வேண்டிய கட்டம் வந்துவிட்டது. இந்நாட்டின் படைகள் சமீபித்து விட்டன.

கனவான்: முடிவு ரத்தக் களறியாக இருக்கும். க்ஷேமமாய் இருங்கள். (செல்கிறார்).

கென்ட்: இன்றையப் போர் நடப்பதைப்பொருத்து என்னுடைய காலமும் அதிர்ஷ்டமும் நன்மையாகவோ தீமையாகவோ முடியும்.

(போகிறார்)

அங்கம் 5—காக்ஷி 1

(எட்மண்ட், ரீகன், கனவான்கள், வீரர்கள் கொடிகளுடனும் முரசுகளுடனும் வருகின்றனர்.)

எட்மண்ட்: ட்யூக் தன் கடைசி தீர்மானத்தையாவது நிறைவேற்றுவாரா, அல்லது வேறு எந்தக் காரணத்தாலாவது தமது வழியை

மாற்றிக்கொள்ள யோசித்திருக்கிறுரா என்பதை அறிந்து வா. அவர் அடிக்கடி மாறுபவராகவும் தன்னையே கடிந்துகொள்பவராகவுமிருக் கிறுர். அவருடைய முடிவான, நிச்சயமான அபிப்ராயம் என்ன என்பதைத் தெரியவேண்டும்.

ரீகன் : நம் சகோதரியின் ஆள் நிச்சயமாக இறந்துவிட்டான்.

எட்மண்ட் : அதைப்பற்றிச் சந்தேகிக்கவேண்டுமா ?

ரீகன் : இனிய பிரபுவே ! நான் உங்களுக்குச் செய்யவிருக்கும் நன்மையை நீங்கள் அறிவீர்கள். உண்மையாகச் சொல்லுங்கள்— நீங்கள் என் அக்காளைக் காதலிக்கவில்லையா ?

எட்மண்ட் : கவுரவமான நேசம். அதைத்தவிர வேறில்லை.

ரீகன் : நீங்கள் ஒருபொழுதும் என் அக்காள் புருஷனைப்போல் அந்தக் குறிப்பிட்ட இடத்திற்குப் போனதில்லையா ?

[எட்மண்ட் : அந்த எண்ணம் உனக்கு மாசு தருகிறது.

ரீகன் : தாங்களும் அவளும்கூடி முழு நம்பிக்கையுடன் ரகசிய மாகப் பேசியிருப்பதாகச் சந்தேகிக்கிறேன்.]

எட்மண்ட் : என் கவுரவத்தின்மேலாணை. அப்படிக்கில்லை.

ரீகன் : நான் அவளை ஒருபொழுதும் சகியேன். என் அன்புள்ள துரையே, அவளுடன் நெருங்கிப் பழகவேண்டாம்.

எட்மண்ட் : என்னைப்பற்றிப் பயமே வேண்டாம்—அவளும் அவள் புருஷன் ட்யூக்கும் (ஆல்பனி, கானரில், படைவீரர், கொடி, முரசுகளுடன் வருகின்றனர்).

[கானரில் : என் தங்கை எனக்கும் அவருக்கும் உள்ள நேசத் தைத் தளர்த்திவிடுவதைவிட யுத்தத்தையே நான் இழப்பேன்.]

ஆல்பனி : என் அன்புள்ள தங்கையே, நன்கு சந்தித்தோம். ஐயா, அரசர் தம் மகளிடம் வந்திருப்பதாகவும் அவர்களுடன் நமது ராஜ்யத்தின் சட்டப்படி பிரஷ்டம் செய்யப்பட்டுப் பிரகடனம் செய்யப் பட்டவர்களுமிருப்பதாகக் கேள்வி. [எங்கு நான் நியாயவானுகவும் சத்யவானுகவுமிருக்க முடியாதோ அங்கு நான் வீர்யவானுக இருந்த தில்லை. இந்த விஷயத்தில் நியாயமான கக்ஷிக்காகக் கூடியிருக்கும் அரசனையும் அவர்கூட இருப்பவர்களையும் எதிர்க்கக் கூடாதென்ருலும் அவர்களுக்குத் துணையாகப் ப்ரான்ஸின் அரசர் நமது நாட்டைப் படை எடுத்திருப்பதால் நான் அவரை எதிர்க்கவேண்டியிருக்கிறது.

எட்மண்ட் : ஐயா. தங்கள் பேச்சு மிகவும் உன்னதமானது.]

ரீகன்: இது புத்திக்கொத்ததா?

கானரில்: எதிரிக்கு விரோதமாக நாம் ஒன்றுகூடுவோம். நம் குடும்பத்தைச் சார்ந்த குழப்பங்கள் இப்பொழுது நமது கவனத்திற் குறியவை அல்ல.

ஆல்பனி: அப்படியானால் யுத்தத்தில் தேர்ச்சியுள்ளவர்களுடன் கலந்து நமது யுத்த தந்திரத்தை நிர்ணயம் செய்வோம்.

எட்மண்ட்: [தங்களை நான் தங்களுடைய படை வீட்டில் வந்து பார்க்கிறேன்.]

ரீகன்: அக்கா, நீ எங்களுடன் வருகிறாயா?

கானரில்: இல்லை.

ரீகன்: அது மிகவும் சௌகர்யமாக இருக்கும். எங்களுடன் வா.

கானரில்: ஓஹோ! எனக்கு அந்தப் புதிர் தெரியும். நான் போகிறேன். (இரண்டு படைகளும் செல்கின்றன).

(எட்கார் வருகிறான்)

எட்கார்: என்னைப்போன்ற ஓர் ஏழையிடம் தாங்கள் எப்பொழு தாவது பேசியிருந்தால் ஒரு வார்த்தை கேளுங்கள்.

ஆல்பனி: உனக்காக நிற்கிறேன். சொல்.

எட்கார்: யுத்தம் ஆரம்பமாகுமுன் இந்தக் கடிதத்தைப் படியுங்கள். நீங்கள் ஜெயித்தால் இதைக்கொண்டு வந்தவனைக் கூப்பிட்டு எக்காளம் ஊதட்டும். நான் எளியவனாகக் காணப்பட்டாலும் இதில் எழுதியிருப்பவைகளை நிரூபிக்கக்கூடிய ஒரு சிறந்த வீரனைக் கொண்டு வரக்கூடும். நீங்கள் இறந்தால் உங்களுக்கு இவ்வுலகிலிருந்த வேலை முடிவடைந்ததுடன் உங்களைப்பற்றிய சதிகளும் ஒழிந்தன. நல் லதிர்ஷ்டம் உங்களை நேசிக்கிறது.

ஆல்பனி: நான் கடிதத்தைப் படிக்கும்வரை தங்கு.

எட்கார்: அதற்கு எனக்கு அனுமதியில்லை. காலம் வரட்டும். வள்ளுவன் கூப்பிடட்டும். நான் மறுபடியும் வருவேன், (போகிறான்)

ஆல்பனி: நல்லது, சென்றுவா. நான் உன் கடிதத்தைப் பார்க்கிறேன். (எட்மண்ட் வருகிறான்)

எட்மண்ட்: எதிரி தென்பட்டுவிட்டான். உங்களுடைய படைகளை அணிவகுத்து நிறுத்துங்கள். இதோ அவர்களுடைய உண்மையான எண்ணிக்கையும் பலமும் காட்டக்கூடிய குறிப்பு சிரமத்தின் பேரில் கிடைத்தது. ஆனால் இப்பொழுது நீங்கள் வேகமாக நடந்து கொள்ளவேண்டும்.

ஆல்பனி : நாம் அவர்கள் வரும்காலத்தை வரவேற்போம்.

(செல்கிருர்)

எட்மண்ட் : இந்த இரண்டு சகோதரிகளேயும் காதலிப்பதாக நான் வாக்களித்திருக்கிறேன். அவர்களிருவரும் குளவியின் கொடுக்குக்ள்போல் ஒருவர்மேல் ஒருவர் பொருமையாக இருக்கின்றனர். அவர்களில் யாரை நான் அங்கீகரிக்கலாம். இருவரையுமா? ஒருவரையா? அல்லது ஒருவருமே வேண்டாமா? இருவரும் உயிருடனிருந்தால் ஒருவருடனும் சுகிக்கமுடியாது. விதந்துவை ஏற்றுக்கொண்டால் அவள் சகோதரி கானரில்லிற்கு அது பயித்தியமடையவும் தாளமுடியாத துயரத்தையடையவும் செய்கிறது. அவளுடைய புருஷன் உயிருடனிருப்பதால் அவளே நான் திருப்திசெய்யவும் முடியாது. அப்படியானுல் இப்பொழுது இந்த யுத்தத்திற்கு அவருடைய பேரை உபயோகிப்போம். அது முடிந்ததும் அவரை ஒழிக்க விரும்புகிறவள் அவரை விரைவில் ஒழிப்பதற்கான வழியைத் தேடட்டும். அவர் லியருக்கும் கார்டிலியாவிற்கும் அளிக்கவிருக்கும் மன்னிப்பு—சண்டை முடிந்து அவர்கள் நம் வசப்பட்டால்—அவர்கள் எக்காலத்திலும் அதை அடையமாட்டார்கள். என்னுடைய நிலமை என்னைக் காத்துக்கொள்ள வழி தேடச் சொல்கிறது. தர்க்கம் செய்ய அனுமதிக்கவில்லே.

அங்கம் 5—காக்ஷி 2

(உள்ளே எச்சரிக்கை. லியர், கார்டிலியா, படைவீரர்கள் கொடி படைகளுடன் தோன்றி மறைகின்றனர். எட்காரும் கிளஸ்டரும் வருகின்றனர்.)

எட்கார் : தந்தையே, இந்த மரத்தின் நிழலேயே தங்களுடைய உபசரிக்கும் வீட்டினராகக் கொள்ளுங்கள். நியாயம் வெல்லவேண்டுமென்று பிரார்த்தனே செய்யுங்கள். நான் திரும்பி வந்தேனுனல் தங்களுக்கு வேண்டிய உதவியைச் செய்வேன்.

கிளஸ்டர் : ஐயா, கடவுளின் கிருபை உன்னேப் பின்பற்றட்டும். (எட்கார் செல்கிருன்).

(எச்சரிக்கையும் பின்வாங்குதலும்—எட்கார் வருகிருன்)

எட்கார் : கிழவரே, சென்றுவிடுங்கள். என் கையைப் பற்றுங்கள்—சென்றுவிடுங்கள். மன்னன் லியர் தோற்றுவிட்டார். அவரும் அவர் மகளும் கைதியானுர்கள். என்னுடன் என் கையைப் பிடித்துக்கொண்டு வாருங்கள்.

கிளஸ்டர் : இதைவிட்டுச் செல்லவேண்டாம். ஐயா, ஒருவன் இங்கேயே கிடந்து சாகலாம்.

எட்கார் : மறுபடியும் துர் எண்ணங்களா? மனிதர்கள் எவ்வாறு இங்கு வந்தார்களோ அதேபோல் இதை விட்டுச் செல்வதையும் பொறுத்துத்தானகவேண்டும். எல்லாம் உரிய காலத்தில் நடக்கும். வாருங்கள்.

கிளஸ்டர் : ஆம். அதுவும் உண்மையே. (செல்கிறார்கள்)

அங்கம் 5—காக்ஷி 3

(எட்மண்ட் வெற்றி வீரனுகவும், லியர், கார்டிலியா கைதிகளாகவும் படைத்தலைவர், படைவீரருடன் வருகின்றனர்).

எட்மண்ட் : சில உத்தியோகஸ்தர்கள்—அவர்களை அழைத்துச் செல்லுங்கள். அவர்களைத் தண்டிப்பதற்குரிய மேலானவர்களுடைய அபிப்ராயம் தெரியும்வரை தக்க காவலில் வையுங்கள்.

கார்டிலியா : மிகவும் சிறந்த நோக்கத்துடன் நடந்து மிகவும் கெட்ட பலனை அடைந்தவர்களில் நாம் முதலானவர்களல்ல. கொடுமை இழைக்கப்பட்ட அரசே! தங்களின்பொருட்டு நான் கீழே தள்ளப் பட்டேன். நான் என் பொருட்டானல் பொய்யான துரதிர்ஷ்டத்தின் கோபத்தைக் கோபித்து விரட்டிவிடுவேன். நாம் இந்தப் பெண்களையும் இந்த சகோதரிகளையும் பார்க்கவேண்டாமா?

லியர் : இல்லை. கூடாது, கூடாது, வா. நாம் சிறைக்குச் செல்வோம். நாமிருவர்மட்டிலும் கூண்டிலடைக்கப்பட்ட பறவைகள் போல் பாடிக்கொண்டிருப்போம். நீ என்னுடைய ஆசீர்வாதத்தை விரும்பும்பொழுது நான் மண்டியிட்டுப் பணிந்து உன் மன்னிப்பைக் கோருவேன். அவ்வாறு வாழ்வோம், துதிப்போம், பாடுவோம், பழங் கதைகளைச் சொல்வோம், வர்ணம்பூசிய வண்ணாத்திப்பூச்சிகளைக் கண்டு சிரிப்போம், அறிவற்ற அயோக்யர்கள் அரண்மனைச் சமாச்சாரங் களைப் பற்றிப் பேசுவதைக் கேட்போம். அவர்களுடனும் நாம் யார் வென்றார்கள், யார் தோற்றார்கள், யாரிருக்கிறார்கள், யார் சென்றார்கள் என்றெல்லாம் பேசுவோம். நாம் கடவுளின் ஒற்றர்களைப்போல் நினைந்து சிருஷ்டியின் ரகசியங்களை அறிந்ததாகப் பாவிப்போம். சந்திரனை அனுசரித்துப் பொங்கியும் வற்றியும் கழியும் சமுத்திரப் பெருக்கைப் போன்ற மனிதர்களுடைய கக்ஷிகளையும் கூட்டங்களையும் நாம் நாற்புறமும் சுவருள்ள சிறையிலிருந்தவாறே கடந்து வாழ்வோம்.

எட்மண்ட்: அவர்களை அழைத்துச் செல்லுங்கள்.

லியர்: இத்தகைய யக்ஞங்களின்மேல், கார்டிலியா, தேவதைகளும் சாம்பிராணி தூபம் போடுகிறார்கள். நான் உன்னை அடைந்து விட்டேனா? இனி நம்மைப் பிரிக்க நினைப்பவன் வானிலிருந்து ஒரு எரியும் கொள்ளிக்கட்டையைப் பெற்று நரிகளைப் புகையிட்டு விரட்டுவதுபோல் இங்கிருந்து விரட்டவேண்டும். உன் கண்ணீரைத் துடைத்துக்கொள். அவர்களைச் சைத்தான் அவர்கள் நம்மை அழச் செய்தவன் முன்னர் உடலும் மயிரும் உள்பட யாவற்றுடனும் விழுங்கிவிடும். நாம் முதலில் அவர்களைப் பசியால்வாடிச் சாகச்செய்வோம்.

(காவலாளிகளுடன் லியரும் கார்டிலியாவும் செல்கிறார்கள்.)

எட்மண்ட்: காப்டன், இங்கு வா. நான் சொல்வதைக் கவனமாகக் கேள். இந்தச் சீட்டை எடுத்துக்கொள். அவர்களைப் பின்பற்றிச் சிறைச்சாலைக்குச் செல். ஏற்கனவே நான் உன்னை ஒருபடி உயர்த்திவிட்டேன். இந்தக் குறிப்பில் கண்டபடி செய்தால் மிகவும் உயர்ந்த பதவியை அடைவாய். இதை நீ அறிந்துகொள். காலத்திற்கேற்ப மனிதர்கள் இருக்கிறார்கள். வாளைப் பிடித்தவனுக்கு இளகிய மனது ஏற்காது. உன்னுடைய இந்தப் பெரிய காரியம் தர்க்கத்திற்கு இடம் கொடாது. ஒன்று, நீ செய்வதாகச் சொல், அல்லது வேறு வழியில் ஜீவனத்தைத் தேடு.

படைத் தலைவன்: நான் அவ்வாறே செய்கிறேன், பிரபுவே.

எட்மண்ட்: உடனே அதில் முயற்சி செய். செய்தானவுடன் சந்தோஷம் என்று எழுது. கவனி. உடனே செய். நான் எழுதியிருக்கிறபடி நிறைவேற்று.

[படைத் தலைவன்: நான் ஒரு வண்டியை இழுக்கமுடியாது. காய்ந்த வாலியைத் தின்னவும் முடியாது. இது மனிதன் செய்யக்கூடியதாயின் நான் செய்வேன்.] (செல்கிறான்)

(ஆல்பனி, கானரில், ரீகன், படை வீரர்கள் வருகின்றனர்.)

ஆல்பனி: ஐயா, இன்று தங்களுடைய ஆண்மையையும் தைர்யத்தையும் காண்பித்தீர்கள். அதிர்ஷ்டமும் உங்கள் பக்கலிலிருந்தது. இன்றைய யுத்தத்தின் எதிரிகளை நீர் கைதியாக்கி வைத்திருக்கிறீர். நமது சாவதானத்திற்கேற்றதும் அவர்களுடைய தகுதிக்கும் ஏற்றதெதுவோ அவ்வாறு அவர்களை நடத்தும்படி கோருகிறேன்.

எட்மண்ட்: வயதான அரசனை—அவருடைய முதுமையே வசீகர சக்தியுடையதாக இருப்பதாலும், அவருடைய பட்டம் அதைவிட அதிகமாக நாட்டு ஜனங்களைத் தன் பக்கத்திற்கு இழுக்கவும், நமது

ஈட்டிப் படைகளை அவர்களை ஆணையிடும் நம் கண்களிலேயே பாய்ச் சும்படி செய்யவும் சக்தியுடையதாயிருப்பதாலும் நான் ஒரு தக்க காவல் கூடத்திற்கு அனுப்புவது சரி என்று அனுப்பிவிட்டேன். அதே காரணங்களுக்காக அரசியையும் அவருடன் அனுப்பிவிட்டேன். நாளையோ, அல்லது வேறு எந்த நாளிலோ நீங்கள் விஜாரணை நடத்தும் இடத்திற்கு ஆஜராவதற்குத் தயாராக இருக்கிறார்கள். [இப்பொழுது நாம் யுத்தத்தில் ரத்தத்தையும் வேர்வையையும் சிந்திக்கொண்டிருக் கிறோம். நண்பன் நண்பனை இழந்தான். தங்களுடைய விரோதத்தின் நுட்பத்தை அறியும் விரோதிகள் தங்கள் விரோதிகளைச் சபித்துக் கொண்டிருக்கிறார்கள். கார்டிலியாவுடையவும் அவள் பிதாவுடையவும் விஷயத்தைச் சிந்திக்க வேறு தக்க இடம் வேண்டும்.]

ஆல்பனி : ஐயா, தங்கள் அனுமதியுடன், நான் தங்களை இந்த யுத்தத்தில் ஓர் குடியாகவே கருதுகிறேன், ஒரு சகோதரனாகவல்ல.

ரீகன் : நாம் அவருக்கு அளித்த பதவியால் அவருக்கு அது உரியது. நீங்கள் இவ்வளவு பேசுவதற்குமுன் நம்முடைய அபிப்ரா யத்தை அறிந்துகொண்டிருக்கவேண்டும். அவர் நம்முடைய படை களுக்குத் தலைமை வகித்தார். எனவே அந்த பாத்யதை அவரைத் தங்களுடைய சகோதரர் என அழைக்கக் கட்டாயப்படுத்தும்.

கானரில் : அவ்வளவு வேகம் வேண்டாம். உன்னுடைய பட்டங் களைவிட அவர் தன்னுடைய பெருமையாலேயே மேன்மை அடைகிறார்.

ரீகன் : என்னுடைய உரிமையில், நான் அளித்த பதவியால் அவர் மிகச் சிறந்தவர்களுக்குச் சமதையாகிறார்.

கானரில் : அவர் உன் புருஷனானால் நீ கூறுவது பொருந்தும்.

ரீகன் : நையாண்டி செய்பவர்கள் பலசமயம் ஆருடம் சொல்லுப வர்களாகிறார்கள்.

கானரில் : பேஷ், பேஷ் அந்தமாதிரி சொன்ன கண்கள் ஒண் ணரைக்கண்கள்.

ரீகன் : சீமாட்டியே, எனக்குத் தேக சௌக்கியமில்லை. இல்லா விடில் உனக்குத் தக்கவாறு பதிலளித்திருப்பேன். சேனாபதி, என் படைகள், கைதிகள், என் ஆஸ்தி யாவற்றையும் நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள், இஷ்டப்படி செய்யுங்கள். என் சம்பந்தப்பட்ட மட்டில்—இந்த சரீரம் தங்களுடையது. உலகம் அறியட்டும். நான் தங்களை என் நாதனாகவும் எஜமானாகவுமாக்கிவிட்டேன்.

கானரில் : அவருடன் சுகிக்க நினைக்கிறாயா?

ஆல்பனி : அனுமதிப்பது உன் தயவிலில்லை.

எட்மண்ட் : பிரபுவே, தங்களிடத்திலுமில்லே.

ஆல்பனி : வேசிபுத்ரனே, ஆம்.

ரீகன் : என்னுடைய உரிமை எல்லாம் தங்களுடையதென்று பறையறையும்.

ஆல்பனி : கொஞ்சம் பொறு. சொல்வதைக் கேள். எட்மண்ட், உன்னை மிகவும் கொடிய ராஜத் துரோகக் குற்றத்திற்காகக் கைது செய்கிறேன். அத்துடன் இந்த அலங்காரம் செய்துகொண்ட பாம் பையும் சேர்த்து. உன்னுடைய இச்சையிருக்கிறதே—அழகிய தங் கையே அதை என் மனைவியின் நலத்தின் பொருட்டுத் தடுக்கிறேன். அவள்தான் இந்தப் பிரபுவிற்கு வாழ்க்கைப்படுவதாக நிச்சயமாகி இருக்கிறது. எனவே அவள் புருஷனுன நான் உன் மணச்சடங்கைத் தடைசெய்கிறேன். நீ கல்யாணம் செய்துகொள்ள விரும்பினுல் என்னைக் காதலிப்பாய். என் மனைவிக்குக் கல்யாணம் தீர்மானமாகி விட்டது.

கானரில் : யாவும் நடிப்பு.

ஆல்பனி : கிளஸ்டர், நீ ஆயுதம் தரித்திருக்கிருய். எக்காளம் ஊதட்டும். உன்னுடைய மிகக் கொடிய, வெளிப்படையான, சந்தே கத்திற்கிடமில்லாத அநேகம் ராஜத் துரோகச் செயல்களை உன் சரீ ரத்தின்பேரில் ருஜுச் செய்ய யாராவது முன்வராவிட்டால் நானே அறை கூவுகிறேன். நான் இங்கு உன்னைப்பற்றித் தெரிவித்த யாவை யும் முற்றிலும் அணுக்கூடக் குறைவில்லாமல் உண்மை என்று உன் இதயத்தைப் பிளந்து ருஜுச் செய்வேன். இல்லாவிடில் ரொட்டியைத் தொடுவதில்லை.

ரீகன் : சிக்கு. ஓ ! சிக்கு.

கானரில் : இல்லாவிடில் நான் மருந்தையே நம்பப்போவ தில்லை.

எட்மண்ட் : இதோ என் பதில். என்னைத் துரோகி என்று சொல்பவன் யாரா இருந்தாலும் அவன் அயோக்யத்தனமாகப் பொய் சொல்கிருன். எக்காளம் ஊதித் தரவழையும். யார் தைரியமாக வந்தாலும் அவன்மேலும், உன்மேலும், யார்மேலானுலும் நான் என்னுடைய சத்யத்தையும் கவுரவத்தையும் நிலைநிறுத்துவேன்.

ஆல்பனி : ஒரு வள்ளுவன்—ஹோ ! (ஒரு வள்ளுவன் வருகிருன்).

எட்மண்ட் : (ஒரு வள்ளுவன், ஹோ ! ஒரு வள்ளுவன்).

ஆல்பனி: உன் ஒருவனுடைய பரிசுத்தத்தில்மட்டும் நம்பிக்கை வை. என் பெயரால் சேர்க்கப்பட்ட உன் படைகள் எல்லாம் என் ஆணையால் விடைகொடுக்கப்பட்டுவிட்டார்கள்.

ரீகன்: என்னுடைய வியாதி அதிகரிக்கிறது.

ஆல்பனி: அவளுடைய தேகநிலை சரியாக இல்லை. என்னுடைய படை வீட்டிற்கு அழைத்துச்செல்லுங்கள்; (ரீகனை அழைத்துச் செல்கிறார்கள்). வள்ளுவனே, இங்கு வா. எக்காளத்தை ஊது. இதைப் படி. (எக்காளம் ஊதுகிறது. வள்ளுவன் படிக்கிறான்.)

"இந்தப் படையைச் சேர்ந்த யாராவதொரு கவுரவமும் தரமும் உடைய மனிதன் கிளஸ்டர் பிரபு என்று கருதப்படும் எட்மண்ட் ஒரு கெட்ட ராஜத் துரோகி என்று நிரூபிக்க அவனுடன் யுத்தம் செய்யத் துணிந்தால் மூன்றாவது முறை எக்காளம் ஊதுமுன் ஆஜராகட்டும். அவன் அதிகம் தற்காப்புடையவன்."

எட்மண்ட்: ஊதுங்கள். (முதல் தடவை எக்காளம்.)

வள்ளுவன்: மறுமுறை. (2-ம் தடவை எக்காளம்.)

வள்ளுவன்: மறுமுறை. (3-ம் தடவை.) (உள்ளேயிருந்து பதிலுக்கு எக்காளம் கேட்கிறது. எட்கார் ஆயுதம் தரித்து மூன்றும் தடவையுடன் தன் முன்னால் ஒரு எக்காளத்துடன் வருகிறான்.)

ஆல்பனி: அவன் கருத்தென்ன? இந்த எக்காளத்தைக் கேட்டு ஏன் வந்தான் என்பதைக் கேளுங்கள்?

வள்ளுவன்: நீ யார்? உன் பெயர், உன் அந்தஸ்து, நீ ஏன் எக்காளம் ஊதியதற்காக வந்தாய் என்பதைச் சொல்.

எட்கார்: என்னுடைய பெயர் துரோகத்தின் பற்களால் கடித்துத் துண்டாக்கப்பட்டு இழக்கப்பட்டது. ஆயினும் நான் எதிர்க்கவந்த எதிரியைப்போலவே அந்தஸ்து உடையவன்.

ஆல்பனி: அந்த எதிரி யார்?

எட்கார்: கிளஸ்டர் பிரபுவிற்காக யார் பிரதிநிதி?

எட்மண்ட்: அவரேதான். அவருக்கு நீ என்ன சொல்கிறாய்?

எட்கார்: உன் வாளை உருவு. என்னுடைய வார்த்தைகள் ஒரு கவுரவமான இதயத்தைப் பழித்ததாயின் உன் கரங்கள் உனக்கு நியாய மளிக்கட்டும். இதோ என் வாள். அது என்னுடைய உரிமை, கவுரவம், பிரமாணம், என் தொழில் இவைகளின் உரிமை. உன்னுடைய சக்தி, அந்தஸ்து, யௌவனம், மேன்மை, உன் வெற்றிவாள்,

உன்னுடைய புதிய அதிர்ஷடம், உன் ஆண்மை தைர்யம் யாவற்றையும் பொருட்படுத்தாது நான் ஆக்ஷேபிக்கிறேன். நீ ஒரு துரோகி. உன் தெய்வம், சகோதரன், தந்தை, யாவர்க்கும் பொய்யன். இந்த உயர் குணத் தோன்றலுக்கு விரோதமாகச் சூழ்ச்சி செய்தவன். உன் உச்சந் தலையிலிருந்து உள்ளங்கால்வரை மிகவும் கேவலமான கோழையான, அசுத்தமான, பாபியான துரோகி. நீ இவைகளை மறுத்தால், இந்த வாள், இந்தக் கரம், என் உற்சாகம் யாவும் உன் நெஞ்சின்மேல்—அதனுடன் பேசுகிறேன்—நீ பொய் சொல்கிறாய் என்று ருஜூச் செய்யத் தீர்மானித்திருக்கின்றன.

எட்மண்ட் : உன்னுடைய பேரைக் கேட்டுத் தெரிந்துகொள்வது தான் புத்திசாலித்தனம். ஆனால் உன் வெளித் தோற்றம் அழகாகவும் யுத்தத்திற்கு லாயக்காகவும் தெரிவதாலும், உன் பேச்சு உயர்ந்த வம்சத்தையும் நல்ல பழக்கவழக்கங்களையும் தெரிவிப்பதாலும், நான் யுத்த வீரர்களின் விதிகளைக்கொண்டு நான் சாவதானத்துடன் தாமசிக்கலாமென்றாலும் அவைகளை நான் வெறுத்து உதறித் தள்ளுகிறேன். இந்த துரோகக் குற்றச்சாட்டை உன் தலையிலேயே சுமத்துகிறேன். நரகத்திலும் வெறுக்கப்பட்ட பொய் உன் நெஞ்சைப் பிளக்கட்டும். அவை இன்னும் உன்னை சரியானபடி பார்க்கவில்லை, காயப் படுத்தவுமில்லை. இந்த என் வாள் அவைகளுக்கு உடனே வழிகாட்டி சாஸ்வதமாக இருக்கவேண்டிய இடத்திற்கு அனுப்பும். எக்காளத்தை ஊதுங்கள்.

(வாத்ய கோஷம். அவர்கள் சண்டையிடுகின்றனர். எட்மண்ட் விழுகிறான்.)

ஆல்பனி : அவனைக் காப்பாற்றுங்கள். அவனைக் காப்பாற்றுங்கள்.

கானரில் : கிளஸ்டர் ! இது சூழ்ச்சி. யுத்தத்தின் விதிகளின்படி இனம் தெரியாத எதிரிக்குப் பதிலளிக்க நீ கட்டுப்படவில்லை. நீர் தோல்வியுறவில்லை. ஏமாற்றப்பட்டுக் கொலையுண்டீர்.

ஆல்பனி : அம்மையே ! உம் வாயைமூடும். அல்லது இந்தக் காகிதத்தால் அதை மூட நேரிடும். எந்தப் பேதையும்விடக் கேவலமான நீ, கொஞ்சம் பொறு. உன்னுடைய குற்றத்தை நீயே படி. சிமாட்டியே கிழித்துவிடவேண்டாம். அது இன்னதென்று உனக்குத் தெரியுமென்பது விளங்குகிறது.

கானரில் : நான் செய்ததாகவே சொல். சட்டங்கள் என்னுடையவை. தங்களுடையதல்ல. என்னை யார் குற்றம் சாட்டமுடியும்?

ஆல்பனி: மிகவும் பைசாசகரமானது! ஓ! உனக்கு இந்தக் கடிதத்தைத் தெரியுமா!

எட்மண்ட்: எனக்குத் தெரிந்ததைப்பற்றி என்னிடம் கேட்க வேண்டாம். (கானரில் போகிறாள்).

ஆல்பனி: அவளைப் பின்பற்றுங்கள். அவள் மூர்க்கமாக இருக்கிறாள். அவளை அடக்குங்கள்.

எட்மண்ட்: நீ என்பேரில் சாட்டும் குற்றங்களை எல்லாம் செய்தேன். நான் இன்னும் அதிகமாகவே செய்திருக்கிறேன். அவைகள் காலப்போக்கில் தெரியவரும். ஆனால் அவைகள் முடிந்து விட்டன. நானும் அப்படியே. எனக்கு இந்த அதிர்ஷ்டத்தைத் தந்த நீ யார்? நீ உயர்குலத்தோனாயின் உன்னை மன்னிப்பேன்.

எட்கார்: நாம் அறத்தைப் பரிமாறிக்கொள்வோம். நான் குலத்தில் உன்னைவிடத் தாழ்ந்தவனல்ல, எட்மண்ட். நான் உன்னை விடச் சிறந்தவனானால் நீ எனக்கு இழைத்த தீமை அதிகம். என் பெயர் எட்கார்—உன் தந்தையின் மகன். தெய்வங்கள் நீதிதவறவில்லை. நம்முடைய இன்பமென்று நினைக்கும் பாபங்களைக் கருவியாகக் கொண்டே நம்மை அவர்கள் தண்டிக்கிறார்கள். திருட்டுத்தனமாகவும் பாபச் செயலுடனும் உன்னைப் பெற்றதால் அவர் தன் கண்களை இழந்தார்.

எட்மண்ட்: நீ சொல்வது சரியே. முற்றிலும் உண்மையே சக்கரம் முற்றிலும் சுற்றிவந்துவிட்டது—நான் இக்கதியடைந்தேன்.

ஆல்பனி: உன் நடையே, நீ அரச வம்சத்தைச் சார்ந்தவன் என்று காட்டியதாக நினைத்தேன். நான் உன்னைத் தழுவவேண்டும். உன்னையும் உன் தந்தையையும் எப்பொழுதாவது வெறுத்திருந்தேனாயின் துக்கம் என் மார்பைப் பிளக்கட்டும்.

எட்கார்: சிலமிக்க தோன்றலே! நான் அதை அறிவேன்.

ஆல்பனி: நீ எங்கே ஒளிந்திருந்தாய்? நீ உன் தந்தையின் துன்பங்களை எவ்வாறுணர்ந்தாய்?

எட்கார்: அவருக்குப் பணிவிடை செய்ததால். ஒரு சிறு கதையைக் கேளுங்கள். அதைக் கூறும்பொழுது என் நெஞ்சம் வெடிக்கும். சடிதியில் என்னைத் தொடர்ந்த அந்த உயிருக்கே ஆபத்தான பிரகடனத்திலிருந்துதப்ப—ஆ, நம் வாழ்க்கையின் இன்பம் நாம் உடனே இறந்தொழியாமல் மரண வேதனையை ஒவ்வொரு விநாடியும் அனுபவிக்கிறோம்—ஒரு பயித்தியக்காரனுடைய கந்தைகளுக்குள் புகுந்தேன். நாய்கள்கூட இழித்துக் கூறும் வேஷத்தைத் தரித்தேன்.

இந்த ஆடையுடன் விலையுயர்ந்த ஒளிமிகுந்த மணிகளை இழந்து, ரத்தம் சொரியும் கண்களுடன் வந்த என் தந்தையைக் கண்டேன். அவருடைய வழிகாட்டியாக மாறினேன். அவருக்காகப் பிச்சை எடுத்தும், வழி காட்டியும், அவருடைய நிராசையைப் போக்கினேன். ஆனால் ஒரு பொழுதும் (அது சுத்த மடமை) நான் யார் என்பதை அவருக்குத் தெரிவிக்கவில்லை. நான் வெற்றியடைவேன் என்று எதிர்பார்த்தாலும் நிச்சயமில்லாததால் அரைமணி நேரத்திற்குமுன் எனக்கு ஆயுதங்கள் கிடைத்ததன்மேல் அவருடைய ஆசீர்வாதத்தை விரும்பி எங்களுடைய யாத்திரையின் முழு விபரத்தையும் ஆதியோடந்தமாகக் கூறினேன். ஆனால் அவருடைய இளகிய மனது (ஒன்றுக்கொன்று முரண்பட்ட அனுபவங்களைத் தாங்கமுடியாத நிலையில்) அதிகமான கோபம், சந்தோஷம், துக்கம் இவைகளுக்கிடையே புன்முறுவலுடன் வெடித்தது.

எட்மண்ட்: இந்த உன் பேச்சு என் மனதை இளக்கிவிட்டது. அதனால் நன்மை ஏற்படலாம். மேலும் கூறு. நீ ஏதோ இன்னும் சொல்லவேண்டிய சமாசாரம் வைத்திருப்பதுபோல் காண்கிறது.

ஆல்பனி: இன்னும் ஏதேனுமிருந்தால், துன்பமானதாயிருந்தால் சொல்லவேண்டாம். ஏனென்றால் இதைக் கேட்டவுடனேயே நான் மண்ணுலகைவிட்டு மறையும் நிலையிலிருக்கிறேன்.

எட்கார்: [துக்கத்தை விரும்பாதவர்கட்கு இது ஒரு சிறு காலமாகத் தோன்றும். மற்றவர்களுக்கு, அதைப் பெரிதாக நினைப்பவர்களுக்கு, மிகவும் அதிகமாகத் தோன்றும். நான் இவ்வாறு அழுது கொண்டிருக்கும்பொழுது, என்னுடைய துர்ப்பாக்கிய நிலையில் என்னுடைய சகவாசத்தை வெறுத்த ஒரு மனிதன், பின்னால் என்னை யாரென்று அறிந்தபின், தன் கைகளால் என் கழுத்தைக் கட்டிக்கொண்டு வானமே இடிந்து விழும்படி கதறினான். என் தந்தையின் பேரில் விழுந்துபுரண்டு தன்னையும் மன்னர் லியரைப்பற்றியும் இதுவரை காதால் கேள்விப்படாத அவ்வளவு துக்ககரமான சரித்திரத்தைக் கூறினான். சொல்லுமளவில் அம்மனிதனுடை துன்பம் அதிகரித்து அவருடைய ஜீவநாடிகள் அற்றுப்போகத் தொடங்கின. அப்பொழுது எக்காளம் இரண்டுமுறை ஊதிவிட்டது. அந்த மனிதனை நினைவு பிரக்ஞை இல்லாத நிலைமையில் விட்டுவந்தேன்.

ஆல்பனி: அந்த மனிதன் யார்?

எட்கார்: கென்ட், ஐயா, நாடு கடத்தப்பட்ட கென்ட், மாறு வேடத்துடன் தன் எதிரியான அரசரைப் பின்தொடர்ந்து ஒரு அடிமையும் செய்யத் துணியாத அளவு சேவைகள் செய்தார்.]

(ஒரு கனவான் ரத்தம் தோய்ந்த கத்தியுடன் வருகிறார்.)

கனவான்: உதவிக்கு வாருங்கள். வாருங்கள்.

எட்கார்: எவ்வித உதவி.

ஆல்பனி: சொல்லுமய்யா?

எட்கார்: ரத்தம் தோய்ந்த வாளின் அர்த்தமென்ன?

கனவான்: அது கொதிக்கிறது. புகைகிறது. அது அவர்களுடைய இதயத்திலிருந்து வந்தது. அவள் இறந்துவிட்டாள்.

ஆல்பனி: யார் இறந்தாள் சொல்.

கனவான்: தங்களுடைய மனைவி. தங்களுடைய மனைவி. அவள் தங்கை அவளால் விஷம் கொடுக்கப்பட்டாள். அதை அவள் ஒப்புக்கொண்டாள்.

எட்மண்ட்: எனக்கும் அவர்களிருவருக்கும் மணப்பேச்சிருந்தது. இப்பொழுது ஏககாலத்தில் மூவரும் மணந்துகொண்டோம்.

எட்கார்: இதோ கென்ட் வருகிறார். (கென்ட் வருகிறார்.)

ஆல்பனி: அவர்கள் உயிரோடிருந்தாலும் சரி, இறந்தாலும் சரி. அவர்களின் சரீரங்களைக் கொண்டுவாருங்கள். நம்மை நடுங்கும்படி செய்யும் தெய்வத்தின் இந்தத் தீர்ப்பு நம்மிடம் இரக்கத்தை உண்டாக்கவில்லை. ஓ! இதுதான் அவரா? நல்ல நாகரீக முறை காட்டும் வரவேற்பளிக்க இது சமயமல்ல.

கென்ட்: நான் என் எஜமானரான அரசரிடம் விடைபெற்றுச் செல்லவந்தேன். அவர் இங்கில்லையா?

ஆல்பனி: என்ன பெரிய தவறு. நாம் மறந்தோம். அரசர் எங்கே? கார்டிலியா எங்கே? எட்மண்ட் வாய்திறந்து சொல். கென்ட் இந்த வஸ்துக்களைப் பார்த்தீரா?

(கானரில்லுடையவும் ரீகனுடையவும் பிரேதங்கள் கொண்டுவரப்படுகின்றன.)

கென்ட்: ஐயோ, ஏன் இப்படி?

எட்மண்ட்: எட்மண்ட் காதலிக்கப்பட்டான். என் பொருட்டு ஒருவர் மற்றவருக்கு விஷமிட்டுவிட்டுத் தற்கொலை செய்துகொண்டார்கள்.

ஆல்பனி: அப்படியே அவர்களுடைய முகத்தை மூடிவிடுங்கள்.

எட்மண்ட் : நான் உயிருக்கு மன்ருடுகிறேன். என்னுடைய இயற்கைக்கு மாருக ஒரு நல்ல காரியம் செய்ய நினைக்கிறேன். வேகமாக கோட்டைக்கு ஒரு ஆள் அனுப்புங்கள். லியருடையவும் கார்டிலியாவுடையவும் உயிரைப் போக்க என் உத்தரவிருக்கிறது. தக்க சமயத்திற்குள் அனுப்புங்கள்.

ஆல்பனி: ஓடு, ஓடு, ஓடு.

எட்கார் : என் பிரபுவே யாருக்கு? யாருக்கு அந்த உத்தரவு. மன்னிப்புக் காட்ட உங்கள் அடையாளம் வேண்டும்.

எட்மண்ட் : நல்ல யோசனை. என் வாளைக்கொண்டுபோய்ப் படைத்தலைவனிடம் கொடுங்கள்.

ஆல்பனி : உங்களுடைய உயிருக்காக ஓடுங்கள்.

(கனவான் செல்கிருர்.)

எட்மண்ட் : அந்தப் படைத்தலைவனுக்கு என்னிடமிருந்தும் தங்கள் மனைவியிடமிருந்தும் கார்டிலியாவைச் சிறையில் தூக்கிலிட்டுவிட்டு அவளே தைரியமிழந்து தற்கொலை செய்துகொண்டு மடிந்தாள் என்று குற்றம் சாட்டும்படி உத்தரவு கொடுக்கப்பட்டது.

ஆல்பனி : கடவுள் அவளைக் காக்கட்டும். அவனைக் கொஞ்சம் அப்பால் தூக்கிச் செல்லுங்கள். (எட்மண்டை தூக்கிச் செல்கிருர்கள்.)

(லியர் கார்டிலியாவைத் தன் கரங்களால் தூக்கிக்கொண்டு வருகிருர்.)

லியர் : கூச்சலிடுங்கள். ஊளையிடுங்கள். நீங்கள் கல்லாலமைந்த மனிதர்கள். எனக்கு உங்களுடைய நாவும் கண்களுமிருந்தால் வானின் முகடு இடிந்துபோமாறு அரற்றுவேன். அவள் போய்விட்டாள். ஒருவர் இறந்துவிட்டாரா அல்லது ஜீவனுடனிருக்கிருரா என்பது எனக்குத் தெரியும். அவள் இந்த மண்ணைப்போல் மடிந்துவிட்டாள். எனக்கு ஒரு முகம் காட்டும் கண்ணுடி கொடுங்கள். அந்தக் கண்ணுடியை அவளுடைய் மூச்சு மாசுபடுத்துமாயின் அவள் அப்பொழுது உயிருடனிருக்கிருள் என நினைக்கலாம்.

கென்ட் : இதுதானு வாக்களிக்கப்பட்ட முடிவு?

எட்கார் : அல்லது அப்பயங்கரக் காக்ஷியின் பிம்பமா?

லியர் : இந்த இறகு ஆடுகிறது. அவள் உயிருடனிருக்கிருள். அது உண்மையானுல் நான் அனுபவித்திருக்கக்கூடிய சகல துன்பங்களையும் மாற்றவல்ல சம்பவம்.

கென்ட் : என் அன்பான எஜமானே!

லியர் : தயவுசெய்து அப்பால் செல்லும்.

எட்கார் : இது குணத்திற் சிறந்த கென்ட். தங்கள் நண்பர்.

லியர் : ஆ! கொலைக்காரர்களே! துரோகிகளே! உங்களுக்குக் கொள்ளைநோய் வரட்டும். நான் அவளைக் காப்பாற்றியிருக்கலாம். இப்பொழுது திரும்பிவராதவண்ணம் சென்றுவிட்டாள். கார்டிலியா, சிறிது நேரம் தங்கு. ஹா! நீ சொல்வது என்ன? அவளுடைய குரல் எப்பொழுதும் மிருதுவாயும் அன்புடையதாயும் தணிந்ததாயுமிருந்தது.—ஒரு ஸ்திரியிடத்தில் மிகவும் உயர்வானது. உன்னைத் தூக்கி விட்ட அந்த அயோக்யனை நான் கொன்றேன்.

படைத் தலைவன் : அது உண்மையே. அவரே கொன்ருர்.

லியர் : அடே! நான் செய்யவில்லையா? என்னுடைய நல்ல கடிக்கும் பருந்தைக்கொண்டு அவனைத் தத்திச் செல்லும்படி செய்யக் கூடிய நாட்களைப் பார்த்திருக்கிறேன். நான் இப்பொழுது கிழவனுகி விட்டேன். இந்தக் கோபதாபங்கள் என்னைக் கெடுக்கின்றன. நீ யார்? என் நேத்திரங்கள் சரியாக இல்லை. நான் சீக்கிரம் சொல்லிவிடுகிறேன்.

கென்ட் : அதிர்ஷ்ட தேவதை யாராவது இருவரை மிகவும் விரும்பியும் பின்னர் வெறுத்ததுமுண்டானல் இங்கே ஒருவரைக் காணலாம்.

லியர் : பார்வை மங்கலாயிருக்கிறது. நீர் கென்ட் அல்லவா?

கென்ட் : ஆம். தங்களுடைய ஊழியன் கென்ட். உங்களுடைய ஊழியன் கேப்ஸ் எங்கே?

லியர் : அவன் மிகவும் நல்லவன். நான் உனக்குச் சொல்லக் கூடும். அவன் வேகமாகவும் நன்ருகவும் வாளை உபயோகிப்பான். அவன் இறந்து உடலும் அழுகிப்போய்விட்டது.

கென்ட் : இல்லை பிரபுவே, நான்தான் அவன்.

லியர் : நான் நேராக அதைப் பார்ப்பேன்.

கென்ட் : உங்களுடைய தாழ்வின் ஆரம்பகால முதல் உங்களுடைய அடியைப் பின்பற்றி வந்தேன்.

லியர் : இங்கு உங்களுடைய வரவு நல்வரவாகுக.

கென்ட் : வேறு யார் வரக்கூடும். எல்லாம் சந்தோஷமில்லா மலும், இருளடைந்தும், சாவுகள் நிறைந்துமிருக்கின்றன. உங்க ளுடைய மூத்த பெண்கள் தங்களுடைய முடிவைத் தேடிக்கொண்டு இறந்துபோய்விட்டார்கள்.

லியர் : அவ்வாறே நான் நினைக்கிறேன்.

ஆல்பனி : தான் என்ன சொல்கிறாரென்று அவருக்குத் தெரிய வில்லை. நாம் அவரிடம் நம்மை அறிமுகம் செய்ய நினைப்பது வீண்.

எட்கார் : யாதொரு பிரயோஜனமுமில்லை.

(ஒரு தூதன் வருகிறான்)

தூதன் : எட்மண்ட் இறந்துவிட்டார், பிரபு,

ஆல்பனி : அது இங்கு மிகவும் அற்ப விஷயம். பிரபுக்களே, நண்பர்களே, என்னுடைய அபிப்ராயத்தை அறிந்துகொள்ளுங்கள். இந்தக் கேட்டிற்கெல்லாம் தக்க பரிகாரம் செய்து நலமுண்டாக வழி செய்யப்படும். இந்தப் பழைய அரசரின் வாழ்நாள்வரை நாம் நம் அரசுரிமையிலிருந்து விலகிக்கொள்கிறோம். அவருக்கு நமது முழு அதிகாரமும், உங்களுக்கு அவரவருடைய பதவியும் அத்துடன் உங்க ளுடைய நற்செயல்களுக்குத் தக்கபடி வெகுமதியாக இன்னும் அநேகம் பட்டங்களும் தருகிறோம். எல்லா நண்பர்களும் அவர்களுடைய சீலத் திற்குத் தக்கபடி பலனைப் பெறுவார்கள். எல்லா விரோதிகளும் அவர்களுடைய தீச் செயலுக்கேற்ற தண்டனை அடைவார்கள். ஓ! கவனியுங்கள், கவனியுங்கள்.

லியர் : என் பேதை தூக்கிலிடப்பட்டாள். இல்லை. இல்லை. உயிர் இல்லையா? ஒரு நாய், ஒரு குதிரை, ஒரு எலி ஏன் உயிருட னிருக்கவேண்டும்? நீ மட்டும் ஏன் மூச்சில்லாமல் போகவேண்டும்? நீ இனி ஒருக்காலும் வரப்போவதில்லை. ஒருபோதுமில்லை, ஒருபோது மில்லை, ஒருபோதுமில்லை. தயவுசெய்து இந்தப் பொத்தானைக் கழற்றுங்கள். உங்களுக்கு வந்தனம். ஐயா. நீங்கள் இதைப் பார்க்கி றீர்களா? அவள் அதரங்களைப் பார். அங்கே பார். பார். அங்கே பார். (அவர் இறக்கிறார்.)

எட்கார் : அவர் மயக்கமுற்றார். என் அரசே, அரசே!

கென்ட் : நெஞ்சே! பிளந்துவிடு. உன்னை வேண்டுகிறேன் பிளந்துவிடு.

எட்கார் : என் பிரபுவே, எங்களைப் பாருங்கள்.

கென்ட் : அவருடைய ஆன்மாவைத் தொந்தரவு செய்யவேண்டாம். அவர் நிம்மதியாகச் செல்லட்டும். இந்தக் கடினமான உலகில் அவருடைய வாழ்க்கையை நீடிக்க விரும்புபவர்கள் அவர் படும் சித்ரவதையை அதிகரிக்கச் செய்வதால் அவர்களை அவர் வெறுக்கிறார்.

எட்கார் : அவர் உண்மையாகவே இறந்துவிட்டார்.

கென்ட் : அவர் இவ்வளவு நாள் தள்ளியதுதான் ஆச்சர்யம். அவர் தன் ஆயுளைப் பலாத்காரமாக வைத்திருந்தார்.

ஆல்பனி : அவர்களை இங்கிருந்து எடுத்துச் செல்லுங்கள். நமது தற்காலச் செயல் எல்லோரும் துக்கம் கொண்டாடுவதே. என் ஆத்மார்த்தமான நண்பர்களே, நீங்கள் இருவரும் இந்த ராஜ்யத்தை ஆளுங்கள். கொம்பால் கிழிக்கப்பட்ட அதைக் காப்பாற்றுங்கள்.

கென்ட் : ஐயனே, எனக்குச் சமீபத்தில் செல்லவேண்டிய யாத்திரை இருக்கிறது. என் எஜமானர் அழைக்கிறார். அதை நான் மறக்கவொண்ணாது.

எட்கார் : இந்தத் துயரமிக்க காலத்தின் பளுவை நாம் சுமந்து தானாகவேண்டும். நாம் உள்ளத்தில் தோன்றுவதைக் கூறவேண்டும். சொல்லவேண்டியதற்கானவற்றைஅல்ல. வயதில் மிகுந்தவர் அதிகம் அனுபவித்தார். இளையவர்களான நாம் அவ்வளவு துயரத்தைப் பார்க்கப்போவதுமில்லை. அவ்வளவு நாள் வாழப்போவதுமில்லை. (பிரேதங்களை எடுத்துச் செல்வதற்கான வாத்ய கோஷத்துடன் செல்கின்றனர்.)
